லெனின்

பொருளாதாரத் தன்னுணர்ச்சிவாதம் பற்றிய ஒரு பண்புரை

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

வி. இ. லெனின்

பொருளாதாரத் தன்னுணர்ச்சிவாதம் பற்றிய ஒரு பண்புரை

ஸிஸ்மொந்தீயும் நம் நாட்டு ஸிஸ்மொந்தீவாதிகளும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ. 1975

மொழிபெயர்ப்பாளர்: ஆர். கே. கண்ணன்

В. И. Ленин

К ХАРАКТЕРИСТИКЕ ЭКОНОМИЧЕСКОГО РОМАНТИЗМА

На тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு,
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1975

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-908}{014(01)-75}$ 751—75

பொருளடக்கம்

அத்தியாயம் I தன்னுணர்ச்சிவாதத்தின் பொருளாதாரத் தத்துவங்கள் 9

I சிறு உற்பத்தியாளர்களின் அழிவால் உள் நாட்டுச் சந்தை சுருங்குகிறதா? 10

II தேசிய வருவாய், மூலதனம் பற்றிய ஸிஸ்மொந்தீயின் கருத்துக்கள் 19

III முதலாளித்துவச் சமுதாயத்தில் வருடாந்தர உற்பத்திப் பொருளின் இரண்டு கூறுகள் பற்றிய பிழையான தத்துவத்திலிருந்து ஸிஸ்மொந்தீ எடுத்த முடிவுகள் 27

IV தேசிய வருவாய் பற்றிய ஆதாம் ஸ்மித்தின், ஸிஸ்மொந்தீயின், தத்துவங்களின் தவறு எதில் உள்ளது? 34

V முதலாளித்துவச் சமுதாயத்தில் திரட்சி. . . . 41

VI மீத மதிப்பைத் திருப்பியெடுக்கும் ''கஷ்டத்திலிருந்து மீள்வதற்குரிய வழி'' எனும் வகையில் வெளிநாட்டுச் சந்தை 51

VII நெருக்கடி 59

VIII முதலாளித்துவ நிலவாடகையும் முதலாளித்துவ மிகை மக்கள்தொகையும் 73

IX முதலாளித்துவச் சமுதாயத்தில் இயந்திரங்கள் . , ... 88

X காப்புமுறை . . . . , , . . . 100

XI அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றில் ஸிஸ்மொந்தீ பெறும் இடம் 112

பின்குறிப்பு 126

அத்தியாயம் II முதலாளித்துவத்தைப் பற்றித் தன்னுணர்ச்சிவாதிகள் அளிக்கும் விமர்சனத்தின் தன்மை 128

I முதலாளித்துவத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட விமர்சனம் 128

II தன்னுணர்ச்சிவாதத்தின் சிறுபூர்ஷ்வாத் தன்மை 147

III விவசாயத்துறை மக்கள்தொகைக்குப் பாதகமாகத் தொழில்துறை மக்கள்தொகையின் வளர்ச்சி பற்றிய பிரச்சினை 155

IV தன்னுணர்ச்சிவாதத்தின் நடைமுறைக்கான யோசனைகள் 165

V தன்னுணர்ச்சிவாதத்தின் பிற்போக்கான தன்மை 176

VI தன்னுணர்ச்சிவாதத்தாலும் விஞ்ஞான வழிப்பட்ட தத்துவத்தாலும் மதிப்பிடப்பட்ட முறையில் இங்கிலாந்தின் தானியக் காப்பு வரிகள் 197

பெயர்பட்டியல் 218

இன்று ருஷ்யாவில் குறிப்பான வலுவுடன் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு குறித்து யோசிப்பதில் ஸ்விட்ஸர்லாந்து நாட்டின் பொருளாதாரவாதியான ஸிஸ்மொந்தீ (J.-C.-L. Simonde de Sismondi) குறிப்பான அக்கறைக்குரியவர், அவர் இன்றைய நூற்றாண்டின் துவக்கத்தில் எழுதிவந்தவர், அத்துடன் அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றில் ஸிஸ்மொந்தீ ஒரு தனியிடம் வகிக்கிறார், அதாவது முக்கியமான போக்குகளினின்று தனித்து நிற்கிறார், ஏனெனில் (தற்கால ருஷ்ய நரோத்னிக்குகள் போலவே) அவர் சிற்றளவு உற்பத்தியின் ஆர்வமிக்க வழக்குரைஞர், பெருமளவான தொழிலின் ஆதரவாளர்களுக்கும் தத்துவாசிரியர்களுக்கும் எதிரி என்கிற விஷயத்தையும் சொன்னால் ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் முக்கியமான உருக்கூறுகளையும் பொருளாதார விஞ்ஞானத்தில் ஒருங்கே தமது காலத்திய, அதற்கும் பிற்காலத்திய, மற்ற போக்குகளோடு அதற்குள்ள உறவையும் உருவரை செய்வதில் நமக்குள்ள விருப்பத்தை வாசகர் புரிந்து கொள்வார். இன்று ஸிஸ்மொந்தீயைப் பற்றிப் பயில்வதில் மேலும் சுவையிருக்கும், ஏனெனில் சென்ற வருடம் (1896) ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''*

---

* ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''—1876-இலிருந்து 1918 வரை பீட்டர்ஸ்பர்க்கில் வெளிவந்த மாதச் சஞ்சிகை. கடந்த நூற்றாண்டின் 90-களில் மிதவாத நரோத்னிக்குகளின் வெளியீடாக இருந்தது: நி. பி. டானியெல்ஸோன், வா. பா.

பத்திரிகையில் ஒரு கட்டுரை அவரது தத்துவத்தை விரிவிளக்கம் செய்தது (பி. எஃப்ரூஸி எழுதியது: ''ஸிமொந்த் தெஸிஸ்மொந்தீயின் சமுதாய, பொருளாதாரக் கருத்துக்கள்.'' ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', 1896, 7-ம், 8-ம் இதழ்கள்).*

''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வுக்குக் கட்டுரை எழுதியவர் ஸிஸ்மொந்தீயைப் போல் வேறெந்த எழுத்தாளரும் ''இவ்வளவு தவருக மதிப்பீடு செய்யப்படவில்லை'' என்று துவக்கத்திலேயே கூறுகிருர், அவர் சில சமயங்களில் பிற்போக்காளராகவும் சில சமயங்களில் கற்பனையுலகவாதியாகவும் ''நியாயமில்லாமல்'' சித்திரிக்கப்பட்டுள்ளார் என்று அவர் குற்றஞ்சாட்டுகிருர். இதன் நேர் எதிர்மறைதான் உண்மை. திட்பநுட்பமாகச் சொன்னுல் ஸிஸ்மொந்தீயைப் பற்றிய **இந்த** மதிப்பீடுதான் முற்றிலும் சரியானது. ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வில் உள்ள கட்டுரை ஸிஸ்மொந்தீயின் கருத்துக்களைப்பற்றி ஒரு சரிநுட்பமான விபரமான உரையளிக்கிறபொழுதே அவருடைய தத்துவத்தைப்பற்றி** முற்றிலும் தவருன சித்திரம் தருகிறது, அவர்

வரன்ட்ஸோவ், செ. நி. கிரிவேன்கோ முதலிய நரோதியப் பொருளாதாரவாதிகளின் கட்டுரைகளில் மார்க்ஸியத்தின் பொருளாதாரத் தத்துவம் விமர்சிக்கப்பட்டது. ருஷ்யாவில் பெருமளவான முதலாளித்துவத் தொழிலின் வளர்ச்சிக்கான நிலைமைகள் இல்லை என்றும் ருஷ்யாவுக்குத் ''தனிப் பாதை'' இருக்கிறது—அதாவது, அதில் சிறிய கைத் தொழில் வளரும்—என்றும், விவசாயத்திலும்கூட முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தகுந்த நிலைமைகள் இல்லை என்றும் இந்த ஆசிரியர்களுடைய மிக முக்கியமான கருத்து இந்தக் கட்டுரைகளில் அடங்கியிருந்தது.—(பதிப்பாசிரியர்.)

* எஃப்ரூஸி 1897-ல் காலமானுர். இரங்கற்கட்டுரை ஒன்று ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோவில்'' 1897 மார்ச்சில் வெளியிடப்பட்டது.—(இதுவும், வேறு விதமாய்க் குறிக்கப்படாமல் இனி வரும் பிற குறிப்புகளும் லெனினுடையவை.)

** எஃப்ரூஸி தமது கட்டுரையின் துவக்கத்தில், லிப்பெர்ட் சொன்னதைத் திரும்பச் சொல்லும் வகையில், ஸிஸ்மொந்தீ சோஷலிஸ்டு அல்ல என்று கூறுவது முற்றிலும் உண்மை. (''Handwörterbuch der Staatswissenschaften'', V. Band, Artikel "Sismondi" von Lippert, Seite 678) (''அரசியல் விஞ்ஞான

எந்த விஷயங்களில் நரோத்னிக்குகளோடு மிகவும் நெருங்கிப் போகிறாரோ அவற்றை அது இலட்சியநிலையிலே வியந்தேத்துகிறது, பொருளாதார விஞ்ஞானத்தில் பின் தோன்றிய போக்குகள் பற்றிய அவரது கண்ணோட்டத்தைப் புறக்கணிக்கவும் திரித்துக் காட்டவும் செய்கிறது. எனவே, ஸிஸ்மொந்தீ தத்துவத்தைப் பற்றிய நமது விரிவிளக்கமும் பகுப்பாய்வும் அதே நேரத்தில் எஃப்ரூஸி கட்டுரைக்கு ஒரு விமர்சனமாகவும் இருக்கும்.

அகராதி'', நூல்தொகை V, லிப்பெர்ட் எழுதிய ''ஸிஸ்மொந்தீ'' என்கிற தலைப்புள்ள கட்டுரை, 678-ம் பக்கம் பார்க்க.—பதிப்பாசிரியர்.)

அத்தியாயம் 1

தன்னுணர்ச்சிவாதத்தின் பொருளாதாரத் தத்துவங்கள்

ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் தனித்துக்காட்டும் உருக்கூறு வருவாய்த்துறை பற்றிய அவரது தத்துவமாகும், உற்பத்தியோடும் மக்கள்தொகையோடும் வருவாய்த் துறைக்குள்ள உறவு பற்றிய தத்துவமாகும். ஸிஸ்மொந்தீயின் முக்கியமான நூலின் தலைப்பு வருமாறு: "Nouveaux principes d'économic politique ou de la richesse dans ses rapports avec la population" (Seconde édition, Paris, 1827, 2 vol.* ''அரசியல் பொருளாதாரத்தின் புதிய கோட்பாடுகள், அல்லது மக்கள் தொகையைச் சார்ந்த நிலையில் செல்வம்.'' (முதற் பதிப்பு 1819-ல் வெளியிடப்பட்டது.) ''முதலாளித்துவத்துக்கு வேண்டிய உள்நாட்டுச் சந்தை பற்றிய பிரச்சினை'' என்று ருஷ்ய நரோத்னிக் இலக்கியத்தில் அறிந்துள்ள பிரச்சினையும் இவ்விஷயமும் அநேகமாக ஒன்றுகும். தொழில், விவசாயத் துறைகளில் பெருமளவான முயற்சியும் கூலியுழைப்பும் வளர்வதின் விளைவாக உற்பத்தியானது தவிர்க்கமுடியாதவாறு நுகர்வை மிஞ்சிவிடுகிறதென்றும் நுகர்பவர்களைத் தேடிப் பிடிக்கும் தீர்க்கமுடியாத பிரச்சினையை எதிர்கொள்கிறதென்றும் அடித்துக் கூறினர்; அது நாட்டுக்குள்ளேயே நுகர்பவர்களைத் தேடிக்கொள்ள முடியாது, ஏனெனில் அது பெருந்திரளான மக்களை அன்றாடக் கூலிக்காரர்களாக, சாதாரணத் தொழிலாளிகளாக மாற்றிவிடுகிறது, வேலையில்லாமையை உண்டாக்குகிறது, அதே நேரத்தில் உலக அரங்கில்

---

* இரண்டாம் பதிப்பு, பாரிஸ், 1827, இரண்டு நூல்தொகைகள்.—(பதிப்பாசிரியர்.)

புதிய நாடுகள் நுழைவதின் காரணமாக வெளிநாட்டுச் சந்தை தேடிக்கொள்வதும் மேன்மேலும் கடினமாகிறது என்றும் அடித்துக் கூறினுர். திருவாளர்கள் வி. வி., நி.—ன், தலைமையிலுள்ள நரோத்னிக் பொருளாதாரவாதிகளின் சிந்தனையைக் கவர்ந்துள்ள அதே பிரச்சினைகள்தாம் இவை என்று வாசகர் கண்டுகொள்ளலாம். எனவே ஸிஸ்மொந்தீ வாதத்தின் பல்வேறு அம்சங்களையும் அதன் விஞ்ஞானரீதியான குறிபொருளையும் சற்று நெருங்கிப் பார்ப்போம்.

I

சிறு உற்பத்தியாளர்களின் அழிவால் உள்நாட்டுச் சந்தை சுருங்குகிறதா?

மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள்* தமது வாதங்களில் ஏற்கனவே நிலைநாட்டப்பெற்றிருந்த முதலாளித்துவ அமைப்புமுறையை மனத்தில் கொண்டிருந்தார்கள், தொழிலாளி வர்க்கம் இருப்பதை வழக்கமாயிருக்கிற வெளிப்படையான விவகாரமாகவும் எடுத்துக் கொண்டார்கள். அவர்களைப் போல் அல்லாமல், ஸிஸ்மொந்தீ சிறு உற்பத்தியாளனின் அழிவை—தொழிலாளிவர்க்கம் உருப்பெறுவதில் கொண்டுபோய்விட்ட இயக்கப்போக்கை—குறிப்பாக வலியுறுத்தினுர். முதலாளித்துவ முறையிலிருக்கும் இந்த முரண்பாட்டைச் சுட்டிக்காட்டிய பெருமை ஸிஸ்மொந்தீயைச் சேரும் என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை; ஆனுல் பொருளாதாரவாதி என்கிற வகையில் அவர் இந்த நிகழ்ச்சித் தோற்றத்தைப் புரிந்து கொள்ளத் தவறினுர், முரணற்ற பகுப்பாய்வு செய்யமுடியாமற்போன தமது திறனின்மையை ''ஆத்மார்த்திகமான விருப்பங்களை''க் கொண்டு மூடிமறைத்தார் என்பதே விஷயம். ஸிஸ்மொந்தீ கருத்தில், சிறு உற்பத்தியாளனின் அழிவு உள்நாட்டுச் சந்தை சுருங்குகிறது என்பதற்குச் சான்ருகும்.

---

* மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள்—ஆ. ஸ்மித்தும் (1723-1790) டே. ரிக்கார்டோவும் (1772-1823).—(பதிப்பாசிரியர்.)

''விற்கிறவன் தனது சந்தையை எப்படி விரிவாக்கிக் கொள்கிறான்?'' என்பது பற்றிய அத்தியாயத்தில் (ch. III, livre IV, 1, p. 342 et suiv.*)** ஸிஸ்மொந்தீ கூறுகிறதாவது: ''பட்டறைத் தொழில் முதலாளி மேலும் மலிவான விலைக்கு விற்பானேயானால் அதிகமாக விற்பான், ஏனெனில் மற்றவர்கள் குறைவாக விற்பார்கள். எனவே, ஒரு பட்டறைத் தொழில் முதலாளி தனது சக முதலாளிகளை விடக் குறைந்த விலையில் விற்கமுடிகிறதற்கான வகையில் எப்போதும் உழைப்பிலோ கச்சா பொருட்களிலோ மிச்சம் பிடிக்க முயல்கிறான். ஆனால் பொருட்களும் தம்மளவில் சென்றகால உழைப்பின் விளைபொருட்களாக இருக்கிறதினால், நீண்டகால நிலையிலே அவனது மிச்சம் எனப்பட்டது அதே பொருளை உற்பத்தி செய்வதற்கு முன்னைவிடக் குறைவான உழைப்பைச் செலவழித்ததாகவே எப்போதும் இருக்கும்.'' ''தனித் தனி பட்டறைத் தொழில் முதலாளி உற்பத்தியை விரிவாக்க முயல்வானேயன்றித் தொழிலாளிகளின் தொகையைக் குறைக்க முயலமாட்டான் என்பது உண்மை. அவன் வெற்றி பெறுகிறான் என்று, தனது பண்டத்தின் விலையைக் குறைப்பதின் வழியாகத் தனது போட்டியாளர்களிடமிருந்து வாடிக்கைக்காரர்களை இழுத்துக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதன் 'தேசிய விளைவு' என்னவாக இருக்கும்?... அவன் பயன்படுத்தும் அதே உற்பத்தி வழி முறைகளை மற்ற பட்டறைத் தொழில் முதலாளிகளும் புகுத்துவார்கள். பிறகு எந்த அளவுக்குப் புதிய இயந்திரம் உழைப்பின் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துகிறதோ அந்த அளவுக்கு அவர்களில் சிலர் தொழிலாளிகளை நீக்கவேண்டியிருக்கும் என்பதும் இயல்பு. ஒரே மட்டத்தில் நுகர்வு இருந்து வருமேயானால், முன்பிருந்த தொழிலாளிகளில் பத்தில் ஒரு பகுதியினர் அதே அளவுக்கு உழைப்பார்களேயானால், தொழிலாளி வர்க்கத்தின் இப்பகுதியின் வருமானம் பத்தில் ஒன்பது பங்கு குறைக்கப்படும், அதன் நுகர்வு வடிவங்கள் அனைத்தும் அதே

---

* அத்தியாயம் III, நூல்தொகை IV, நூல் I **342**-ம் பக்கமும் அதன் தொடர்ச்சியும்.—(பதிப்பாசிரியர்.)

** மாறாகக் கூறாத வரை, இனிமுதல் வரும் மேற்கோள்கள் அனைத்தும்—''புதிய கோட்பாடுகளின்'' ("Nouveaux Principes") மேற்கூறிய பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

அளவில் குறைக்கப்பட்டு விடும்.... எனவே புதுப்புனேவின் விளைவு—நாட்டுக்கு வெளிநாட்டு வர்த்தகம் இல்லாவிட்டால், அதே மட்டத்தில் நுகர்வு இருந்து வந்தால்—எல்லோருக்கும் நஷ்டமாக இருக்கும், தேசிய வருவாயும் நலிவுறும், அது அடுத்த ஆண்டில் பொது நுகர்வு நலிவுறுவதில் கொண்டுபோய் விடும்'' (I, 344). ''அது வேறு விதமாக இருக்கவும் முடியாது: உழைப்பும் தன்னளவில் வருவாயின் ஒரு முக்கியமான பகுதியாகும்'' (ஸிஸ்மொந்தீ கூலியை மனத்தில் கொண்டு சொல்கிருர்), ''எனவே நாட்டை மேலும் ஏழையாக்காமல் உழைப்பின் கிருக்கியைக் குறைக்க முடியாது. எனவே, புதிய உற்பத்தி வழிமுறைகளுக்குரிய புனேவிலிருந்து எதிர்பார்க்கப்படுகிற ஆதாயம் அநேகமாக எப்போதும் வெளிநாட்டு வர்த்தகத்திலிருந்தே பெறப்படுகிறது'' (I, 345).

முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் விளைவாக ''உள்நாட்டுச் சந்தை சுருங்குவது'' பற்றியும் அதன் விளைவாக வெளிநாட்டுச் சந்தை தேவைப்படுவது பற்றியும் உள்ள எவ்வளவோ பழக்கப்பட்டுப்போன ''தத்துவம்'' அனைத்தும் தன்னெதிரே ஏற்கனவே நிற்பதை வாசகர் இச்சொற்களிலே கண்டுகொள்ள முடியும். இந்தக் கருத்துக்கு ஸிஸ்மொந்தீ மிக அடிக்கடி திரும்பி வருகிருர், நெருக்கடி பற்றிய தமது தத்துவத்தோடும் மக்கள் தொகை பற்றிய தமது ''தத்துவத்தோடும்'' அதை இணைக்கிருர்; அது ருஷ்ய நரோத்னிக்குகளின் தத்துவத்துக்கு எவ்வளவு மையப் பொருளாக இருக்கிறதோ அதேபோல் அவரது தத்துவத்துக்கும் மையப் பொருளாக உள்ளது.

புதிய உறவுமுறைகளின்கீழ் அழிவோடும் வேலையில்லாமையோடும் கூடவே ''வாணிபச் செல்வமும்'' அதிகரிக்கிறது என்பதையும், விவாதத்திலிருக்கும் விஷயம் பெருமளவான உற்பத்தியின் வளர்ச்சி, முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்பதையும் ஸிஸ்மொந்தீ மறக்கவில்லை என்பது உண்மை. இதை அவர் நிறைநேர்த்தியுடன் புரிந்துகொண்டிருந்தார்; சொல்லப்போனுல், முதலாளித்துவத்தின் வளர்ச்சியே உள்நாட்டுச் சந்தையைச் சுருங்கச் செய்கிறது என்று அடித்துச் சொன்னுர்: ''மக்கள் வெறும் அத்தியாவசியப் பொருட்களை மட்டும் நுகரும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டுள்ள பொழுது,

எல்லோருடைய நிறைவும் நுகர்வும் சமமாகப் போகும் போக்கில் உள்ளதா அல்லது ஒரு குறுகிய சிறுபான்மையின ருக்கு எல்லாப் பொருட்களிலும் மிகைநிறைவு உள்ளதா என் பது குடிமக்களின் சேமநலப் பார்வைநிலேயிலே எப்படி அக்கறையற்ற விஷயம் இல்லேயோ அதே போல் வருவாய் வினியோகத்திற்குரிய இவ்விரண்டு வடிவங்களும் **வர்த்தகச் செல்வத்தின்*** (richesse commerciale) பார்வைநிலேயிலே அக்கறையற்ற விஷயங்கள் அல்ல. நுகர்வில் சமநிலே எப் போதும் உற்பத்தியாளர்களின் சந்தை விரிவடைவதிலே கொண்டுபோய்விட்டுத் தீரவேண்டும், நுகர்வில் சமமற்ற நிலே **சந்தை சுருங்குவதிலே** கொண்டுபோய்விட்டுத் தீர வேண்டும்'' (de le [le marché] resserrer toujours davantage) (I, 357).

எனவே, முதலாளித்துவத்தில் உள்ளார்ந்திருக்கும் சம மற்ற வினியோக நிலேயின் காரணமாகச் சந்தை சுருங்குகிறது என்றும் சமமான வினியோகத்தின் மூலமாகச் சந்தை உண் டாக்கப்படவேண்டும் என்றும் ஸிஸ்மொந்தீ அடித்துக் கூறு கிருர். ஆனுல் அவர் கண்ணில் படாமலே தொட்டுவிட்ட **வர்த்தகச் செல்வம்** இருக்கும் பொழுது அவர் அதைத் தொ டாமல் இருக்க முடியவில்லே, ஏனெனில் (தொடாமலிருந் தால் **சந்தையைப்** பற்றி அவர் வாதித்திருக்க முடியாது) இது எப்படி நடக்க முடியும்? இவ்விஷயத்தை அவர் பரிசீலிக் கவில்லே. வர்த்தகச் செல்வம்—**அதாவது**, தனித்தனி உற் பத்தியாளர்களிடையே போட்டி—இருக்குமேயாளுல், உற் பத்தியாளர்களிடையே சமநிலேயைப் பேணிக்காப்பது சாத்தி யம் என்று எப்படி அவர் நிரூபிக்கிருர்? நிரூபிக்கவேயில்லே. அது அப்படித் தான் **நடந்துதீரவேண்டும்** என்று வெறுமே ஆணேயிடுகிருர். அவர் சரியாகவே சுட்டிக்காட்டிய முரண் பாட்டை மேலும் பகுத்தாய்வதற்குப் பதிலாக, பொதுவாக வே முரண்பாடுகள் விரும்பத்தக்கவையல்ல என்று பேசத் தொடங்குகிருர். ''சிற்றளவான விவசாயம் நீக்கப்பட்டு அத னிடத்தில் பெருமளவான விவசாயம் வந்து நிலத்தில் மேலும் அதிகமான மூலதனம் போடுகிறபொழுது முன்**னே**விட அதிக

---

* மாருகச் சொல்லாத வரை, இங்கும் பிற இடங்களிலும் கொட்டையெழுத்தில் போட்டிருப்பது நாம்.

மான தொகையில் செல்வம் பயிர்த்தொழில் செய்வோர் அனைவரிடையேயும் வினியோகமாவது சாத்தியம்''. (அதாவது, உள்நாட்டுச் சந்தை விரிவடைந்திருக்கிறது ''சாத்தியம்''—முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு கூடவே அது விரிவடைந்திருக்கிறதல்லவா? சொல்லப்போனால் உள்நாட்டுச் சந்தையின் பரிமாணத்தை நிர்ணயிப்பது வர்த்தகச் செல்வத்தின் தன்னிலையான அளவுதான்). ''ஆனால் நாட்டைப் பொறுத்தவரை, பணக்கார சாகுபடியாளர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தின் நுகர்வோடு ஏழைப்பட்ட அன்றாடக் கூலிக்காரர்களைக் கொண்ட ஐம்பது குடும்பங்களின் நுகர்வையும் கூட்டிக்கொண்டால் அது ஐம்பது விவசாயிக் குடும்பங்களின் (இவற்றில் ஒன்றுகூட பணக்காரக் குடும்பம் அல்ல, என்றாலும் ஒன்றுகூட ஒரு மிதமான, நல்லபடியான அளவுக்கு (une honnête aisance) செழுமை இன்றி இல்லை) நுகர்வுக்குச் சமமல்ல'' (I, 358). அதாவது: முதலாளித்துவரீதியான விவசாயம் ஒருவேளை முதலாளித்துவத்துக்கு உள்நாட்டுச் சந்தையை உண்டாக்கிக் கொடுக்கத்தான் செய்கிறது போலும். ஸிஸ்மொந்தீ எவ்வளவோ விஷயஞானமும் மனச்சாட்சிப்பற்றும் உள்ள பொருளாதாரவாதியானதினால் இந்த உண்மையை மறுக்கவில்லை; ஆனால்—ஆனால் அத்துடன் இவ்வாசிரியர் தமது பரிசீலனையைக் கைவிடுகிறார், வர்த்தகச் செல்வமுள்ள ''நாட்டை'' நீக்கிவிட்டு அதனிடத்தில் விவசாயிகளைக் கொண்ட ஒரு ''நாட்டை'' நேரடியாக வைக்கிறார். தமது சிறுபூர்ஷ்வா பார்வை நிலையைப் பொய்யாக்கும் இனிமையற்ற உண்மையைத் தவிர்த்து, சற்றுமுன் தாமே கூறியதையே—அதாவது, வர்த்தகச் செல்வத்தின் வளர்ச்சி காரணமாக ''விவசாயிகள்'' ''சாகுபடியாளர்களாக'' ஆகிவிட்டார்கள் என்று சொன்னதையே—அவர் மறந்து விடுகிறார். அவர் கூறியதாவது: ''முதல் சாகுபடியாளர்கள் சாதாரண உழைப்பாளிகளாகவே இருந்தார்கள்.... அவர்கள் விவசாயிகளாக இருந்த நிலை முடிந்துவிடவில்லை.... அவர்கள் தம்முடன் வேலை செய்வதற்கு அன்றாடக் கூலிக்காரர்களை வைத்துக் கொண்டது அரிதாகவே இருந்தது, வீட்டு வேலையாட்களை மட்டுமே (des domestiques) வைத்திருந்தார்கள், அவர்களைத் தமக்குச் சமமானவர்களிடையேயிருந்துதான் எப்போதும் பொறுக்கிக் கொண்டார்கள், அவர்களைத் தம்

மோடு சமமாகவே நடத்தினுர்கள், ஒரே மேஜையில் அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.... ஒரே விவசாயிகளின் வர்க்கமாக அமைந்திருந்தார்கள்'' (I, 221). ஆகவே, விஷயம் இவ்வளவுதான்: இந்த தந்தையாதிக்கக்கால வேலைக்காரர்களோடு கூடிய தந்தையாதிக்கக்கால விவசாயிகளை இவ்வாசிரியருக்கு எவ்வளவோ பிடித்திருக்கிறது, இந்தத் தந்தையாதிக்கக்கால உறவு முறைகளிலே ''வர்த்தகச் செல்வத்தின்'' வளர்ச்சி உண்டாக்கிவிட்ட மாற்றங்கள் பக்கம் சும்மா முதுகைத் திருப்பிக் கொள்கிறுர்.

ஆனுல் இதை ஒப்புக் கொள்ளும் நினைப்பு ஸிஸ்மொந்தீக்குச் சிறிதேனும் இல்லை. அவர் வர்த்தகச் செல்வத்தின் விதிகளைத் தாம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவே தொடர்ந்து கருதுகிறுர், மற்றும் தாம் வைத்த வில்லங்கங்களையே மறந்துவிட்டுப் பச்சையாக அடித்துப்பேசுகிறுர்:

''எனவே, ஒரு சில உடைமைக்காரர்களின் கையிலே செல்வம் குவிந்துவருவதின் விளைவாக, **மேன்மேலும் உள்நாட்டுச் சந்தை சுருங்கிவருகிறது (!)**, மற்றும் தொழில்துறையானது வெளிநாட்டுச் சந்தைகளைத் தேடிக்கொள்ள மேன்மேலும் கட்டாயப்படுத்தப் படுகிறது, அங்கே அதைச் சந்திக்க மாபெரும் புரட்சிகள் (des grandes revolutions) காத்திருக்கின்றன'' (I, 361). ''எனவே, தேசியச் செழுமை மூலமாக அல்லாமல் உள்நாட்டுச் சந்தை விரிவடைய முடியாது'' (I, 362). மக்களின் செழுமையை ஸிஸ்மொந்தீ மனத்தில் கொண்டிருக்கிறுர், ஏனெனில் முதலாளித்துவரீதியான விவசாயத்தின்கீழ் ''தேசியச் செழுமை'' சாத்தியம் என்று அவர் சற்றுமுன் தாமே ஒப்புக் கொண்டிருக்கிறுர்.

வாசகர் காண்கிறவாறு, இதையேதான் வார்த்தைக்கு வார்த்தை நமது நரோத்னிக் பொருளாதாரவாதிகள் கூறுகிறுர்கள். தமது நூலின் முடிவில், ''மக்கள் தொகை பற்றி'' என்கிற VII-ம் நூல்தொகையில், ''இயந்திரங்களின் புனைவு காரணமாகத் தேவைக்குமேல் மிஞ்சிவிட்ட மக்கள்தொகை பற்றி'' எனும் VII-ம் அத்தியாயத்தில், ஸிஸ்மொந்தீ இந்தப் பிரச்சினைக்கு மீண்டும் திரும்பி வருகிறுர்.

''கிராமப்புறத்தில் பெருமளவான விவசாயம் புகுத்தப்பட்டதால், பிரிட்டனில், தாமே உழைத்து வந்தார்களென்றுலும் ஒரு மிதமான செழுமையை அனுபவித்துவந்த விவசாயச்

சாகுபடியாளர்களின் (fermiers paysans) வர்க்கம் மறைந்து விட்டதிலே கொண்டுபோய் விட்டிருக்கிறது; மக்கள் தொகை கணிசமாகக் குறைந்துவிட்டது, என்ருலும் அதன் எண்ணிக்கையைவிட நுகர்வு அதிகமாகக் குறைந்தது. அத்தியாவசியமான பொருட்களை மட்டுமே பெற்றுக் கொண்டு நிலம் சம்பந்தப்பட்ட வேலைகள் அனைத்தையும் செய்கிற அன்ருடக் கூலிக்காரர்கள் நகரப்புறத்துத் தொழில் துறைக்குக் கொடுக்கும் ஊக்கம் (encouragement) முன்பு பணக்கார விவசாயிகள் அதற்குக் கொடுத்துவந்த ஊக்கத் துக்கு எவ்வகையிலும் சமமானதல்ல'' (II, 327). ''இதே போன்ற மாற்றம் நகரப்புறத்து மக்களிடையேயும் நிகழ்ந் தது.... சிறு தொழில் வினைஞர்கள், சிறிய பட்டறைத்தொ ழில் முதலாளிகள் மறைகின்றனர், ஒரு பெரிய தொழில் முதலாளி அவர்களில் நூற்றுக்கணக்கானவர்களுக்குப் பதி லாக வந்து விடுகிருன், அவர்களெல்லோரையும் ஒன்ருக வைத்துப் பார்த்தாலுங்கூட ஒருவேளை அவனைப்போல் பணம் படைத்தவனுக இருந்திருக்க மாட்டார்கள். ஆனபோ திலும், அவர்களை மொத்தமாக வைத்துப் பார்க்கிற பொ ழுது அவனைவிட அவர்கள் பெரிய நுகர்வாளர்கள். அவன் அனுபவிக்கிற சுகபோகம் தொழில்துறைக்குக் கொடுக்கிற ஊக்கம் அவனுல் அகற்றப்பட்ட நூறு குடும்பங்களின் மித மான செழுமை கொடுத்த ஊக்கத்தைக் காட்டிலும் எவ்வள வோ குறைவானதாகும்'' (மேலே குறிப்பிட்டபடி.).

பிரச்சினை இதுதான்: முதலாளித்துவத்தின் வளர்ச்சியை யொட்டி உள்நாட்டுச் சந்தை சுருங்குகிறது எனும் ஸிஸ் மொந்தீயின் தத்துவம் மொத்தத்தில் என்ன? விஷயத்தை நேருக்கு நேர் நின்று பார்க்க முயலாத அதன் ஆசிரியர் முதலாளித்துவத்துக்குரிய (''வர்த்தகச் செல்வமும்'' அத் துடன் கூடிய தொழில் விவசாயத்துறைகளில் பெருளமவான முயற்சியுமாகும், ஏனெனில் ஸிஸ்மொந்தீக்கு ''முதலாளித் துவம்'' எனும் வார்த்தை தெரியாது. கருத்துருவங்களின் முற்றொருமை காரணமாக இந்த வார்த்தையைப் பயன்படுத் துவது சரியேயாகும், இனிமேல் நாம் சும்மா ''முதலாளித்து வம்'' என்றே கூறுவோம்) நிலைமைகளைப் பகுத்தாய்வதைத் தவிர்த்தார், பகுப்பாய்வுக்குப் பதிலாகத் தமது சொந்தச் சிறு பூர்ஷ்வாப் பார்வைநிலையையும் தமது சொந்தச் சிறு

பூர்ஷ்வாக் கற்பனையுலகத் திட்டத்தையும் வைத்தார் என்பதுதான். வர்த்தகச் செல்வத்தின் வளர்ச்சியும் அதன் விளைவான போட்டியின் வளர்ச்சியும் சராசரியான, சமசீரான விவசாயி மக்களை, அவர்களுடைய ''மிதமான செழுமையோடும் பண்ணையாட்களிடம் அவர்களுக்குள்ள தந்தையாதிக்கக் கால உறவுகளோடும், மேனிகெடாமல் விட்டு வைக்கவேண்டும் என்று அவர் கூறுகிறார்.

இந்த வெகுளித்தனமான விருப்பம் ஸிஸ்மொந்தீக்கும் ''மூளையுழைப்பாளிப் பகுதியினர்'' மத்தியிலேயுள்ள மற்ற தன்னுணர்ச்சிவாதிகளுக்கும் மட்டும் உரித்தான சொத்தாக இருந்து விட்டதைச் சொல்லாமலே விளங்கிக்கொள்ளலாம், முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டிருந்த யதார்த்தநிலையோடு அது மேன்மேலும் நாள்தோறும் மோதிக்கொண்டு வந்ததும் சொல்லாமலே விளங்கும், இந்த முரண்பாடுகளின் ஆழத்தை ஸிஸ்மொந்தீயால் இன்னமும் அளந்தறிய முடியவில்லை.

பொதுவாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியும்சரி, குறிப்பாக முதலாளித்துவரீதியான விவசாயத்தின் வளர்ச்சியும் சரி, உள்நாட்டுச் சந்தையைச் சுருக்கிக் குறுக்குவதில்லை, அதைக் படைக்கிறதே அவைதாம் என்பதை—எதை ஸிஸ்மொந்தீ மறுக்க விரும்பினரோ அதையே—தத்துவரீதியான அரசியல் பொருளாதாரம்—அது தனது மேல் வளர்ச்சியில்* மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளின் அரசியல் பொருளாதாரத்துடன் சேர்ந்து கொண்டது—நிலைநாட்டியதையும் சொல்லாமலே விளங்கும். முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஒரே நேரத்தில் பண்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சியோடு நடைபெறுகிறது; மற்றும் கைத்தொழில் வினைஞனை விலக்கித் தொழிற்சாலை வருகிற பொழுது, எந்த அளவுக்கு வீட்டுக்குரிய உற்பத்தியானது விற்பனைக்குரிய உற்பத்திக்கு வழி விடுகிறதோ அந்த அளவுக்கு, மூலதனத்துக்குச் சந்தை உண்டாக்கப்படுகிறது. ''விவசாயிகள்'' ''சாகுபடியாளர்களாக'' மாற்றப்படுவதின் மூலமாக விவசாயத்திலிருந்து வெளியே தள்ளப்பட்ட ''அன்றாடக் கூலிக்காரர்கள்'' மூல

* இது மார்க்ஸியத்தைக் குறிக்கிறது. (1908-ம் வருடப் பதிப்புக்கு ஆசிரியர் எழுதிய அடிக்குறிப்பு.—(பதிப்பாசிரியர்.)

தனத்துக்கு உழைப்புச் சக்தி அளிக்கிறார்கள், மற்றும் சாகுபடியாளர்கள் தொழிற்பொருட்களை—நுகர்வுக்குரிய பொருட்களை மட்டுமின்றி (இவற்றை முன்பு விவசாயிகள் வீட்டிலே உற்பத்தி செய்து வந்தார்கள் அல்லது கிராமத்துக் கைவினைஞர்கள் உற்பத்தி செய்து வந்தார்கள்) உற்பத்திக் கருவிகளையும் சிற்றளவான விவசாயத்தின் இடத்தில் பெருமளவான விவசாயம் வந்தபின் இவை பழைய மாதிரியில் இருந்து வர முடியவில்லை*—வாங்குகிறவர்களாகிறார்கள். கடைசியாகச் சொன்ன அம்சம் வலியுறுத்தத்தகும், ஏனெனில் நாம் மேற்கோள் காட்டிய ஏட்டுப்பகுதியில் விவசாயிகளின் சாகுபடியாளர்களின் ''நுகர்வு'' பற்றிப் பேசுகையில் இதைத்தான் ஸிஸ்மொந்தீ குறிப்பாகப் புறக்கணித்தார், ஏதோ தனிப்பட்ட நுகர்வு (ரொட்டி, துணிமணிகள் முதலியவை) ஒன்று மட்டுமே இருக்கிறது போலவும் இயந்திரங்களையும் கருவிகளையும் பிறவற்றையும் வாங்குவதோ கட்டடங்களையும் கிடங்குகளையும் தொழிற்சாலைகளையும் பிறவற்றையும் கட்டுவதோ நுகர்வாக ஆகாதது போலவும் அவர் பேசினார்; அது வேறொரு வகையைச் சேர்ந்தது—அதாவது, உற்பத்தித்திறமுள்ள நுகர்வு அது, அந்த நுகர்வு மூலதனத்தைச் சேர்ந்தது, மக்களைச் சேர்ந்தது அல்ல. மேலும், நாம் மீண்டும் இதைக் கவனிக்க வேண்டும், இதே தவற்றைத்தான் நமது நரோத்னிக் பொருளாதாரவாதிகள் முழுமையாக அப்படியே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்,** இந்தத் தவற்றை ஸிஸ்மொந்தீ ஆதாம் ஸ்மித்திடமிருந்து இரவல் வாங்கியதை விரைவில் காணப்போகிறோம்.

---

* ஆக, ஒருங்கே ஒரே காலத்தில் வேறுபடும் மூலதனத்துக்கும் (''சுயேச்சையான'' தொழிலாளி) நிலையான மூலதனத்துக்கும் உரிய கூறுகள் உருப்பெறுகின்றன; பின்சொன்ன நிலையான மூலதனத்துக்குச் சேர்ந்த உற்பத்திக் கருவிகளினின்று சிறு உற்பத்தியாளன் விடுவிக்கப்படுகிறான்.

** ஸிஸ்மொந்தீ தத்துவத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் விளைவாக உள்நாட்டுச் சந்தை சுருங்குகிறது எனும் இந்தப் பகுதியைப்பற்றி எஃப்ரூஸி ஒன்றும் கூறவில்லை. ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலைக்கும் சரி, அவரது தத்துவத்தின் பால் நரோத்னிக் வாதம் கொண்டுள்ள கண்ணோட்டத்துக்கும் சரி, மிகவும் தன்மைக்குறிப்புள்ளதை அவர் விட்டுவிட்டதை நாம் மீண்டும் மீண்டும் காணப்போகிறோம்.

II

தேசிய வருவாய், மூலதனம் பற்றிய ஸிஸ்மொந்தீயின் கருத்துக்கள்

முதலாளித்துவம் சாத்தியமல்ல, அது வளர முடியாது, என்று நிரூபிப்பதற்கு ஸிஸ்மொந்தீ வைக்கும் வாதங்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. வருவாய் பற்றிய அவரது தத்துவத்திலிருந்தும் அதே முடிவுகளுக்கு வருகிறார். மதிப்பை நிர்ணயிப்பது உழைப்பு எனும் ஆதாம் ஸ்மித்தின் தத்துவம் முழுவதையும் வாடகை, இலாபம், கூலி எனும் வருவாயின் மூன்று வடிவங்களையும் ஸிஸ்மொந்தீ அப்படியே எடுத்துக் கொண்டார் என்று சொல்லித்தீரவேண்டும். வருவாயின் முதல் இரண்டு வடிவங்களை ஒன்றுசேர்த்து மூன்றும் வடிவத்துடன் வேறுபடுத்திக் காட்டவும் இங்குமங்குமாக முயல்கிறார்: அவ்வழியில், சில சமயம் அவற்றை இணைத்துக் கூலிக்கு எதிராக நிறுத்துகிறார் (I, 104-105); சில சமயம் அவற்றை வர்ணிப்பதற்கு மிகுதி மதிப்பு (mieux-value) எனும் சொல்லையும் பயன்படுத்துகிறார் (I, 103). எனினும் இந்தத் துறைச் சொல்லின் முக்கியத்துவத்தை நாம் மிகைப்படுத்தக்கூடாது, ''ஸிஸ்மொந்தீயின் தத்துவம் மிகுதி மதிப்பு பற்றிய தத்துவத்துடன் மிக நெருங்கி இருக்கிறது'' (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', 8-ம் இதழ், 41-ம் பக்கம்) என்று எஃப்ரூஸி கூறுகையில் இப்படித்தான் மிகைப்படுத்துகிறார் என்று நினைக்கிறோம். முறையாகச் சொன்னால், ஸிஸ்மொந்தீ ஆதாம் ஸ்மித்தைத் தாண்டிஓர்அடி கூட முன்னேறவில்லை, வாடகையும் இலாபமும் ''உழைப்பின் விளைவிலிருந்து பெறும் கழிவுகள்'', உற்பத்திப் பொருளுக்குத் தொழிலாளி கூட்டித்தரும் மதிப்பின் பங்கு என்று ஆதாம் ஸ்மித்துங்கூடச் சொன்னார் (பார்க்க: ''நாடுகளின் செல்வத்தின் தன்மையும் காரணங்களும் பற்றிய ஒரு விசாரணை''. பீபிகவ் செய்த ருஷ்ய மொழிபெயர்ப்பு, நூல்தொகை I, ''உழைப்பின் விலையைப் பற்றி'' எனும் VIII-வது அத்தியாயம், ''பண்டங்களின் விலையின் இணைக் கூறுகள் பற்றி'' எனும் VI-ம் அத்தியாயம்). இதற்கு மேலும் ஸிஸ்மொந்தீ போகவில்லை. ஆனால் புதிதாகப் படைக்கப்பட்ட உற்பத்திப் பொருளை மீத மதிப்பாகவும் கூலியாகவும் செய்த இந்தப் பிரிவினையைச் சமுதாயரீதியான வரு

வாய் பற்றிய தத்துவத்துடனும் உள்நாட்டுச் சந்தையுடனும் முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்திப் பொருளின் திருப்பிக்கொள்வினையுடனும் இணைத்துவிட முயன்றார். ஸிஸ்மொந்தீயின் விஞ்ஞானரீதியான குறிபொருளையும் சரி, அவரது தத்துவத்துக்கும் ருஷ்ய நரோத்னிக்குகளின் தத்துவத்துக்கும் இடையேயுள்ள தொடர்பையும் சரி, மதிப்பீடு செய்வதற்கு இந்த முயற்சிகள் மிகவும் முக்கியமாகும். எனவே அவற்றை மேலும் விபரமாகப் பகுத்தாய்வது தகும்.

வருவாய் பற்றிய பிரச்சினையையும் அதற்கு உற்பத்தியோடும் நுகர்வோடும் மக்கள் தொகையோடும் உள்ள உறவு பற்றிய பிரச்சினையையும் எல்லாவிடங்களிலும் ஸிஸ்மொந்தீ முன்னணிக்குத் தள்ளியதிலே ''வருவாய்'' எனும் கருத்துருவத்தின் தத்துவரீதியான அடிப்படையைப் பகுத்தாய்வு செய்ய வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது இயல்பேயாகும். எனவே அவரது நூலின் துவக்கத்திலேயே வருவாய் பிரச்சினை குறித்து மூன்று அத்தியாயங்கள் கொடுத்திருக்கிறார் (I, II, அத்தியாயங்கள் IV-VI). ''மூலதனத்திலிருந்து எப்படி வருவாய் தோன்றுகிறது'' என்று தலைப்புள்ள IV-ம் அத்தியாயம் மூலதனத்துக்கும் வருவாய்க்கும் உள்ள வேற்றுமையை எடுத்துக் கவனிக்கிறது. எடுத்த எடுப்பிலேயே ஸிஸ்மொந்தீ இந்த விஷயத்தைச் சமுதாய முழுமையுடன் உறவுபடுத்திய நிலையில் எடுத்துக் கவனிக்கிறார். அவர் சொல்கிறதாவது: ''ஒவ்வொருவனும் அனைவருக்காகவும் உழைக்கிறதினால் எல்லோரும் உற்பத்தி செய்ததை எல்லோரும் நுகர்ந்தாக வேண்டும்.... மூலதனத்துக்கும் வருவாய்க்கும் உள்ள வேற்றுமை சமுதாயத்துக்குப் பொருளுள்ளதேயாகும்'' (I, 83). ஆனால் இந்தப் ''பொருளுள்ள'' வேற்றுமை தனிப்பட்ட தொழில்முயற்சியாளன் விஷயத்தில் இருப்பதுபோல் சமுதாயத்தின் விஷயத்தில் அவ்வளவு எளிமையானதல்ல என்று ஸிஸ்மொந்தீக்கு ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. அவர் வைக்கும் வில்லங்கம் வருமாறு: ''அரசியல் பொருளாதாரத்தின் மிகவும் சூட்சுமமான, மிகவும் கடினமான பிரச்சினையை நாம் நெருங்குகிறோம். மூலதனத்தின் இயல்பும் வருவாயின் இயல்பும் நம் மனத்திலே இடையறாமல் பின்னிக் கொண்டுள்ளன: ஒருவனுக்கு மூலதனமாக இருப்பது மற்றவனுக்கு வருவாயாக ஆகிறதை நாம் பார்க்கி

ளும், மற்றும் அதே பொருள் கைக்குக் கை மாறிச் செல்கிறதிலே ஒன்றுக்குப்பின் ஒன்றாக வெவ்வேறு பெயர்கள் பெறுகிறது'' (I, 84)—அதாவது, ஒரு தருணத்தில் ''மூலதனம்'' என்றும் மற்றொரு தருணத்தில் ''வருவாய்'' என்றும் அழைக்கப்படுகிறது. ''ஆனால் அவற்றைக் குழப்புவது நாசகரமானது'' (leur confusion est ruineuse, 477-ம் பக்கம்) என்று ஸிஸ்மொந்தீ அடித்துச் சொல்கிறார். ''சமுதாயத்தின் மூலதனத்தையும் வருவாயையும் வேறுபடுத்திக்காண்பது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவுக்கு முக்கியமானதுங்கூட'' (I, 84).

ஸிஸ்மொந்தீ சொல்கிற கஷ்டம் எதிலே இருக்கிறதென்று வாசகர் கண்டுகொண்டிருக்கலாம்: தனிப்பட்ட தொழில் முயற்சியாளனின் வருவாய் அவனுடைய இலாபமாக இருக்குமேயானால்—அதை அவன் பல்வேறு நுகர்ப்பொருட்களுக்காகச்* செலவிடுகிறான்—தனிப்பட்ட தொழிலாளியின் வருவாய் அவனுடைய கூலியாக இருக்குமேயானால், இந்த இரண்டு வருவாய் வடிவங்களையும் கூட்டி ஒன்றாகச் சேர்க்கமுடியுமா ''சமுதாயத்தின் வருவாயாக'' அமைவதற்கு? அப்புறம், எடுத்துக்காட்டாக, இயந்திரங்களை உற்பத்தி செய்கிற முதலாளிகளின், தொழிலாளிகளின் விஷயம் என்னவாகும்? அவர்களின் உற்பத்திப் பொருள் நுகரமுடியாத (அதாவது, தனிப்பட்ட முறையிலே நுகரமுடியாத) வடிவத்தில் இருக்கிறது. அதை நுகர்ப் பொருட்களோடு கூட்டிக் கொள்ள முடியாது. அந்தப் பொருட்கள் மூலதனமாகப் பயன்படவே ஏற்பட்டவை. எனவே, அவை அவற்றின் உற்பத்தியாளர்களுக்கு வருவாயாக (அதாவது, இலாபத்துக்கும் கூலிக்கும் தோற்றுவாயாக இருக்கிற பகுதி) இருக்கிற காலத்திலேயே அவற்றை வாங்குகிறவர்களுக்கு மூலதனமாக ஆகின்றன. சமுதாயரீதியான வருவாய் எனும் கருத்துருவத்தை வரையறுப்பதைத் தடுக்கும் இந்தக் குழப்பத்தை எப்படி நாம் நேராக்கமுடியும்?

நாம் பார்த்தவாறு, ஸிஸ்மொந்தீ வெறுமே இந்தப் பிரச்சினையை அணுகி உடனே அதிலிருந்து விலகிப் பின்வாங்கிவிட்

---

* மேலும் திட்பநுட்பமாகச் சொல்வதென்றால்: திரட்சிக்காகப் பயன்படுத்தப்படாத இலாபத்தின் பகுதி.

டார், ''கஷ்டத்தை''க் கூறியதோடு நிறுத்திக்கொண்டார். ''வழக்கமாக, வாடகை, இலாபம், கூலி என்று மூன்று விதமான வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது'' (I, 85) என்று பட்டவர்த்தனமாகவே சொல்கிறார், அப்புறம் அவை ஒவ்வொன்றைப்பற்றிய ஆதாம் ஸ்மித்தின் தத்துவத்தை விரித்து விளக்குவதில் இறங்கிவிடுகிறார். மூலதனத்துக்கும் சமுதாய ரீதியான வருவாய்க்கும் உள்ள வேற்றுமை பற்றிய பிரச்சினை விடையளிக்கப்படாமலே இருந்துவிடுகிறது. சமுதாயரீதியான வருவாய்க்கும் தனிநபரின் வருவாய்க்கும் இடையே கரு ரான பிரிவினை செய்யப்படாமலே இப்போது விரிவிளக்கம் நடக்கிறது. ஆனால் தாம் கைவிட்ட பிரச்சினைக்கே ஸிஸ்மொந்தீ மீண்டும் திரும்பி வருகிறார். வெவ்வேறு விதமான வருவாய் இருக்கிறது போலவே ''வெவ்வேறு விதமான செல்வமும்'' (I, 93) இருக்கிறதென்று கூறுகிறார்—அதாவது, நிலையான மூலதனம் (இயந்திரங்கள், கருவிகள் முதலியவை), புழக்கத்திலுள்ள மூலதனம் (முந்தியதைப்போலல்லாமல் இது விரைவிலே நுகரப்பட்டுவிடுகிறது, தனது வடிவத்தையும் மாற்றிக் கொள்கிறது (விதை, கச்சா பொருட்கள், கூலி), மற்றும் கடைசியாக, மூலதனத்திலிருந்து பெறும் வருவாய் (இது மறுவுற்பத்தி செய்யப்படாமலே நுகரப்பட்டுவிடுகிறது). நிலையான மூலதனம், புழக்கத்திலுள்ள மூலதனம் பற்றிய தத்துவத்தில் ஆதாம் ஸ்மித் செய்த அத்தனைத் தவறுகளையும் ஸிஸ்மொந்தீ திரும்பச் செய்கிறார் என்பதோ, புழக்கத்தின் இயக்கப் போக்கைச் சேர்ந்த இந்த வகையினங்களை உற்பத்தியின் இயக்கப்போக்கிலிருந்து உதிக்கும் வகையினங்களோடு (நிலையான மூலதனமும் மாறுபடும் மூலதனமும்) போட்டுக் குழப்புகிறார் என்பதோ, இங்கு நமக்கு முக்கியமில்லை. நமக்கு அக்கறையுள்ளது வருவாய் பற்றிய ஸிஸ்மொந்தீயின் தத்துவந்தான். இந்தப் பிரச்சினையில், சற்றுமுன் செல்வத்தை மூன்று விதமாகப் பிரித்தாரே, அந்தப் பிரிவினையிலிருந்து பின்வரும் முடிவுகள் எடுக்கிறார்.

''இந்த மூன்று விதமான செல்வமும் அதேபோல் நுகர்விலும் செல்வதைக் குறித்துக் கொள்வது முக்கியம், ஏனெனில் உற்பத்தி செய்யப்பட்டவை அனைத்தும் எந்த அளவுக்கு மனிதனின் தேவைகளுக்குப் பயன்படுகின்றனவோ அந்த அளவுக்குத்தான் மதிப்புள்ளவை, மற்றும் நுகர்வு மூலமாக

மட்டுமே இந்தத் தேவைகள் நிறைவாக்கப்படுகின்றன. ஆனால் நிலையான மூலதனம் இந்த நோக்கத்துக்கு மறைமுகமாகத்தான் (d'une manière indirecte) பயன்படுகிறது, அது மெள்ள மெள்ள நுகரப்படுகிறது, நுகர்வுக்குப் பயன்படக் கூடியதை மனிதன் மறுவுற்பத்தி செய்வதற்கு உதவுகிறது'' (I, 94-95), ஆனால் புழக்கத்திலுள்ள மூலதனம் (இதை ஏற்கனவே மாறுபடும் மூலதனத்துடன் ஸிஸ்மொந்தீ ஒன்றுக்குகிறார்) ''**தொழிலாளிகளின் நுகர்வு நிதியாக**'' மாற்றப்படுகிறது (I, 95). எனவே, தனிப்பட்ட நுகர்வினின்று தனிவேறுபட்ட நிலையில் இரண்டு விதமான சமுதாய **நுகர்வு** இருக்கிறதாக ஆகிறது. இவ்விரு வகைகளும் மிகப்பெரிதாக வேறுபடுகின்றன. உண்மைதான், நிலையான மூலதனம் மெள்ள மெள்ள நுகரப்படுகிறது என்பது முக்கியமல்ல, சமுதாயத்தின் எந்த ஒரு வர்க்கத்துக்கும் **வருவாயாக** (ஒரு நுகர்வு நிதியாக) உருப்பெருமல் அது நுகரப்படுகிறது, அது தனிப்பட்டமுறையில் பயன்படுத்தப்படாமல் உற்பத்தித் திறமுள்ள முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதே முக்கியம். ஆனால் இதை ஸிஸ்மொந்தீ பார்க்கத் தவறுகிறார், மற்றும் சமுதாய ரீதியான மூலதனத்துக்கும் வருவாய்க்கும் இடையே வேற்றுமையைத் தேடிச் செல்வதிலே தாம் மறுபடியும் வழி தவறிப் போனதை* உணர்ந்து கொண்டு அவர் போக்கற்ற நிலையிலே கூவுகிறார்: ''செல்வத்தின் இயக்கம் எவ்வளவோ சூட்சுமமாக இருப்பதாலும், அதை முழுமையாகப் புரிந்து கொள்ள (pour le bien saisir) எவ்வளவோ கணிசமான கவனம் செலுத்தவேண்டியிருப்பதாலும் மிக எளிமையான எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வது பயனளிப்பதாயிருக்கும் என்று நம்புகிறோம்'' (I, 95). உண்மைதான், அவர்

---

* இப்பொழுதுதான் ஸிஸ்மொந்தீ மூலதனத்தை **வருவயிலிருந்து** பிரித்து எடுத்துக் கொண்டிருக்கிறார். மூலதனம் உற்பத்திக்குப் போகிறது, வருவாய் நுகர்வுக்குப் போகிறது. ஆனால் நாம் சமுதாயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம், சமுதாயம் நிலையான மூலதனத்தையும் ''நுகர்கிறது.'' வரையறுத்த தனித்தன்மை இற்றுப்போகிறது, ''ஒருவனுக்கு மூலதனமாக'' இருப்பது ''மற்றவனுக்கு வருவாயாக'' இருக்கிறபடி உருமாற்றம் செய்கிற சமுதாய-பொருளாதார இயக்கப்போக்கு விளக்கப்படாமலே நிற்கிறது.

‘‘மிக எளிமையான’’ எடுத்துக்காட்டை எடுத்துக் கொள்கிறார்: தனியொரு நிலச்சுவான்தார் (un fermier solitaire) நூறு மூட்டை கோதுமை அறுவடை செய்கிறான்; அந்தக் கோதுமையில் ஒரு பகுதியை அவனே சாப்பிட்டான், ஒரு பகுதி விதைப்புக்குப் போயிற்று, ஒரு பகுதி அவன் கூலிக்கு அமர்த்திக் கொண்ட தொழிலாளிகள் நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்டது. அடுத்த வருடம் அவன் இருநூறு மூட்டை கோதுமை அறுவடை செய்தான். இதை யார் சாப்பிடுவது? நிலச்சுவான்தாரின் குடும்பம் அவ்வளவு விரைவாகப் பெருக முடியாது. நிலையான மூலதனத்துக்கும் (விதை) புழக்கத்திலுள்ள மூலதனத்துக்கும் (கூலி) நிலச்சுவான்தாரின் நுகர்வு நிதிக்கும் இடையே வேற்றுமையைக் காட்டுவதற்காக (மிகவும் மோசமாகப் பொறுக்கிக் கொண்ட) இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி ஸிஸ்மொந்தீ கூறுவதாவது:

‘‘ஒரு தனிப்பட்ட குடும்பத்தில் மூன்று வகையான செல்வம் இருக்கக் கண்டோம்; இப்போது இந்த ஒவ்வொரு வகையையும் நாடுமுழுமைக்கும் சம்பந்தப்படுத்திப் பரிசீலித்து இந்த வினியோகத்திலிருந்து எப்படித் தேசிய வருவாய் விளைய முடியும் என்று பார்ப்போம்’’ (I, 97). ஆனால் இதன் பின் அவர் சொல்வதெல்லாம் சமுதாயத்திலுங்கூட இதே மூன்று வகையான செல்வத்தைப் பிரதிபடைப்பாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றுதான்: நிலையான மூலதனம் (இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவான உழைப்பைச் செலவிட வேண்டியதை ஸிஸ்மொந்தீ வலியுறுத்துகிறார், ஆனால் இந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தேவைப்படுகிற நுகர்ப் பொருட்களோடு எப்படி நிலையான மூலதனம் பரிமாற்றிக்கொள்ளும் என்று அவர் விளக்கவில்லை); அப்புறம் வருகிறது கச்சா பொருட்கள் (ஸிஸ்மொந்தீ இவற்றைக் குறிப்பாகத் தனிமைப்படுத்துகிறார்); பிறகு தொழிலாளிகளின் பராமரிப்பும் முதலாளிகளின் இலாபமும் வருகிறது. IV-ம் அத்தியாயத்திலிருந்து நமக்குக் கிடைப்பதெல்லாம் இதுதான். தேசிய வருவாய்ப் பிரச்சினை தீர்வின்றி நின்றது என்பது வெளிப்படை, ஸிஸ்மொந்தீ வினியோகத்தை மட்டுமின்றி வருவாய் பற்றிய கருத்துருவத்தையும் பகுப்பாய்வு செய்யத் தவறினார். சமுதாயத்தின் நிலையான மூலதனத்தையும் மறுவுற்பத்தி செய்வதின்

தேவை பற்றிய தத்துவரீதியிலே மிக முக்கியமான சுட்டுக் குறிப்பை உடனே மறந்துவிடுகிறார்; அடுத்த அத்தியாயத்தில் ''வெவ்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களிடையே தேசிய வருவாய் வினியோகம்'' (V-ம் அத்தியாயம்) குறித்துப் பேசுகையில் நேராக மூன்று வகையான வருவாய் பற்றிப் பேசப் புகுந்து, வாடகையையும் இலாபத்தையும் இணைத்துத் தேசிய வருவாயில் இரண்டு பகுதிகள்—அதாவது, செல்வத்திலிருந்து பெறும் இலாபம் (அதாவது, முறையான பொருளில் வாடகையும் இலாபமும்), தொழிலாளிகளின் பிழைப்புக்குரிய சாதனங்கள், என்று—இருக்கிறதாகக் கூறுகிறார் (I, 104-105). மேலும் அவர் சொல்வதாவது:

''அதேபோல் வருடாந்தர உற்பத்திப் பொருளும், அதாவது அந்த நாடு செய்த வேலை முழுவதின் விளைவும், இரண்டு பகுதிகள் கொண்டிருக்கிறது: ஒன்று... செல்வத்திலிருந்து பெறும் இலாபம்; மற்றொன்று, வேலை செய்யும் திறம் (la puissance de travailler), செல்வத்தின் எந்தப் பகுதியோடு இது பரிமாற்றமாகிறதோ அதற்குச் சமமாக அல்லது வேலை செய்கிறவர்களின் பிழைப்புச் சாதனங்களுக்குச் சமமாக அனுமானிக்கப்படுகிறது.... ஆக, தேசிய வருவாயும் வருடாந்தர உற்பத்திப் பொருளும் ஒன்றையொன்று சமனப்படுத்திக் கொள்கின்றன, சம பரிமாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. வருடாந்தர உற்பத்திப் பொருள் முழுவதும் அவ்வருடத்தினூடே நுகரப்படுகிறது, ஆனால் அதில் ஒரு பகுதியைத் தொழிலாளிகள் நுகர்கிறார்கள், அவர்கள் மாற்றாகத் தமது உழைப்பைக் கொடுத்து அப்பொருளை மூலதனமாக மாற்றி மறுவுற்பத்தி செய்கிறார்கள்; இன்னொரு பகுதியை முதலாளிகள் நுகர்கிறார்கள், அவர்கள் மாற்றாகத் தமது வருவாயைக் கொடுத்து அதை அழிக்கிறார்கள்'' (I, 105).

ஆக, தேசிய மூலதனத்தையும் வருவாயையும் வேறுபடுத்திப்பார்க்கும் பிரச்சினையை—மிகவும் முக்கியமானது, கடினமானது என்று எவ்வளவோ திடமாகக் கருதிய பிரச்சினையை—ஸிஸ்மொந்தீ சும்மா ஒதுக்கித் தள்ளி விடுகிறார், சில பக்கங்களுக்கு முன்னே தாமே சொன்னதையே அடியோடு மறந்துவிடுகிறார்! மேலும் இந்தப் பிரச்சினையை ஒதுக்கித் தள்ளுவதின் வழியாகத் தாம் சுத்த அபத்தமான நிலைக்கு

வந்து விட்டதைப் பார்க்கத் தவறுகிறார். உற்பத்திக்கு மூல தனம் தேவையென்றால், இன்னும் திட்பநுட்பமாகச் சொல்வதென்றால், உற்பத்திச் சாதனங்களும் கருவிகளும் தேவையென்றால், வருவாய் வடிவத்தில் எப்படி வருடாந்தர உற்பத்திப் பொருள் முழுவதையும் முதலாளிகளும் தொழிலாளிகளும் நுகரமுடியும்? அவற்றை உற்பத்தி செய்தாக வேண்டும், ஆண்டு தோறும் உற்பத்தி செய்யவும் படுகிறது (சற்று முன் ஸிஸ்மொந்தீயே ஒப்புக் கொண்டிருக்கிறவாறு). இப்போது இந்த உற்பத்திக் கருவிகள், கச்சா பொருட்கள், முதலியவை அனைத்தும் திடீரென்று கைவிடப்படுகின்றன, வருடாந்தர உற்பத்திப் பொருள் தேசிய வருவாய்க்குச் சமமாக உள்ளது என்கிற முற்றும் பொருத்தமற்ற வன் கூற்று மூலமாக மூலதனத்துக்கும் வருவாய்க்கும் இடையே வேற்றுமை பற்றிய ''கஷ்டமான'' பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

முதலாளித்துவச் சமுதாயத்தின் உற்பத்திப் பொருள் முழுமையும் இரண்டு பகுதிகள்—தொழிலாளிகளின் பகுதி (கூலி, அல்லது, நவீனகாலத் துறைச் சொல்லைப் பயன்படுத்துவதானால், மாறுபடும் மூலதனம்), மற்றும் முதலாளிகளின் பகுதி (மிகுதி மதிப்பு)—கொண்டுள்ளது என்கிற தத்துவம் ஸிஸ்மொந்தீக்குத் தனிச்சிறப்பாக வாய்த்ததல்ல. அது அவருக்குச் சொந்தமானதல்ல. அதை அவர் ஆதாம் ஸ்மித்திடமிருந்து முழுவதாக இரவல் வாங்கியிருக்கிறார், அதனின்று ஒரு படி பின்னுக்கும் போயிருக்கிறார். பின்னே வந்த அரசியல் பொருளாதார விஞ்ஞானம் முழுவதும் (ரிக்கார்டோ, மில், புரூதோன், ரொட்பெர்டஸ்) இந்தத் தவற்றைத் திரும்பவும் செய்தார்கள், இதை ''மூலதனம்'' எனும் நூலின் ஆசிரியர்* மட்டுமே II-ம் நூல்தொகையின் III-ம் பகுதியில் வெளிப்படுத்தினார். அவரது கருத்துக்களுக்கு ஆதாரமாயுள்ள கோட்பாடுகளை நாம் பின்னால் விளக்குவோம். தற்பொழுதுக்கு இந்தத் தவற்றை நமது நரோத்னிக் பொருளாதாரவாதிகள் திரும்பச் செய்கிறார்கள் என்று சொல்லுவோம். அவர்களை ஸிஸ்மொந்தீயுடன் ஒப்பிடுவதில் தனிச் சுவை இருக்கிறது, ஏனெனில் ஸிஸ்மொந்தீ எடுத்த அதே

---

* கார்ல் மார்க்ஸ்.—(பதிப்பாசிரியர்.)

முடிவுகளை* இந்தப் பிழையான தத்துவத்திலிருந்து அவர்களும் எடுக்கிறார்கள்: அதாவது, முதலாளித்துவச் சமுதாயத்தில் மிகுதி மதிப்பைப் பெறமுடியாது என்கிற முடிவு, சமுதாயச் செல்வத்தை விரிவாக்க முடியாது என்கிற முடிவு, நாட்டுக்குள்ளே மிகுதி மதிப்பைப் பெறமுடியாது என்கிற காரணத்தால் வெளிநாட்டுச் சந்தையைத் தேடிச் சென்று தீரவேண்டும் என்கிற முடிவு, கடைசியாக: முதலாளி களின், தொழிலாளிகளின் நுகர்வு மூலமாக உற்பத்திப் பொருளைப் பெற முடியாது என்று கூறப்படும் காரணத்தால் நெருக்கடிகள் நிகழ்கின்றன என்கிற முடிவு.

III

முதலாளித்துவச் சமுதாயத்தில் வருடாந்தர உற்பத்திப் பொருளின் இரண்டு கூறுகள் பற்றிய பிழையான தத்துவத்திலிருந்து ஸிஸ்மொந்தீ எடுத்த முடிவுகள்

ஸிஸ்மொந்தீ தத்துவம் முழுவதையும் பற்றி வாசகருக்கு ஒரு கருத்து அளிக்கும் பொருட்டு இந்தத் தத்துவத்திலிருந்து அவர் எடுக்கும் மிக முக்கியமான முடிவுகளைக் கூறுவோம், அப்புறம் மார்க்ஸின் ''மூலதனம்'' எனும் நூலில் அவருடைய முதன்மையான தவறு எவ்விதத்தில் திருத்தப்பட்டது என்று கவனிப்போம்.

முதலாவதாக, உற்பத்தி நுகர்வுடன் பொருந்தியதாக இருந்துதீரவேண்டும், உற்பத்தியை நிர்ணயிப்பது வருவாய் என்று ஆதாம் ஸ்மித்தின் பிழையான தத்துவத்திலிருந்து ஸிஸ்மொந்தீ முடிவு எடுக்கிறார். இந்த ''உண்மையை'' (முத லாளித்துவ உற்பத்தியின் தன்மையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவருக்கு அறவே கிடையாது என்று இது நிரூபிக் கிறது) அவர் அடுத்த அத்தியாயத்தில், ''நுகர்வைக் கொண்டு உற்பத்தியும் வருவாயைக் கொண்டு செலவும் பரஸ்பரமாக

---

* ஆதாம் ஸ்மித்தின் தவற்றைத் திரும்பச் செய்த, மற்ற பொருளாதாரவாதிகள் அவற்றை விவேகத்துடன் தவிர்த்தார்கள்.

நிர்ணயிக்கப்படுவது'' என்கிற VI-வது அத்தியாயத்தில், திரும்பத் திரும்பச் சொல்கிறார். சிக்கனக்குணமுள்ள விவசாயியின் ஒழுக்கநெறிகளை ஸிஸ்மொந்தீ நேரடியாக முதலாளித்துவச் சமுதாயத்துக்குப் பொருத்திச் செயல்படுத்துகிறார், அவ்வழியில் தாம் ஆதாம் ஸ்மித்தின் தவற்றைத் திருத்தியிருப்பதாகவும் நெஞ்சார நம்புகிறார். தமது நூலின் துவக்கத்திலேயே முன்னுரைப் பகுதியில் (நூல் I, விஞ்ஞானத்தின் வரலாறு) ஆதாம் ஸ்மித்தைப் பற்றிப் பேசுகையில், அவர் ஆதாம் ஸ்மித்துக்கு ''இணைப்புரையாக'' ''திரட்சியின் ஒரே நோக்கம் நுகர்வு'' (I, 51) எனும் முன்கூற்று வைப்பதாகக் கூறுகிறார். அவர் சொல்வதாவது: ''நுகர்வு மறுவுற்பத்தியை நிர்ணயிக்கிறது'' (I, 119-120), ''தேசியச் செலவு தேசிய வருவாயை ஒழுங்குமுறைப் படுத்த வேண்டும்'' (I, 113), மற்றும் இது போன்ற வன்கூற்றுகள் நூல்முழுவதிலும் நிறைந்திருக்கின்றன. ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் மேலும் இரண்டு இனக்குறிப்பான உருக்கூறுகள் இத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளன: முதலாவது, முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் நம்பிக்கையின்மை, அது மேன்மேலும் அதிகமாக உற்பத்திச் சக்திகள் வளரக் காரணமாயிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவது, மற்றும் அப்படிப்பட்ட வளர்ச்சி சாத்தியம் என்பதை மறுப்பது—முதலாளித்துவம் உழைப்பை வீணடிப்பதில் கொண்டு போய் விடுகிறது என்றெல்லாம் ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதிகள் ''போதிக்கிற'' அதே முறையிலே.

''வரம்பற்ற உற்பத்திக்குத் தூண்டுகிறவர்கள் தவறு செய்கிறார்கள்'' என்கிறார் ஸிஸ்மொந்தீ (I, 121). வருவாயை மிஞ்சுகிற உற்பத்தி மிகை உற்பத்தியை உண்டாக்குகிறது (I, 106). செல்வத்தின் பெருக்கம் ''படிப்படியாக இருக்கிற பொழுதுதான், தன்னளவில் தகவுப்பொருத்தமாக இருக்கிற பொழுதுதான், அதன் பகுதிகளில் எதுவும் மிகையான வேகத்தில் வளராதிருக்கிற பொழுதுதான்'' நன்மையளிப்பதாக இருக்கிறது. நல்லவரான ஸிஸ்மொந்தீ ''தகவுப் பொருத்தங்கெட்ட'' வளர்ச்சி வளர்ச்சியல்ல என்று கருதுகிறார் (நமது நரோத்னிக்குகளும் அப்படியே கருதுகிறார்கள்); இந்தத் தகவுப்பொருத்தக்கேடு இன்றையச் சமுதாயப்பொருளாதார அமைப்பு முறையின், அதன் வளர்ச்சியின், ஒரு

விதி அல்ல, சட்டமியற்றுபவர் ''தவறு'' அது என்றும் இதைப்போல மற்றவும் கருதுகிறார்; இவ்விஷயத்தில் ஐரோப்பிய அரசாங்கங்கள் தவறான பாதையிலே போய்விட்ட இங்கிலாந்தைச் செயற்கையாகக் காபியடிக்கின்றன என்று கருதுகிறார்.* முதலாளித்துவம் உற்பத்திச் சக்திகளை வளர்க்கிறது என்று மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் முன் வைத்த—மார்க்ஸின் தத்துவம் முற்றாக ஏற்றுக்கொண்ட—முன்கூற்றை ஸிஸ்மொந்தீ முற்றாக மறுக்கிறார். உண்மையிலே சொன்னால், எல்லாத் திரட்சியும் ''சிறுகச்சிறுக'' நிகழ்வது மட்டுமே சாத்தியம் என்று கருதும் அளவுக்கு அவர் போகிறார், திரட்சியின் இயக்கப்போக்கை அவரால் விளக்கவே முடியவில்லை. இது அவருடைய கருத்துக்களின் மிகவும் இனக்குறிப்புள்ள இரண்டாம் உருவக்கூறாகும். திரட்சி குறித்து அவர் வாதிடும் முறை மிகவும் வேடிக்கையாக இருக்கிறது:

' கடைசியாக, ஒரு குறிப்பிட்ட வருடத்தின் மொத்த உற்பத்திப் பொருள் அதற்கு முந்தைய வருடத்தின் மொத்த உற்பத்திப் பொருளோடு மட்டுமே எப்போதும் மாறு கொள்கிறது'' (I, 121). இங்கே திரட்சி முற்றாக மறுக்கப் படுகிறது: முதலாளித்துவத்தின்கீழ் சமுதாயச் செல்வத்தின் வளர்ச்சி சாத்தியமில்லை என்றாகிறது. இந்த வன்கூற்றைக் கேட்டு ருஷ்ய வாசகர் அதிக வியப்படைய மாட்டார், ஏனெனில் இதையே அவர் திரு. வி. வி. யிடமிருந்தும் திரு. நி.—ன்-இடமிருந்தும் கேட்டிருக்கிறார். ஆனால் என்ன இருந்தாலும் ஸிஸ்மொந்தீ ஆதாம் ஸ்மித்தின் சீடர். மிகவும் பொருத்தமற்ற ஒன்றைத் தாம் சொல்வதாக அவருக்கு ஓர் உணர்ச்சி உண்டாகிறது, தம்மைத் திருத்திக்கொள்ள விரும்புகிறார்:

அவர் தொடர்கிறதாவது: ''உற்பத்தி படிப்படியாக வளருமேயானால், அப்புறம் வருடாந்தரப் பரிமாற்றம் ஒவ்

---

* எடுத்துக்காட்டாக, II,456-457-ம் பக்கங்களையும் பிற பல ஏட்டுப்பகுதிகளையும் பார்க்க. பின்னால் அவற்றிலிருந்து முன்மாதிரிகளை எடுத்து மேற்கோள் காட்டுவோம் திரு. நி.-ன் போன்ற நமது தன்னுணர்ச்சிவாதிகள் சொல்லும் சொற்பாணியிலும்கூட ஸிஸ்மொந்தீயிடமிருந்து எவ்விதத்திலும் வேறுபடவில்லை என்று வாசகர் கண்டுகொள்வார்.

வோர் ஆண்டிலும் ஒரு சிறு நஷ்டத்தை (une petite perte) மட்டுமே உண்டாக்கும், அதே நேரத்தில் எதிர்காலத்திற்குரிய நிலைமைகளை மேம்படுத்தும் (en même temps qu'elle bonifie la condition future). இந்த நஷ்டம் சிறிதாக இருந்து நல்லபடியாக வினியோகிக்கப்பட்டிருக்குமேயானால், அதை எல்லோரும் குறைகூறாமல் தாங்கிக் கொள்வார்கள்.... ஆனால், புதிய உற்பத்திக்கும் முந்தைய உற்பத்திக்கும் இடையே வேறுபாடு பெரிதாக இருக்குமேயானால் மூலதனங்கள் அழிகின்றன (sont entamés), வேதனை உண்டாக்கப்படுகிறது, நாடு முன்னேறுவதற்கு மாறாகப் பின்னடைகிறது'' (I, 121). மேற்சொன்ன வாதத்தாக்கில் தன்னுணர்ச்சிவாதத்தின் அடிப்படையான ஆய்வுரையையும் முதலாளித்துவத்தைப் பற்றிய சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலையின் அடிப்படையான ஆய்வுரையையும் துல்லியமாகவும் பட்டவர்த்தனமாகவும் வகுத்துரைத்ததை விட மேலாகச் செய்வது கடினம். எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் திரட்சியின்—அதாவது, நுகர்வு போக உற்பத்தியிலுள்ள மிகையின்—இயக்கப் போக்கு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் போதித்தார்கள், மூலதனத்தின் சமுதாயரீதியான உற்பத்தியின் இயக்கப் போக்கு குறித்து அவர்களுக்குத் தெளிவு இல்லாமற்போன போதிலும், சமுதாய உற்பத்திப் பொருள் இரண்டு பகுதிகள் கொண்டது என்கிற ஆதாம் ஸ்மித்தின் தவறான கருத்திலிருந்து அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாமற் போன போதிலும், உற்பத்தி தனக்குரிய சந்தையை உண்டாக்கிக் கொள்கிறது, தானே நுகர்வையும் நிர்ணயிக்கிறது, என்கிற முற்றிலும் சரியான கருத்தை அவர்கள் முன்வைத்தார்கள். மேலும், செல்வத்தின் வளர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு உழைப்பினுடைய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் அதன் சமுதாயமயமாதலும் முழுமையாயிருக்கும், அவ்வளவுக்கவ்வளவு தொழிலாளியின் வாழ்நிலையும் மேலாக இருக்கும் அல்லது இன்றையச் சமுதாயப் பொருளாதார அமைப்புமுறையின்கீழ் அது எவ்வளவு மேலாக இருக்கமுடியுமோ அந்த அளவுக்காயினும் இருக்கும் என்று அங்கீகரித்த மார்க்ஸின் தத்துவம் திரட்சி பற்றிய இந்தக் கருத்தை மூலச்சிறப்புள்ள

பொருளாதாரவாதிகளிடமிருந்து எடுத்துக் கொண்டதை நாம் அறிவோம். இதன் நேர் எதிர்மறையைத்தான் தன்னுணர்ச்சிவாதிகள் அடித்துப் பேசுகிறார்கள், முதலாளித்துவத்தின் பலவீனமான வளர்ச்சி மீது தமது நம்பிக்கைகளை நிறுவுகிறார்கள்; அதனை தடுத்துநிறுத்த வேண்டும் என்று அறைகூவுகிறார்கள்.

மேலும், உற்பத்தி தனக்குரிய சந்தையைப் படைத்துக் கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ளத் தவறுவது மிகுதி மதிப்பை எடுக்க முடியாது எனும் தத்துவத்துக்குக் கொண்டு போய் விடுகிறது. ''மறுவுற்பத்தியிலிருந்து வருவாய் கிடைக்கிறது, ஆனால் உற்பத்தியே தன்னளவில் இன்னும் வருவாய் ஆகவில்லை; அது திருப்பியெடுத்துக்கொள்ளப்பட்ட பிறகுதான், உற்பத்திசெய்யப்பட்ட ஒவ்வொரு பொருளும் அது தேவைப்படுகிற அல்லது அதை விரும்புகிற (qui en avait le besoin ou le désir) நுகர்பவனைத் தேடிக்கொண்டபிறகுதான், அது இந்தப் பெயர் (ce nom) பெற்று (ஆக, உற்பத்திக்கும்—அதாவது, பொருளுக்கும்—வருவாய்க்கும் இடையே வேற்றுமை பெயரில் மட்டுமே தங்கியுள்ளது!) அவ்வகையில் பணியாற்றுகிறது (elle n'opère comme telle)" *(I, 121)*. ஆக, வருவாயும் ''உற்பத்தியும்'' (அதாவது, உற்பத்தி செய்யப்படுகிறதனைத்தும்) ஒன்றே என்று கொள்வது திருப்பியெடுத்துக்கொள்வதும் தனிப்பட்ட முறையிலான நுகர்வும் ஒன்றே எனக் கொள்வதில் கொண்டுபோய் விடுகிறது. அப்படிப்பட்ட உற்பத்திப் பொருள்களை—எடுத்துக்காட்டாக, இரும்பு, நிலக்கரி, இயந்திரங்கள் முதலியவற்றை—திருப்பியெடுத்துக்கொள்வது, பொதுவாக உற்பத்திச் சாதனங்களைத் திருப்பியெடுத்துக் கொள்வது, வேறு வழியிலே நடக்கிறது என்பதை ஸிஸ்மொந்தீ ஏற்கனவே மறந்துவிட்டார்—முன்பு தாமே இந்தக் கருத்தை மிகவும் நெருங்கி வந்திருந்த போதிலுங்கூட. திருப்பியெடுத்துக் கொள்வதும் தனிப்பட்ட முறையிலான நுகர்வும் ஒன்றே எனக் கொள்வது முதலாளிகளால் திருப்பியெடுத்துக் கொள்ள முடியாதது மிகுதி மதிப்புதான் என்கிற தத்துவத்துக்குக் கொண்டு போய் விடுகிறது இயல்புதான், ஏனெனில் சமுதாய உற்பத்திப் பொருளின் இரண்டு பகுதிகளில் கூலி எனப்பட்டது தொழிலாளிகளின் நுகர்வு மூலமாகத் திருப்பியெடுத்துக்கொள்ளப்

படுகிறது. உண்மையிலே, ஸிஸ்மொந்தீ இந்த முடிவுக்குத் தான் வந்தார் (இதைப் பின்னால் புரூதோன் மேலும் விபரமாக விரித்துரைத்தார், நமது நரோத்னிக்குகள் இதை இடையருது திருப்பிச் சொல்லி வருகின்றனர்). மாக்-குல்லாக்குடன் சர்ச்சை செய்கையில், அவர் (ரிக்கார்டோவின் கருத்துக்களை எடுத்துச் சொன்னதில்) இலாபம் திருப்பியெடுத்துக் கொள்ளப்படுவதை விளக்கவில்லை என்று ஸிஸ்மொந்தீ குற்றஞ்சாட்டுகிறார். சமுதாய உழைப்பின் பிரிவினையையொட்டி ஓர் உற்பத்திக்கிளை மற்றொன்றுக்குச் சந்தையாக அமைகிறது: ரொட்டி உற்பத்தி செய்கிறவர்கள் தமது பண்டங்களை, உடைவகைகளை உற்பத்திசெய்கிறவர்களின் உற்பத்திப் பொருளிலே திருப்பியெடுத்துக் கொள்கிறார்கள், இதை மாற்றிப்போட்டும் சொல்லலாம், என்று மாக்-குல்லாக் சொல்லியிருந்தார்.* ஸிஸ்மொந்தீ சொல்கிறார்: ''இலாபம் இல்லாத உழைப்பை (un travail sans bénéfice), **தொழிலாளிகளின் நுகர்வை** இட்டுநிரப்புகிறதாக மட்டுமே உள்ள மறுவுற்பத்தியை, ஆசிரியர் முன்னனுமானிக்கிறார்'' (II, 384-ம் பக்கம், கொட்டையெழுத்தில் போட்டவர் ஸிஸ்மொந்தீ)... ''எஜமானனுக்கு ஒன்றும் விட்டுவைக்கவில்லை... தொழிலாளிகளின் உற்பத்தியில் அவர்களின் நுகர்வு போக மீதமுள்ளது என்னவாகிறது என்று நாம் விசாரித்துக் கொண்டிருக்கிறோம்'' (மேற்கோள் மேலே குறித்துள்ளபடி). ஆக, இந்த முதற்கொழுந்தான தன்னுணர்ச்சிவாதி முதலாளிகளால் **மிகுதி மதிப்பைத்** திருப்பியெடுக்க முடியாது என்று ஏற்கனவே துல்லியமாகக் கூறுவதை நாம் காண்

---

* ''புதிய கோட்பாடுகள்'', 2-ம் பதிப்பு, நூல்தொகை II-க்கு உள்ள இணைப்புரை பார்க்க: "Eclaircissements relatifs à la balance des consommations avec les productions" (''நுகர்வுக்கும் உற்பத்திக்கும் உள்ள சமனநிலை சம்பந்தப்பட்ட விளக்கங்கள்.''—(பதிப்பாசிரியர்.), இதில் ரிக்கார்டோவின் சீடர் (மாக்குல்லாக்) எழுதி ''எடின்பரோ ரெவ்யூ''வில் வெளியிடப்பட்ட கட்டுரையை ஸிஸ்மொந்தீ மொழிபெயர்த்துச் சர்ச்சை செய்கிறார், அக்கட்டுரையின் தலைப்பு ''சமுதாயத்தில் நுகரும் சக்தி உற்பத்திச் சக்தியுடன் ஒரே காலத்தில் எப்போதும் வளர்கிறதா எனும் பிரச்சினை பற்றிய ஓர் ஆய்வு' என்பதாகும்.

கிறோம். இந்த முன்கூற்றிலிருந்து மேலும் ஒரு முடிவு எடுக்கிறார் ஸிஸ்மொந்தீ—மறுபடியும் நரோத்னிக்குகள் எடுக்கிற அதே முடிவுதான் இது—அதாவது, திருப்பியெடுப்பதற்குரிய நிலைமைகளே முதலாளித்துவத்துக்கு வெளிநாட்டுச் சந்தை இருக்கவேண்டியதை அவசியமாக்குகிறது, என்று. ''தன்னளவில் உழைப்பு வருவாயின் ஒரு முக்கியமான இணைக் கூறாக இருக்கிறதினால், நாட்டை மேலும் ஏழையாக்காமல் உழைப்புக்குரிய கிராக்கியைக் குறைக்க முடியாது. எனவே, புதிய உற்பத்தி வழிமுறைகளைப் புனைவதிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆதாயம் அநேகமாக எப்போதும் வெளிநாட்டு வாணிபத்தைச் சார்ந்தே இருக்கிறது'' (I, 345). ''ஏதாவதொரு கண்டுபிடிப்பை முதலில் செய்கிற நாடு ஒவ்வொரு புதுப்புனைவாலும் விடுவிக்கப்படும் தொழிலாளிகளின் எண்ணிக்கைக்குத் தகவுப் பொருத்தமாகத் தனது சந்தையைக் கணிசமான காலத்துக்கு விரிவாக்கிக் கொள்ள முடிகிறது. தனது புனைவால் மேலும் மலிவாக உற்பத்தி செய்ய முடிந்திருக்கிற அளவுக்கு மேலும் அதிகமான அளவில் பொருட்களை உற்பத்திசெய்வதற்கு அவர்களை உடனே வேலைக்கு அமர்த்திக்கொள்கிறது. ஆனால் நாகரிக உலகம் முழுவதும் ஒரேயொரு சந்தையாக அமைகிற காலம் வரும், அப்போது மேற்கொண்டு எந்த ஒரு புதிய நாட்டிலும் புதிய வாங்குபவர்களைப் பெறுவது சாத்தியமற்றுவிடும். அப்புறம் உலகச் சந்தையில் கிராக்கி ஒரு நிலையான (précise) அளவாக இருக்கும், அதற்காக வெவ்வேறு தொழில்மயமான நாடுகளும் ஒன்றோடொன்று போட்டியிடும். ஒரு நாடு மேலும் அதிக அளவிலே உற்பத்திப் பொருட்களைக் கொடுத்தால் அது மற்றொரு நாட்டுக்குத் தீங்காகச் செய்ததாகவே இருக்கும். பொதுவான செழுமை அதிகரிப்பதின் மூலமாகவோ அல்லது முன்பு பணக்காரர்களின் தனிவசத்திலேயிருந்த பண்டங்களை ஏழைமக்களின் நுகர்வுத் துறைக்கு மாற்றுவதின் மூலமாகவோ அல்லாமல் மொத்தமான விற்பனையை அதிகப்படுத்த முடியாது'' (II, 316). நமது தன்னுணர்ச்சிவாதிகள் எவ்வளவோ நேர்த்தியாகக் கற்றுக்கொண்டுள்ள அதே தத்துவத்தை ஸிஸ்மொந்தீ முன்வைக்கிறதை வாசகர் கண்டுகொள்ள முடியும்—அதாவது, பொதுவாக உற்பத்திப் பொருளையும், குறிப்பாக மிகுதி மதிப்பையும் திருப்பியெடுத்துக் கொள்

வதிலுள்ள கஷ்டத்திலிருந்து மீள்வதற்கான வழியை வெளி நாட்டுச் சந்தை கொடுக்கிறது என்று.

இறுதியாக, தேசிய வருவாயும் தேசிய உற்பத்தியும் ஒன்றே என்கிற இதே தத்துவம் நெருக்கடிகள் பற்றிய ஸிஸ்மொந்தீயின் தத்துவத்துக்குக் கொண்டுபோய்விட்டது. மேலே சொன்னவற்றிற்குப் பிறகு, இவ்விஷயத்தைப் பற்றி ஸிஸ்மொந்தீயின் நூலிலிருக்கும் எண்ணிறந்த ஏட்டுப்பகுதிகளிலிருந்து நாம் மேற்கோள் காட்டத் தேவையில்லை. உற்பத்தியானது வருவாய்க்குத் தக்கவாறு இருந்தாகவேண்டும் எனும் அவரது தத்துவம், நெருக்கடிகள் எனப்பட்டவை இந்தச் சமனநிலையின் குலைவால் விளைகிற விளைவுதான், நுகர்வை மிஞ்சிய உற்பத்தியால் விளைகிற விளைவுதான் எனும் கருத்துக்குக் கொண்டுபோய்விட்டது இயல்புதான். இப்பொழுது மேற்கோள் காட்டிய ஏட்டுப்பகுதியிலிருந்து வெளிப்படையாகிறது, உற்பத்திக்கும் நுகர்வுக்கும் உள்ள வேறுபாடுதான் நெருக்கடிகளுக்குரிய முதன்மையான காரணமாக ஸிஸ்மொந்தீ கருதினர், என்று; மற்றும் திரளான மக்களின், தொழிலாளிகளின், குறைநுகர்வை அவர் முன்னணியில் நிறுத்தினர். நெருக்கடிகளுக்குக் காரணம் குறைநுகர்வு (Unterkonsumption) என்று கற்பிக்கும் தத்துவங்களுக்கு எடுத்துக்காட்டாக ஸிஸ்மொந்தீயின் நெருக்கடிகள் பற்றிய தத்துவம் (இதை ரொட்பெர்டஸூம் ஏற்றுக் கொண்டார்) பொருளாதார விஞ்ஞானத்திலே பெயரெடுத்திருப்பதை இது விளக்குகிறது.

IV

தேசிய வருவாய் பற்றிய ஆதாம் ஸ்மித்தின், ஸிஸ்மொந்தீயின் தத்துவங்களின் தவறு எதில் உள்ளது?

இந்த முடிவுகளனைத்துக்கும் ஸிஸ்மொந்தீயைக் கொண்டுபோய்விட்ட அடிப்படையான தவறு என்ன?

தேசிய வருவாயும் அது இரண்டு கூறுகளாக (தொழிலாளிகளுடையது, முதலாளிகளுடையது) செய்த பிரிவினையும் பற்றி உள்ள தமது தத்துவத்தை ஸிஸ்மொந்தீ முழுமேனியாக ஆதாம் ஸ்மித்திடமிருந்து எடுத்துக்கொண்டார். ஆதாம் ஸ்மித்தின் ஆய்வுரைகளுக்குக் கூடுதலாக எதையும்

அளிப்பதற்குப் பதிலாக அவர் பின்னேக்கி ஓர் அடி எடுத்து வைத்தார், இந்த முன்கூற்றைத் தத்துவரீதியிலே மெய்ப்பிப்பதற்கு ஆதாம் ஸ்மித் செய்த (வெற்றிபெருததாயினுங் கூட) முயற்சியை அவர் விட்டுவிட்டார். இந்தத் தத்துவம் எப்படிப் பொதுவாக உற்பத்திபற்றிய தத்துவத்தோடு முரண்படுகிறது என்று ஸிஸ்மொந்தீ பார்க்கவில்லை போலிருக்கிறது. உண்மையாகச் சொன்னுல், உழைப்பினின்று மதிப்பை முடிவுசெய்யும் தத்துவத்தின்படி ஓர் உற்பத்திப் பொருளின் மதிப்பில் மூன்று இணைக்கூறுகள் உள்ளன: கச்சா பொருட்களையும் உழைப்புக் கருவிகளையும் திரும்ப வைக்கும் கூறு (நிலையான மூலதனம்), கூலியைத் திரும்ப வைக்கிற அல்லது தொழிலாளிகளின் பராமரிப்புக்குரிய கூறு (மாறுபடும் மூலதனம்), மற்றும் மிகுதி மதிப்பு (mieux-value என்று இதை ஸிஸ்மொந்தீ அழைக்கிருர்). மதிப்பு சம்பந்தமாகத் தனிப்பட்ட உற்பத்திப் பொருளைப்பற்றி ஆதாம் ஸ்மித் செய்த (ஸிஸ்மொந்தீ திரும்பச் சொன்ன) பகுப்பாய்வு இதுதான். **தனிப்பட்ட** உற்பத்திப் பொருட்களின் மொத்த தொகையான **சமுதாயரீதியான** உற்பத்திப் பொருள் எப்படிப் பின் சொன்ன இரண்டு கூறுகளை மட்டும் கொண்டிருக்க முடியும் என்பதே கேள்வி. நிலையான மூலதனம் என்கிற முதலாவது கூறு என்ன ஆயிற்று? நாம் பார்த்தவாறு, இந்தக் கேள்வியை ஸிஸ்மொந்தீ வெறுமே மழுப்பித் தட்டிக் கழித்தார், ஆனுல் ஆதாம் ஸ்மித் அதற்கு விடை அளித்தார். தனிப்பட்ட உற்பத்திப் பொருளில் மட்டுமே இந்தக் கூறு சுயேச்சையாக இருக்கிறது என்று அவர் அடித்துச் சொன்னுர். ஆனுல், மொத்தமான சமுதாயரீதியான உற்பத்திப் பொருளை எடுத்துக் கொள்வோமானுல், இந்தக் கூறு, தன் முறைக்கு, கூலியாகவும் மிகுதி மதிப்பாகவும்—இந்த நிலையான மூலதனத்தை உற்பத்திசெய்கிற முதலாளிகளுக்கு மட்டும் உரிய மிகுதி மதிப்பாக—நிர்ணயித்துக் கொள்கிறது.

ஆனுல் ஆதாம் ஸ்மித் இந்த விடை அளிக்கிற காலத்தில், நிலையான மூலதனத்தின்—எடுத்துக்காட்டாக, இயந்திரங்களின்—மதிப்பை நிர்ணயிக்கிறபோது அவர் திரும்பவும் நிலையான மூலதனத்தை—அதாவது, நமது எடுத்துக்காட்டில் இயந்திரங்களைச் செய்வதற்கான இரும்பு, அல்லது உற்பத்தியின் இயக்கப் போக்கிலே பயன்பட்டுத் தீர்ந்து

போன கருவிகள், முதலியவை—ஏன் விட்டு விடுகிறார் என்று விளக்கவில்லை. ஒவ்வோர் உற்பத்திப் பொருளின் மதிப்பிலும் நிலையான மூலதனத்தைத் திரும்ப வைக்கிற கூறு அடங்கும் என்றால் (அடங்குகிறது என்றுதான் எல்லாப் பொருளாதார வாதிகளும் ஏற்கிறார்கள்) அப்புறம் அந்தக் கூறு சமுதாய உற்பத்தியின் எந்தத் துறையிலிருந்தும் விலக்கிவைக்கப்படுவது முற்றிலும் தான் தோன்றித்தனமாகும். (''மூலதனம்'' எனும் நூலின் ஆசிரியர் சுட்டிக்காட்டியவாறு) ''உழைப்பின் கருவிகள் தம்மளவில் கூலியாகவும் மிகுதி மதிப்பாகவும் நிர்ணயித்துக் கொள்கின்றன என்று ஆதாம் ஸ்மித் சொல்கிறபொழுது, **மற்றும்** அவற்றின் உற்பத்தியிலே பயன்பட்டுத் தீர்ந்துபோகிற **நிலையான மூலதனமாகவும்** என்று சேர்த்துச் சொல்ல மறந்துவிடுகிறார். அவர் வெறுமே நம்மை பொந்தியஸிடமிருந்து பிலாத்திடம் அனுப்பிவிடுகிறார்,* ஓர் உற்பத்தித்துறையிலிருந்து மற்றொரு உற்பத்தித்துறைக்கும் மற்றொரு உற்பத்தித் துறையிலிருந்து மூன்றாவதோர் உற்பத்தித் துறைக்குமாக அனுப்பிவிடுகிறார்'',** இவ்வாறு அலைக்கழிப்பது பிரச்சினையைச் சிறிதேனும் மாற்றாது என்பதைப் பார்க்கத் தவறுகிறார். ஸ்மித்தின் விடை (பின்னால் வந்த, மார்க்ஸுக்கு முந்திய, எல்லாப் பொருளாதாரவாதிகளும் ஏற்றுக்கொண்ட விடை இது) வெறுமே பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதேயாகும், கஷ்டத்தைத் தவிர்ப்பதேயாகும். உண்மையிலே இங்கே ஒரு கஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. மூலதனம், வருவாய் பற்றிய கருத்துருவங்களைத் தனிப்பட்ட உற்பத்திப் பொருளிலிருந்து சமுதாய ரீதியான உற்பத்திப் பொருளுக்கு நேரடியாக மாற்றமுடியாது. சமுதாயப் பார்

* இச்சொற்றொடர் இந்தச் சகாப்தத்தின் (கி. பி.) 26-36 ஆண்டுகளில் ஜுதொ நாட்டை ஆண்டுவந்த பொந்தியஸ் பிலாத்தின் பெயருடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. அவன் பாசாங்கும் கொடுமையும் நிறைந்தவன். இரண்டு பெயர்களும் ஒரே ஆளைச் சேர்ந்தவை ஆதலால் இச்சொற்றொடரின் பொருள்: ஒருவனுடைய காரியங்களைக் கொடுமையாகத் தாமதப்படுத்துவது.—(பதிப்பாசிரியர்.)

** பார்க்க: கா. மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 2, அத்தியாயம் 19, தொகுதி 3, அத்தியாயம் 19.—(பதிப்பாசிரியர்.)

வைநிலையிலிருந்து பார்க்கிறபொழுது ''ஒருவனுக்கு மூலதனமாக இருப்பது மற்றொருவனுக்கு வருவாயாக ஆகிறது'' (மேலே மேற்கோள் காட்டியபடி ஸிஸ்மொந்தீயைப் பார்க்க) என்று பொருளாதாரவாதிகள் சொல்கிறபொழுது இதை ஒப்புக்கொள்கிறார்கள். எனினும், இந்தச் சொற்றொடர் கஷ்டத்தை வரையறுக்கிறதே யல்லாமல் தீர்க்கவில்லை.*

தீர்வு இதுதான், அதாவது நாம் இந்தப் பிரச்சினையைச் சமுதாயப் பார்வைநிலையிலிருந்து பரிசீலிக்கையில் உற்பத்திப் பொருட்களைப் பற்றி அவற்றின் பொருண்மையான வடிவங்களை விட்டுவிட்டுப் பொதுப்படையாக மேற்கொண்டு பேசக் கூடாது. உண்மையிலே, நாம் சமுதாய வருவாய் பற்றி—அதாவது, நுகர்வுக்குக் கிடைக்கக்கூடிய உற்பத்திப்பொருள் பற்றி—விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எல்லா உற்பத்திப் பொருட்களையும் **தனிப்பட்ட** நுகர்வு மூலமாக நுகரமுடியாது என்பது உறுதி: இயந்திரங்கள், நிலக்கரி, இரும்பு இன்னும் இவைபோன்ற பொருட்கள் தனிப்பட்ட முறையிலே நுகரப்படவில்லை, உற்பத்திக்கான முறையிலே நுகரப்படுகின்றன. தனிப்பட்ட தொழில்முயற்சியாளரின் பார்வைநிலையிலே பார்க்கும்போது இந்தத் தனித்தன்மை வேண்டாத மிகையாக இருந்தது; மாறுபடும் மூலதனத்தைத் தொழிலாளிகள் நுகர்வார்கள் என்று நாம் சொன்னபோது, அத் தொழிலாளிகள் உற்பத்திசெய்த இயந்திரங்களுக்காக முதலாளிகளால் பெறப்பட்ட பணத்திலிருந்து அவர்களுக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு அவர்கள் சந்தையில் நுகர்ப்பொருட்களை வாங்கிக் கொள்வார்கள் என்று அனுமானித்**துக்** கொண்டோம். இங்கே ரொட்டிக்காக இயந்திரங்கள் பரிமாற்றமானதில் நமக்கு அக்கறை இல்லை. ஆனால், சமுதாயப் பார்வைநிலையிலே பார்க்கையில்,

---

* இந்தத் தீர்வு அளிக்கிற புதிய தத்துவத்தை வேறிடத்தில் மேலும் விபரமாக முன்வைக்கும் சுதந்தரத்தை வைத்துக் கொண்டு இங்கே அதன் சாரத்தை மட்டும் அளிக்கிறோம். "Das Kapital", II. Band, III. Abschnitt. (''மூலதனம்'', 2ம் நூல், 3-ம் பிரிவு) (மேலும் விபரமான விளக்கவுரைக்கு ''**முதலாளித்துவத்தின் வளர்ச்சி**'', I-ம் அத்தியாயம் பார்க்க.)

இந்தப் பரிமாற்றத்தை அனுமானித்துக்கொள்ள முடியாது: இயந்திரங்கள், இரும்பு முதலியவற்றை உற்பத்திசெய்கிற முதலாளி வர்க்கம் முழுவதும் அவற்றை விற்கிறது, அவ்வழி யே அவற்றைத் திருப்பியெடுத்துக் கொள்கிறது என்று நாம் சொல்லமுடியாது. பிரச்சினை முழுவதும் இதுதான், திருப்பி யெடுத்துக்கொள்வது என்பது — அதாவது, சமுதாயரீதி யான உற்பத்திப் பொருளின் எல்லாக் கூறுகளையும் திரும்ப வைப்பது என்பது—எப்படி நடக்கிறது என்று. எனவே, சமு தாயரீதியான மூலதனத்தையும் வருவாயையும்—அல்லது, வேறு வார்த்தைகளில் சொன்னால், முதலாளித்துவச் சமு தாயத்தில் உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக்கொள் வதை—விவாதிக்கையில், சமுதாயரீதியான உற்பத்திப் பொ ருளின் உற்பத்திச் சாதனங்கள், நுகர்ப் பொருட்கள் எனும் இரண்டு முற்றிலும் வெவ்வேறான வகைகளிடையேயுள்ள வேறுபாடு தொடக்கப் புள்ளியாக இருந்துதீரவேண்டும். முந்தியவற்றை உற்பத்திக்கான முறையில் மட்டுமே நுகர முடியும், பிந்தியவற்றைத் தனிப்பட்ட முறையில் மட்டுமே நுகரமுடியும். முந்தியவை மூலதனமாக மட்டுமே பயன்பட முடியும், பிந்தியவை வருவாயாக ஆகித்தீர வேண்டும்— அதாவது, தொழிலாளிகளின், முதலாளிகளின் நுகர்விலே அழிக்கப்பட்டாகவேண்டும். முந்தியவை முழுவதாக முத லாளிகளிடம் போய்ச்சேருகின்றன, பிந்தியவை தொழிலாளி கள், முதலாளிகள் இடையே பங்கிடப்படுகின்றன.

இந்த வேறுபாட்டைப் புரிந்துகொண்டவுடன், சமுதாய ரீதியான உற்பத்திப் பொருளினின்று அதன் நிலையான கூறை (அதாவது, மூலதனத்தைத் திரும்பவைக்கும் கூறை) விட்டு விட்ட ஆதாம் ஸ்மித்தின் தவற்றை நாம் திருத்தியவுடன், முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்திப் பொருளைத் திருப் பியெடுத்துக்கொள்கிற பிரச்சினை தெளிவுபட்டுவிடுகிறது. தொழிலாளிகளின் நுகர்வு மூலமாகக் கூலி திருப்பியெடுத் துக் கொள்ளப்படுகிறது, முதலாளிகளின் நுகர்வு மூலமாக மிகுதி மதிப்புத் திருப்பியெடுத்துக் கொள்ளப்படுகிறது, அதற்கு மேல் ஒன்றுமில்லை* என்று நாம் பேச முடியாது

---

* அப்படித்தான் நமது நரோத்னிக் பொருளாதாரவாதி களாகிய திரு.வி.வி., திரு.நி.—ன் வாதிக்கிறார்கள். உற்பத்திக்

என்பது வெளிப்படை. உற்பத்திப் பொருளில் நுகர்ப்பொருட்கள்—அதாவது, சமுதாய உற்பத்தியின் ஒரு துறையை மட்டும் சேர்ந்த பொருட்கள்—அடங்கியிருக்கும் பொழுது மட்டுமே தொழிலாளிகள் கூலியையும் முதலாளிகள் மிகுதி மதிப்பையும் நுகரமுடியும். உற்பத்திச் சாதனங்கள் அடங்கியுள்ள உற்பத்திப் பொருளை அவர்கள் ''நுகர'' முடியாது: அதை நுகர்ப் பொருட்களோடு மாற்றிக்கொண்டு தீரவேண்டும். ஆனால் தமது உற்பத்திப் பொருளை நுகர்ப்பொருட்களின் (மதிப்பு சம்பந்தப்பட்ட வகையில்) எந்தக் கூறுடன் அவர்கள் மாற்றிக்கொள்ள முடியும்? நிலையான கூறுடன் (நிலையான மூலதனத்துடன்) மட்டுமே, என்பது வெளிப்படை, ஏனெனில் மற்ற இரண்டு கூறுகளும் நுகர்ப்பொருட்களை உற்பத்திசெய்கிற தொழிலாளிகளின், முதலாளிகளின் நுகர்வு நிதியாக அமைந்திருக்கின்றன. உற்பத்திச் சாதனங்களை உற்பத்திசெய்கிற தொழில்களில் மிகுதி மதிப்பையும் கூலியையும் திருப்பியெடுத்துக்கொள்வதின் வழியாக இந்தப் பரிமாற்றம் நுகர்ப்பொருட்களை உற்பத்திசெய்கிற தொழில்களில் நிலையான மூலதனத்தைத் திருப்பியெடுக்கிறது. உண்மையிலே பார்த்தால், எடுத்துக்காட்டாக சர்க்கரை உற்பத்திசெய்கிற முதலாளிக்கு நிலையான மூலதனத்தை (அதாவது, கச்சா பொருட்கள், துணைப்பொருட்கள், இயந்திரங்

கான நுகர்வு, தனிப்பட்ட நுகர்வு பற்றிய பிரச்சினையையும் நுகர்ப்பொருட்கள், உற்பத்திச் சாதனங்கள் பற்றிய பிரச்சினையையும் சுற்றிச்சுற்றி ஸிஸ்மொந்தீ அலைந்ததை (ஸிஸ்மொந்தீயைக் காட்டிலும் ஆதாம் ஸ்மித் அவற்றை வேறுபடுத்திக்காண்பதில் மேலும் நெருங்கி வந்தார்) நாம் வேண்டுமென்றே மிக விபரமாக மேலே கவனித்தோம். இந்தப் பொய்யான தத்துவத்தின் மூலச்சிறப்புள்ள பிரதிநிதிகள் அது திருப்திகரமானதாயில்லை என்று உணர்ந்தனர், அதில் முரண்பாட்டைக் கண்டார்கள், விடுவித்துக்கொண்டு மீள முயன்றார்கள் என்று நாம் வாசகர்களுக்குக் காட்டப் பார்த்திருக்கிறோம். ஆனால் நமது ''தற்படைப்புத்திறமுள்ள'' தத்துவாசிரியர்கள் எதையும் பார்ப்பதுமில்லை உணர்வதுமில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் எவ்வளவோ ஆர்வவுறுதியுடன் சவடால் அடிக்கிறார்களே, அந்தத் தத்துவத்தைப் பற்றியோ பிரச்சினையின் வரலாற்றைப் பற்றியோ எதையும் அறியவுமில்லை.

கள், பணிமனைக் கட்டடங்கள் முதலியவற்றை) திரும்ப வைப்பதற்கு உற்பத்திப் பொருளிலுள்ள கூறு **சர்க்கரை** வடிவத்தில் இருக்கிறது. இந்தக் கூறு திருப்பியெடுத்துக்கொள்வதற்கு அதற்கு மாற்ருகப் பொருத்தமான **உற்பத்திச் சாதனங்கள்** பெற்றுத்தீரவேண்டும். ஆகவே, இந்தக் கூறு திருப்பியெடுத்துக் கொள்ளப்படுவது **நுகர்ப் பொருளை உற்பத்திச் சாதனங்களாகப்** பயன்படும் பொருட்களோடு பரிமாற்றிக் கொள்வதில் அடங்கியிருக்கிறது. இப்போது, சமுதாயரீதியான உற்பத்திப் பொருளின் ஒரே ஒரு கூறு—அதாவது, உற்பத்திச் சாதனங்களை உற்பத்திசெய்கிற துறையிலிருக்கும் நிலையான மூலதனத்தை — திருப்பியெடுத்துக்கொள்ளப்படுவது விளக்கப்படாமல் நிற்கிறது. உற்பத்திப் பொருளின் ஒரு கூறு, தனது இயல்பான வடிவத்தில், மீண்டும் உற்பத்திக்குச் சென்றுவிடுவதின் மூலமாக (எடுத்துக் காட்டாக, ஒரு சுரங்க நிறுவனம் உற்பத்திசெய்கிற நிலக்கரியில் ஒரு கூறு மேலும் அதிகமாக நிலக்கரி உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது; நிலச்சுவான்தார்கள் பெறுகிற தானியத்தில் ஒரு கூறு விதையாகப் பயன்படுத்தப்படுகிறது என்றவாறு) இதில் ஒரு பகுதி திருப்பியெடுத்துக்கொள்ளப்படுகிறது; மற்ருெரு பகுதி அதே துறையில் உள்ள தனித்தனி முதலாளிகளிடையேயுள்ள பரிமாற்றத்தின் மூலமாகத் திருப்பியெடுத்துக் கொள்ளப்படுகிறது: எடுத்துக்காட்டாக, இரும்பு உற்பத்தி செய்ய நிலக்கரி தேவைப்படுகிறது, நிலக்கரி உற்பத்தி செய்ய இரும்பு தேவைப்படுகிறது. இவ்விரண்டு பொருட்களையும் உற்பத்திசெய்கிற முதலாளிகள் பரஸ்பர பரிமாற்றத்தின் மூலமாகத் தமது நிலையான மூலதனத்தைத் திரும்ப வைக்கிறதாகத் தத்தம் உற்பத்திப் பொருளில் எந்தப் பகுதி உள்ளதோ அந்தப் பகுதியைத் திருப்பியெடுத்துக்கொள்கிருர்கள்.

எல்லாப் பொருளாதாரவாதிகளும் தாங்கள் உணர்ந்த எந்தக் கஷ்டத்தை ''ஒருவனுக்கு மூலதனமாக இருப்பது மற்ருெருவனுக்கு வருவாயாக ஆகிறது'' என்கிற சொற்ருெடரில் வரையறுத்தார்களோ, அந்தக் கஷ்டத்தை இந்தப் பகுப்பாய்வு தீர்த்துவிட்டது (மேலே கொடுத்துள்ள காரணத்துக்காக இந்தப் பகுப்பாய்வை மிகவும் திரட்டிய வடிவிலே சுருக்கித்தந்துள்ளோம் என்று மீண்டும் சொல்லிக்

கொள்கிறோம்). சமுதாயரீதியான உற்பத்தியைத் தனிப் பட்ட நுகர்வு ஒன்றுக்கு மட்டும் இறக்கிவிடுவதின் முழுப் பொய்மையை இந்தப் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

தமது பொய்யான தத்துவத்திலிருந்து ஸிஸ்மொந்தீயும் (மற்ற தன்னுணர்ச்சிவாதிகளும்) எடுத்த முடிவுகளை இப் போது பரிசீலிப்பதில் நாம் இறங்கமுடியும். ஆனால் முதலில் மேலே சொன்ன பகுப்பாய்வின் ஆசிரியர் ஆதாம் ஸ்மித்தின் தத்துவத்தை—இதற்கு ஸிஸ்மொந்தீ கூடுதலாக எதையும் அளிக்கவில்லை, ஆதாம் ஸ்மித் தமது முரண்பாட்டை நியாயப்படுத்தச் செய்த முயற்சியை அவர் வெறுமே விலக்கி விட்டார் — மிகவும் விபரமாகவும் முழுவிரிவுடனும் பரிசீலனை செய்தபின் ஸிஸ்மொந்தீயைப் பற்றிக் கொடுத்த கருத்தை மேற்கோள் காட்டுவோம்:

''வருவாயுடன் மூலதனத்துக்குள்ள உறவு விஷயத்தில் குறிப்பாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்கிற ஸிஸ்மொந்தீ, யதார்த்த உண்மையிலே இந்த உறவு பற்றிய விசித்திரமான வரையறுப்பைத் தமது “Nouveaux Principes” எனும் நூலின் குறிப்பான வேற்றுமையாகச் செய்கிற ஸிஸ்மொந்தீ, இந்தப் பிரச்சினையைத் தெளிவு படுத்துவதில் ஒரு (கொட்டை யெழுத்துக்கள் ஆசிரியரால் போடப்பட்டிருக்கின்றன) விஞ் ஞானரீதியான சொல்கூடச் சொல்லவில்லை, கடுகளவேனும் பங்காற்றவில்லை'' (“Das Kapital”, II, S. 385, 1-te Auflage).*

V
முதலாளித்துவச் சமுதாயத்தில் திரட்சி

பொய்யான தத்துவத்திலிருந்து எடுக்கும் தவறான முதல் முடிவு திரட்சியுடன் சம்பந்தப்பட்டது. முதலாளித்துவத் திரட்சியை ஸிஸ்மொந்தீ கொஞ்ச மேனும் புரிந்துகொள்ள வில்லை, மற்றும் இவ்விஷயத்தில் அவர் ரிக்கார்டோவுடன் நடத்திய சூடான சர்ச்சையில் உண்மையிலே ரிக்கார்டோ வின் பக்கந்தான் உண்மை இருந்தது. உற்பத்தி தனக்குரிய சந்தையை உண்டாக்கிக்கொள்கிறது என்று ரிக்கார்டோ

* ''மூலதனம்'', II, 385ம் பக்கம், முதல் பதிப்பு.—(பதிப்பாசிரியர்.)

அடித்துச் சொன்னர், ஆனல் ஸிஸ்மொந்தீ இதை மறுத்தார், நெருக்கடிகள் பற்றிய தமது தத்துவத்துக்கு இந்த மறுப்பை ஆதாரமாகக் கொண்டார். ஆதாம் ஸ்மித்தின் மேலே சொன்ன அடிப்படையான தவற்றை ரிக்கார்டோவாலும் திருத்த முடியவில்லை என்பது உண்மையே, எனவே சமுதாயரீதியான மூலதனத்துக்கும் வருவாய்க்கும் இடையே உறவு பற்றிய பிரச்சினையையும் உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்வதுபற்றிய பிரச்சினையையும் ரிக்கார்டோவால் தீர்க்க முடியவில்லை (இந்தப் பிரச்சினைகளை ரிக்கார்டோ எடுத்துக் கொள்ளவுமில்லை); ஆனல் அவர் திரட்சி என்பது உற்பத்தியில் வருவாய் போக மிகையாயிருப்பது என்கிற முற்றிலும் மறுக்கமுடியாத உண்மையைக் குறித்துக்கொண்டு முதலாளித்துவ உற்பத்தி முறையின் சாராம்சத்தை இயல்புணர்வுடன் பண்புரை செய்தார். நவீனகாலப் பகுப்பாய்வின் பார்வை நிலையிலே அப்படித்தான் விவகாரங்களும் உள்ளன. உண்மையிலே உற்பத்தி தனக்குரிய சந்தையை உண்டாக்கிக் கொள்கிறது: உற்பத்திக்கு உற்பத்திச் சாதனங்கள் தேவைப்படுகின்றன, அவை சமுதாய உற்பத்தியின் ஒரு தனிச்சிறப்பான துறையாக உள்ளன, தொழிலாளிகளில் ஒரு பகுதியனருக்கு அது வேலை கொடுக்கிறது, ஒரு தனிச்சிறப்பான உற்பத்திப் பொருளை உற்பத்திசெய்கிறது, அந்தப் பொருளின் ஒரு பகுதி இதே துறைக்குள்ளேயும் இன்னெரு பகுதி நுகர்ப்பொருட்களை உற்பத்திசெய்கிற மற்ற துறையுடன் பரிமாற்றம் மூலமாகவும் திருப்பியெடுத்துக் கொள்ளப்படுகிறது. உண்மையிலே, திரட்சி என்பது உற்பத்தியில் வருவாய் (நுகர்ப் பொருட்கள்) போக மிகையாயிருப்பதேயாகும். உற்பத்தியை விரிவாக்குவதற்கு (இச்சொல்லின் வகையினரீதியான அர்த்தத்தில் சொன்னல் ''திரட்சிக்கு'') முதலில் உற்பத்திச் சாதனங்களை* உற்பத்திசெய்வது அவசியம்,

* இதை ஸிஸ்மொந்தீ எப்படி அணுகினர் என்று வாசகருக்கு நினைவூட்ட விரும்புகிறேம்; அவர் இந்த உற்பத்திச் சாதனங்களை ஒரு தனிப்பட்ட குடும்பத்திற்கென்று தெளிவாகத் தனித்தெடுத்தார், அதேபோல் சமுதாயத்துக்கும் செய்ய முயன்ருர். முறையாகச் சொன்னல், ''அணுகியது'' ஆதாம் ஸ்மித்தான், ஸிஸ்மொந்தீ அல்ல, ஸ்மித் சொன்னதையே ஸிஸ்மொந்தீ எடுத்துச் சொன்னர்.

எனவே இதற்கு உற்பத்திச் சாதனங்களை உற்பத்திசெய்கிற சமுதாய உற்பத்தியின் துறையை விரிவாக்குவது அவசியம், அத்துறைக்குள் தொழிலாளிகளை ஈர்த்து ஈடுபடுத்துவது அவசியம், அவர்கள் உடனே நுகர்ப் பொருட்களுக்கும் கோரிக்கை வைக்கிறார்கள். எனவே, ''திரட்சிக்குப்'' பிறகு, அல்லது ''உற்பத்திக்கு''ப் பிறகு ''நுகர்வு'' வளர்கிறது; இது வேடிக்கையாகத் தோன்றியபோதிலும், முதலாளித்து வச் சமுதாயத்தில் வேறுவிதமாக இருக்க முடியாது. எனவே, முதலாளித்துவ உற்பத்தியின் இவ்விரு துறைகளின் வளர்ச்சி விகிதங்கள் தகவுப்பொருத்தமாக இருக்கவேண்டியதில்லை, அதற்குமாறாக அவை தவிர்க்க முடியாதவாறு தகவுப்பொருத் தக்கேடாக இருந்து தீரவேண்டும். மூலதனத்தின் வளர்ச்சி விதி நன்கறிந்த விஷயமாகும்: நிலையான மூலதனம் மாறு படும் மூலதனத்தை விட விரைவாக வளர்கிறது, அதாவது புதிதாக உருவாகும் மூலதனத்தில் மேன்மேலும் அதிகமான பங்கு சமுதாயப் பொருளாதாரத்தின் உற்பத்திச் சாதனங் களை உற்பத்திசெய்கிற துறைக்குத் திருப்பிவிடப்படுகிறது. ஆகவே, அவசியகரமாகவே இந்தத் துறையானது நுகர்ப் பொருட்களை உற்பத்திசெய்யும் துறையைவிட விரைவாக வளர்கிறது, அதாவது எது ''சாத்தியமல்ல'', ''ஆபத்தா னது'', என்றெல்லாம் ஸிஸ்மொந்தீ பிரகடனப்படுத்தினா ரோ அதுவேதான் நிகழ்கிறது. எனவே, முதலாளித்துவ உற்பத்தியின் மொத்த தொகைத்திரளில் தனிப்பட்ட நுகர் வுக்குரிய பொருட்கள் மேன்மேலும் குறைவான இடம் வகிக் கின்றன. மேலும் இது முதலாளித்துவத்தின் வரலாற்றுரீதி யான ''பிறவிப்பணிக்கும்'' அதன் தனிக்குறிப்பான சமுதாயக் கட்டுக்கோப்புக்கும் முற்றும் பொருந்துகிறது: அதன் பிறவிப்பணி சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளை வளர்த்திடு வது (உற்பத்திக்காக உற்பத்தி); அதன் சமுதாயக்கட்டுக் கோப்பு அவற்றை மக்கட்பெருந்தொகை பயன்படுத்த முடி யாதவாறு விலக்கிவைக்கிறது.

இப்போது நாம் திரட்சி பற்றிய ஸிஸ்மொந்தீயின் கருத் தை முழுமையாக மதிப்பீடு செய்யமுடியும். விரைவான திரட்சி பெருவிபத்துக்குக் கொண்டுபோய்விடுகிறது என்கிற அவரது வன்கூற்று முற்றிலும் தவறாகும், அது திரட்சியை அவர் புரிந்துகொள்ளத் தவறியதினாலேதான் விளைந்தது,

அதேபோல் நுகர்வுக்கு மேல் உற்பத்தி போகக்கூடாது, ஏனெனில் நுகர்வுதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது என்று அவர் திரும்பத்திரும்பச் சொல்லும் கூற்றுகளும் கோரிக்கைகளும் முற்றிலும் தவருகும். உண்மையிலே, வழக்கு இதற்கு எதிர்நிலையாகத்தான் உள்ளது; மற்றும் தனிக்குறிப்பான, வரலாற்றுரீதியிலே நிர்ணயிக்கப்பட்ட வடிவத்திலுள்ள யதார்த்தத்தின்பக்கம் ஸிஸ்மொந்தீ வெறுமே முதுகைத் திருப்பிக்கொள்கிருர், பகுப்பாய்வுக்குப்பதிலாகச் சிறுபூர்ஷ்வா தர்மோபதேசங்களை வைக்கிருர். ஸிஸ்மொந்தீ இந்தத் தர்மோபதேசத்தை ஒரு ''விஞ்ஞானரீதியான'' சூத்திரத்திலே உடுத்திக்காட்ட முயற்சிப்பது குறிப்பாக வேடிக்கையாயிருக்கிறது. அவர் தமது "Nouveaux Principes" நூலின் இரண்டாம் பதிப்புக்கான முகவுரையில் கூறுவதாவது: ''திருவாளர்கள் சேயும் ரிக்கார்டோவும் நுகர்வுக்கு உற்பத்தியின் வரம்புகளைத் தவிர வேறெந்த வரம்புகளும் இல்லை... என்று நம்பலாயினர், ஆனல் யதார்த்தத்தில் வருவாய் அதற்கு வரம்பு இடுகிறது.... இருக்கிற நுகர்வாளர்களை மட்டுமே வருவாய் நம்பியிருக்கவேண்டும் என்று உற்பத்தியாளர்களை அவர்கள் எச்சரித்திருக்க வேண்டும்'' (I,XIII)*. இப்போதெல்லாம் இப்படிப்பட்ட வெகுளித்தனம் புன்னகைதான் வருவிக்கிறது. ஆனல் நம் காலத்தைச் சேர்ந்த திரு. வி. வி., திரு. நி.—ன் போன்ற தன்னுணர்ச்சிவாதிகளின் எழுத்துக்களிலே நிறைந்திருப்பதும் இதுபோன்றதுதானே? தமது பண்டங்களுக்குச் சந்தை ஒன்று கிடைக்குமா என்று... ''வங்கி முதலாளிகள் நன்கு சிந்திக்கட்டும்'' (II, 101-102). ''செல்வத்தை அதிகரிப்பதே சமுதாயத்தின் குறிக்கோள் என்று வைத்துக்கொள்கிறபோது, அந்தக் குறிக்கோள்

* நாம் அறிவோம், இந்தப் பிரச்சினையில் (உற்பத்தி தனக்குரிய சந்தையை உண்டாக்கிக் கொள்கிறதா எனும் பிரச்சினையில்) நவீனகாலத் தத்துவம் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளோடு உடன்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு இல்லை என்று விடையளித்த தன்னுணர்ச்சிவாதத்துக்கு எதிராக அவர்கள் ஆம் என்று விடையளித்தனர். ''முதலாளித்துவ உற்பத்திக்கு உண்மையான வரம்பாக உள்ளது மூலதனமேயாகும்'' ("Das Kapital", III, I, 231) (''மூலதனம்'', III, 1,231.—பதிப்பாசிரியர்.)

எப்போதும் வழிதுறைகளுக்குப் பலியிடப்படுகிறது'' (II, 140). ''உழைப்பால் உண்டாக்கப்பட்ட கிருக்கியிலிருந்து ஊக்கியை எதிர்பார்ப்பதற்குப்பதிலாக (அதாவது, தொழிலாளிகள் உற்பத்திப் பொருட்களைக் கோரும் கோரிக்கையிலிருந்து ஊக்கியை எதிர்பார்ப்பதற்குப்பதிலாக) முந்தைய உற்பத்தியிலிருந்து அதை எதிர்பார்ப்போமானுல், கடிகாரத்தின் சங்கிலியைத் தாங்கிச்செல்லும் சக்கரத்தை (la soue qui porte la chainette) பின்னுக்குத் திருப்பிவைப்பதற்குப் பதிலாக மற்ளுரு சக்கரத்தைப் பின்னுக்குத் திருப்பினுல் கடிகாரத்துக்கு என்ன செய்வோமோ அநேகமாக அதைப் போலத்தான் செய்தவர்களாவோம்—இயந்திர முழுவதையும் உடைத்து நிறுத்தி விடுவோம்'' (II,454). இதைச் சொல்வது ஸிஸ்மொந்தீ. இனி திரு. நி.—ன் சொல்லக்கூடியதைக் கேட்போம். ''இந்த வளர்ச்சி (அதாவது, முதலாளித்துவத்தின் வளர்ச்சி) நிகழ்ந்துவருவதற்குக் காரணமாயிருக்கும் காரணிகளை நாம் பார்க்காமல் விட்டோம்; எல்லா உற்பத்திக்கும் உள்ள குறிக்கோளையும் நாம் மறந்துவிட்டோம்.... மிகவும் சாவுக்கேடான தவறு...'' (நி.—ன், ''சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட நமது சமுதாயம், பொருளாதாரத்தைப் பற்றிய வரைவுரைகள்'', 298). இவ்விரு ஆசிரியர்களும் முதலாளித்துவம் பற்றியும் முதலாளித்துவ நாடுகள் பற்றியும் பேசுகிருர்கள்; இருவரும் முதலாளித்துவத் திரட்சியின் சாராம்சத்தைப் புரிந்துகொள்ள முற்ருகச் சக்தியற்றிருப்பதை வெளிப்படுத்திக் கொள்கிருர்கள். என்ருலும் முந்தியவருக்குப்பின் எழுபது ஆண்டுகள் கழித்துப் பிந்தியவர் எழுதுகிருர் என்று யாராவது நம்பக்கூடுமா?

''உற்பத்தியை மலிவாக்குவதற்கு நடக்கும் போராட்டத்தின் விளைவுகள்'' எனும் VIII-ம் அத்தியாயத்தில் (நூல் IV, ''வர்த்தகச் செல்வம் பற்றி'') ஸிஸ்மொந்தீ மேற்கோள் காட்டும் எடுத்துக்காட்டு, முதலாளித்துவத் திரட்சியைப் புரிந்துகொள்ளத் தவறுவது எப்படி எல்லா உற்பத்தியையும் நுகர்ப்பொருட்களின் உற்பத்திக்கு இறக்கிவிடும் தவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது என்று தெற்றெனப் புலப்படுத்துகிறது.

ஸிஸ்மொந்தீ சொல்கிருர்: ஒரு தொழிற்சாலையின் சொந்தக்காரர் புழக்கத்திலுள்ள மூலதனமாக 100,000 பிராங்க்

வைத்திருக்கிறார், அது அவருக்கு 15,000 பிராங்க் கொடுக்கிறது, அதில் 6,000 பிராங்க் மூலதனத்துக்குரிய வட்டியாக முதலாளிக்குச் செலுத்தப்படுகிறது, 9,000 பிராங்க் என்பது தொழில் முயற்சியாளர் என்கிற வகையில் தொழிற்சாலை சொந்தக்காரர் பெற்ற இலாபமாகும் என்று வைத்துக் கொள்வோம். அவர் 100 தொழிலாளிகளின் உழைப்பை வேலைக்கு வைத்துக்கொள்கிறார், அவர்களின் மொத்த கூலி 30,000 பிராங்க் என்று வைத்துக்கொள்வோம். மேலும், மூலதனம் அதிகரித்ததாகவும், உற்பத்தி விரிவடைந்ததாகவும் இருக்கட்டும் (''திரட்சி''). மூலதனம் 100,000 பிராங்க் என்பதற்குப்பதிலாக, நிலையான மூலதன வகையில் முதலீடு செய்த 200,000 பிராங்க், மற்றும் புழக்கத்திலுள்ள மூலதன வகையில் முதலீடுசெய்த 200,000 பிராங்க், ஆக மொத்தம் 400,000 பிராங்க் ஆகிறது; இலாபமும் வட்டியுமாக 32,000+16,000 பிராங்க் ஆகிறது, ஏனெனில் வட்டி விகிதம் 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்துக்குக் குறைந்து விட்டது. வேலையிலிருக்கும் தொழிலாளிகளின் எண்ணிக்கை இரட்டித்திருக்கிறது, ஆனால் கூலி 300 பிராங்கிலிருந்து 200 ஆகக் குறைந்திருக்கிறது, ஆகவே கூலி மொத்தம் 40,000 பிராங்க் ஆகிறது. ஆக, உற்பத்தி நான்கு மடங்காக வளர்ந்திருக்கிறது*. மேலும் ஸிஸ்மொந்தீ விளைவுகளைக் கணக்கிடு

* ஸிஸ்மொந்தீ சொல்கிறார்: ''போட்டியின் முதல் விளைவு கூலிக் குறைப்பும், அதே நேரத்தில் தொழிலாளிகளின் எண்ணிக்கையில் உயர்வும் ஆகும்'' (I, 403). ஸிஸ்மொந்தீயின் தவறான கணக்கில் இங்கே நாம் கவனம் செலுத்தப்போவதில்லை: எடுத்துக்காட்டாக, நிலையான மூலதனத்தின்மீது இலாபம் 8 சதவீதம் இருக்குமென்றும் புழக்கத்திலுள்ள மூலதனத்தின் மீது 8 சதவீதம் இருக்குமென்றும், புழக்கத்திலுள்ள மூலதனத்தின் (இதை மாறுபடும் மூலதனத்தினின்று முறையாக வேறுபடுத்திப்பார்க்க அவரால் முடியவில்லை) அதிகரிப்புக்குத் தகவுப்பொருத்தமாகத் தொழிலாளிகளின் எண்ணிக்கை உயர்கிறதென்றும், நிலையான மூலதனம் முழுவதும் உற்பத்திப் பொருளின் விலையில் போய்ச்சேருகிறதென்றும் அவர் கணக்கிடுகிறார். இப்போதுள்ள வழக்கில் இதெல்லாம் முக்கியமல்ல, ஏனெனில் வந்துசேருகிற முடிவு சரியானது: திரட்சியின் ஓர் அவசியகரமான விளைவாக மொத்த மூலதனத்தில் மாறுபடும் மூலதனத்தின் பங்கு குறைகிறது என்று.

கிறுர்: முதல் வழக்கில் ''வருவாய்'' அல்லது ''நுகர்வு'' 45,000 பிராங்க் இருந்தது (கூலியாக 30,000+வட்டியாக 6,000+இலாபமாக 9,000); அது இப்போது 88,000 பிராங்க் ஆகிறது (கூலியாக 40,000+வட்டியாக 16,000+இலா பமாக 32,000). ஸிஸ்மொந்தீ சொல்கிறுர்: ''உற்பத்தி நான்கு மடங்காக உயர்ந்துள்ளது, ஆனுல் நுகர்வு இரட்டிக்கக்கூட இல்லே. இயந்திரங்களேச் செய்த தொழிலாளிகளின் நுகர் வைக் கணக்கிடக்கூடாது. இதற்குப் பயன்படுத்தப்பட்ட 200,000 பிராங்கில் அது அடங்கும்; அது ஏற்கனவே மற் ெருரு தொழிற்சாலேயின் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது, அங்கேயும் விஷயங்கள் இதே மாதிரிதான் இருக்கும்'' (I, 405-406).

உற்பத்தியின் அதிகரிப்பையொட்டி வருவாய் குறைவதை ஸிஸ்மொந்தீயின் கணக்குக் காட்டுகிறது. இது சர்ச்சைக்கிட மற்ற உண்மை. ஆனுல், முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்திப் பொருளேத் திருப்பியெடுத்துக்கொள்வது பற்றிய தமது சொந்தத் தத்துவத்தையே அவர் தரும் எடுத்துக் காட்டு முறியடிப்பதை ஸிஸ்மொந்தீ பார்க்கவில்லே. இயந் திரங்களேச் செய்த தொழிலாளிகளின் நுகர்வைக் ''கணக் கிடக்கூடாது'' என்கிற அவரது ஆய்வுக்கூற்று வேடிக்கை யானது. ஏன் கணக்கிடக் கூடாது? ஏனெனில்—முதலாவதாக, அது 200,000 பிராங்கில் அடங்குகிறதாம். ஆக, உற்பத்திச் சாதனங்களே உற்பத்திசெய்கிற துறைக்கு மூலதனம் மாற் றப்படுகிறது—இதை ஸிஸ்மொந்தீ பார்க்கவில்லே. எனவே, ''சுருங்குவதாக'' ஸிஸ்மொந்தீ சொல்கிற ''உள்நாட்டுச் சந்தை'' எனப்பட்டது நுகர்ப்பொருட்களே மட்டும் கொண் டதல்ல, உற்பத்திச் சாதனங்களேச் சேர்ந்த பொருட்களும் அதில் அடங்கியுள்ளன. தனிப்பட்ட நுகர்வு மூலமாகத் ''திருப்பியெடுத்துக் கொள்ளப்படாத'' ஒரு தனிச்சிறப்பான உற்பத்திப் பொருளாக இந்த உற்பத்திச் சாதனங்கள் உள் ளன; மற்றும் எவ்வளவுக் கெவ்வளவு விரைவாகத் திரட்சி நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தனிப்பட்ட நுகர் வுக்கல்லாமல் உற்பத்தித்திறமுள்ள நுகர்வுக்குப் பொருட் களே உற்பத்திசெய்யும் முதலாளித்துவ உற்பத்தியின் அந்தத் துறை தீவிரமாக வளர்ச்சி பெறுகிறது. இரண்டாவதாக, அவர்கள் மற்ற தொழிற்சாலேயின் தொழிலாளிகள், அங்கே

யும் விஷயங்கள் அதே மாதிரிதான் இருக்கும் (ou les mêmes faits pourront se représenter) என்று விடையளிக்கிறார் ஸிஸ்மொந்தீ. ஆக வாசகரை ''பொந்தியஸிடமிருந்து பிலாத்திடம் அனுப்பிய'' ஆதாம் ஸ்மித்தின் செய்கையை ஸிஸ்மொந்தீ திரும்பச் செய்கிறதைப் பார்க்கிறீர்கள். ஆனால் இந்த ''மற்ற தொழிற்சாலையும்'' நிலையான மூலதனத்தை நுகர்கிறது, மேலும் அதன் உற்பத்தியுங்கூட முதலாளித்துவ உற்பத்தியின் உற்பத்திச் சாதனங்களை உற்பத்திசெய்கிற அந்தத் துறைக்கு ஒரு சந்தை கொடுக்கிறது! எவ்வளவுதான் பிரச்சினையை ஒரு முதலாளியிடமிருந்து மற்றொரு முதலாளியிடமும் பிறகு மூன்றாமொரு முதலாளியிடமுமாக தள்ளிச் சென்றாலும்—இந்தத் துறை மறைகிறதில்லை; மற்றும் ''உள்நாட்டுச் சந்தை'' எனப்பட்டது வெறுமே நுகர்ப்பொருட்களை மட்டும் கொண்டதாக ஆகிறதில்லை. ஆகவே, ''அரசியல் பொருளாதாரத்தில் மிகவும் வலியுறுத்தப்பட்டுவந்துள்ள மூதுரைகளில் ஒன்றை—அதாவது போட்டி எவ்வளவுக்கெவ்வளவு சுயேச்சையாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு தொழில் துறையின் வளர்ச்சி இலாபகரமாக இருக்கும் என்பதை—...இந்தக் கணக்கு மறுத்துமெய்ப்பிக்கிறது'' என்று ஸிஸ்மொந்தீ சொல்கிறபொழுது (I, 407), தாம் சொல்கிறதையும் ''இந்தக் கணக்கு'' மறுத்துமெய்ப்பிக்கிறதை அவர் பார்க்கவில்லை. இயந்திரங்களைப் புகுத்துவது தொழிலாளிகளை நீக்குவதின் மூலமாக அவர்களின் நிலைமைகளை மேலும் மோசமாக்குகிறது என்பது மறுக்கப்படாத உண்மை; இதை முதன்முதலாகச் சுட்டிக்காட்டியவர்களில் ஒருவர் என்கிற பெருமை ஸிஸ்மொந்தீயைச் சேரும் என்பதும் மறுக்கமுடியாததாகும். எனினும் திரட்சி பற்றியும் உள்நாட்டுச் சந்தை பற்றியும் உள்ள அவரது தத்துவம் முற்றிலும் தவறாக இருப்பதை இது சிறிதேனும் தடுக்கவில்லை. எந்த நிகழ்ச்சித் தோற்றத்தை ஸிஸ்மொந்தீ மறுத்ததுமல்லாமல், திரட்சியும் உற்பத்தியும் நுகர்வுடன் பொருந்தியிருக்க வேண்டும், இல்லையேல் நெருக்கடி உண்டாகும் என்று கூறி முதலாளித்துவத்துக்கு எதிராக வாதமாகக்கூட மாற்றிவைத்தாரோ அதே நிகழ்ச்சித்தோற்றத்தை அவருடைய சொந்தக் கணக்கு தெற்றெனக் குறித்துக் காட்டுகிறது. திரட்சியும் உற்பத்தியும் நுகர்வைக் கடந்து முந்து

கின்றன, அது வேருகவும் இருக்கமுடியாது, ஏனெனில் ''நுகர்விலே'' சேராத உற்பத்திச் சாதனங்கள் மூலமாகவே முதன்மையாகத் திரட்சி நிகழ்கிறது, என்று அவரது கணக்கு திட்ப நுட்பத்துடன் புலப்படுத்துகிறது. ரிக்கார்டோவின் தத்துவத்தில் ஸிஸ்மொந்தீக்கு எது பிழையாகவும் முரண்பாடாகவும் தோன்றியதோ அது—உற்பத்தியில் வருவாய் போக மீதமிருப்பதே திரட்சி என்பது—உண்மையிலே யதார்த்தத்துடன் முற்றும் பொருந்துகிறது, முதலாளித்துவத்தில் உள்ளார்ந்திருக்கும் முரண்பாட்டை வெளியிடுகிறது. எல்லாத் திரட்சிக்கும் இந்த மீதம் அவசியம், நுகர்ப்பொருட்களுக்கான சந்தையைத் தகவுப் பொருத்தமாக விரிவாக்காமலே, அந்தச் சந்தையைச் சுருக்கியும் கூட, அது உறபத்திச் சாதனங்களுக்கு ஒரு புதிய சந்தையைத் திறந்து விடுகிறது.* மேலும், ஸிஸ்மொந்தீ சுயேச்சையான போட்டியின் நற்கூறுகளேப் பற்றிய தத்துவத்தை நிராகரிக்கையில், சுயேச்சையான போட்டி சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளே வளர்க்கிறது என்கிற சந்தேகமற்ற உண்மையை, தமது சொந்தக் கணக்கிலிருந்தே மீண்டும் வெளிப்படையாகியுள்ள உண்மையை, அவர் ஆதாரமற்ற நம்பிக்கையுணர்ச்சியுடன் தூக்கியெறிவதைப் பார்க்கவில்லே. (முறையாகச் சொன்ஞல், உற்பத்திச் சாதனங்களே உற்பத்திசெய்கிற ஒரு தனிச்சிறப்பான தொழில் துறை படைக்கப்படுகிறது, இந்தத் துறை அதிக வேகத்துடன் வளர்கிறது என்கிற அதே விஷயத்தை இது வெறுமே வேறு விதமாகச் சொல்கிறதாகும்.) நுகர்வின் வளர்ச்சியோடு பொருந்திவராத நிலேயிலே சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி இருப்பது ஒரு முரண்பாடு என்பது உண்மையே, ஆனுல் அது யதார்த்தத்திலே இருக்கிற முரண்பாடு வகைப்பட்டது, அது முதலாளித்துவத்தின் தன்மையிலிருந்தே தோன்றுகிறது, அதை உணர்ச்சிவகைப்

---

* புதிய மூலதனம் ஒரு நிலேயான கூருகவும் ஒரு வேறுபடும் கூருகவும் பிரிக்கப்படுவதின் தகவுப்பொருத்தத்தைச் சார்ந்தும், மாறுபடும் மூலதனத்தின் சார்புநிலேப் பங்கு குறைவது எந்த அளவுக்குப் பழைய தொழில்களேப் பாதிக்கிறது என்பதைப் பொருத்தும், இப்படிப்பட்ட வழக்கும் சாத்தியம் என்று மேற்கூறிய பகுப்பாய்விலிருந்து தன்னியல்பாகத் தொடர்கிறது.

பட்ட சொற்ருெடர்களைக் கொண்டு ஒதுக்கித் தள்ள முடி யாது.

ஆனல் இவ்வாறுதான் அதைத் தன்னுணர்ச்சிவாதிகள் ஒதுக்கித்தள்ள முயல்கிருர்கள். மேலும், ஸிஸ்மொந்தீயைப் போன்ற ''காலவழக்கொழிந்த'' ஆசிரியரின் தவறுகள் சம் பந்தமாக நம் காலத்தைச் சேர்ந்த பொருளாதாரவாதி களுக்கு எதிராக ஆதாரங்காட்டாத குற்றச்சாட்டுகளை நாம் தொடுப்பதாக வாசகர் சந்தேகிக்க இடங்கொடாமலிருப்ப தற்காக அந்த ''நவீனகால'' ஆசிரியராகிய திரு. நி.—ன் அவர்களின் எழுத்துக்களிலிருந்து சிறு மாதிரி ஒன்று மேற் கோள் காட்டுவோம். அவரது ''வரைவுரைகளின்'' 242-ம் பக்கத்தில் ருஷ்யாவின் மாவரைக்கும் ஆலைத் தொழிலில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை விவாதிக்கிருர். மேம் படுத்தப்பட்ட உற்பத்திக்கருவிகளுடன் நீராவியால் ஓடும் பெரிய மாவரைப்பு ஆலைகள் (1870-களிலிருந்து சுமார் 10 கோடி ரூபிள் மாவரைப்பு ஆலைகளை மறுநிர்மாணம் செய் வதிலே செலவிடப்பட்டுள்ளது) இருமடங்குக்கு மேலாக அதிகரித்த உழைப்பின் உற்பத்தித்திறனேடுகூடத் தோன்றியுள் ளதைக் குறிப்பிட்டு அவர் அந்த நிகழ்ச்சித் தோற்றத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிருர்: ''மாவரைப்பு ஆலைத் தொழில் வளரவில்லை, அது வெறுமே பெருமளவான தொழிலமைப் புகளில் குவிக்கப்பட்டுள்ளது''; அப்புறம் அவர் இந்த வர்ணனை யை எல்லாத் தொழில்களுக்கும் பொருத்தி (243-ம் பக் கம்) ''விதிவிலக்கின்றி எல்லா வழக்குகளிலும் தொழிலாளி களிடையே ஒரு திரள் நீக்கப்பட்டு வேலை கிடைக்காமல் இருக் கிருர்கள்'' (243) என்றும், ''மக்களின் நுகர்வுக்கு நஷ்டம் உண்டாக்கி முதலாளித்துவ உற்பத்தி வளர்ந்திருக்கிறது'' (241) என்றும் முடிவு எடுக்கிருர். வாசகரைக் கேட்கிருேம்: சற்றுமுன் மேலே மேற்கோள் காட்டிய ஸிஸ்மொந்தீயின் வாதத்தினின்று இந்த வாதம் எவ்வகையிலாயினும் வேறு பட்டிருக்கிறதா? இந்த ''நவீனகால'' ஆசிரியர் இரண்டு விஷயங்களை—நாம் பார்த்தவாறு ஸிஸ்மொந்தீ பயன்படுத் திய அதே விஷயங்களைப் பதிவுசெய்து அதே உணர்ச்சிவகைப் பட்ட சொற்ருெடரைக் கொண்டு அவற்றை ஒதுக்கித்தள்ளு கிருர். முதலாவதாக, உற்பத்திச் சாதனங்கள் மூலமாக முதலாளித்துவம் வளர்கிறதை அவரது எடுத்துக்காட்டு புலப்

படுத்துகிறது. சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளை முதலாளித்துவம் வளர்க்கிறது என்பதே இதற்குப் பொருள். இரண்டாவதாக, முதலாளித்துவத்தை இனங்காட்டுகிற முரண்பாடுகளின் தனிக்குறிப்பான பாதையிலே இந்த வளர்ச்சி நடைபெறுவதை அவரது எடுத்துக்காட்டு புலப்படுத்துகிறது; தன்னோடு ஒத்திசைவுள்ள நுகர்வு வளர்ச்சி இல்லாமலேயே (மக்களின் உணவு கெட்டு வருகிறது) உற்பத்தி வளர்ச்சி இருக்கிறது (10 கோடி ரூபிள் செலவு என்பது தனிப்பட்ட முறையிலல்லாத நுகர்வு மூலமாகத் திருப்பியெடுத்துக்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டுச் சந்தையாகும்), அதாவது உற்பத்திக்காகவே உற்பத்தி நடக்கிறது. நாமறிந்த பழைய ஸிஸ்மொந்தீயின் வெகுளித்தனத்துடன் திரு. நி.—ன் இந்த முரண்பாட்டை வெறுமே தத்துவத்தினுள்ள முரண்பாடாக, ''உற்பத்தியின் குறிக்கோளை நாம் மறந்துவிட்டோம்'' என்று வெறுமே ''ஒரு சாவுக்கேடான பிழையாக''க் காட்டினால் அது வாழ்க்கையிலிருந்து மறைந்து போகும் என்று நினைக்கிறார்!! ''வளரவில்லை, அது வெறுமே குவிக்கப்பட்டிருக்கிறது'' எனும் சொற்றொடரைவிட மேலும் இனக்குறிப்பானதாக வேறு ஏதாயினும் இருக்கமுடியுமா? திரட்சி மூலமாக அல்லாமல் வேறு வழியிலே வளர்ச்சி நடக்க முடிகிறதாயுள்ள ஒரு முதலாளித்துவம் திரு. நி.-ன்னுக்குத் தெரியும் என்பது வெளிப்படை. அவருக்கு முந்தைய அத்தனை அரசியல் பொருளாதாரவாதிகளும் அறிந்திராத இந்தத் ''தற்படைப்பான'' முதலாளித்துவத்தை அவர் நமக்கு அறிமுகப்படுத்தாதது எவ்வளவு இரங்கத்தக்கது!

VI

மீத மதிப்பைத் திருப்பியெடுக்கும் ''கஷ்டத்திலிருந்து மீள்வதற்குரிய வழி'' எனும் வகையில் வெளிநாட்டுச் சந்தை

முதலாளித்துவச் சமுதாயத்தில் சமுதாய வருவாய், உற்பத்திப் பொருள் பற்றிய ஸிஸ்மொந்தீயின் பிழையான தத்துவத்திலிருந்து உதிக்கும் அடுத்த தவறு, பொதுவாக உற்பத்திப் பொருளையும், சரிகுறிப்பாக மிகுதி மதிப்பையும் திருப்பி

யெடுக்க முடிவது சாத்தியமல்ல, எனவே வெளிநாட்டுச் சந்தை தேடிக்கொள்வது அவசியம் எனும் தத்துவாம்சமாகும். பொதுவாக உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்வதைப் பொருத்தவரை, அது ''சாத்தியமற்றிருப்பதற்கு''க் காரணம் நிலையான மூலதனத்தையும் உற்பத்திச் சாதனங்களையும் தவறாக விலக்கிவைப்பது ஒன்றேதான், என்று மேலேகூறிய பகுப்பாய்வு புலப்படுத்துகிறது. இந்தத் தவற்றைத் திருத்திக் கொண்டால் ''சாத்தியமின்மை'' மறைந்துபோகிறது. இதைக் குறிப்பாக மிகுதி மதிப்பு விஷயத்தில் சொல்லித்தீரவேண்டும்: அதுவும் எப்படித் திருப்பியெடுத்துக்கொள்ளப்படுகிறது என்று இந்தப் பகுப்பாய்வு விளக்குகிறது. திருப்பியெடுப்பதைப் பொருத்தமட்டில், மொத்த உற்பத்திப் பொருளிலிருந்து மிகுதி மதிப்பைப் பிரிப்பதற்கு நியாயமான காரணம் ஒன்றுமில்லை. இதற்கு மாறாக ஸிஸ்மொந்தீயும் (நமது நரோத்னிக்குகளும்) அடித்துச் சொல்லும் கூற்று, பொதுவாகத் திருப்பியெடுக்கப்படுவது சம்பந்தப்பட்ட அடிப்படையான விதிகள் பற்றிய வெறும் தப்பெண்ணமேயாகும், மதிப்பு என்கிற முறையில் உற்பத்திப் பொருளை மூன்று கூறுகளாகப் (இரண்டாக அல்ல) பிரிக்கவும் பருப்பொருள் வடிவ முறையில் (உற்பத்திச் சாதனங்கள், நுகர்ப் பொருட்கள் என்று) இரண்டு கூறுகளாகப் பிரிக்கவும் இயலாமையாகும். முதலாளிகள் மிகுதி மதிப்பை நுகரமுடியாது எனும் முன்கூற்று பொதுவாகத் திருப்பியெடுப்பைப் பற்றி ஸ்மித்துக்கிருந்த கலக்கத்தை வெறுமே கொச்சைப் படுத்தித் திரும்பச் சொல்வதாகும். மிகுதி மதிப்பின் ஒரு பகுதிதான் நுகர்ப் பொருட்களைக் கொண்டுள்ளது; மற்ற பகுதி உற்பத்திச் சாதனங்களைக் கொண்டது (எடுத்துக்காட்டாக, இரும்புத்தொழில் முதலாளியின் மிகுதி மதிப்பு). பின்னே சொன்ன இந்த மிகுதி மதிப்பு உற்பத்திக்குச் செயல்படுத்துவதின் மூலமாக ''நுகரப்படுகிறது''; உற்பத்திச் சாதனங்களின் வடிவத்தில் உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் முதலாளிகள் மிகுதி மதிப்பை நுகர்வதில்லை, மற்ற முதலாளிகளோடு பரிமாற்றம் செய்ததின் வழியாகப் பெற்ற நிலையான மூலதனத்தையே அவர்கள் நுகர்கிறார்கள். எனவே, மிகுதி மதிப்பைத் திருப்பி யெடுக்கமுடியாது என்று வாதிக்கையில் நரோத்னிக்குகளுங்கூடத் தர்க்கப்படி நிலையான மூல

தனத்தையும் திருப்பியெடுக்கமுடியாது என்று ஒப்புக் கொண்டுதீரவேண்டும்—இவ்வழியே அவர்கள் பத்திரமாக ஆதாமிடம் திரும்பிச் செல்வார்கள்.... இவ்வாறு ''அரசியல் பொருளாதாரத்தின் தந்தையிடம்'' திரும்பிப்போவது, ''தாமாகவே கண்டு கொண்ட'' உண்மைகள் எனும் மாறு வேடத்தில் பழைய பிழைகளை நம்மிடம் முன்வைக்கிற எழுத் தாளர்களுக்கு ஒரு மாபெரும் முன்னேற்றப்படியாயிருக் கும்...

நிற்க, வெளிநாட்டுச் சந்தை சங்கதியென்ன? முதலாளித் துவத்துக்கு வெளிநாட்டுச் சந்தை தேவைப்படுவதை நாம் மறுக்கிறோமா? நிச்சயமாக இல்லை. ஆனால் வெளிநாட்டுச் சந்தைப் பிரச்சினைக்கும் திருப்பியெடுப்புப் பிரச்சினைக்கும் இடையே ஒரு சம்பந்தமும் கிடையாது; அவற்றை ஒரு முழுமை யாக இணைக்கும் முயற்சி, முதலாளித்துவத்தைத் ''தடுக்க வேண்டும்'' என்கிற தன்னுணர்ச்சிவாத விருப்பத்தையும் தர்க்கவழியிலே சிந்திக்கத் தன்னுணர்ச்சிவாதத்தின் இயலா மையையும் வெளிப்படுத்துகிறதேதவிர வேறில்லை. திருப்பி யெடுப்புப் பிரச்சினையை விளக்கியிருக்கும் தத்துவம் இதை முற்றாக நிரூபித்துள்ளது. தன்னுணர்ச்சிவாதி சொல்கிறான்: முதலாளிகள் மிகுதி மதிப்பை நுகரமுடியாது, ஆகையால் அதை வெளிநாட்டில் விற்றுத்தீர்க்கவேண்டும், என்று. கேள்வி இதுதான்: வெளிநாட்டாருக்கு முதலாளிகள் இலவச மாக உற்பத்திப் பொருட்களை வழங்குகிறார்களா, அல்லது கடலிலே போடுகிறார்களா? அவற்றை விற்கிறார்கள்—என வே ஒரு சமமதிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள்; சில வகை யான உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்கிறார்கள்— எனவே வேறு வகைகளை இறக்குமதி செய்கிறார்கள். சமுதாய உற்பத்திப் பொருளின் திருப்பியெடுப்பு குறித்துப் பேசுகி றோமென்றால் அதன் விளைவாகப் பணப்புழக்கத்தை விலக்கி வைத்துப் பொருளோடு பொருள் பரிமாறிக் கொள்வதை மட்டுமே அனுமானிக்கிறோம், ஏனெனில் திருப்பியெடுப்புப் பிரச்சினை என்பது மதிப்பு என்கிற முறையிலும் பருப்பொருள் வகைப்பட்ட வடிவம் என்கிற முறையிலும் சமுதாய உற்பத்திப் பொருளின் எல்லாக் கூறுகளும் ஈடுசெய்யப்படு வதைப் பகுத்தாய்வதாகும். ஆகவே, திருப்பியெடுப்புப் பற்றி வாதத்தைத் தொடங்கிவிட்டு அவர்கள் ''பணத்துக்கு

உற்பத்திப் பொருட்களைச் சந்தையிலே விற்பார்கள்'' என்று கூறி முடிப்பது கேலிக்குரியது—நுகர்ப்பொருட்களின் வடிவத்தில் நிலையான மூலதனத்தைத் திருப்பியெடுக்கும் பிரச்சினைக்கு ''அவர்கள் விற்பார்கள்'' என்று விடையளிப்பது கேலிக்குரியது போல. இது வெறுமே ஒரு கொச்சையான தர்க்கப் பிழை: மொத்தமான சமுதாய உற்பத்திப் பொருளின் திருப்பியெடுப்புப் பிரச்சினையை விட்டு விலகித்திரிந்து ''வெளி நாட்டானுக்கு விற்பது'' தவிர வேறெந்த அக்கறையும் இல்லாத தனிப்பட்ட தொழில் முயற்சியாளரின் பார்வை நிலைக்கு வந்து சேருகிறார்கள். வெளிநாட்டு வர்த்தகத்தை, ஏற்றுமதிகளை, திருப்பியெடுப்புப் பிரச்சினையோடு இணைப்பது விஷயத்தைத் தட்டிக்கழிப்பதாகும், வெறுமே அதை மேலும் விரிவான அரங்குக்கு மாற்றி அதை விளக்குவதற்கு ஒன்றும் செய்யாதிருப்பதாகும்.* ஒரு நாட்டின் சந்தைக்குப் பதிலாக ஒரு குழுவாகச் சில நாடுகளின் சந்தையை எடுத்துக் கொள்வதினால் திருப்பியெடுப்புப் பிரச்சினை கடுகளவேனும் தெளிவாக்கப்படாது. உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்வதில் முதலாளித்துவம் தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்கிற ''கஷ்டத்திலிருந்து மீள்வதற்குரிய வழி தான்''** வெளிநாட்டுச் சந்தை என்று நரோத்னிக்குகள் அடித்துப்பேசும்போது அவர்கள் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமையால் விழுகிற ''கஷ்டத்திலிருந்து மீள்வதற்கு'' அவர்களுக்கு ''வெளிநாட்டுச் சந்தை'' வாய்த்திருக்கிற

---

* இது மிகத் தெளிவானது, எனவேதான் ஸிஸ்மொந்தீயுங்கூடத் திருப்பியெடுப்புப் பிரச்சினையைப் பகுத்தாய்வதில் வெளிநாட்டு வர்த்தகத்தைப் புறக்கணிப்பதின் தேவையை உணர்ந்திருந்தார். உற்பத்தி நுகர்வுக்கு ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்று அவர் பேசுகையில், ''இந்தக் கணக்கீடுகளை மேலும் திட்பநுட்பமாக வரைவதற்கும் பிரச்சினையை எளிதாக்குவதற்கும் நாம் இதுவரை வெளிநாட்டு வர்த்தகத்தை முற்றுக விலக்கிவைத்தோம்; தனித்திருக்கும் நாட்டை முன்னனுமானித்துக் கொண்டிருக்கிறோம்; மனித சமுதாயமும் இப்படிப்பட்ட ஒரு தனித்திருக்கும் நாடுதான், வெளிநாட்டு வர்த்தகம் இல்லாத நாட்டுக்குச் சம்பந்தப்பட்ட தனைத்தும் மனிதகுலத்துக்கும் முற்றுகப் பொருந்தும்'' என்கிறார் (I, 115).

** திரு. நி.—ன், 205-ம் பக்கம்.

வருத்தமான விஷயத்தை மறைக்கவே இந்தச் சொற்றெடரைப் பயன்படுத்துகிருர்கள்.... அது மட்டுமல்ல. மொத்தமான சமுதாய உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுக்கும் பிரச்சினையோடு வெளிநாட்டுச் சந்தையை இணைக்கும் தத்துவம் இந்தத் திருப்பியெடுப்பைப் புரிந்துகொள்ளத் தவறுவதை வெளிப்படுத்திக்கொள்கிறதோடல்லாமல் அத்துடன் இந்தத் திருப்பியெடுப்பில் உள்ளார்ந்து கிடக்கும் முரண்பாடுகளை மிகவும் மேலெழுந்தவாரியாகப் புரிந்து கொண்டுள்ளதையும் வெளிப்படுத்திக் கொள்கிறது. ''தொழிலாளிகள் கூலியை நுகர்வார்கள், ஆனல் முதலாளிகள் மிகுதி மதிப்பை நுகர முடியாது.'' இந்தத் ''தத்துவத்தை'' வெளிநாட்டுச் சந்தைப் பார்வைநிலையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். ''தொழிலாளிகள் கூலியை நுகர்வார்கள்'' என்று எப்படி நமக்குத் தெரியும்? ஒரு நாட்டின் தொழிலாளிகள் அனைவரும் நுகர்வதற்கென்று அந்த நாட்டின் முதலாளிவர்க்கம் முழுவதும் செய்த உற்பத்திப் பொருட்கள் உண்மையிலே மதிப்பில் தொழிலாளிகளின் கூலிக்குச் சமமாக இருக்குமென்றும், அவற்றை மீட்டுவைக்குமென்றும், இந்த உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தை தேவைப்படாதென்றும் நாம் நினைப்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? அப்படி நினைக்க ஆதாரமெதுவும் இல்லை, நடப்பிலும் அப்படியொன்றுமில்லை. மிகுதி மதிப்பை மீட்டுவைக்கும் உற்பத்திப் பொருட்கள் (அல்லது உற்பத்திப் பொருட்களின் பகுதி) மட்டுமின்றி வேறுபடும் மூலதனத்தை மீட்டுவைக்கும் உற்பத்திப் பொருட்களுங்கூட, வேறுபடும் மூலதனத்தை மீட்டுவைக்கும் உற்பத்தி பொருட்கள் மட்டுமின்றி நிலையான மூலதனத்தை மீட்டுவைக்கும் உற்பத்திப் பொருட்களுங்கூட(இதை நமது ''பொருளாதாரவாதிகள்'' மறந்துவிட்டார்கள், ஆதாமுடன் தமக்குள்ள உறவையும்... மறந்துவிட்டார்கள்); நுகர்ப்பொருட்களாகப் பயன்படும் பொருட்கள் மட்டுமின்றி உற்பத்திச் சாதனங்களாகப் பயன்படும் பொருட்களுங்கூட இவ்வுற்பத்திப் பொருட்கள் அனைத்துமே ஒரே வழியில் திருப்பி யெடுக்கப்படுகின்றன—அதாவது, ''கஷ்டங்களின்'' மத்தியிலே, இடையருத ஏற்ற இறக்கங்கள் மத்தியிலே—முதலாளித்துவம் வளர வளர இந்த ஏற்ற இறக்கங்கள் மேன்மேலும் கடுமையாகின்றன—கொடிய போட்டியின் மத்தியிலே வரம்

பற்ற முறையிலே உற்பத்தியை விரிவாக்க முயற்சிக்குமாறும், தத்தம் நாட்டின் எல்லைகளைக் கடந்து செல்லுமாறும், முதலாளித்துவப் பண்டப் புழக்கத்தில் இன்னமும் ஈர்க்கப்படாமலே இருந்துவரும் நாடுகளில் புதிய சந்தைகளைத் தேடிப்பிடிக்கச் செல்லுமாறும் ஒவ்வொரு தொழில்முயற்சியாளனையும் இந்தப் போட்டி கட்டாயப் படுத்துகிறது — அவையனைத்தும் திருப்பியெடுக்கப்படுகின்றன. முதலாளித்துவ நாட்டுக்கு வெளிநாட்டுச் சந்தை ஏன் தேவைப்படுகிறது என்கிற கேள்விக்கு இது கொண்டுவந்துவிடுகிறது. முதலாளித்துவ முறையின்கீழ் உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்ளவே முடியாது என்கிற காரணத்தால் அல்ல என்பது உறுதி. அது முட்டாள்தனம். வெளிநாட்டுச் சந்தை தேவைப்படுவதற்குக் காரணம் வரம்பின்றி விரிவடைய முயல்வது முதலாளித்துவ உற்பத்தியிலே உள்ளார்ந்திருப்பது ஆகும்— அது பழைய உற்பத்தி முறைகள் எல்லாவற்றையும் போல அல்ல, அவை கிராமச் சமூகத்தின் அல்லது தந்தைவழிக் கால ஆதீனத்தின் அல்லது குலத்தின் அல்லது ஒரு நிலப் பகுதிப் பரப்பின் அல்லது அரசுமண்டலத்தின் வரம்புக்குட்பட்டிருந்தவை. எல்லாப் பழைய பொருளாதார அமைப்பு முறைகளின் கீழும் ஒவ்வொரு தடவையும் உற்பத்தி முன் போலவே அதே வடிவத்திலும் அதே அளவிலும் மீண்டும் துவங்கப்பட்டுவந்தது; ஆனால் முதலாளித்துவ அமைப்பின் கீழ் இவ்வாறு அதே வடிவத்தில் மீண்டும் துவக்குவது சாத்தியமற்றுப்போகிறது, வரம்பில்லாத விரிவாக்கமும் நிரந்தரமான முன்னேற்றமும் உற்பத்தியின் விதியாகிறது.*

ஆகவே, திருப்பியெடுப்பு பற்றிய வெவ்வேறான கருத்தோட்டங்கள் (மேலும் திட்பநுட்பமாகச் சொன்னால், ஒரு பக்கத்தில் அதைப் புரிந்துகொண்டிருப்பதும் மறு பக்கத்தில் தன்னுணர்ச்சிவாதிகள் அதை முற்றாகத் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதும்) வெளிநாட்டுச் சந்தையின் குறிபொருளைப் பற்றி நேரெதிரான இரண்டு கருத்துக்களுக்குக் கொண்டு போய் விடுகின்றன. சிலருக்கு (தன்னுணர்ச்சிவாதிகளுக்கு)

---

* ஸீபர், ''டேவிட் ரிக்கார்டோ, முதலியவை'' செயின்ட் பீட்டர்ஸ்பர்க், 1885, 466-ம் பக்கத்து அடிக் குறிப்பு நோக்குக.

வெளிநாட்டுச் சந்தை என்பது சமுதாய வளர்ச்சிக்குக் குறுக்கே முதலாளித்துவம் வைக்கிற ''கஷ்டத்தை''க் குறிக்கிறதாயுள்ளது. அதற்கு மாறுக மற்றவர்களுக்கு, சமூகம், குலம், நிலப்பகுதி, நாடு போன்ற பல்வேறு தடைகளின் வடிவில் சமுதாய வளர்ச்சிக்குக் குறுக்கே வரலாறு வைக்கிற கஷ்டங்களை முதலாளித்துவம் எப்படி நீக்குகிறது என்று வெளிநாட்டுச் சந்தை காட்டுகிறது.*

தெரிகிறதல்லவா, வேற்றுமை வெறுமே ''பார்வை நிலை'' பற்றியதுதான். ஆம், ''வெறுமே''! முதலாளித்துவத்தைப் பற்றித் தன்னுணர்ச்சிவாதவழியிலே மதிப்பிடுகிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் வேற்றுமை, பொதுவாகச் சொன்னுல், ''வெறுமே'' ''பார்வைநிலை'' பற்றியதுதான்—விஷயம் ''வெறுமே'' இதுதான், சிலர் அதைப் பின்னின்று மதிப்பிடுகின்றனர், மற்றவர்கள் முன்னின்று மதிப்பிடுகின்றனர், முதலாளித்துவம் அழித்துவருகிற ஓர் அமைப்பு முறையின் பார்வைநிலையிலிருந்து சிலர் மதிப்பிடுகின்றனர், மற்றவர்கள் முதலாளித்துவம் படைத்து வரும் ஓர் அமைப்பு முறையின் பார்வைநிலையிலிருந்து மதிப்பிடுகின்றனர்.**

வெளிநாட்டுச் சந்தையைத் தன்னுணர்ச்சிவாதிகள் தவருகப் புரிந்துகொண்டிருப்பதோடு சேர்ந்தாற்போல் அந்தந்த நாட்டில் முதலாளித்துவத்தின் சர்வதேச நிலைக்குரிய ''தனிச் சிறப்பான குணும்சங்கள்'' பற்றிய சுட்டுக்குறிப்புகளும் சந்தைகள் பிடிப்பதின் சாத்தியமின்மை பற்றிய சுட்டுக்குறிப்புகளும் மற்றவையும் கைகோத்து வருகின்றன; இவ்வாதங்களின் நோக்கம் முதலாளிகளை வெளிநாட்டுச் சந்தை தேடிச் செல்லவேண்டாம் என்று ''சொல்லித் தடுப்பதாகும்''. இடையே, நாம் ''சுட்டுக்குறிப்புகள்'' என்று சொல்வது அவ்வளவாகச் சரிநுட்பமாயில்லை; காரணம், தன்னுணர்ச்சி

---

* பின்னே வரும் “Rede über die Frage des Freihandels” (கார்ல் மார்க்ஸ், ''சுயேச்சையான வாணிபம் பற்றி'' நோக்குக.—பதிப்பாசிரியர்.)

** இங்கே நான் பேசிக்கொண்டிருப்பது முதலாளித்துவத்தைப் பற்றிய மதிப்பீடு குறித்துதான், அதைப் புரிந்துகொண்டிருப்பது குறித்தல்ல. பிந்தைய விஷயத்தில் தன்னுணர்ச்சிவாதிகள் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளை விட உயர்வாக இல்லை என்று கண்டோம்.

வாதிகள் நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் பற்றியோ, புதுச் சந்தைகள் பிடிக்கும் விஷயத்தில் அதன் முன்னேற்றம் பற்றியோ, அதன் காலனியாக்குதல் பற்றியோ பிறவற்றைப் பற்றியோ அசல் பகுப்பாய்வு ஒன்றும் தன்னுணர்ச்சிவாதி தருவதில்லை. அசல் இயக்கப்போக்கை ஆய்வதிலும் விளக்குவதிலும் தன்னுணர்ச்சிவாதிக்கு அக்கறையொன்றும் இல்லை. **இவ்வியக்கப் போக்கை ஒழுக்கநெறி முறையிலே கண்டிப்பது** ஒன்றைத்தான் அவன் விரும்புகிறான். நம் காலத்திய ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதிகளின் ஒழுக்கநெறிப்பேச்சும் பிரெஞ்சுத் தன்னுணர்ச்சிவாதியின் ஒழுக்கநெறிப்பேச்சும் ஒன்றே என்று வாசகர் தீர்மானித்துக்கொள்வதற்காகப் பிரெஞ்சுத் தன்னுணர்ச்சிவாதியின் வாதங்களிலிருந்து சில முன்மாதிரிகளைக் கொடுக்கிறோம். சந்தை கிடைக்காது என்று முதலாளிகளை ஸிஸ்மொந்தீ எச்சரித்ததை ஏற்கனவே பார்த்தோம். எனினும் அவர் வலியுறுத்தியது இது மட்டுமல்ல. ''உலகச் சந்தையின் வரத்து ஏற்கனவே போதியதாயுள்ளது'' (II, 328) என்றும் கூறி முதலாளித்துவப் பாதையில் செல்ல முடியாதென்றும் வேறொரு பாதையைத் தேர்ந்துகொள்வது அவசியமென்றும் அவர் வாதாடினார்.... முதலாளித்துவ முறையிலான வேளாண்மையால் நீக்கப்பட்ட விவசாயத் தொழிலாளிகள் அனைவருக்கும் முதலாளித்துவத்தால் வேலை கொடுக்க முடியாதென்று (I, 255-256) அவர் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு உறுதி கூறினார். ''சாகுபடியாளர்களைப் பலி கொண்டவர்கள் அதனால் ஆதாயம் ஏதாவது பெறுகிறார்களா? ஆங்கிலேயச் செய்பொருட்களுக்குச் சாகுபடியாளர்கள் அல்லவா மிக நெருங்கிய, மிக நம்பகமான நுகர்வாளர்கள்? அவர்களின் நுகர்வு நின்றுபோனால் மிகப்பெரிய வெளிநாட்டுச் சந்தைகளில் ஒன்று அற்றுவிடுவதால் தொழில்துறைக்குக் கிடைக்கிற அடியை விடப் பெரிய அடியாக இருக்கும்'' (I, 256). போலாந்து நாட்டு ஏழை விவசாயியின் தானிய உற்பத்திச் செலவு மிகச்சொற்பம் என்றும் அவனுடைய போட்டியை எதிர்த்து நிற்க முடியாதென்றும் ஆங்கிலேயச் சாகுபடியாளர்களுக்கு உறுதி கூறினார் (II, 257), மேலும் கருங்கடல் துறைமுகங்களிலிருந்து வரும் ருஷ்யத் தானியத்தின் போட்டி அதை விடப் பயங்கரமானது, அந்தப் போட்டியும் அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறதென்றும்

கூறினர். ''சந்தையைக் கணக்கில் கொள்ளாமல் (produire sans calculer le marché) உற்பத்தி செய்வது, ஆனமட்டும் அதிகமாக உற்பத்தி செய்வது என்கிற புதிய கோட்பாட்டை அமெரிக்கர்கள் பின்பற்றுகிருர்கள்'', இங்கே ''அமெரிக்க வாணிபத்தின் இனக்குறிப்பான குணும்சம் இருக்கிறது— இதை அந்த நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை காணலாம்—அதாவது, எல்லா விதமான சரக்குகளும் நுகர் வின் தேவையை மிஞ்சி இருக்கின்றன... இந்த வர்த்தக மூலதனத்தின் மிகுதியின் விளைவு இடையருது நிகழும் முறிவு களாகும், வர்த்தக மூலதனத்தின் மிகுதியை வருவாய்க்குப் பரிமாற்றிக் கொள்ள முடியாது'' (I, 455-456) என்று கூவி ஞர். பாவம், ஸிஸ்மொந்தீ நல்லவர்! இன்றைய அமெரிக்கா வைப் பற்றி என்ன சொல்வாரோ—தன்னுணர்ச்சிவாதிகளின் தத்துவப்படிச் ''சுருங்கி''த் தீர்ந்திருக்கவேண்டிய அதே ''உள்நாட்டுச் சந்தையின்'' காரணமாக அமெரிக்கா எவ்வள வோ பெரிதாக வளர்ந்து விட்டிருக்கிறதே!

VII

நெருக்கடி

ஆதாம் ஸ்மித்திடமிருந்து ஸிஸ்மொந்தீ இரவல் வாங் கிக் கொண்ட தவருன தத்துவத்திலிருந்து ஸிஸ்மொந்தீ எடுக்கும் மூன்ருவது தவருன முடிவு நெருக்கடிகள் பற்றிய தத்துவமாகும். திரட்சியானது (பொதுவாக உற்பத்தியின் வளர்ச்சி) நுகர்வால் நிர்ணயிக்கப்படுகிறது என்கிற ஸிஸ் மொந்தீயின் கருத்தும் சரி, மொத்தமான சமுதாய உற்பத் திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்வது (இதை வரு வாயினின்று தொழிலாளர்கள் பெறும் பங்காகவும் முதலாளி கள் பெறும் பங்காகவும் காட்டுகிருர்) பற்றிய அவரது தப்பான விளக்கமும் சரி—உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடை யேயுள்ள வேறுபாட்டைக் கொண்டு நெருக்கடிகளை விளக்க வேண்டும் என்கிற தத்துவத்துக்கு இயல்பாகவும் தவிர்க்க முடியாதபடியும் கொண்டுபோயின. இதை ரொட்பெர்டஸூம் ஏற்றுக் கொண்டார், அவர் அதைச் சற்று வேறுவிதமாக வரையறுத்தார்: உற்பத்தி வளர வளர உற்பத்திப் பொருளில்

தொழிலாளியின் பங்கு குறைகிறது என்று சொல்லி அவர் நெருக்கடிகளை விளக்கினார், மற்றும் ஆதாம் ஸ்மித் செய்த மாதிரியே மொத்தமான சமுதாய உற்பத்திப் பொருளைக் கூலி என்றும் ''வாடகை'' என்றும் (அவரது துறைச்சொல் வழக்கில் ''வாடகை'' என்பது மிகுதி மதிப்பு, அதாவது இலாபமும் நில வாடகையும் சேர்ந்தது) தவறாகப் பிரித்தார். முதலாளித்துவச் சமுதாயத்தில் மூலதனத் திரட்சியைப் பற்றிய விஞ்ஞான வழிப்பட்ட பகுப்பாய்வு* உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக்கொள்வது பற்றிய, விஞ்ஞான வழிப்பட்ட பகுப்பாய்வு, இந்தத் தத்துவத்தின் அடிப்படை முழுவதையும் தகர்த்து விட்டது; நெருக்கடிகளுக்கு முந்திய காலங்களிலேதான் தொழிலாளிகளின் நுகர்வு உயர்கிறது என்றும் அது குறிப்பிட்டது; குறைநுகர்வு (அதுதான் நெருக்கடிகளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது) மிகவும் வேறுபட்ட பொருளாதார அமைப்புமுறைகளில் இருந்தன வென்றும் ஆனால் நெருக்கடிகள் என்பவை முதலாளித்துவ அமைப்புமுறை ஒன்றுக்குத்தான் வேறுபடுத்திக்காட்டும் குணும்சமாக இருக்கிறதென்றும் அது குறிப்பிட்டது. மற்றொரு முரண்பாட்டைக் கொண்டு—அதாவது, உற்பத்தியின் சமுதாய வகைப்பட்ட தன்மைக்கும் (முதலாளித்துவத்தால் சமுதாயமயமாக்கப்பட்டது) பறித்துடமையாக்கிக் கொள்வதின் தனிப்பட்ட தனியுடைமை முறைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் கொண்டு—நெருக்கடிகளை இந்தத் தத்துவம் விளக்குகிறது. இத்தத்துவங்களிடையேயுள்ள ஆழ்ந்த வேற்றுமை வெளிப்படையானது என்றே புலப்படக்

---

* ஆதாம் ஸ்மித்தும் அவருக்குப் பின் வந்த பொருளாதாரவாதிகளும் ''தனித்தனி மூலதனத்தின் திரட்சி''குறித்துப் பெற்றிருந்த தவறான கருத்தோட்டம் முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள மொத்தமான உற்பத்திப் பொருள் இரண்டு கூறுகளைக் கொண்டது என்கிற தத்துவத்தோடு தொடர்புள்ளது. இலாபத்தின் திரண்ட கூறு முழுவதும் கூலிக்குச் செலவிடப்படுகிறது என்று அவர்கள்தான் போதித்தார்கள்; அசலில் அப்படியில்லை, அது 1) நிலையான மூலதனம், 2) கூலி ஆகியவற்றிற்குச் செலவிடப்படுவது. மூலச் சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் செய்த இந்தத் தவற்றையே ஸிஸ்மொந்தியும் செய்கிறார்.

கூடும், எனினும் இதை நாம் மேலும் விரிவாகக் கவனித்தாக வேண்டும்; காரணம், ஸிஸ்மொந்தீயின் ருஷ்ய ஆதரவாளர்கள்தாம் இந்த வேற்றுமையை அழித்துவிடவும் பிரச்சினையைக் குழப்பிவிடவும் முயல்கின்றனர். நாம் பேசிக்கொண்டிருக்கும் இவ்விரண்டு தத்துவங்கள் நெருக்கடிகளைப்பற்றி முற்றிலும் வெவ்வேறான விளக்கங்கள் தருகின்றன. உற்பத்திக்கும் தொழிலாளி வர்க்கத்தின் நுகர்வுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் கொண்டு முதல் தத்துவம் நெருக்கடிகளை விளக்குகிறது; உற்பத்தியின் சமுதாயவகைப்பட்ட தன்மைக்கும் பறித்துடைமையாக்கிக்கொள்வதின் தனியுடைமை முறைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் கொண்டு இரண்டாம் தத்துவம் நெருக்கடிகளை விளக்குகிறது. எனவே, முந்தைய தத்துவம் நெருக்கடிக்குரிய வேர் உற்பத்திக்கு அப்பால் வெளியே இருப்பதாகக் காண்கிறது (எனவேதான், எடுத்துக்காட்டாக, மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் நுகர்வைப் புறக்கணித்துவிட்டு உற்பத்தியை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்கள் என்று ஸிஸ்மொந்தீ அவர்களைப் பொதுவாகத் தாக்குகிறார்); பிந்தையத் தத்துவம் நெருக்கடிக்குரிய வேர் உற்பத்தி நிலைமைகளிலேதான் இருப்பதாகக் காண்கிறது. மேலும் சுருங்கச் சொல்வதானால், முந்தைய தத்துவம் குறைநுகர்வை (Unterkonsumption) கொண்டு நெருக்கடிகளை விளக்குகிறது, பிந்தைய தத்துவம் உற்பத்தியின் அராஜகத்தன்மையைக் கொண்டு நெருக்கடிகளை விளக்குகிறது. ஆக, இரு தத்துவங்களுமே பொருளாதார அமைப்புமுறைக்குள்ளேயேயுள்ள முரண்பாட்டைக் கொண்டு நெருக்கடிகளை விளக்குகிறபோதிலும், அந்த முரண்பாட்டின் தன்மை விஷயத்திலே அவ்விரண்டுமே முற்றிலும் வேறுபடுகின்றன. ஆனால் கேள்வி இதுதான்: உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே முரண்பாடு என்கிற உண்மையை இரண்டாம் தத்துவம் மறுக்கிறதா, குறைநுகர்வு என்கிற உண்மையை அது மறுக்கிறதா? கிடையவே கிடையாது. அது அந்த உண்மையை முற்றாக அங்கீகரிக்கிறது, ஆனால் அதை அதற்குரிய கீழ்மட்ட இடத்தில் வைக்கிறது, முதலாளித்துவ உற்பத்தியின் முழுமையின் ஒரு பிரிவுடன் மட்டும் சம்பந்தப்பட்ட உண்மையாக அதை வைக்கிறது. இந்த உண்மையால் நெருக்கடிகளை விளக்கமுடியாது என்று அது போதிக்

கிறது; அந்த நெருக்கடிகளைத் தோற்றுவிப்பது இன்றையப் பொருளாதார அமைப்புமுறையில் அடிப்படையானதாக இருக்கும் மற்றொரு, மேலும் ஆழமான முரண்பாடு ஆகும், —அதாவது, உற்பத்தியின் சமுதாயவகைப்பட்ட தன்மைக்கும் பறித்துடைமையாக்கிக்கொள்வதின் தனியுடைமைத் தன்மைக்கும் இடையேயுள்ள முரண்பாடுதான். அப்படியானால், சாராம்சத்தில் முதல் தத்துவத்தை ஆதரிக்கிறவர்கள் அதே நேரத்தில் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே முரண்பாடு இருப்பதை இரண்டாம் தத்துவத்தின் பிரதிநிதிகள் குறித்துக்கொள்கிறார்கள் என்கிற விஷயத்தைக் குறிப்பிடுவதின் வழியாகத் தமது நிலையை மூடிமறைத்துக்கொள்கிறார்களே, அவர்களைப்பற்றி என்ன சொல்வது? இரு தத்துவங்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையின் சாராம்சத்தைப் பற்றி இவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவில்லை, இரண்டாம் தத்துவத்தைச் சரிவர புரிந்துகொள்ளவில்லை என்பது வெளிப்படை. இவர்களிலே, எடுத்துக்காட்டாக, திரு. நி.—ன் அவர்களும் உண்டு (திரு. வி. வி. பற்றிச் சொல்ல வேண்டியதில்லை). அவர்கள் ஸிஸ்மொந்தீயின் ஆதரவாளர்கள் என்று நமது இலக்கியத்தில் திரு. துகான்-பாரனேவ்ஸ்கி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளார் (''தொழில் நெருக்கடிகள்'', பக்கம் 477. திரு. நி.—ன் சம்பந்தமாக ''என்று தெரிகிறது'' என்கிற அதிசயமான வில்லங்கக் கூற்று வைத்திருக்கிறார்). என்றபோதிலும், திரு. நி.—ன் ''உள்நாட்டுச் சந்தை சுருங்குவது'' பற்றியும் ''மக்களின் நுகர்வுத் திறம் குறைந்து வருவது'' பற்றியும் (இவ்விரண்டும் அவர் கருத்துகளின் அடிப்படை அம்சங்கள்) பேசுகிறபோது, உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையேயுள்ள முரண்பாடு எனும் உண்மையை, குறை நுகர்வு எனும் உண்மையை, குறித்துக்கொள்கிற இரண்டாம் தத்துவத்தின் பிரதிநிதிகளைக் குறிப்பிடுகிறார். பொருத்தமற்ற மேற்கோள்களைக் காட்டுவதில் இவ்வாசிரியருக்குப் பொதுவாகவே முனைப்பாக உள்ள திறமையைத்தான் இப்படிப்பட்ட சுட்டுக்குறிப்புகள் காட்டுகின்றனவே தவிர வேறொன்றுமில்லை என்பது சொல்லாமலே விளங்கும். எடுத்துக்காட்டாக, அவருடைய ''கட்டுரைகளை''ப் படித்துள்ள வாசகர்களுக்கு நினைவிருக்கும்—''பண்டங்களை வாங்குகிறவர்கள் எனும் முறையில் தொழிலாளர்கள் சந்தைக்கு முக்கியம்; ஆனால்

தமது சொந்தப் பண்டத்தை—உழைப்புச் சக்தியை—விற்கிறவர்கள் எனும் முறையில் முதலாளித்துவச் சமுதாயம் அவர்களைக் குறைந்தபட்ச விலைக்குத் தாழ்த்திவைக்கவே செய்கிறது'' (''கட்டுரைகள்'', பக்கம் 178) எனும் பகுதியை ''மேற்கோள்'' காட்டுவது நினைவிருக்கும்; மற்றும், இதை வைத்து ''உள்நாட்டுச்சந்தை சுருங்குகிறது'' என்றும் (அதே நூல், பக்கம் 203 முதலியவை) நெருக்கடிகள் உண்டாகிறது (பக்கம் 298 முதலியவை) என்றும் திரு. நி.—ன் முடிவெடுக்க விரும்பியதும் நினைவிருக்கும். எனினும் இந்தப் பகுதியை அவர் மேற்கோள் காட்டும்பொழுது (இது எதையும் நிரூபிக்கவில்லை என்று விளக்கியிருக்கிறோம்) அந்த மேற்கோள் எடுக்கப்பட்ட அடிக்குறிப்பின் **இறுதிப்பகுதியை விட்டுவிடுகிறார்.** இந்த மேற்கோள் ''மூலதனத்''தின் 2-ம் தொகுதியின் 2-ம் பிரிவின் **கையெழுத்துப் பிரதியில் செருகப் பட்டுள்ள குறிப்பிலிருந்து** எடுக்கப்பட்டதாகும். அந்தக் குறிப்பு ''பின்னால் விரிவாக விளக்குவதற்காக''ச் செருகப் பட்டது, அந்தக் கையெழுத்துப் பிரதியின் பதிப்பாளர் அதை அடிக்குறிப்பாகப் போட்டுவைத்தார். **மேலே மேற்கோள் காட்டப்பட்ட சொற்களுக்குப் பின்னால் ''என்றபோதிலும், இது அடுத்து வரும் பாகத்தைச் சேர்ந்ததாகும்''* என்று அந்தக் குறிப்புச் சொல்கிறது**—அதாவது, மூன்றும் பிரிவைச் சேர்ந்தது என்று. இந்த முன்றும் பிரிவு என்ன? இந்த மூன்றும் பிரிவிலேதான், மொத்தமான சமுதாய உற்பத்திப் பொருள் இரண்டு கூறுகள் கொண்டது எனும் ஆதாம் ஸ்மித்தின் தத்துவத்தைப் பற்றிய விமர்சனமும் (கூடவே ஸிஸ்மொந்தீ குறித்து மேலே மேற்கோள் காட்டப்பட்ட கருத்தும்), ''மொத்தமான சமுதாய மூலதனத்தின் மறு உற்பத்தியும் புழக்கமும்'' பற்றிய—அதாவது, உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக்கொள்வதைப் பற்றிய—பகுப்பாய்வும் உள்ளன. ஆகவே, ஸிஸ்மொந்தீயின் கருத்துக்களையே திரும்பச்சொல்கிற தமது கருத்துக்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நமது ஆசிரியர் தரும் மேற்கோள் ஸிஸ்மொந்தீக்கு

---

* "Das Kapital", II. Band, S. 304 (''மூலதனம்'', தொகுதி 2, பக்கம் 304), ருஷ்ய மொழிபெயர்ப்பு, பக்கம் 232. கொட்டையெழுத்திட்டது நாம்.

மறுப்புக்கொடுக்கும் ''பிரிவிலிருந்து'' எடுக்கப்பட்டதாகும்: முதலாளிகள் மிகுதி மதிப்பைத் திருப்பியெடுத்துக்கொள்ள முடியும் என்றும் திருப்பியெடுத்துக்கொள்வது பற்றிய பகுப் பாய்வில் வெளிநாட்டு வாணிபத்தைப் புகுத்துவது அபத்தம் என்றும் காட்டுகிற ''பிரிவிலிருந்து'' எடுக்கப்பட்டதாகும்....

மிகத் தற்கால கருத்துக்களை மேற்கோள் காட்டிக் கொண்டு இரண்டு தத்துவங்களிடையேயும் உள்ள வேற்று மையை அழிப்பதற்காகவும், பழைய தன்னுணர்ச்சிவாத முட்டாள்தனத்தைத் தாங்கிநிறுத்துவதற்காகவும் எஃப்ரூஸி கட்டுரையில் மற்ருெரு முயற்சி செய்யப்படுகிறது. நெருக் கடிகளைப் பற்றிய ஸிஸ்மொந்தீயின் தத்துவத்தை எஃப்ரூஸி குறிப்பிட்டு அது தவறு என்று காட்டுகிருர் (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 7, பக்கம் 162); ஆனல் மிகவும் தெளிவற்ற முறையிலும் முரணுன முறையிலும் காட்டு கிருர். ஒரு புறத்தில், அவர் எதிர் தத்துவத்தின் வாதங் களைத் திருப்பிச் சொல்கிருர், தேசியக் கிருக்கி நேரடியான நுகர்ப்பொருட்களை மட்டும் கொண்டதல்ல என்று கூறுகி ருர். மறுபுறத்தில், நெருக்கடிகளைப் பற்றிய ஸிஸ்மொந்தீயின் விளக்கம் ''மக்களின் தேவைக்கும் வாங்கும் சக்திக்கும் பொருத்தமாக தேசிய உற்பத்திப் பொருளை வினியோகிப் பதைத் தடுக்கிற பல சூழ்நிலைமைகளில் ஒன்றே ஒன்றைத் தான் சுட்டிக்காட்டுகிறது'' என்று வற்புறுத்துகிருர். என வே, நெருக்கடிகளுக்குரிய விளக்கத்தை ''வினியோகத்தில்'' கண்டுகொள்ளலாம் என்று வாசகர் நினைத்துக்கொள்ளுமாறு செய்கிருர், இந்த வினியோகத்தைத் தடுக்கிற காரணங் களின் முழுப்பட்டியலைக் கொடுக்காததே ஸிஸ்மொந்தீ செய்த ஒரே தவறு என்றும் நினைக்கச் செய்கிருர்! ஆனல் இது மிக முக்கிய விஷயம் அல்ல.... எஃப்ரூஸி சொல்வதா வது: ''மேலே சொன்ன விளக்கத்தோடு ஸிஸ்மொந்தீ நிற் கவில்லை. ஏற்கனவே "Nouv. Princ."*-இன் முதற் பதிப்பி லேயே ''De la connaissance du marché''** எனும் தலைப் பிட்ட மிகவும் அறிவூட்டக்கூடிய அத்தியாயத்தைக் காண் கிறோம். இந்த அத்தியாயத்தில் உற்பத்திக்கும் நுகர்வுக்கும்

---

* ''புதிய கேட்பாடுகள்''.— (பதிப்பாசிரியர்.)

** ''சந்தையைப் பற்றிய அறிவு''.—(பதிப்பாசிரியர்.)

இடையே சமனநிலையைக் குலைக்கிற முக்கியமான காரணங்களை ஸிஸ்மொந்தீ நமக்குப் புலப்படுத்துகிறார்''; (இதைக் கவனியுங்கள்!): ''ஒரு சில பொருளாதார வாதிகளிடையே மட்டும் நாம் காண்கிற தெளிவுடன் அதைப் புலப்படுத்துகிறார்'' என்று (மேலே குறிப்பிட்ட கட்டுரை பார்க்க.). சந்தையைப் பற்றி முதலாளிக்குத் தெரியமுடியாது என்று சொல்லும் பகுதிகளை எஃப்ரூஸி மேற்கோள் காட்டியபின் ''கிட்டத்தட்ட இதையேதான் எங்கெல்ஸும் கூறுகிறார்'' (பக்கம் 163) என்று சொல்லி அதைத் தொடர்ந்து கிராக்கி குறித்து முதலாளிக்குத் தெரியமுடியாது என்கிற மேற்கோளைத் தருகிறார். அப்புறம், ''உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே சமனநிலையை நிலைநாட்டுவதற்குக் குறுக்கேயுள்ள பிற தடைக்கற்கள்'' (பக்கம் 164) பற்றி மேலும் சில பகுதிகளை மேற்கோள் காட்டிவிட்டு ''இவை நமக்கு நெருக்கடிகளைப் பற்றிய விளக்கம் தருகின்றன, அவ்விளக்கமே மேன்மேலும் மேலோங்கி வருகிறது'' என்று எஃப்ரூஸி உறுதிகூறுகிறார்! அது மட்டுமல்ல. ''தேசியப் பொருளாதாரத்தில் நெருக்கடிகளுக்கான காரணங்களைப் பற்றிய பிரச்சினையில் பின்னால் மேலும் இணைவுடனும் தெளிவுடனும் வளர்க்கப் பட்ட கருத்துக்களை நிறுவியவர் ஸிஸ்மோந்தீ தான் என்று கருத நமக்கு நிச்சயமாக உரிமையுண்டு'' (பக்கம் 168) என்று எஃப்ரூஸி கருதுகிறார்.

இதனால் பிரச்சினையைப் புரிந்துகொள்ள முற்றாகத் தவறுவதையே எஃப்ரூஸி வெளிப்படுத்திக்கொள்கிறார்! நெருக்கடிகள் என்றால் என்ன? மிகை உற்பத்தி, திருப்பியெடுத்துக் கொள்ள முடியாத, கிராக்கியற்ற பண்டங்கள் உற்பத்தி செய்வது. பண்டங்களுக்குக் கிராக்கி இல்லையேல், முதலாளி அந்தப் பண்டங்களை உற்பத்திசெய்தபோது கிராக்கியைப்பற்றித் தெரிந்துகொண்டிருக்கவில்லை என்பதைத் தான் அது காட்டுகிறது. இப்போது, நெருக்கடிகளைச் சாத்தியமாக்குகிற நிலைமையைப் பற்றிய இந்தக் குறிப்பு நெருக்கடிகளுக்கான விளக்கமாகுமா என்கிற கேள்வி எழுகிறது. ஒரு நிகழ்ச்சித்தோற்றத்தின் சாத்தியப்பாட்டைக் கூறுவதற்கும் அதன் தவிர்க்கவியலாத் தன்மையை விளக்குவதற்கும் உள்ள வேற்றுமையை உண்மையாகவே எஃப்ரூஸி புரிந்துகொள்ளவில்லையா? ஸிஸ்மொந்தீ சொல்கிறார்: நெருக்கடிகள் சாத்தியமாவ

தற்குக் காரணம் முதலாளிக்குக் கிருக்கியைப்பற்றித் தெரியாது, அவை தவிர்க்கவியலாதவை, ஏனெனில் முதலாளித்துவ உற்பத்தியின்கீழ் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே சமனநிலை இருக்க முடியாது (அதாவது, உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்ள முடியாது). எங்கெல்ஸ் சொல்கிருர்: நெருக்கடிகள் சாத்தியமாவதற்குக் காரணம் முதலாளிக்குக் கிருக்கியைப் பற்றித் தெரியாது; அவை தவிர்க்கவியலாதவை எனினும் அதற்குக் காரணம் உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக்கொள்ளவே முற்றிலும் முடியாது என்பதல்ல. ஏனெனில் அது உண்மையல்ல: உற்பத்திப் பொருளைத் திருப்பியெடுத்துக் கொள்ளமுடியும். நெருக்கடிகள் தவிர்க்கவியலாதவை; காரணம், உற்பத்தியின் கூட்டுத்தன்மை பறித்துடைமையாக்கிக்கொள்வதின் தனித் தன்மையோடு மோதிக்கொள்கிறது. இருந்தபோதிலும், எங்கெல்ஸ் ''கிட்டத்தட்ட இதையேதான்'' சொல்கிருர் என்றும்''நெருக்கடிகளுக்கு இதே விளக்கத்தைத்தான்'' ஸிஸ்மொந்தீ தருகிருர் என்றும் நமக்கு உறுதிகூறுகிற பொருளாதாரவாதியைப் பார்க்கிரேம்! எஃப்ருஸி சொல்கிருர்: ''ஸிஸ்மொந்தீயின் தத்துவத்திலுள்ளஇந்த மிக முக்கியமான, மிக மதிப்புள்ள அம்சத்தைத்... திரு. துகான்-பாரனேவ்ஸ்கி கண்டுகொள்ளாமற்போனது எனக்கு வியப்பாக இருக்கிறது'' (பக்கம் 168) என்று. திரு. துகான்-பாரனேவ்ஸ்கி எதையும் கண்டுகொள்ளாமற்போகவில்லை.* மாருக, புதிய தத்துவம் விஷயங்களை முடிவாகக் கொண்டுவந்து விடுகிற அடிப்படையான முரண்பாட்டை மிக நுட்பத்துடன் அவர் சுட்டிக் காட்டி (பக்கம் 455-ம் முதலியவை) ஸிஸ்மொந்தீயின் முக்கியத்துவத்தை விளக்கிஞர், ஸிஸ்மொந்தீ அதற்கு முன்பே

---

* ''முதலாளித்துவத்தின் வளர்ச்சி'' எனும் நூலில் (பக்கங்கள் 16, 19) பார்க்க: இன்றைய பதிப்பு, தொகுதி 3, ''ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி'', அத்தியாயம் 1, பகுதி 6.—(பதிப்பாசிரியர்.) நான் ஏற்கனவே திரு. துகான்-பாரனேவ்ஸ்கியின் சரியின்மைகளையும் பிழைகளையும் குறிப்பிட்டுள்ளேன், இவை பின்னுல் அவரை பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகளின் முகாமுக்குப் போகும்படி செய்துள்ளன. (1908-ம் பதிப்புக்கு ஆசிரியரின் அடிக்குறிப்பு.—(பதிப்பாசிரியர்.)

நெருக்கடிகளிலே வெளிப்படுத்திக்கொள்கிற முரண்பாட்டைக் குறிப்பிட்டாராயினும் அதற்கு ஒரு சரியான விளக்கத்தை அவரால் கொடுக்க முடியவில்லை (பக்கம் 457—எங்கெல்ஸுக்கு முன்பே ஸிஸ்மொந்தீ நெருக்கடிகள் பொருளாதாரத்தின் தற்கால அமைப்பிலிருந்து உதிக்கின்றன என்கிற உண்மையைச் சுட்டிக்காட்டினார்; பக்கம் 491—ஸிஸ்மொந்தீ நெருக்கடிகளைச் சாத்தியமாக்குகிற நிலைமைகளை விளக்கிவிவரித்தார், ஆனால் ''ஒவ்வொரு சாத்தியப்பாடும் நடைமுறையுண்மை ஆகிவிடுகிறதில்லை''). ஆனால் எஃப்ருஸி இதை முற்றுகத் தவருகப் புரிந்து கொண்டு, எல்லாவற்றையும் போட்டுக் கலக்கிவிட்ட பின், தன்னிடம் கிடைப்பது குழப்பந்தான் என்று ''வியப்பு'' அடைகிருர். ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வைச் சேர்ந்த பொருளாதாரவாதி சொல்கிருர்: ''இன்று எங்கும் எல்லோரும் பயன்படுத்தும் செல்வாக்குப் பெற்றுவிட்ட சொற்களாகிய 'உற்பத்தியில் அராஜகம்' 'திட்டமிடப்படாத உற்பத்தி' (Planlosigkeit) போன்ற சொற்களை ஸிஸ்மொந்தீ பயன்படுத்தாததை நாம் காண்கிறோம், உண்மை தான். ஆனால் இச்சொற்களில் பொதிந்துள்ள பொருளை அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்'' (பக்கம் 168), என்று. எவ்வளவு சுளுவாகப் பழைய தன்னுணர்ச்சிவாதியின் பெயரைப் புதிய தன்னுணர்ச்சிவாதி மீட்டு நிலைநாட்டுகிருர், பாருங்கள்! பிரச்சினையெல்லாம் சொல் வேற்றுமை தவிர வேறில்லையாம்! உண்மையிலே பார்த்தால், எஃப்ருஸி திருப்பிச்சொல்கிற சொற்களின் பொருளைத் தாமே புரிந்துகொள்ளவில்லை என்பதே விஷயம். ''உற்பத்தியின் அராஜகம்'', ''திட்டமிடப்படாத உற்பத்தி'' எனும் சொற்கள் என்ன சொல்கின்றன? அவை உற்பத்தியின் சமுதாயத்தன்மைக்கும் பறித்துடைமையாக்கிக்கொள்வதின் தனியுடைமைத் தன்மைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைப் பற்றிச் சொல்கின்றன. நாம் ஆய்ந்துவரும் பொருளாதார இலக்கியத்தைத் தெரிந்து வைத்திருப்பவர்களைக் கேட்கிறோம்: ஸிஸ்மொந்தீயோ ரொட்பெர்டஸோ இந்த முரண்பாட்டை அங்கீகரித்தார்களா? இந்த முரண்பாட்டிலிருந்து நெருக்கடிகளைப் பற்றிய முடிவு செய்தார்களா? இல்லை, செய்யவில்லை, செய்யமுடியவில்லை, ஏனெனில் **அவ்விருவருக்குமே அந்த முரண்பாட்டைப் பற்றிய**

அறிவு ஞானம் இருக்கவில்லை. உலகுதழுவிய செழுமை* எனும் சொற்றொடர்களையும் ''தன்னிச்சையாக விடப்பட்ட புழக்கம்''** சம்பந்தப்பட்ட வாதப்பிழை பற்றிய சொற்றொடர்களையும் முதலாளித்துவத்தைப் பற்றிய விமர்சனத்துக்கு அடிப்படையாகக் கொள்ள முடியாது, உற்பத்தி உறவுகளின் பரிணாமவளர்ச்சியின் தன்மையைத்தான் அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்கிற கருத்தே அவர்களுக்கு முற்றும் ஒவ்வாததாகும்.

நெருக்கடிகள் பற்றி மேலே சொன்ன இரண்டு தத்துவங்களிடையேயுள்ள வேற்றுமையை ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதிகள் அழித்திட ஆனமட்டும் முயல்வது ஏன் என்று நாம் முற்றாகப் புரிந்துகொள்கிறோம். ஏனெனில் முதலாளித்துவத்தைப் பற்றி அடிப்படையாகவே வேறுபட்ட கண்ணோட்டங்கள் இந்தத் தத்துவங்களுடன் மிகவும் நேர்முகமாகவும் நெருக்கமாகவும் இணைக்கப்பட்டுள்ளன. உண்மையிலே, உற்பத்திப் பொருள்களைத் திருப்பியெடுத்துக் கொள்வது அசாத்தியம் என்பதை வைத்தோ உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை வைத்தோ நெருக்கடிகளை நாம் விளக்குவோமானால் நாம் யதார்த்தத்தை மறுத்திடும் நிலைக்குப் போவோம், முதலாளித்துவம் வளர்ந்துவரும் பாதையின் சரித்தன்மையை நாம் மறுத்திடும் நிலைக்கும்

---

* Cf. Sismondi, I. c., I, *8* ஒப்புநோக்குக (ஸிஸ்மொந்தீ, மேலே சொன்ன நூல், I, *8*.—பதிப்பாசிரியர்.)

** ரொட்பெர்டஸ். இடையே இதைச் சொல்லிவைப்போம்: பொதுவாகவே, பூர்ஷ்வாப் பொருளாதாரவாதத்தின் பொய்க்கருத்துக்களை மீட்டுயிர்ப்பித்துவருகிற பெர்ன்ஷ்டைன் இந்தப் பிரச்சினையிலும் குழப்பத்தை உண்டாக்கியுள்ளார். நெருக்கடிகளைப் பற்றிய மார்க்ஸின் தத்துவத்துக்கும் ரொட்பெர்டஸின் தத்துவத்துக்கும் அதிக வேற்றுமையொன்றும் கிடையாது என்று பெர்ன்ஷ்டைன் வற்புறுத்துகிறார்—Die Voraussetzungen, etc. ஸ்டுட்கார்ட். *1899*. பக்கம் *67*) (எ. பெர்ன்ஷ்டைன். ''சோஷலிஸத்தின் ஆதாரக் கோள்களும் சமூகஜனநாயகவாதத்தின் பணிகளும்''. ஸ்டுட்கார்ட். *1899*. பக்கம் *67*.—பதிப்பாசிரியர்), மேலும், நெருக்கடிகளுக்கு இறுதிமூலகாரணம் மக்களின் வரம்புக்குட்பட்ட நுகர்வு என்று மார்க்ஸ் அங்கீகரித்து தாமே முன்பின் முரணாகப் பேசுகிறார் என்றும் வற்புறுத்துகிறார். (*1908*-ம் பதிப்புக்கு ஆசிரியரின் குறிப்பு.—பதிப்பாசிரியர்.)

போவோம்; இந்தப் பாதை ஒரு ''பொய்யான பாதை'' என்று சொல்லி ''வெவ்வேறான பாதைகளை''த் தேடிச் செல்கிறோம். இந்த முரண்பாட்டை வைத்து நெருக்கடிகளைப் பற்றிய முடிவுக்கு வருகிறபோது அது வளர வளர அந்த முரண்பாட்டிலிருந்து விடுபட்டு வெளியே வருவது மேன் மேலும் கஷ்டமாகிவிடும் என்று நாம் நிச்சயமாக எண்ணப் புகுவோம். மேலும், மூலதனம் மெதுவாகத் திரள்வதைச் சகித் துக்கொள்ள முடியும், விரைவாகத் திரள்வது சகித்துக் கொள்ள முடியாததாகிவிடும் என்று ஸிஸ்மொந்தீ கூறி இதே கருத்தைத்தான் மிக வெகுளித்தனமான முறையிலே வெளியிட்டதை நாம் பார்த்தோம்.—மற்றொரு புறத்தில், உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும் பறித்துடைமையாக் கிக் கொள்வதின் தனியுடைமைத் தன்மைக்கும் இடையே யுள்ள முரண்பாட்டை வைத்து நாம் நெருக்கடிகளை விளக்கு வோமானால், அதன் வழியாக முதலாளித்துவப்பாதை யதார்த் தமானதென்றும் முன்னேற்றகரமானதென்றும் அங்கீகரித்து ''வேறான பாதைகளை''த்தேடிச்செல்வது முட்டாள்தனமான தன்னுணர்ச்சிவாதம் என்று நிராகரிக்கிறோம். அதன் வழி யாக, இந்த முரண்பாடு மேலும் வளர வளர அதிலிருந்து விடுபட்டு வெளிவருவது மேலும் சுளுவாகி விடும் என்பதை யும், இந்த அமைப்புமுறையின் வளர்ச்சிதான் வெளி வருவதற்கான வழியையும் கொடுக்கிறது என்பதையும் அங்கீகரிக்கிறோம்.

ஆக, இங்கும் ''பார்வை நிலைகளிலே'' வேற்றுமை இருக்கக் காண்கிறோம்—வாசகர் கண்டு சொண்ட மாதிரி....

தன்னுணர்ச்சிவாதிகள் தமது கருத்துக்களுக்குத் தத்துவ வகைப்பட்ட உறுதிப்பாடு தேடிக்கொள்வது முற்றும் இயல் பானதே. அவர்களின் தேட்டம் மேற்கு ஐரோப்பா வெகு காலத்துக்கு முன்பே தள்ளிவிட்ட பழைய குப்பைக்கு அவர் களைக் கொண்டு வந்து விடவேண்டியிருப்பதும் முற்றும் இயல் பானதே. அவர்கள் இதை உணர்ந்து கொண்டு, சில சமயம் மேற்கு ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதிகளை மெருகிட்டுக் காட்டியும் சில சமயம் பொருத்தமற்ற, புரட்டான மேற் கோள்களின் மறைவிலே தன்னுணர்ச்சிவாதத்தைக் கள்ளத் தனமாகப் புகுத்தியும் இந்தக் குப்பையைச் சுத்தப்படுத்த முயன்றுதீரவேண்டியிருப்பதும் முற்றும் இயல்பானதே. எனி

னும் இப்படிக் கள்ளத்தனமாகக் கடத்திவருவது அம்பலப் படுத்தப்படாமலே இருக்கும் என்று நினைப்பார்களேயானுல் அவர்கள் மிகப்பெரிய தவறு செய்தவர்களாவார்கள்.

ஸிஸ்மொந்தீயின் அடிப்படையான தத்துவார்த்தக் கோட் பாடு பற்றியதும், அதிலிருந்து அவர் எடுத்த முதன்மையான தத்துவார்த்த முடிவுகளைப் பற்றியதுமான நமது விரிவிளக் கத்தை இத்துடன் முடிக்கிறேம்; ஆனுல் எஃப்ருஸி சம்பந் தமாக ஒன்று கூடுதலாகச் சொல்லவேண்டியுள்ளது. ஸிஸ் மொந்தீயைப்பற்றி அவர் எழுதிய மற்ருெரு கட்டுரையில் (முதற் கட்டுரையின் தொடர்ச்சியே இது) சொல்வதாவது: ''வருவாயின் வெவ்வேறு வகைகளைப்பற்றி ஸிஸ்மொந்தீ கொண்டுள்ள கருத்துக்கள் (மூலதனத்திலிருந்து பெறும் வரு வாய் பற்றிய தத்துவத்தை விட) மேலும் சுவாரசியமாயுள் ளன'' என்று (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 42). ரொட்பெர்டஸ் போல ஸிஸ்மொந்தீயும் தேசிய வருவாயை இரண்டு கூறுகளாகப் பிரிக்கிருர் என்கிருர் அவர்: ''ஒரு கூறு நிலம், உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக்காரர்களுக்குப் போகிறது, மற்ருெரு கூறு உழைப் பாளிகளுக்குப் போகிறது'' (மேலே குறிப்பிட்ட நூல்). இதைத் தொடர்ந்து வரும் பகுதிகளில் தேசிய வருவாய் மட்டுமின்றி மொத்த உற்பத்திப் பொருள் சம்பந்தமாகவும் இப்படிப்பட்ட பிரிவினை செய்வது பற்றி ஸிஸ்மொந்தீ பேசு கிருர்: ''வருடாந்தர உற்பத்தி, அதாவது வருடம் பூராவி லும் நாடு செய்த வேலையின் விளைவு கூட இரு கூறுகள் கொண்டதாகும்'' என்றவாறு ("N. Princ." I, 105; ''ருஸ்ஸ் கோயே பொகாட்ஸ்ட்வோ, இதழ் 8, பக்கம் 43-ல் மேற் கோள் காட்டப்பட்டுள்ளது). ''நாம் மேற்கோள் காட்டிய பகுதிகள் தெளிவாகக் காட்டுகின்றன: நவீன காலத்திய பொருளாதாரவாதிகளின் நூல்களில் எவ்வளவோ முக்கிய மான பாத்திரம் வகிக்கிற தேசிய வருவாய் பற்றிய அதே வகைப்பிரிவை—அதாவது, தேசிய வருவாயை உழைப்பிலி ருந்து பெறும் வருவாய் என்றும் உழைப்பைச் சேராத வரு வாய்—arbeitloses Einkommen—என்றும் பிரிப்பதை—ஸிஸ் மொந்தீ முற்ருகப் புரிந்து ஜீரணித்துக்கொண்டிருக்கிருர் (!) என்று. பொதுவாகச் சொன்னுல், வருவாய் பற்றிய ஸிஸ் மொந்தீயின் கருத்துக்கள் எப்போதும் தெளிவாகவும் திட்ட

வட்டமாகவும் இல்லாதிருந்தபோதிலும், தனிப்பட்ட வருவாய்க்கும் தேசிய வருவாய்க்கும் இடையேயுள்ள வேற்றுமையைப் பற்றிய உணர்வு அக்கருத்துக்களிலே இருக்கக் காண்கிறோம்'' (பக்கம் 43) என்று முடிக்கிறார் நமது பொருளாதாரவாதி.

இதற்கு நாம் பதிலளிக்கையில், எஃப்ரூஸி ஜெர்மன் பாடப் புத்தகங்களின் அறிவை முற்றாகப் புரிந்து ஜீரணித்துக் கொண்டிருப்பதை மேற்கோள் காட்டப்பட்ட பகுதி தெளிவாகக் காட்டுகிறது என்று சொல்கிறோம்; அப்படியிருந்தும் (அதனால்தான் என்றுகூடச் சொல்லலாமோ என்னவோ) தனிப்பட்ட வருவாயினின்று தனித்து விளங்கும் தேசிய வருவாய்ப் பிரச்சினையின் தத்துவார்த்தக் கஷ்டத்தை அவர் முற்றாகப் பார்க்கத் தவறியிருக்கிறார். எஃப்ரூஸி மிகவும் கவனமற்ற முறையில் சொற்களைக் கையாள்கிறார். தமது கட்டுரையின் முதற்பகுதியில் ''நவீனகாலத்திய பொருளாதாரவாதிகள்'' எனும் சொல்லை ஒரு திட்டவட்டமான கருத்துப் பிரிவைச் சேர்ந்த தத்துவாசிரியர்களைக் குறித்துப் பயன்படுத்தியதைப் பார்த்தோம். இந்தத் தடவை கூட அவர் அவர்களைத்தான் குறிப்பிடுகிறார் என்று வாசகர் நினைத்துக் கொள்வார். ஆனால் ஆசிரியர் மனத்தில் கொண்டிருப்பது முற்றிலும் வேறான ஒன்று. இப்போது நவீனகாலத்திய பொருளாதாரவாதிகளாகக் காட்சியளிப்பவர்கள் ஜெர்மன் கதீதர்-சோஷலிஸ்டுகள்.* அவர்களின் தத்துவத்தோடு தமது தத்துவத்தை ஒன்றாக்கிக் காட்டுவதே இந்த ஆசிரியர் ஸிஸ்மொந்தீயின் தத்துவத்தைத் தாங்கிநிறுத்துவதின் பொருளாகும். எஃப்ரூஸி மேற்கோள் காட்டும் இந்த ''நவீனகாலத்திய'' பொருளாதாரவாதிகளின் தத்துவந்தான் என்ன? தேசிய வருவாய் இரு கூறுகளாகப் பிரிந்துள்ளது என்பதே.

ஆனால் இது ஆதாம் ஸ்மித்தின் தத்துவம், ''நவீனகாலத்திய'' பொருளாதாரவாதிகளின் தத்துவமல்ல! வருவாயைக்

---

* கதீதர்-சோஷலிஸ்டுகள்—இப்படித்தான் அரசியல் பொருளாதாரவாதிகளான ஜெர்மன் பேராசிரியர்கள் அழைக்கப்பட்டனர். 19-ம் நூற்றண்டின் 70-80 ஆண்டுகளில் அவர்கள் பல்கலைக்கழகப் பீடங்களில் (பீடத்துக்கு ஜெர்மன் மொழியில் கதீதர் என்கிறார்கள்) அமர்ந்து கொண்டு சோஷ

கூலி, இலாபம், வாடகை என்று ஆதாம் ஸ்மித் பிரித்ததில் (''நாடுகளின் செல்வம்'', நூல் 1, அத்தியாயம் 6; நூல் 2, அத்தியாயம் 2) உழைப்பைச் சேராத வருவாய் என்ற வகையில் இலாபத்தையும் வாடகையையும் கூலிக்கு எதிராக நிறுத்தினர். அவ்விரண்டும் உழைப்பிலிருந்து கழித்தெடுத்துக் கொள்ளப்படுபவை என்று அவர் வர்ணித்து (நூல் 1, அத்தியாயம் 8), இலாபம் என்பது ஒரு தனி வகைப்பட்ட உழைப்புக்குரிய கூலி எனும் கருத்தை எதிர்த்தார் (நூல் 1, அத்தியாயம் 6). ஸிஸ்மொந்தீ, ரொட்பெர்டஸ், ஜெர்மன் பாடப் புதத்தகங்களின் ''நவீன காலத்திய'' ஆசிரியர்கள் எல்லோரும் ஸ்மித்தின் தத்துவத்தைத்தான் வெறுமே திருப்பிச் சொல்கிருர்கள். அவர்களிடையேயுள்ள வேற்றுமை ஒன்றே ஒன்றுதான்: ஆதாம் ஸ்மித் தேசிய உற்பத்திப்பொருளினின்று தேசிய வருவாயைப் பிரித்து வைக்கும் முயற்சியில் தாம் முற்ருக வெற்றிபெருததை உணர்ந்திருந்தார், தனிப்பட்ட உற்பத்திப் பொருளிலே நிலேயான மூலதனத்தை (நவீன காலச்சொல் இது) சேர்த்துக்கொண்டபின் தேசிய உற்பத்திப் பொருளிலிருந்து அதை விலக்கிவைக்கிறதிலே தாம் ஒரு முரண்பாட்டில் விழுவதை அவர் உணர்ந்திருந்தார். ஆனல் ஆதாம் ஸ்மித்தின் தவற்றை ''நவீனகாலத்திய'' பொருளாதாரவாதிகள் திருப்பிச் செய்கிறதிலே அவருடைய தத்துவத்துக்கு (''தேசிய உற்பத்திப்பொருளின் வகைப்பிரிவு'' எனும்) படாடோபமான சொற்ருெடரைச் சூட்டுகிருர்களே தவிர ஆதாம் ஸ்மித் முரண்பாட்டை உணர்ந்து நடுவழியில் நிற்கவேண்டி வந்ததே, அந்த உணர்வை அவர்கள் இழந்து

லிஸத்தைப் பிரச்சாரம் செய்கிருேம் என்ற வேடத்தில் பூர்ஷ்வாத் திருத்தல்வாதத்தைப் பிரச்சாரம் செய்தனர். பூர்ஷ்வா அரசு ''வர்க்கச் சார்பற்றது'' என்றும் அது பகைமையுள்ள வர்க்கங்களைச் ''சமரசப்படுத்த''வும் முதலாளிகளைப் புண்படுத்தாதவாறும், சாத்தியமான அளவில் தொழிலாளர் கோரிக்கைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் சோஷலிஸத்தைப் படிப்படியாகப் புகுத்தவும் முடியும் என்றும் கதீதர்-சோஷலிஸ்டுகள் வற்புறுத்தினர். ருஷ்யாவில் கதீதர்-சோஷலிஸ்டுகளின் நோக்குநிலேயைச் ''சட்டசம்மதமான மார்க்ஸியவாதிகள்'' ஏற்றுக்கொண்டிருந்தனர்.—(பதிப்பாசிரியர்.)

விட்டார்கள். இந்த வழிமுறைகள் புலமையைக் காட்டலாம், ஆனால் அவை கடுகளவேனும் விஞ்ஞானவழிப்பட்டவையல்ல.

VIII

முதலாளித்துவ நிலவாடகையும் முதலாளித்துவ மிகை மக்கள்தொகையும்

ஸிஸ்மொந்தீயின் தத்துவார்த்தக் கருத்துக்களை மேலும் தொடர்ந்து பரிசீலிப்போம். மற்ற பொருளாதாரவாதிகளிடமிருந்து அவரைத் தனியே பிரித்துக் காட்டுகிற அவருடைய முக்கியமான கருத்துக்கள் அனைத்தையும் ஏற்கனவே பரிசீலித்துவிட்டோம். மற்ற கருத்துக்கள் அவரது பொதுவான தத்துவத்தில் அவ்வளவாக முக்கியமான பாத்திரம் வகிப்பவை அல்ல, அல்லது முந்தையக் கருத்துக்களிலிருந்து பெறப்பட்ட முடிவுகளே அவை.

ரொட்பெர்டஸ் போலவே ஸிஸ்மொந்தீயும் ரிக்கார்டோவின் நில வாடகைத் தத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அதைப் பற்றிச் சொந்தத்தில் தமது தத்துவத்தை முன்வைக்காமலேயே ஸிஸ்மொந்தீ ரிக்கார்டோவின் தத்துவத்தை வீழ்த்தப் பயன்படுத்திய வாதங்கள் பலவீனமானவை என்றுதான் சொல்லவேண்டும். இவ்விஷயத்தில் அவர் சிறு விவசாயியின் சுத்தமான சித்தாந்தவாதியாக நடந்துகொள்கிறார். அது ரிக்கார்டோவுக்கு மறுப்பு என்று சொல்வதைவிட பண்டப்பொருளாதாரத்தின், முதலாளித்துவத்தின் வகையினங்களை விவசாயத்துறைக்குப் பொருத்திச் செயல்படுத்துவதை முற்றாக மறுப்பது என்று சொல்வதே மேல். இரு அம்சங்களிலும் அவருடைய பார்வை நிலை தன்னுணர்ச்சிவாதிகளுக்கு இனக்குறிப்பானதாகும். நூல் 3 அத்தியாயம் 8* ''திரு. ரிக்கார்டோவின் நிலவாடகைத் தத்துவம்'' என்கிறதை எடுத்துக் கவனிக்கிறது. ரிக்கார்டோவின் கோட்

---

* அவரது விரிவிளக்க அமைப்புமுறையே இனக்குறிப்பானதாயுள்ளது: நூல் 3 ''நிலப்பரப்பின் செல்வம்'' "richesse territoriale" பற்றி, நில வடிவிலுள்ள செல்வம்—அதாவது, விவசாயச் செல்வம்—பற்றி ஆய்கிறது. அடுத்த நூல் 4 ''வர்த்தகச் செல்வம்'' (de la richesse commerciale) பற்றி, தொழிலின், வர்த்தகத்தின் செல்வம் பற்றி ஆய்கிறது.

பாடு அவரது தத்துவத்துடனேயே முற்றாக முரண்படுகிறது என்று ஸிஸ்மொந்தீ எடுத்த எடுப்பிலே கூறிவிட்டுப் பின் வரும் ஆட்சேபணைகளை வைக்கிறார்: இலாபத்தின் பொதுப் படையான மட்டம் (இதுவே ரிக்கார்டோ தத்துவத்துக்கு அடிப்படை) என்றைக்கும் நிலைநாட்டப்படுவதில்லை, விவசாயத்துறையில் மூலதனம் சுதந்தரமாக இயங்குவதில்லை. விவசாயத்தில் நாம் விளைபொருளின் உள்ளார்ந்த மதிப்பை (la valeur intrinsèque) கூர்ந்தறியவேண்டும், அது சந்தையின் ஏற்ற இறக்கங்களைச் சார்ந்திருக்கவில்லை, அது உடைமையாளனுக்கு ஒரு ''நிகர விளைபொருளை'' (produit net), ''இயற்கையின் உழைப்பை''க் கொடுக்கிறது (I, 306). ''இயற்கையின் உழைப்பு ஒரு சக்தியாகும், உள்ளார்ந்த வகையிலே (intrinsèquement) கருதப்பட்ட, நிலத்தின் நிகர விளைபொருளின் தோற்றுவாயாகும்'' (I, 310). ''உடைமையாளனின் நன்மைக்காக நிலத்திலிருந்து நேரடியாகத் தோன்றுகிறதாகவே நாம் வாடகையை, (le fermage), மேலும் சரியாகச்

நிலத்தின் விளைபொருளும் சரி, நிலமும் சரி, முதலாளித்துவ ஆட்சியின்கீழ் பண்டங்களாகாதது போல! எனவே இவ்விரு நூல்களிடையே இசைவு இல்லை. ஸிஸ்மொந்தீ காலத்தில் இருந்த முதலாளித்துவ வடிவத்தில் மட்டுமே தொழில் எடுத்தாராயப்படுகிறது. ஆனால், விவசாயம் என்பதோ நிலத்தைப் பயன்படுத்திய எல்லா வகையான அமைப்பு முறைகளையும்—அதாவது, தந்தைவழி ஆட்சிக்காலத்தியது, அடிமைமுறைக் காலத்தியது, சமவார முறை, கோர்வே வாரமுறை, பணியீட்டு வார முறை, முதலாளித்துவச் சாகுபடி முறை, இனும்தாரி முறை தலைமுறை தலைமுறையாக நீடிக்கிற நிரந்தரமான குத்தகைக்கு நிலத்தை வழங்கும் முறை) என்கிறவாறு—பொருந்தாக்கலவையாக வரிசைப் படுத்திய முறையிலே வர்ணிக்கப்படுகிறது. இதனால் ஒரே குழப்பந்தான் விளைகிறது: ஆசிரியர் விவசாயத்தைப் பற்றிய வரலாறு ஒன்றுங் கொடுக்கவில்லை, ஏனெனில் இந்த ''அமைப்பு முறைகள்'' அனைத்தும் தொடர்புபடுத்தப்படாமல் உள்ளன; மேலும், அவரது நூலின் ஆய்வுக்குரிய உண்மையான பொருள் முதலாளித்துவப் பொருளாதாரம் என்று இருக்கிறபோதிலும், முதலாளித்துவ வடிவத்தில் மட்டுமே தொழிலைப் பற்றி அவர் பேசுகிற போதிலும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கீழ் விவசாயம் பற்றிய பகுப்பாய்வும் கொடுக்கவில்லை.

சொல்வதென்றால் நிகர விளைபொருளைக் கருதினேம்; சாகுபடியாளரிடமிருந்தோ நுகர்பவரிடமிருந்தோ அது பங்கு எடுத்துக்கொள்வதில்லை'' (I, 312). பழைய ஃபிஸியோகிராட்டுப் போக்கான (இயற்கை அமைப்புமுறை வழிப்பட்ட ஆட்சிப் போக்கான) தப்பெண்ணங்களைத் திரும்பச்சொல்லி விட்டு ஒரு நீதி போதனையுடன் முடிக்கிறார்: ''பொதுவாகவே, அரசியல் பொருளாதாரத்தில் முற்றான அனுமானங்கள் சூட்சுமக் கருத்துக்கள் செய்யாமல் எச்சரிக்கையாக இருக்க (se défier) வேண்டும்'' (I, 312) என்று! இவ்விதமான ''தத்துவத்தில்'' பரிசீலிப்பதற்கு ஒன்றும் இல்லை. ''இயற்கையின் உழைப்பு'' பற்றிய ரிக்கார்டோவின் சுருக்கமான குறிப்புக்கு மேலாக எதுவும் தேவையில்லை.* பகுத்தாய்ந்திட மறுப்பதே அது, ரிக்கார்டோவுடன் ஒப்புநோக்கும்போது அது ஒரு மிகப்பெரிய பின்னடைவு ஆகும். இங்கும் ஸிஸ்மொந்தீயின் தன்னுணர்ச்சிவாதம் மிகத்தெளிவுடன் வெளிப்படுகிறது; ஏனெனில் அவர் இந்த நிகழ்ச்சிப் போக்கைக் கண்டிக்க விரைகிறார் என்றாலும் பகுத்தாய்ந்திட அஞ்சுகிறார். இங்கிலாந்தில் விவசாயம் முதலாளித்துவப் பாதையிலே வளர்ந்துவரும் உண்மையையோ, அங்கே விவசாயிகள் நீக்கப்பட்டு முதலாளித்துவச் சாகுபடியாளர்களும் அன்றாடக்கூலிக்காரர்களும் வந்துகொண்டிருக்கும் உண்மையையோ, இதே திசையில் ஐரோப்பா கண்டத்திலும் விவகாரங்கள் வளர்ந்துவரும் உண்மையையோ அவர் மறுக்காததைக் கவனிக்கவேண்டும். இவ்வுண்மைகளை அவர் வெறுமே புறக்

---

* ரிக்கார்டோவின் நூல்கள், ஸீபரின் (ருஷ்ய) மொழிபெயர்ப்பு, பக்கம் 35: ''தொழில்களில் இயற்கை மனிதனுக்கு எதுவும் செய்வதில்லையா? இயந்திரங்களை இயக்கியும் கப்பலைச் செலுத்த உதவியும் வருகிற காற்று, நீர்ச் சக்திகள் ஒன்றுமில்லையா? மாபெரும் எஞ்சின்களை ஓட்ட உதவுகிற காற்றுமண்டல அழுத்தமும் நீராவியின் சுருக்கவீக்கத்திறமும் இயற்கை வழங்கும் கொடைகள் அல்லவா? உலோகங்களை இளக்கி உருக்கிவிடும் வெப்பத்தின் பாதிப்புகள் பற்றியும், சாயத்தொழிலிலும் புளிக்காடியேற்றும் தொழிலிலும் காற்று மண்டலச் சிதைவின் பாதிப்புகள் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை. தாராளமாகவும் இலவசமாகவும் மனிதனுக்கு இயற்கை உதவி வழங்காத தொழில் ஒன்றைக்கூடக் குறிப்பிடமுடியாது.''

கணிக்கிறார் (அவர் முதலாளித்துவப் பொருளாதாரத்தை விவாதித்துக்கொண்டிருந்ததால் அவற்றைப் பரிசீலிப்பது அவர் கடமை), தந்தைவழி ஆட்சிக்கால அமைப்புமுறையின் கீழ் நிலத்தைச் சாகுபடிசெய்துவந்ததின் அனுகூலங்களைப் பற்றி உணர்ச்சியுடன் பேசிக்கொண்டிருக்கவே விரும்புகிறார். நமது நரோத்னிக்குகளும் இதே மாதிரிதான் நடந்துகொள்கிறார்கள்: பண்டப் பொருளாதாரம் விவசாயத்தில் புகுந்து வரும் உண்மையையோ, விவசாயத்தின் சமுதாயத் தன்மையில் ஒரு தீவிரமான மாற்றத்தை அது உண்டுபண்ணித் தீரவேண்டும் என்கிற உண்மையையோ அவர்கள் மறுக்க முயலவில்லை; அதே நேரத்தில் அவர்களில் ஒருவராவது முதலாளித்துவப் பொருளாதாரத்தை விவாதிக்கையில் வர்த்தகமுறையிலான சாகுபடி வளர்ந்துவரும் பிரச்சினையை எழுப்பவில்லை, ''மக்களுடைய உற்பத்தி'' குறித்து நீதி போதனை அளித்துக் காலந்தள்ளவே விரும்புகிறார்கள். தற்சமயம் ஸிஸ்மொந்தீயின் தத்துவார்த்தப் பொருளாதாரத்தைப் பகுத்தாய்வதோடு நிறுத்திக்கொள்வதால் இந்தத் ''தந்தைவழி ஆட்சிக்காலச் சாகுபடியை'' மேலும் விரிவாகப் பரிசீலனை செய்வதை வேறொரு சந்தர்ப்பத்திற்குத் தள்ளிவைப்போம்.

ஸிஸ்மொந்தீயின் விரிவிளக்கத்துக்கு மற்றொரு மையமாக விளங்கும் தத்துவார்த்த அம்சம் மக்கள்தொகை பற்றிய கோட்பாடாகும். மால்துஸ் தத்துவத்தின்பாலும், முதாளித்துவம் உண்டாக்கும் மிகுதிமக்கள்தொகை விஷயத்திலும் ஸிஸ்மொந்தீயின் கண்ணோட்டத்தைக் கவனிப்போம்.

கனவேகமாக மக்கள்தொகை பெருகமுடியும், கொடிய துன்பத்துக்கும் காரணமாயிருக்கமுடியும் என்கிற ஓர் அம்சத்தில் மட்டுமே மால்துஸுடன் ஸிஸ்மொந்தீ உடன்படுகிறார் என்று எஃப்ருஸி உறுதிகூறுகிறார். ''மற்ற விஷயங்களில் அவர்கள் எதிர் கோடிகளில் நிற்கிறார்கள். ஸிஸ்மொந்தீ மக்கள்தொகைப் பிரச்சினை முழுவதையும் ஒரு சமுதாய-பொருளாதார அடிப்படையில் வைக்கிறார்'' (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 7, பக்கம் 148). இந்தச் சூத்திரத்திலும் ஸிஸ்மொந்தீக்கு இனக்குறிப்பாயுள்ள (சிறுபூர்ஷ்வாப்) பார்வை நிலையையும் அவரது தன்னுணர்ச்சிவாதத்தையும் எஃப்ருஸி முற்றாக மூடிமறைக்கிறார்.

''மக்கள்தொகைப் பிரச்சினையை ஒரு சமுதாய-பொருளாதார அடிப்படையில் வைப்பது'' என்பதின் பொருள் என்ன? ஒவ்வொரு வரலாற்றுவழிப்பட்ட பொருளாதார அமைப்பு முறையின் மக்கள்தொகை பற்றிய விதியைத் தனித்தனியே எடுத்துப் பயில்வது, அந்தந்த அமைப்பு முறையோடு அதற்குள்ள தொடர்பையும் ஊடு உறவையும் பயில்வது, என்பதே. ஸிஸ்மொந்தீ எந்த அமைப்புமுறையைப் பயின்ருர்? முதலாளித்துவ அமைப்புமுறையை. எனவே, ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'' கட்டுரையாளர் ஸிஸ்மொந்தீ முதலாளித்துவ மக்கள்தொகை விதியைப் பயின்ருர் என்று அனுமானித்துக் கொள்கிருர். இதில் துளி உண்மை உண்டு, ஆனல் அது துளிதான். மக்கள்தொகை பற்றிய ஸிஸ்மொந்தீ வாதத்தில் உள்ள குறையைக் கண்டறிய முயல்வது பற்றி எஃப்ரூஸி சிந்திக்கவில்லை, ''இதில் தலைசிறந்த நவீனகாலத்திய பொருளாதாரவாதிகளுக்கு முன்போகியவராக இருக்கிருர் ஸிஸ்மொந்தீ''* (பக்கம் 148) என்று எஃப்ரூஸி அடித்துப்பேசுகிருர்; எனவே நெருக்கடிகள், தேசிய வருவாய் பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமாக நாம் பார்த்த மாதிரியே சிறுபூர்ஷ்வாத் தன்னுணர்ச்சிவாதியை மெருகிட்டுக்காட்டுவதுதான் இங்கும் நடக்கிறது. இப்பிரச்சினைகளில் ஸிஸ்மொந்தீ தத்துவத்துக்கும் இந்தப் புதிய தத்துவத்துக்கும் ஒற்றுமை எதில் உள்ளது? முதலாளித்துவத் திரட்சியில் உள்ளார்ந்து இருக்கிற முரண்பாடுகளை ஸிஸ்மொந்தீ குறித்துக்காட்டினுர் என்பதில் உள்ளது. இந்த ஒற்றுமையை எஃப்ரூஸி குறித்துக்கொண்டார். ஸிஸ்மொந்தீ தத்துவத்துக்கும் இந்தப் புதிய தத்துவத்துக்கும் எதில் வேற்றுமை? முதலாவதாக, ஸிஸ்மொந்தீ தத்துவம் இந்த முரண்பாடுகளைப் பற்றிய விஞ்ஞானவழிப்பட்ட பகுப்பாய்வைக் கடுகளவேனும் முன்னுக்குக் கொண்டு செல்லவில்லை, மூலச்சிறப்புள்ள பொ

* நிற்க. ''தலைசிறந்த நவீனகாலத்திய பொருளாதாரவாதி'' பற்றி எஃப்ரூஸி பேசும்போது யாரை மனத்தில் கொண்டு பேசுகிருர், தன்னுணர்ச்சிவாதத்தை முற்றும் விலக்கிய கருத்துப் பிரிவினரின் பிரதிநிதியையா அல்லது மிகப் பெரிய கைநூல் எழுதிய ஆசிரியரையா, என்பது பற்றி நமக்கு உறுதியாகத் தெரிய முடியாது என்று வரையிட்டுச் சொல்லிவிடுகிருேம்.

ருளாதாரவாதிகளோடு ஒப்புநோக்கினல் சில விஷயங்களில் ஓர் அடி பின்னேக்கிப் போயிருக்கிறது; இரண்டாவதாக, பகுப்பாய்வு செய்யும் திறன் அவருக்கு இல்லை (ஓரளவுக்கு அவருக்கு விருப்பமும் இல்லை), தேசிய வருவாயைச் செல வினத்துடனும், உற்பத்தியை நுகர்வுடனும், என்றவாறு ஒன் ருேடொன்று சமனப்படுத்தவேண்டிய தேவையைப்பற்றிச் சிறுபூர்ஷ்வாப்பாங்கான உபதேசங்களைக் கொண்டு தமது திறனின்மையை மறைத்தார். மேற்சொன்ன அம்சங்களில் ஒன்றிலாயினும் சரி, எஃப்ருஸி இந்த வேற்றுமையைக் குறித் துக் கொள்ளவில்லை, எனவே ஸிஸ்மொந்தீயின் உண்மையான முக்கியத்துவத்தையும் அவருக்கு இந்த நவீனகாலத் தத்து வத்துடன் உள்ள உறவையும் அவர் முற்ருகத் திரித்துக் காட்டினர். இன்றையப் பிரச்சினையிலும் இதையே நாம் பார்க்கிருேம். இங்கேயும் ஸிஸ்மொந்தீ தத்துவத்துக்கும் நவீனகாலத் தத்துவத்துக்கும் உள்ள ஒற்றுமை முரண்பாட் டைக் குறித்துக்காட்டுவதோடு முடிந்துவிடுகிறது. இங்கே யும் வேற்றுமை என்பது விஞ்ஞானவழிப்பட்ட பகுப்பாய்வு இல்லாமை, பகுப்பாய்வுக்குப் பதிலாகச் சிறுபூர்ஷ்வாப்பாங் கான உபதேசம் பண்ணுவது என்பதில் இருக்கிறது. இதை விளக்குவோம்.

சென்ற நூற்ருண்டின் இறுதியிலிருந்து முதலாளித்துவ இயந்திரத் தொழில் கண்ட வளர்ச்சியானது மக்கள்தொகை யில் மிகை உண்டாவதில் கொண்டுபோய் விட்டது, இந்த நிகழ்ச்சித் தோற்றத்தை விளக்கும் வேலை அரசியல் பொரு ளாதாரத்துக்கு ஏற்பட்டது. மால்துஸ் அதற்கு இயற்கை-வரலாறு வழிப்பட்ட காரணங்களைக் கற்பித்து விளக்க முயன் றதை நாம் அறிவோம்; ஒரு குறிப்பிட்ட, வரலாற்றுவழியே நிர்ணயிக்கப்பட்ட சமுதாயப் பொருளாதார அமைப்பு முறையிலிருந்து அது தோன்றுவதை அவர் முற்ருக மறுத் தார், இந்த உண்மை வெளிப்படுத்திய முரண்பாடுகளையும் பார்க்க மறுத்தார். இந்த முரண்பாடுகளையும் இயந்திரங்கள் மனிதர்களை விலக்குவதையும் ஸிஸ்மொந்தீ குறித்துக்காட் டினர். அந்தப் பெருமை நிச்சயமாக அவரைச் சேரும், ஏனெனில் அவர் எழுதிய காலத்துக்கு அது புதியது. எனினும் இவ்விஷயத்தில் அவருக்கு இருந்த கண்ணேட்டத்தைப் பார்ப்போம்.

7-ம் நூலில் (''மக்கள்தொகை பற்றியது'') ''இயந்திரங்கள் புனைந்ததின் காரணமாக மிகையாகிவிட்ட மக்களைப் பற்றி'' 7-ம் அத்தியாயம் குறிப்பாகச் சொல்கிறது. ''இயந்திரங்கள் மனிதர்களை நீக்கிவிடுகின்றன'' என்று ஸிஸ்மொந்தீ கூறுகிறார் (பக்கம் 315, II, VII), இயந்திரங்களைப் புனைவது நாட்டுக்கு நன்மையா தீமையா என்றும் உடனே கேள்வி எழுப்புகிறார். ஒரு முதலாளித்துவ நாட்டுக்கு என்றல்லாமல், எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலத்துக்குமாக இந்தப் பிரச்சினைக்கு ''விடை'' அளிப்பது அறவே சாரமற்ற வெற்றுரையாகும் என்று சொல்லாமலே விளங்கும்; ''நுகர்வாளர்களின் கிருக்கி மக்களின் உற்பத்திச் சாதனங்களை மிஞ்சிவிடுகிறபோது'' அது நன்மையாகும் (II, 317), ''நுகர்வுக்கு முற்றும் போதுமானதாக உற்பத்தி இருக்கிறபோது'' அது தீமையாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால்: ஸிஸ்மொந்தீ முரண்பாட்டைக் காண்கிறார், என்றாலும் அவர் ஏதோவொரு யதார்த்தநிலையற்ற சமுதாயத்தைப் பற்றி—மேற்கொண்டு முரண்பாடுகள் எதுவும் இராத, சிக்கனப் பாங்குள்ள விவசாயியின் ஒழுக்கநெறிகளைப் பொருத்திச் செயல்படுத்த முடிகிற மாதிரி இருக்கிற சமுதாயத்தைப் பற்றி—விவாதிக்கவே அது ஒரு சாக்காக அவருக்குப் பயன்படுகிறது! இந்த முரண்பாட்டைப் பகுத்தாய்ந்திடவோ, இன்றுள்ள முதலாளித்துவச் சமுதாயத்தில் அது எப்படி உதிக்கிறது, எங்கு கொண்டு போய் விடுகிறது, என்றெல்லாம் பரிசீலிக்கவோ ஸிஸ்மொந்தீ முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அப்படிப்பட்ட முரண்பாட்டின்மீது தமது தர்மாவேசமுள்ள சினத்தைப் பொழியக் கிடைத்த பொருளாகவே அந்த முரண்பாட்டைப் பயன்படுத்துகிறார். இதற்கு மேல் இந்தத் தத்துவார்த்த பிரச்சினையைப் பற்றி இந்த அத்தியாயம் எதுவும் சொல்லவில்லை, மனவருத்தங்களும் மனக்குறைகளும் வெகுளி விருப்பங்களும் தவிர அதில் வேறொன்றும் இல்லை. நீக்கப்பட்ட தொழிலாளிகள் நுகர்வாளர்களாக இருந்தவர்களாம்... உள்நாட்டுச் சந்தை சுருங்குகிறதாம்... வெளிநாட்டுச் சந்தை பொருத்தவரை உலகத்தில் போதிய வரத்து ஏற்கனவே இருக்கிறதாம்... விவசாயிகள் மிதமான செழிப்புடன் இருந்தால் போதும், அதுவே சந்தைக்கு ஒரு மேலான உத்தரவாதமாக இருக்குமாம்...

ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் பின்பற்றிச் செல்கின்ற இங்கிலாந்தைவிடத் திகைப்பூட்டத்தக்க, பயங்கரமான எடுத்துக்காட்டு வேறொன்றுமில்லையாம்,—நிகழ்ச்சித் தோற்றத்தைப் பற்றிய பகுப்பாய்வுக்குப் பதிலாக ஸிஸ்மொந்தீயிடமிருந்து கிடைக்கிற நீதியுபதேசம் இதுதான்! இவ்விஷயத்தின்பால் அவருடைய கண்ணோட்டமும் நமது நரோத்னிக்குகளின் கண்ணோட்டமும் ஒன்றே. நரோத்னிக்குகளும் மக்கள்தொகையின் மிகை என்கிற உண்மையைச் சொல்வதோடு நிறுத்திக் கொண்டு, முதலாளித்துவத்தைப் பற்றி ஒப்பாரி வைக்கவும் குறைப்பட்டுக் கொள்ளவும் அதை வெறுமே ஒரு காரணமாகப் பயன்படுத்துகின்றனர் (திரு. நி.—ன், வி. வி., முதலியவர்கள்). இந்த மக்கள்தொகை மிகைக்கும் முதலாளித்துவ உற்பத்தியின் தேவைகளுக்கும் இடையேயுள்ள உறவைப் பகுத்தாய்ந்திடக் கூட ஸிஸ்மொந்தீ முயலவில்லை, நமது நரோத்னிக்குகளும் அப்படிப்பட்ட பிரச்சினையை என்றைக்கும் எடுத்துக்கொள்வதில்லை.

இந்த முரண்பாட்டைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வு இந்த வழிமுறை முற்றுகப் பொய்யாயிருப்பதை வெளிப்படுத்தியது. மக்கள்தொகை மிகையானது (மிகை உற்பத்தி, மிகை நுகர்வு ஆகியவற்றுடன் கூடவே) சந்தேகமின்றி ஒரு முரண்பாடுதான், முதலாளித்துவத் திரட்சியின் ஒரு தவிர்க்க முடியாத விளைவுதான், அதே நேரத்தில் அது முதலாளித்துவ அமைப்பின் ஓர் இன்றியமையாத இணைக்கூறுன பகுதியும் ஆகும் என்று பகுப்பாய்வு காட்டியது.* பெருமளவான

---

* நாமறிந்த மட்டில், மக்கள்தொகை மிகை பற்றிய இந்தக் கருத்தை முதன்முதலாக எங்கெல்ஸ்தான் தமது “Die Lage der arbeitenden Klasse in England” *(1845)* (‘‘இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை.’’—பதிப்பாசிரியர்) எனும் நூலில் வெளியிட்டார். ஆங்கிலநாட்டுத் தொழில்துறையின் சாதாரணமான தொழில் வளர்ச்சி வட்டத்தை வர்ணித்துவிட்டு அவ்வாசிரியர் கூறுவதாவது:

‘‘ஆங்கிலநாட்டுத் தொழில்துறைக்கு, உச்சநிலைச் செழிப்பு நிலவும் குறுகிய காலங்கள் போக மற்றெல்லாக் காலங்களிலும், வேலையற்றிருக்கும் ஒரு தொழிலாளர் சேமப் பட்டாளம் இருந்தாகவேண்டும் என்று இதிலிருந்து தெளிவாகிறது—மிகவும் விறுவிறுப்புள்ள மாதங்களில் சந்தைக்கு வேண்டிய சரக்குத் திரள்களை உற்பத்திசெய்ய முடிவதற்கு.

தொழில் மேலும் வளர வளர, தொழிலாளர்களுக்கான கிராக்கியில் ஏற்ற இறக்கமும் அதிகரிக்கிறது; இது மொத்த மான தேசிய உற்பத்தியிலோ அதன் ஏதாவதொரு கிளையி லோ நெருக்கடி அல்லது செழுமை இருக்கிறதைப் பொறுத் துள்ளது. இந்த ஏற்ற இறக்கம் முதலாளித்துவ உற்பத்திக் குள்ள ஒரு விதியாகும்; எந்தத் தொழிலுக்காயினும் எந்தத் தொழிற்சாலைக்காயினும் எந்தக் குறிப்பிட்ட தருணத்திலும் ஆட்களைக் கொடுக்கத் தயாராயிருக்கும்படியான மக்கள் தொகை மிகை (அதாவது, முதலாளித்துவத்தின் சராசரி தொழிலாளர் கிராக்கியை மிஞ்சியிருக்கும் மக்கள்தொகை) இல்லாமற்போனால் முதலாளித்துவ உற்பத்தி இருக்க முடி யாது. முதலாளித்துவம் ஊடுருவும் எல்லாத் தொழில்களி லும்—தொழில்களிலும் சரி, விவசாயத்திலும் சரி—மக்கள் தொகை மிகை உருப்பெறுகிறது, மக்கள் தொகை மிகை வெவ்வேறான வடிவங்களில் உள்ளது, என்று பகுப்பாய்வு புலப்படுத்தியது. மூன்று முக்கியமான வடிவங்கள் உள்ளன*:

இந்தச் சேமப்பட்டாளத்தின் உறுப்பினர்களை அதிகமாகவோ குறைவாகவோ வேலைக்கு எடுத்துக்கொள்ளச் சந்தையின் நிலை வாய்ப்பளிக்கிறதைப் பொருத்து இந்தப் பட்டாளம் பெரிதாகவோ சிறிதாகவோ இருக்கிறது. மேலும், சந்தை யின் நடப்பு நிலவரங்கள் உச்சத்தில் இருக்கும் தருணத்தில் விவசாயத்தைச் சார்ந்த மாவட்டங்களும்... பொதுச் செழு மையாலே மிகவும் குறைவாக பாதிக்கப்பட்ட கிளைகளும் தாற் காலிகமாகப் பல தொழிலாளர்களைத் தொழில்துறைக்குக் கொடுக்குமேயானால் அவர்கள் ஒரு சிறுபான்மையேயாவர், அவர்களும் இந்தச் சேமப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்க ளேயாவர், ஆனால் ஒரேயொரு வேறுபாடு உண்டு, அதாவது: அவர்களுக்கு இந்தப் பட்டாளத்தோடு இருக்கும் தொடர் பை வெளிப்படுத்துவதற்குத் தாற்காலிகச் செழுமை தேவைப் பட்டது.''

தொழில்துறைக்குத் தாற்காலிகமாக வருகிற விவசாய மக்கள்தொகையின் பகுதி இந்தச் சேமப் பட்டாளத்தைச் சேர்ந்ததாகக் கருதுவதாக இறுதிச் சொற்களில் இருப் பதைக் கவனிப்பது முக்கியம். இதையேதான் மக்கள் தொகை மிகையின் உள்ளுறைந்துள்ள வடிவம் என்று நவீன காலத் தத்துவம் அழைக்கிறது (மார்க்ஸின் ''மூலதனத் தைப்'' பார்க்க).

* பார்க்க: ஸீபரின் ''டேவிட் ரிக்கார்டோ,'' முதலிய வை, பக்கங்கள் 552-553. செயின்ட் பீட்டர்ஸ்பர்க், 1885.

1) மிதந்துவரும் நிலையிலுள்ள மக்கள்தொகை மிகை. தொழில் துறையைச் சேர்ந்த வேலையற்றிருக்கும் தொழிலாளிகள் இந்த இனத்தில் அடங்குவர். தொழில்துறை வளர வளர அவர்களின் தொகையும் தவிர்க்கமுடியாதவாறு பெருகுகிறது. 2) உள்ளுறைந்த நிலையிலுள்ள மக்கள்தொகை மிகை.* முதலாளித்துவ வளர்ச்சியையொட்டித் தங்களுடைய நிலங்களைப் பறிகொடுத்துவிட்டு விவசாயத்தைச் சேராத துறைகளில் வேலை கிடைக்கமுடியாமல் இருக்கும் கிராமப்புறத்து மக்கள் இந்த இனத்தில் அடங்குவர். இந்த மக்கள்தொகை எந்தத் தொழிற்சாலைக்கும் எப்போதும் ஆட்களைக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. 3) தேக்க நிலையிலுள்ள மக்கள் தொகை மிகை. சராசரி மட்டத்துக்கும் கீழான நிலைமைகளில் இதற்கு ''மிகவும் ஒழுங்குமுறையின்றி'' வேலை கிடைக்கிறது. முதலாளிகளுக்காகவும் பண்டகசாலைகளுக்காகவும் வீட்டிலிருந்தவாறே வேலை செய்கிற மக்கள்—கிராமவாசிகளும் சரி, நகரவாசிகளும் சரி—இந்த இனத்தில் முக்கியமாக அடங்குவர். இந்த மக்கட் பிரிவினரின் மொத்த தொகை முழுவதும் சார்புநிலை மக்கள் தொகை மிகை அல்லது சேமப் பட்டாளம் ஆகும். பிந்தையச் சொல் எந்த மக்கள்தொகையைக் குறிக்கிறதென்று திட்டவட்டமாகக் காட்டுகிறது. தொழிலமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு முதலாளித்துவத்துக்கு ஒரு வேளை தேவைப்படுகிற தொழிலாளிகள் அவர்களே, ஆனால் அவர்களை என்றைக்கும் ஒழுங்குமுறையாக வேலையில் வைத்திருக்க முடியாது.

ஆகவே, இந்தப் பிரச்சினையிலும் தன்னுணர்ச்சிவாதிகளின் தத்துவத்தின் முடிவுக்கு நேரெதிரான ஒரு முடிவுக்கு நவீனகாலத் தத்துவம் வந்து சேர்ந்தது. தன்னுணர்ச்சிவாதிகளைப் பொருத்தவரை, முதலாளித்துவம் சாத்தியமற்றது, அல்லது அது ஒரு ''தவறு'', என்பதைத்தான் மக்கள்தொகை மிகை குறிக்கிறது. யதார்த்தத்திலோ, இதன் எதிர்நிலைதான் உண்மை: மக்கள்தொகை மிகை எனப்பட்டது மிகை உற்பத்தியின் அவசியகரமான உடன்போக்கு ஆக இருப்பதினால் அது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இன்றியமையாத

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 1, அத்தியாயம் 23.—(பதிப்பாசிரியர்.)

ஓர் அம்சமாகும், அது இல்லாமல் முதலாளித்துவப் பொருளாதாரம் இருக்கவும் முடியாது, வளரவும் முடியாது. நவீன காலத் தத்துவத்தின் இந்த ஆய்வுரையைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் இங்கேயும் பிரச்சினையை எஃப்ருஸி முற்றுகத் திரித்துக்காட்டினுர்.

இவ்விரண்டு கருத்துக்களையும் வெறுமே ஒப்பு நோக்கினுலே போதும், எந்தக் கருத்தை நமது நரோத்னிக்குகள் பற்றி நிற்கின்றனர் என்று தீர்மானித்துவிடமுடியும். மேலே நாம் எடுத்துக் கவனித்த ஸிஸ்மொந்தீ நூலின் அத்தியாயம் திரு. நி.—ன். எழுதிய "சீர்திருத்தத்திற்குப் பிந்திய நமது சமுதாயப் பொருளாதாரம் பற்றிய வரையுருக்கள்" எனும் நூலில் முழு உரிமையோடு இடம் பெற முடியும்.

சீர்திருத்தத்திற்குப் பிந்திய ருஷ்யாவில் மக்கள் தொகை மிகை உருப்பெற்றுள்ளதை நரோத்னிக்குகள் குறித்துக் கொண்டுவந்தபோது சேமப் பட்டாளம் ஒன்று முதலாளித் துவத்துக்கு அவசியம் என்கிற பிரச்சினையை அவர்கள் என்றைக்கும் எழுப்பக்கிடையாது. நிரந்தரமான மக்கள்தொகை மிகை உருவாகியிராதிருந்தால் இரயில்வேயை நிர்மாணித்திருக்க முடியுமா? இப்படிப்பட்ட தொழிலாளரின் கிருக்கி வருடா வருடம் பெரிதாக ஏறியிறங்குவதை எல்லோரும் நிச்சயமாக அறிவார்கள். இந்நிலைமை இல்லாமல் தொழில் துறை வளர்ந்திருக்க முடியுமா?(செழுமைக் காலங்களில், புதிய தொழிற்சாலைகள், கட்டடங்கள், கிடங்குகள் முதலியவற்றைக் கட்டுவதற்கு அதற்குப் பெருந்தொகையான கட்டடத் தொழிலாளிகள் தேவைப்படுகின்றனர்; மற்றும் எல்லா ரகமான துணைநிலை அன்றுடக்கூலிக்காரர்களும் அதற்குத் தேவைப்படுகின்றனர், விவசாயத்தைச் சேராத வெளி வேலைகள் என்று சொல்லப்படுவதின் பெரும் பகுதியில் ஈடுபட்டிருப்பவர்கள் இவர்களேயாவர்.) தொலைவெளிப் பிரதேசங்களில் முதலாளித்துவ முறையிலான சாகுபடிக்கு லட்சக்கணக்கான அன்றுடக் கூலிக்காரர்கள் தேவைப்படுகின்றனர்; இந்நிலைமை இல்லாமல் அது உண்டாக்கப்பட்டிருக்க முடியுமா? மேலும், இவ்வகைத் தொழிலாளர்களுக்கான கிருக்கி பெரிதும் ஏறியிறங்குவதை நாமறிவோம். மக்கள்தொகை மிகை உருப்பெற்றிராவிட்டால் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவாக்குவதற்குத் தொழில்முயற்சிப் போக்குள்ள

மர வியாபாரிகள் அசுர வேகத்தில் காடுகளை வெட்டிச் சாய்த்திருக்க முடியுமா? (கிராம மக்கள் ஈடுபடுகிற மற்ற கூலிவேலை வகைகளைப்போலவே காடுவெட்டும் வேலையும் மிகக்குறைவான கூலியும் மிக மோசமான நிலைமைகளும் உள்ள வேலைகளைச் சேர்ந்தது.) கைத்திறத் தொழில்கள் எனப்படுபவைகளில் வியாபாரிகளும் ஆலை முதலாளிகளும் பண்டகசாலைகளும் நாட்டுப்புறத்திலும் சரி, நகரப்புறத்திலும் சரி, வீட்டிலிருந்தபடியே செய்யும்படி வேலை கொடுக்கும் அமைப்புமுறை மிகப் பரவலாக உள்ளதே, அந்த அமைப்புமுறை வளர்ந்திருக்க முடியுமா இந்நிலைமை இல்லாமலே? இந்த உழைப்புக் கிளைகள் அனைத்திலும் (சீர்திருத்தத்திற்குப் பின்னரே இவை முக்கியமாக வளர்ந்துள்ளன) கூலியுழைப்புக்குரிய கிருக்கியில் ஏற்ற இறக்கம் மிகப் பெரிதாக உள்ளது. என்றாலும், இந்தக் கிருக்கியிலுள்ள ஏற்ற இறக்கத்தின் அளவுதான் முதலாளித்துவத்துக்குத் தேவைப்படுகிற மக்கள் தொகை மிகையின் பரிமாணங்களை நிர்ணயிக்கிறது. நரோத்னிக்குப் பொருளாதாரவாதிகள் இந்த விதியை அறிந்துவைத்துள்ளதாக எங்கும் காட்டிக்கொள்ளவில்லை. உண்மைதான், இங்கே இந்தப் பிரச்சினைகளின் சாரப்பொருளை எடுத்துப் பரிசீலிக்கும் உத்தேசம் நமக்கு இல்லை.* இது நமது வேலையில் இடம் பெறவில்லை. நமது கட்டுரையின் பொருள் மேற்கு ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதமும் அதற்கு ருஷ்ய நரோதியத்துடன் இருக்கிற உறவும் என்பதேயாம். இவ்வழக்கிலுங்கூட, முந்திய எல்லா வழக்குகளில் உள்ள மாதிரியே, அதே உறவுதான் இருக்கிறது: மக்கள்தொகை மிகை என்கிற விஷயத்தில் நரோத்னிக்குகள் தன்னுணர்ச்சிவாதத்தின் கருத்துநிலையை முற்றாகப் பற்றி நிற்கின்றனர், இக்கருத்துநிலை நவீனகாலத் தத்துவத்தின் கருத்துநிலைக்கு நேரெதிரானதாகும். நீக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு முதலாளித்துவம் வேலை கொடுப்பதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு

---

* நரோத்னிக் பொருளாதாரவாதிகள் இந்த எண்ணிறைந்த தொழிலாளிகளைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாததற்கு அவர்கள் பதிவுசெய்யப்படாதவர்கள் என்கிற விஷயத்தைக் காரணமாகச் சொன்னார்களே, அந்த மிகவும் அலாதியான நிலைமையை இங்கே நாம் எடுத்துக் கவனிக்காததற்குக் காரணம் இதுதான்.

அர்த்தம் முதலாளித்துவம் சாத்தியமில்லை, அது ஒரு ''தவறு'' என்றவாறு உள்ளதாம். ''அர்த்தம்'' அதுவல்ல. முரண்பாடு என்றால் அசாத்தியம் என்று அர்த்தமல்ல (Widerspruch என்பதற்கும் Widersinn என்பதற்கும் வித்தியாசமுண்டு.) முதலாளித்துவத் திரட்சி, அதாவது உற்பத்திக்காக நடக்கிற உண்மையான உற்பத்தி, என்பதும் ஒரு முரண்பாடுதான். என்ற போதிலும் அது இருக்கத்தான் செய்கிறது, ஒரு திட்டவட்டமான பொருளாதார அமைப்புமுறையின் விதியாகவும் இருக்கிறது. முதலாளித்துவத்தின் மற்றெல்லா முரண்பாடுகள் சம்பந்தமாகவும் இதையேதான் சொல்லவேண்டும். நாம் மேலே மேற்கோள் காட்டிய நரோத்னிக்குகளின் வாதத்துக்கு ''அர்த்தம்'', இந்த முரண்பாடுகள் அனைத்தையும் கடப்பதற்கு வெற்றுச் சொற்றொடர்களைப் பயன்படுத்தும் தீய பண்பில் ருஷ்ய அறிவுஜீவிகள் ஆழ்ந்துவிட்டார்கள் என்பதே.

ஆக, மக்கள்தொகை மிகை பற்றிய **தத்துவார்த்தப் பகுப்பாய்வுக்கு** ஸிஸ்மொந்தீ அறவே பங்கெதுவும் செலுத்தவில்லை. எனினும் அதை எப்படிக் கருதினார் அவர்? அவர் கருத்து சிறுபூர்ஷ்வா உணர்ச்சியும் மால்துஸ்வாதமும் கலந்த ஒரு விசித்திரமான கலவையாகும். ஸிஸ்மொந்தீ கூறுவதாவது: ''எந்த உழைப்புக் கிறுக்கியை நம்பிக் காரியம் செய்யலாம் என்று ஏழை என்றைக்கும் அறிய முடியாது, இதுவே இன்றையச் சமுதாய அமைப்பின் மிகப்பெரிய தீமை'' (II, 261) என்று; ''கிராமத்துச் செருப்புத்தைக்கிறவனும்'' சிறு விவசாயியும் தமது வருவாய்கள் பற்றிக் கறாராகத் தெரிந்து வைத்திருந்த காலங்களை விரும்பி ஸிஸ்மொந்தீ பெருமூச்சு விடுகிறார். ''ஏழை சொத்தனைத்தும் இழக்க இழக்க அவன் தனது வருவாய் குறித்துத் தவறு செய்யும் அபாயம் அதிகரிக்கிறது; மற்றும் உழைப்புக் கிறுக்கிக்குத் தகவாக இல்லாமற்போவதால் பிழைப்புச் சாதனங்கள் கிடைக்கப் பெறாமற்போகிற ஒரு மக்கள்தொகை உருவாவதற்கு (contribuer à accroître une population...) அவன் பங்கு செலுத்தும் அபாயமும் அதிகரிக்கிறது'' (II, 263-264). நாம் பார்க்கிறோம்: இந்தச் சிறுபூர்ஷ்வாவர்க்கத்தின் தத்துவாசிரியர் அரை அநாகரிக மக்களின் தந்தைவழியாட்சிக்கால உறவுகளைப் பேணிக்காப்பதற்காகச் சமுதாய வளர்ச்சி முழுவதையும் தடுத்துநிறுத்த விரும்புவதோடு திருப்தியடையவில்லை.

மனித இயல்பை முடமாக்கக்கூடிய எந்த உத்தியையும் பரிகாரமாகக் கொடுக்கத் தயாராயிருக்கிறார், அது சிறுபூர்ஷ்வா வர்க்கத்தைப் பேணிக்காக்க உதவிவந்தால் போதும். இந்தக் கடைசி அம்சத்தில் ஐயத்திற்கு இடமேயில்லாமற்செய்யக்கூடிய மேலும் சில மேற்கோள்கள் இங்கே தருகிறோம்:

அரை ஓட்டாண்டியாக்கப்பட்ட தொழிலாளிக்குத் தொழிற்சாலையில் வாரத்துக்கு ஒரு முறை கூலி கொடுப்பதால் அவனது எதிர்காலப் பார்வை அடுத்துவரும் சனிக்கிழமைக்குஅப்பால் எட்டிப்பார்க்காதபடியாகிவிட்டது:''இது அவனுடைய ஒழுக்கப் பண்புகளையும் அனுதாப உணர்ச்சியையும் மழுங்கடித்து விட்டது'' (II, 266). இவை ''மணவாழ்வுக்குரிய முன்கவனம்'' என்பதில் அடங்குவதை உடனே பார்க்கப் போகிறோம்!... ''அவனது குடும்பம் சமுதாயத்துக்குச் சுமையாவது அதிகரிக்க அதிகரிக்க, அந்தக் குடும்பம் மேலும் வளர்ந்தவாறிருக்கும். தனது பிழைப்புச் சாதனங்களுக்குத் தகவாக இல்லாதுபோன (disproportionnél) மக்கள் தொகையின் சுமையால் நாடு கஷ்டப்படும் (gémira)" (II, 267). எப்படியாவது சிறுசொத்தைப் பேணிக் காத்திட வேண்டும் என்பதே ஸிஸ்மொந்தீயின் முழக்கம் —வாழ்க்கைத் தரத்தைக் குறைக்கிறதானாலும் சரி, மனித இயல்பைத் திரித்துக் கெடுக்கிறதானாலும் சரி! மேலும், ஓர் அரசுக்கலை வல்லுநர் தோரணையிலே ஸிஸ்மொந்தீ சொன்னாரே, எப்போது மக்கள்தொகை உயர்வு ''விரும்பத்தக்கதாயிருக்கும்'' என்று. அதே ஸிஸ்மொந்தீதான் ''முன்கவனமில்லாத'' திருமணங்களைக் கண்டிக்கத் தவறியதற்காக மதத்தைத் தாக்க ஒரு தனி அத்தியாயமே ஒதுக்குகிறார். அவரது இலட்சியப் பிறவியான சிறுபூர்ஷ்வா பாதிக்கப்படுகிறான் என்றதும் அவர் குருவை மிஞ்சிய சீடன் போல் மால்துஸையும் மிஞ்சுகிறார். மதத்தைக் கண்டிக்கிறபோது ஸிஸ்மொந்தீ கூறுகிறார்: ''வறுமைக்கென்றே பிறந்த குழந்தைகள் தீமைக்கென்றே பிறந்தவர்களாவர்'' என்று. ''சமுதாய அமைப்புமுறை பற்றிய விவகாரங்களில் அவர்களுக்கு (மதத்தின் பிரதிநிதிகளுக்கு) இருக்கிற அறியாமை காரணமாகத் திருமணத்துக்கு உகந்த நற்பண்புகளின் பட்டியலிலிருந்து கற்பை நீக்கி விடும்படி செய்யப்பட்டுள்ளனர்; மக்கள்தொகைக்கும் பிழைப்புச் சாதனங்களுக்கும் இடையே இயல்பாக நிலைநிறுத்தப் பெற்

றிருந்த சமனநிலையை ஒழிக்கிற இடையருச் செயல்போக்குள்ள காரணங்களில் அதுவும் ஒன்ருக இருந்து வருகிறது'' (II, 294). ''ஒரு குடும்பத்தைப் பெற்றெடுத்தபின், பிரம்மச்சாரிக்குள்ள ஒழுக்கக்கடமைபோலவே குடும்பஸ்தர்களும் தங்கள் மனைவிகளுடன் கற்பொழுக்கத்தில் வாழ்வது தங்கள் கடமை என்று மத ஒழுக்கநெறி மக்களுக்குப் போதிக்கவேண்டும்'' (II, 298). பொதுவாகவே, அரசியல் பொருளாதாரத்தில் தத்துவாசிரியன் என்று கூறிக்கொள்வதோடு நில்லாமல் விவேகமிக்க ஆட்சிநிர்வாகியாகவும் தம்மைக் கூறிக்கொள்ளும் ஸிஸ்மொந்தீ உடனே கணக்குப் போடுவதில் இறங்கி ''ஒரு குடும்பத்தைப் பெற்றெடுப்பதற்குப் பொதுவாக சராசரி மூன்று குழந்தைகள் தேவைப்படும்'' என்கிருர்; ''குடும்பம் என்கிற பொய்த்தோற்றமான அமைப்பானது (cet établissement illusoire) மக்களைத் துன்பத்துக்கும் வறுமைக்கும் சாவுக்கும் இரையாக விட்டுவிடுகிறபோது ஒரு குடும்பத்தைப் பெற்று வளர்க்கிறதை அனுமதிக்கும் சுதந்தர அந்தஸ்து மக்களுக்கு உண்டு எனும் நம்பிக்கை அளித்து மக்களை ஏமாற்ற வேண்டாம்'' (II, 299) என்று அவர் அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்குகிருர். ''சமுதாய அமைப்பு உழைக்கும் வர்க்கத்தைக் கொஞ்சம் சொத்துள்ள வர்க்கத்திடமிருந்து பிரித்து வைத்திடாத காலத்தில், வறுமை எனும் தீமையைத் (le bléau) தவிர்ப்பதற்குப் பொதுமக்களின் அபிப்பிராயமே போதியதாக இருந்தது. விவசாயி தனது முன்னேர்களின் ஆஸ்திபாஸ்திகளை விற்பதும் சரி, கைவினைஞன் தனது சிறு மூலதனத்தை வீணடித்துவிடுவதும் சரி, வெட்கக்கேடானது என்று எப்போதும் கருதப்பட்டு வந்துள்ளது.... ஆனல் தற்சமயம் ஐரோப்பாவில் நிலவும் அமைப்புமுறையின் கீழ்... எந்தவிதச் சொத்தும் சொந்தத்தில் வைத்திராதபடி தண்டிக்கப்பட்டுள்ள மக்கள் ஓட்டாண்டிகளாக்கப்படுவது பற்றி வெட்கப்படவே முடியாது'' (II, 306-307). சிறு உடைமையாளனின் மடமையையும் கல்நெஞ்சத்தையும் இதைவிட விளக்கமாகக் கூறுவது கஷ்டமே! இங்கே ஸிஸ்மொந்தீ தத்துவாசிரியர் நிலையிலிருந்து நடைமுறைப்பாங்குள்ள ஆலோசகராக மாறி ஒழுக்கநெறிகளை உபதேசிக்கிருர்; இந்த ஒழுக்கநெறிகளை பிரெஞ்சு விவசாயிகள் எவ்வளவு வெற்றிகரமாகச் செயல்படுத்திவருகிருர்கள் என்று நாமறிவோம். இங்கே

நாம் காண்பது மால்துஸ் மட்டுமல்ல, வேண்டுமென்றே சிறு பூர்ஷ்வாவின் அளவுக்குப் பொருந்துகிறபடி வெட்டப்பட்ட மால்துஸைக் காண்கிறோம். ஸிஸ்மொந்தீயின் இவ் அத்தியாயங்களைப் படிக்கிறபோது புரூதோனின் வெஞ்சினமிக்க சொல்லம்புகளை நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியாது; இயல்புக்கு எதிரான ஒரு தீய பண்பை... மணவாழ்வு நடைமுறையை உபதேசிப்பதே மால்துஸ் வாதம் என்று புரூதோன் வாதித்தார்.*

IX

முதலாளித்துவச் சமுதாயத்தில் இயந்திரங்கள்

பொதுவாகவே இயந்திரங்களுக்கு இருக்கிற குறிபொருளுடன் மக்கள்தொகை மிகை எனும் பிரச்சினை சம்பந்தப்பட்டுள்ளது.

இயந்திரங்களைப் பற்றிய ஸிஸ்மொந்தீயின் ''ஒளிமிக்க ஆய்வுக் கூற்றுகளை'' எஃப்ரூஸி விரித்துரைக்கிறார்; ''அவர் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கு எதிரி என்று கருதுவது நியாயமல்ல'' (இதழ் 7, பக்கம் 155) என்றும், ''ஸிஸ்மொந்தீ இயந்திரங்களுக்கும் புனைவுகளுக்கும் எதிரி அல்ல'' (பக்கம் 156) என்றும் அடித்துச் சொல்கிறார். ''தன்னிலையிலே இயந்திரங்களும் புனைவுகளும் தொழிலாளிவர்க்கத்துக்குத் தீங்கானவை அல்ல, இன்றுள்ள பொருளாதார அமைப்புமுறையின் நிலைமைகளின் காரணத்தால் மட்டுமே அவை தீங்கானவையாகின்றன, அந்த அமைப்புமுறையின் நிலைமைகளின் கீழ் உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதால் தொழிலாளிவர்க்கத்தின் நுகர்வு அதிகரிப்பதில்லை, வேலை நேரம் குறைக்கப்படுவதுமில்லை'' எனும் கருத்தை ஸிஸ்மொந்தீ திரும்பத் திரும்ப வலியுறுத்தினர்'' (பக்கம் 155).

இந்த ஆய்வுக்கூற்றுகள் அனைத்தும் சரியே. ஆனால் ஸிஸ்மொந்தீ பற்றிய இந்த மதிப்பீடு வெளிப்படுத்துவதென்ன?

---

* பார்க்க: மால்துஸ் எழுதிய ''மக்கள்தொகை பற்றிய கட்டுரை''யின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு (பீபிகவ் மொழிபெயர்ப்பு, செயின்ட் பிட்டர்ஸ்பர்க், 1868) பின்னுரை. புரூதோன் எழுதிய ''நீதி பற்றி'' எனும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகக்கூறு.

எப்படி நரோத்னிக்குகள் தன்னுணர்ச்சி வாதியைப் புரிந்து கொள்ளவும், முதலாளித்துவத்தின்பால் தன்னுணர்ச்சி வாதத்துக்குக் குறிப்பாயிருக்கும் பார்வை நிலையைப் புரிந்து கொள்ளவும், இந்தப் பார்வை நிலக்கும் விஞ்ஞானத் தத்துவத்துக்கும் உள்ள தீவிரமான வேற்றுமையைப் புரிந்துகொள்ளவும் முற்றுகத் தவறிவிட்டனர் என்று இது அற்புதமான தெளிவோடு வெளிப்படுத்துகிறது. இதை நரோத்னிக்கு புரிந்து கொள்ளமுடியாமற்போனதற்குக் காரணம் நரோதியமே தன்னுணர்ச்சிவாதத்துக்குஅப்பால் அடியெடுத்துவைக்க வில்லை. ஆனால் ஒன்று. முதலாளித்துவம் இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் உள்ள முரண்பட்ட தன்மையைப் பற்றி ஸிஸ்மொந்தீ அளித்த ஆய்வுக்கூற்றுகள் 1820-களில் ஒரு பெரும் முன்னேற்றப் படியைக் குறித்தன என்றபோதிலும் இந்நாளில் அப்படிப்பட்ட தேர்ச்சிமுதிர்ச்சியற்ற விமர்சனத்தோடு ஒருவன் நின்றுவிடுவதும் அதன் குறுகிய சிறுபூர்ஷ்வாத் தன்மையைப் பார்க்காமல் இருப்பதும் முற்றிலும் மன்னிக்கத்தக்கதல்ல.

இவ்விஷயத்தில் (அதாவது, ஸிஸ்மொந்தீ தத்துவத்துக்கும் புதிய தத்துவத்துக்கும் உள்ள வேற்றுமை விஷயத்தில்)* எஃப்ரூஸி தமது சொந்த நிலையை உறுதியாகப் பற்றி நிற்கிறார். அவருக்குப் பிரச்சினையை முன்வைக்கக்கூட முடியவில்லை. ஸிஸ்மொந்தீ முரண்பாட்டைப் பார்த்தார் என்று சொல்வதோடு திருப்திப்பட்டு நின்றுவிடுகிறார்—முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை விமர்சிப்பதில் எத்தனையோ விதமான வழி முறைகளை வரலாறு காட்டவில்லை என்கிற நினைப்பிலே. தன்னிலையில் இயந்திரங்கள் தீங்கானவை என்று ஸிஸ்மொந்தீ கருதவில்லை, இன்றையச் சமுதாய அமைப்புமுறையின்கீழ் அவற்றின் வேலையோட்டத்தில் தீங்காயுள்ளன என்றே அவர் கருதினர் என்று எஃப்ரூஸி கூறுகிறபோது, எவ்வளவு தேர்ச்சிமுதிர்ச்சியற்ற, மேலோட்டமான உணர்ச்சிவயப்பட்ட பார்வை நிலையை இந்த ஒரு வாதத்திலேயே

---

* ஸிஸ்மொந்தீக்கும் புதிய தத்துவத்துக்கும் இடையே இந்த ஒப்பீடு செய்வதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஃப்ரூஸி முயன்றுள்ளதை நாம் திரும்பத்திரும்ப ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

தாம் வெளியிடுவதைப் பார்க்கக்கூடக் கிடையாது. இயந்திரங்கள் தீங்கானவையா இல்லையா என்று ஸிஸ்மொந்தி வினு எழுப்பியது உண்மை. அந்தக் கேள்விக்கு ''விடை'' என்கிற வகையில், உற்பத்தியானது நுகர்வுக்குச் சம அளவாக இருக்கிறபோது மட்டுமே இயந்திரங்கள் பயனுள்ளவை எனும் முதுமொழி வைத்தார் அவர் (பார்க்க: ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''விலுள்ள மேற்கோள்கள், இதழ் 7, பக்கம் 156). இவ்வளவும் சொல்லிமுடிந்தபின், இப்படிப்பட்ட ''விடை'' முதலாளித்துவத்தைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வுக்குப் பதிலாகச் சிறுபூர்ஷ்வாக் கற்பனையுலகத்தை வைப்பது தவிர வேறொன்றுமில்லை என்று நாம் இங்கே நிரூபிக்கத் தேவையில்லை. இவ்வகைப் பகுப்பாய்வு செய்யாததற்கு ஸிஸ்மொந்தீயைக் குறை கூற முடியாது. நவீன காலத் தேவைகள் விஷயத்தில் என்ன பங்கு செலுத்தவில்லை என்பதை வைத்து வரலாற்றுப் பிரமுகர்களின் வரலாற்று வழிப்பட்ட சேவைகள் மதிப்பிடப்படுவதில்லை, தமக்கு முன் சென்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிற போது அவர்கள் செலுத்திய புதிய பங்குகளை வைத்துத்தான் மதிப்பிடப்படுகிறார்கள். இங்கே நாம் ஸிஸ்மொந்தீயையோ அவரது தேர்ச்சிமுதிர்ச்சியற்ற, உணர்ச்சிவகைப்பட்ட பார்வை நிலையையோ மதிப்பிடவில்லை; ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வைச் சேர்ந்த பொருளாதாரவாதியைத்தான் மதிப்பிடுகிறோம்—இவர் இன்றைய நாள் வரைக்கும் இந்தப் பார்வை நிலைக்கும் புதிய தத்துவத்துக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ளவில்லை. இந்த வேற்றுமையைக் காட்டுவதற்கு ஸிஸ்மொந்தீ இயந்திரங்களுக்குப் பகைவரு இல்லையா என்று தாம் கேட்டிருக்கக் கூடாது, முதலாளித்துவ அமைப்புமுறையின்கீழ் இயந்திரங்களுக்குள்ள குறிபொருளை ஸிஸ்மொந்தீ புரிந்துகொண்டிருந்தாரா, இந்த அமைப்புமுறையின்கீழ் ஒரு முற்போக்கான காரணியாக இயந்திரங்கள் வகிக்கிற பாத்திரத்தை ஸிஸ்மொந்தீ புரிந்துகொண்டிருந்தாரா என்றுதான் தாம் கேட்டிருக்கவேண்டும் என்று எஃப்ரூஸி புரிந்துகொள்ளவில்லை. ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'' வின் பொருளாதாரவாதி அப்படிக் கேட்டுக்கொண்டிருந்தால், ஸிஸ்மொந்தீக்குச் சிறுபூர்ஷ்வா, கற்பனுவாதப் பார்வைநிலை இருந்ததின் காரணத்தால் இப்படிப்பட்ட பிரச்சினையை

எழுப்பக்கூட முடியவில்லை என்பதையும், புதிய தத்துவம் அப்பிரச்சினையை எழுப்புவதோடு விடையளிக்கவும் செய்கிறது, அதுவே அதன் தனிச்சிறப்பு, என்பதையும் குறித்துக் கொண்டிருப்பார். அப்படியானல், எஃப்ரூஸி இதைப் புரிந்து கொண்டிருக்கக்கூடும்: அதாவது, இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் இயந்திரங்கள் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரம் என்கிற பிரச்சினைக்குப் பதிலாகப் பொதுவாகவே இயந்திரங்கள் ''இலாபகரமாகவும்'' ''பயனுள்ளவையாகவும்'' இருப்பதற்குரிய நிலைமைகள் எனும் பிரச்சினையை ஸிஸ்மொந்தீ வைத்ததின் வழியாக முதலாளித்துவமும் முதலாளித்துவ முறையிலே இயந்திரங்களைப் பயன்படுத்துவதும் ''ஆபத்தானவை'' எனும் தத்துவத்துக்கு இயல்பாகவே வந்து சேர்ந்து முதலாளித்துவத்தின் வளர்ச்சியை ''வேகத்தில் குறைப்பதின்'', ''மிதப்படுத்துவதின்'', ''ஒழுங்கியாக்குவதின்'' அவசியத்தை எடுத்தியம்பினுர், எனவே அவர் **பிற்போக்காளர்** ஆனுர். முன்னேற்றத்துக்குரிய காரணியாக இயந்திரங்கள் வகிக்கும் வரலாற்றுவழிப்பட்ட பாத்திரத்தை ஸிஸ்மொந்தீ தத்துவம் புரிந்துகொள்ளத் தவறியதே அதை **பிற்போக்கானது** என்று புதிய தத்துவம் கருதுவதற்கான காரணங்களில் ஒன்ருகும்.

இயந்திரவழி உற்பத்தி பற்றிய நவீனகாலத் தத்துவத்தை (அதாவது, மார்க்ஸின் தத்துவத்தை) இங்கே நாம் விரித்துரைக்கப் போவதில்லை. மேலே சொன்ன நி. ஸீபர் ஆய்வின் ''இயந்திரங்களும் பெருமளவான தொழில்துறையும்'' என்கிற 10-ம் அத்தியாயத்தையும், குறிப்பாக ''இயந்திரவழி உற்பத்திபற்றிய தத்துவத்தைப் பற்றிய ஒரு பரிசீலனை'' எனும் 11-ம் அத்தியாயத்தையும்,* எடுத்துக்காட்டுக்கு, வாச

---

* இவ் அத்தியாயத்தின் துவக்கத்தில் ஸீபர் கூறுவதாவது: ''உண்மையாகச் சொன்னல், இயந்திரங்களைப் பற்றிய, பெருமளவான தொழில் துறை பற்றி இங்கே வரையுருப்படுத்தியிருக்கிற தத்துவம் புதிய சிந்தனைக்கும் மூலமுதலான ஆராய்ச்சிக்கும் வற்ருத தோற்றுவாயாகும்; இந்தத் தத்துவத்தின் சார்புநிலையான சிறப்புக்கூறுகளை முழுமையாக மதிப்பீடு செய்திட யாராவது எண்ணம் கொண்டால் இவ்வொரு விஷயத்தைப் பற்றி மட்டும் முழுவளவிலே நூல் ஒன்று எழுதவேண்டி நேரிடலாம்'' (பக்கம் 473).

கருக்குச் சுட்டிக் காட்டுகிறோம். மிகச் சுருக்கமான வரையுருவிலே அதன் சாராம்சத்தை இங்கே தருகிறோம். அதில் வடித்தெடுத்த இரண்டு அம்சங்களாவன: ஒன்று, முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் கட்டங்களில் ஒரு கட்டமாக இயந்திரவழி உற்பத்தி இடம் பெற்றிருப்பதையும் இயந்திரத் தொழில் தனக்கு முந்திய கட்டங்களோடு (முதலாளித்துவ முறையிலான எளிய வடிவிலமைந்த கூட்டுறவு, முதலாளித்துவ முறையிலான பட்டறைத்தொழில்) கொண்டுள்ள உறவையும் நிலைநாட்டிய வரலாற்றுவழிப்பட்ட பகுப்பாய்வு; இரண்டாவது, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கீழ் இயந்திரங்கள் வகிக்கும் பாத்திரத்தைப்பற்றிய பகுப்பாய்வு, குறிப்பாக: மக்களின் எல்லா வாழ்க்கை நிலைமைகளிலும் இயந்திரத்தொழில் கொணரும் மாற்றங்களைப் பற்றிய பகுப்பாய்வு. முதல் அம்சத்தை பொருத்தவரை, இயந்திரத் தொழில் என்பது முதலாளித்துவ உற்பத்தியின் ஒரு கட்டமே (அதாவது, உச்ச கட்டம்) ஆகும் என்று நிலைநாட்டி அது எவ்வாறு பட்டறைத் தொழிலினின்று உதித்தது என்று இந்தத் தத்துவம் புலப்படுத்தியது. இரண்டாம் அம்சத்தைப் பொருத்தவரை, இயந்திரத்தொழிலானது முதலாளித்துவச் சமுதாயத்தில் பிரம்மாண்டமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது—காரணம், அது உற்பத்திச் சக்திகளை அமோகமாக அதிகப்படுத்திச் சமுதாயம் முழுவதிலும் உழைப்பைச் சமுதாயமயமாக்குகிறது என்பது மட்டுமல்ல,* மற்றொரு காரணம்: அது பட்டறைத் துறை உழைப்புப் பிரிவினையை அழித்துவிடுகிறது, தொழிலாளிகளை ஒரு வகைப்பட்ட வேலையிலிருந்து வேறு வேலைகளுக்குப் போகும்படி நிர்ப்பந்திக்கிறது, பிற்பட்ட தந்தைவழியாட்சிக்கால உறவுமுறைகளின்

---

* கிராமச் சமூகத்திலுள்ள ''கூடிச்செய்யும் உழைப்பை'' இயந்திரத் தொழில் படைத்த முதலாளித்துவச் சமுதாயத்தில் உள்ளதோடு ஒப்பிட்டு ஸீபர் மிகச் சரியாகவே கூறுகிறார்: ''எடுத்துக்காட்டாகச் சொன்னால் 10 எனும் அலகுக்கும் 100 எனும் அலகுக்கும் இடையே என்ன வேற்றுமை இருக்கிறதோ கிட்டத்தட்ட அதே வேற்றுமைதான் கிராமச் சமூகத்தின் 'இணைக்கூறுக்கும்' இயந்திரவழி உற்பத்தி படைத்த சமுதாயத்தின் 'இணைக்கூறுக்கும்' இடையே உள்ளது'' (பக்கம் 495).

அழிவை—குறிப்பாகக் கிராமப்புறங்களிலே—முடித்துக் கொடுக்கிறது,* மேலே சொன்ன காரணங்களாலும் தொழில் துறை மக்கள்தொகைக் குவிப்பின் விளைவாகவும் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு ஆகமிக வலுவுள்ள தூண்டுவிசை அளிக்கிறது—என்று இந்தத் தத்துவம் நிலைநாட்டியது. மற்றெல்லாத் துறைகளிலும் முதலாளித்துவம் சாதிக்கிற முன்னேற்றத்தைப் போலவே இந்த முன்னேற்றத்துடனும் கூடவே முரண்பாடுகளின் ''முன்னேற்றமும்'' நிகழ்கிறது—அதாவது முரண்பாடுகள் தீவிரப்படுகின்றன, விரிவடைகின்றன.

ஒருவேளை வாசகர் கேட்கக்கூடும்; எல்லோருக்கும் தெரிந்திருக்கிற இப்படிப்பட்ட பிரச்சினை மீது—எல்லோருக்கும் ''பழக்கப்பட்டதாயும்'' எல்லோரும் ''ஒப்புக் கொள்கிறதாயும்'' இருக்கும் நவீனகாலத் தத்துவத்தைப்பற்றி இத்துணைச் சுருக்கமான சுட்டுக்குறிப்பு அளித்து—ஸிஸ்மொந்தீ கொண்டிருந்த கருத்துக்களைப் பரிசீலிப்பதிலே என்ன சுவை இருக்கிறது? என்று.

சரி, இந்த ''ஒப்புதல்'' எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்கு மிக முக்கியமான நரோத்னிக்குப் பொருளாதாரவாதியான திரு. நி.—ன்னை எடுத்துக்கொள்வோம், அவர் இந்த நவீனகாலத் தத்துவத்தைக்** கண்டிப்புடன் செயல்படுத்துவதாகச் சொல்லிக் கொள்கிறவர். உங்களுக்கு நினைவிருக்கலாம்: திரு. நி.—ன் தமது ''வரையுருக்களில்'' ருஷ்ய ஜவுளி ஆலைத் தொழிலின்—மிகப் பெரிய அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதே அதன் தன்மைக்குறிப்பான உருக்கூறுகும்—மூலதன உருவாக்கத்தைப் பயின்றுய்வதைத் தமது தனிச்சிறப்பான பணிகளில் ஒன்ருக எடுத்துக் கொண்டார்.

கேள்வி இதுதான்: இவ்விஷயத்தில் திரு. நி.—ன்னின் பார்வைநிலை என்ன—ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையா (முதலாளித்துவத்தின் பற்பல அம்சங்கள் மீது ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையை அவர் ஏற்பதை நாம் கண்டிருக்கிறோம்) நவீனகாலத் தத்துவத்தின் பார்வைநிலையா? இந்த

* பார்க்க: ஸீபர், மேற்படி நூல், பக்கம் 467.
** மார்க்ஸியத்தை.—(பதிப்பாசிரியர்.)

முக்கியமான விஷயத்தில் அவர் தன்னுணர்ச்சிவாதியா... அல்லது யதார்த்தவாதியா?*

நவீனகாலத் தத்துவத்தைத் தனிவேருகக் காட்டுகிற முதல் விஷயம், முதலாளித்துவப் பட்டறைத் தொழில்முறையிலிருந்து இயந்திரத் தொழில்முறை வளர்ந்ததைப் பற்றிய வரலாற்று வழிப்பட்ட பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதேயாகும் என்று பார்த்தோம். ருஷ்ய இயந்திரத்தொழில் வளர்ச்சிப் பிரச்சினையைத் திரு. நி.—ன் எழுப்பினுரா? கிடையாது. அதற்குமுன் முதலாளிக்காக வீட்டிலிருந்தபடியே வேலைசெய்வதும், கையுழைப்புத் ''தொழிற்சாலை**யும் இருந்தன என்று சொன்ஞர் என்பது உண்மையே; என்ற போதிலும் இயந்திரத் தொழிலுக்கு அதற்கு முந்தைய கட்டத்துடன் உள்ள உறவை அவர் விளக்கத் தவறியதோடு அல்லாமல், முந்தைய கட்டத்துக்கு (வீட்டிலே கையால் உற்பத்தி செய்வது அல்லது முதலாளியின் பட்டறையில் கையால் உற்பத்தி செய்வது) தொழிற்சாலை எனும் சொல்லைப் பயன்படுத்துவது விஞ்ஞானத் துறைமொழியில் தவருகும் என்பதைப் ''பார்க்கவும்'' தவறினுர், அதை நிச்சயமாக முதலாளித்துவப் பட்டறைத் தொழில் என்றுதான் வர்ணிக்க வேண்டும்.***

---

* அரசுத்தணிக்கை பற்றிய காரணங்களுக்காக மட்டுமே இங்கு மார்க்ஸியவாதி என்பதற்குப் பதிலாக ''யதார்த்தவாதி'' எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. அதே காரணத்துக்காகவே, ''மூலதனத்தை''ச் சுட்டிக்குறிப்பதற்குப் பதிலாக நாம் ஸீபரின் நூலைச் சுட்டிக்காட்டினேம்; அது மார்க்ஸின் ''மூலதனத்தை''ச் சுருக்கியளித்தது. (1908-ம் பதிப்புக்கு ஆசிரியரின் குறிப்பு.—பதிப்பாசிரியர்.)

** பக்கம் 108. ''மாஸ்கோ மாநிலப்புள்ளிவிபர ஏடுகள்'', தொகுதி 7, பகுதி 3, பக்கம் 32-லிருந்து மேற்கோள் (இங்கே கொர்ஸாக்கின் ''தொழில்துறை வடிவங்கள்'' எனும் நூலைப் புள்ளிவிபர இயலாளர்கள் சுருக்கித் தருகின்றனர்): ''1822-லிருந்து தொழில் அமைப்பே முற்ருக மாற்றம் அடைந்துள்ளது—சுதந்தரமான கைத்தொழில் உற்பத்தியாளர்களாக இருப்பதற்குப் பதிலாக விவசாயிகள் பெருமளவான தொழிற்சாலை உற்பத்திக்குரிய சில வேலைகளைச் செய்கிறவர்களாகிக் கூலி மட்டும் வாங்குகின்றனர்.''

*** சாதாரணமான துறைமொழி (தொழிற்சாலை, தொழிற்கூடம், முதலியவை) விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பொருத்

இந்த ''விடுபட்டுப்போனது'' முக்கியமற்றது என்று வாசகர் நினைக்கலாகாது. மாறாக, அது மாபெரும் முக்கியத்துவம் உள்ளதாகும். முதலாவதாக, அதன் வழியாக திரு. நி.—ன் முதலாளித்துவமும் இயந்திரத்தொழிலும் ஒன்றே என்று முற்றொருமைப்படுத்துகிறார். இது ஒரு மோசமான தவறு. முதலாளித்துவத்தின் கட்டங்களில் ஒன்றாக இயந்திரத்தொழிலின் உண்மையான இடத்தைத் தெளிவுபடுத்தியதே விஞ்ஞானத் தத்துவத்தின் முக்கியத்துவமாகும். இந்தத் தத்துவத்தின் பார்வைநிலையைத் திரு. நி.—ன் ஏற்றுக்கொண்டிருந்தால், இயந்திரத் தொழிலின் வளர்ச்சியையும் வெற்றியையும் ''இரண்டு பொருளாதார வடிவங்களிடையேயுள்ள போராட்டம்'' என்று வர்ணித்திருக்க இயலுமா? ''உற்பத்திக் கருவிகள் விவசாயிமக்களின் சொந்த உடைமையாயிருந்ததை அடிப்படையாகக் கொண்ட வடிவம்''* என்கிற யாருமறியாத ஒரு வடிவத்துக்கும் ''முதலாளித்துவத்துக்கும்'' இடையேயுள்ள போராட்டமாக வர்ணித்திருக்க இயலுமா? (பக்கங்கள் 2, 3, 66, 198, மற்றும்.). உண்மையிலே உள்ளது, நாம் பார்க்கிற இயந்திரத்தொழிலுக்கும் முதலாளித்துவ முறையிலான பட்டறைத் தொழிலுக்கும் இடையேயுள்ள போராட்டமே அல்லவா? இந்தப் போராட்டத்தைப் பற்றி திரு. நி.—ன் ஒரு வார்த்தையேனும் சொல்லவில்லை; தமது சிறப்புப் பயிற்சிக்கு எடுத்துக்கொண்ட ஜவுளி ஆலைத் தொழிலிலேயே, அவரே காட்டியவாறு, முதலாளித்துவத்தின் ஒரு வடிவம் நீக்கப்பட்டு அதனிடத்தில் மற்றொரு வடிவம் வைக்கப்படுவது நிகழ்ந்திருந்துங்கூட (பக்கம் 79) திரு. நி.—ன் அதைத் திரித்துக் காட்டினார், ''மக்களுடைய உற்பத்தி''** நீக்கப்பட்டு ''முதலாளித்துவம்'' வைக்கப்படுகிறது

தமற்றது என்று சரியாகவே ஸீபர் குறிப்பிட்டு, இயந்திரத் தொழிலுக்கும் முதலாளித்துவப் பட்டறைத் தொழிலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டுநிலையைக் குறிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்: பக்கம் 474.

* திரு. நி.—ன், பக்கம் 322. ஸிஸ்மொந்தீ தந்தை ஆட்சிக்கால விவசாயிப் பொருளாதாரத்தை இலட்சியநிலையில் வைப்பதற்கும் இதற்கும் கடுகளவேனும் வேற்றுமை உண்டா?

** ''மக்களுடைய உற்பத்தி'' என்ற சொற்களால் நரோத்னிக்குகள் கிராமச் சமூகத்தையும் (இதில் நிலம் தனிப்

என்று வர்ணித்தார். அடிப்படையிலே பார்த்தால், இயந்திரத்தொழிலின் **அசல்** வளர்ச்சிப் பிரச்சினையிலே அவருக்குச் சிறிதேனும் அக்கறை கிடையாது என்பதும் ''மக்களுடைய உற்பத்தி'' எனும் சொல் ஸிஸ்மொந்தீ முற்றுக உவக்கத் தக்க வகையிலே அமைந்த ஒரு கற்பனையுலகத்தை மூடி மறைக்கிறது என்பதும் தெளிவாகவில்லையா? இரண்டாவதாக, திரு. நி.—ன் ருஷ்யாவின் இயந்திரத்தொழிலின் வரலாற்று வளர்ச்சிப் பிரச்சினையை எழுப்பியிருந்தாரேயானுல், அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும் பற்றிய உண்மைகளை—ஐரோப்பாவிலும் இவ்வுண்மைகள் நிகழ்ந்துள்ளன—தமது வழக்குக்கு ஆதாரமாகக் கொண்டு ''முதலாளித்துவத்தைப் புகுத்துவது'' (பக்கங்கள் 331, 283, 323 மற்றும்) பற்றிப் பேசியிருக்க இயலுமா? கேள்வி இதுவே: ''புகுத்துவது'' பற்றி இதே போல் பேசிய ஸிஸ்மொந்தீயை அவர் காப்பியடிக்கிருரா அல்லது பட்டறைத்தொழில் இருந்த இடத்தில் இயந்திரத்தொழில் வந்துள்ளதை ஆய்ந்து பயின்ற புதிய தத்துவத்தின் பிரதிநிதியைக் காப்பியடிக்கிருரா? மூன்ருவதாக, ருஷ்யாவில் (ஜவுளி ஆலைத் தொழிலில்) முதலாளித்துவத்தின் வடிவங்களுடைய வரலாற்று வளர்ச்சிப் பிரச்சினையைத் திரு. நி.—ன் எழுப்பியிருந்தாரேயானுல் ருஷ்யாவின் ''கைத்திறத் தொழில்களில்'' முதலாளித்துவ முறையிலான பட்டறைத் தொழில் இருந்ததை அவர் புறக்

பட்ட விவசாயிகளுக்கல்ல, முழு சமூகத்திடம் சொந்தமாயிருந்தது), கைவினைஞர்களின் சங்கங்களையும் சுமை தூக்குகிறவர்கள், கட்டிடத்தொழிலாளர்கள் ஆகியோரின் அர்தெல்களையும் குறித்தனர். இவ்வகைக் கூட்டமைப்புகளினூடே பிளவு ஏற்படுகிறது, ஒரு துருவத்தில் பணக்கார விவசாயிகள். காண்டிராக்டர்கள் ஆகியோரான சிலர், மற்ருெரு துருவத்தில் ஏழைகள், பண்ணையாட்கள் தோன்றுகின்றனர் என்பதைப் பார்க்க விரும்பாமல் நரோத்னிக்குகள் ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்குத் தகுந்த அடிப்படையில்லை என்றும் இந்நாடு சோஷலிஸத்தை ''மக்களுடையஉற்பத்தியின்'' வாயிலாக அடையும் என்றும் கருத்தை முன்வைத்தனர். ''ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி'' எனும் நூலிலும் மற்ற தமது நூல்களிலும் வி. இ. லெனின் நரோதியத்தின் பிற்போக்கான கற்பனுவாதத்துக்கும் அன்றைய ருஷ்யாவின் பொருளாதார யதார்த்தத்துக்கும் எவ்விதப் பொருத்தமுமில்லை என்று ருசுபடுத்திஞர்.—(பதிப்பாசிரியர்.)

கணித்திருக்க இயலுமா?* அவர் உண்மையிலே தத்துவத்தைப் பின்பற்றியிருந்து இந்த உற்பத்தியின் ஒரு சிறு பகுதிக்காயினும் விஞ்ஞானப் பகுப்பாய்வைச் செயல்படுத்தியிருந்தாரேயானுல்—இதுவும் ''மக்களுடைய உற்பத்தி'' தான்—ருஷ்யச் சமுதாயப் பொருளாதாரத்தைப் பற்றிய அவர் சித்திரம், மலிவான கலைநயமற்ற ஸுஸ்தால் பாணியில் வண்ணம் தீட்டிய இந்தச் சித்திரம், என்னவாகி இருக்கும்? ஒரு தெளிவற்ற ''மக்களுடைய உற்பத்தியையும்'' அதிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட, வெறுமே ''வெகுசில'' தொழிலாளிகளையே கொண்டிருக்கிற, ''முதலாளித்துவத்தையும்'' அது சித்திரிக்கிறது (பக்கம் 326, மற்றும்).

சுருக்குவோம்: நவீனகாலத் தத்துவத்தைத் தன்னுணர்ச்சிவாதத் தத்துவத்திலிருந்து தனிவேறுபடுத்திக்காட்டுகிற முதல் அம்சத்தைப் பொருத்தவரை, திரு. நி.—ன் முதலில் சொன்ன தத்துவத்தைப் பின்பற்றுபவர் என்று எக்காரணத்தைக் கொண்டும் கருதமுடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் ஒரு தனிச்சிறப்பான கட்டமாக இயந்திரத் தொழிலின் எழுச்சிப் பிரச்சினையை முன்வைக்கவேண்டிய தேவையை அவர் உணரக்கூட இல்லை, முதலாளித்துவ முறையிலான பட்டறைத் தொழில்—இயந்திரங்களின் கட்டத்துக்கு முந்தியிருந்த முதலாளித்துவக் கட்டம்—இருத்தல் பற்றியும் மௌனம் சாதிக்கிருர். ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வுக்குப் பதிலாக, ''மக்களுடைய உற்பத்தி'' எனும் கற்பனையுலகத்தை நுழைக்கிருர்.

---

* பொதுவாகத் தெரிந்த இந்த உண்மையை இங்கே நிரூபிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறோம். பவ்லோவோ உலோகத் தொழிலாளர்கள், பகோரோத்ஸ்க் தோல் தொழில், கிம்ரி காலணித் தயாரிப்புத் தொழில், தொப்பிசெய்யும் மல்விதினோ மாவட்டம், துலா நகரைச் சேர்ந்த அக்கார்டியன், ஸமோவர் — தேநீர் தயாரிப்புப் பாத்திரம்—தொழில்கள், கிராஸ்னோயே ஸெலோ, ரிப்நாயா ஸ்லோபோதா நகைத்தொழில், ஸெம்யோனவ் சிறுகரண்டித் தொழில், ''உஸ்த்யான்ஷினு''வின் கொம்பு தொழில், ஸெம்யோனவ் வட்டம், நிழ்னி-நோவ்கோரத் மாவட்டம் கம்பளித்தொழில் முதலியவற்றை நினைவுபடுத்தினுல் போதும். இவற்றை நினைவிலிருந்து எடுத்துச்சொல்கிறோம். கைத்திறத் தொழில்களைப் பற்றி விசாரணை செய்தால் இந்தப் பட்டியலுக்கு முடிவே இராது.

இரண்டாவது அம்சம், இயந்திரத் தொழில் சமுதாய உறவுகளில் உண்டாக்கிய மாற்றங்களைப் பற்றிய நவீனகாலத் தத்துவம் சம்பந்தப்பட்டது. திரு. நி.—ன் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க முயலக்கூட இல்லை. முதலாளித்துவத்தைப் பற்றி நிறைய குறை தெரிவித்துத் தொழிற்சாலையின் தோற்றத்தைப் பற்றி வருந்தினார் (ஸிஸ்மொந்தீ செய்த மாதிரியே), ஆனால் சமுதாய உறவுகளில் தொழிற்சாலை* உண்டாக்கிய மாற்றத்தைப் பயின்றாய்ந்திட முயலக்கூட இல்லை. அப்படிச் செய்வதற்கு இயந்திரத் தொழிலை அதற்கு **முந்தைய கட்டங்களுடன்** ஒப்புநோக்கவேண்டிய அவசியம் இருந்திருக்கும், இந்தக் கட்டங்களை திரு. நி.—ன் சுட்டிக்காட்டுகிறதில்லை. அதே போல், **இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில்** இயந்திரங்கள் முன்னேற்றத்துக்குக் காரணியாக இருப்பது பற்றிய நவீனகாலத் தத்துவத்தின் பார்வைநிலையும் அவருக்கு முற்றும் புறம்பானதாகும். இங்கேயும் பிரச்சினையை வைக்கக்கூட இல்லை**, **வைக்கவும் முடியவில்லை**; ஏனெனில், **முதலாளித்துவத்தின் ஒரு வடிவத்தின்** இடத்தில் மற்றொரு வடிவம் அமைவது பற்றிய வரலாற்றுப் பயிற்சியிலிருந்து மட்டுமே இப்பிரச்சினை எழ முடியும்; ஆனால் திரு. நி.—ன் கருத்தில் முதலாளித்துவம் tout court*** "மக்களுடைய உற்பத்தியை" நீக்கிவிடுகிறது.

ருஷ்யாவின் ஜவுளி ஆலைத் தொழிலின் மூலதன உருவாக்கம் பற்றிய திரு. நி.—ன் "பயிற்சி" அடிப்படையில் அவர் இயந்திரங்களை எப்படிக் கருதுகிறார் என்று கேட்போமேயானால் ஸிஸ்மொந்தீ நூலில் நமக்கு ஏற்கனவே பழக்கமான பதிலைத்தவிர வேறொன்றும் கிடைக்க முடியவில்லை. ஸிஸ்மொந்தீ செய்த மாதிரியே, இயந்திரங்கள் உழைப்பின் உற்

---

* இந்தச் சொல்லின் விஞ்ஞான அர்த்தமும் சாதாரணமான அர்த்தமும் ஒன்றல்ல என்பதை வாசகர் மறக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். விஞ்ஞானம் இந்தச் சொல்லைப் பெருமளவான இயந்திரத் தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்துகிறது.

** எடுத்துக்காட்டாக, ஆ. வோல்கின் செய்தது போல; பார்க்க: அவரது "திரு. வரன்ட்ஸோவ் (வி.வி.) நூல்களில் "நரோதியத்தின் நிரூபணம்", செயின்ட் பிட்டர்ஸ்பர்க், 1896.

*** வெறுமே.—(பதிப்பாசிரியர்.)

பத்தித் திறனை அதிகப்படுத்துவதை அவரும் ஒப்புக் கொள்கிறார் (அதை மறுக்கும் துணிச்சல் அவருக்கு இல்லை!). ஸிஸ்மொந்தீ செய்த மாதிரியே, இயந்திரங்கள் தீங்கானவை அல்ல, அவற்றை முதலாளித்துவம் பயன்படுத்துவதுதான் தீங்காயுள்ளது என்று அவரும் கூறுகிறார். ஸிஸ்மொந்தீ செய்த மாதிரியே, இயந்திரங்களைப் புகுத்தியதில் உற்பத்தியானது ''மக்களின் வாங்கும் சக்தியுடன்'' பொருந்தியிருக்க வேண்டும் என்கிற உண்மையை ''நாம்'' பார்க்கவில்லை என்று அவரும் நம்புகிறார்.

அவ்வளவுதான். அதற்குமேல் திரு. நி.—ன் எதையும் நம்பவில்லை. நவீனகாலத் தத்துவம் எழுப்பித் தீர்வும் அளித்துள்ள பிரச்சினைகளுக்கு அவர் செவி மடுக்க மாட்டார்; ஏனெனில் ருஷ்யாவில்(சொல்லப் போனால்,அவர் எடுத்துக்கொண்ட ஜவுளி ஆலைத்தொழிலை எடுத்துக்காட்டாகக் கொண்டு) முதலாளித்துவ உற்பத்தியின் வெவ்வேறான வடிவங்களின் வரலாற்று வழிப்பட்ட வரிசைத் தொடரையோ, இன்றைய முதலாளித்துவ அமைப்புமுறையில் முன்னேற்றத்துக்குரிய ஒரு காரணியாக இயந்திறங்கள் வகிக்கிற பாத்திரத்தையோ, அவர் பரிசீலிக்க முயலக்கூட இல்லை.

ஆக, இயந்திரங்கள் பற்றிய பிரச்சினையில் கூட—தத்துவார்த்த வழிப்பட்ட அரசியல் பொருளாதாரத்துக்கு உன்னதமான முக்கியத்துவமுள்ள இந்தப் பிரச்சினையில் கூட—திரு. நி.—ன் ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையை ஏற்கிறார். அப்படியே ஒரு தன்னுணர்ச்சிவாதியைப் போல அவர் வாதிக்கிறார், எனினும் மேற்கோள் காட்டுவதில் குறைச்சல் இல்லை.

ஜவுளி ஆலைத்தொழில் உதாரணத்துக்கு மட்டுமின்றி, திரு. நி.—ன்னுடைய எல்லா வாதங்களுக்கும் இது பொருந்தும். மேலே சொன்ன மாவரைக்கும் ஆலைத் தொழில் உதாரணத்தை எடுத்துக் கொண்டு பார்ப்போம். இயந்திரங்களைப் புகுத்தியதை திரு. நி.—ன் சுட்டிக்காட்டியது ஒரு சாக்காகத்தான், உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட அதிகரிப்பு ''மக்களின் வாங்கும் சக்திக்கு''ப் பொருத்தமாயில்லை எனும் உணர்ச்சிவகையான ஒப்பாரி வைப்பதற்கு ஒரு சாக்காகத்தான். இயந்திரத் தொழில் சமுதாய அமைப்பு முறையில் பொதுவாகவே புகுத்தக்கூடிய (ருஷ்யாவில் அசலில் புகுத்தி

விட்ட) மாற்றங்கள் பொருத்தவரை, அவற்றைப் பரிசீலிக்க வேண்டும் என்று அவர் சிந்திக்கக்கூட இல்லை. இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் இந்த இயந்திரங்களைப் புகுத்துவது முன்னேற்றகரமான படியா எனும் பிரச்சினை அவருக்கு அறவே புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும்*.

திரு. நி.—ன் குறித்து நாம் சொன்னது a fortiori** மற்ற நரோத்னிக்குப் பொருளாதாரவாதிகளுக்கும் பொருந்தும்; இயந்திரங்கள் பற்றிய பிரச்சினையில், இன்றுவரை சிறுபூர்ஷ்வாத் தன்னுணர்ச்சிவாதப் பார்வைநிலையை நரோதியம் பற்றி நிற்கிறது, பொருளாதாரப் பகுப்பாய்வுக்குப் பதிலாக உணர்ச்சிவகையான விருப்பங்களை வைக்கிறது.

X

காப்பு முறை***

ஸிஸ்மொந்தீயின் கருத்துத்தொகைமுறையில் நமக்கு அக்கறையுள்ள கடைசித் தத்துவார்த்தப் பிரச்சினை காப்பு முறை பற்றிய பிரச்சினையாகும். "Nouveaux Principes" என்ற நூலில் இந்தப் பிரச்சினைக்கு நிறையவே பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; எனினும் அதில் அந்தப் பிரச்சினை நடைமுறை அம்சத்தை வைத்தே பெரும்பாலும் பரிசீலிக்கப்படுகி

---

* திரு. நி.—ன் கருத்துக்களைப் பற்றி மார்க்ஸின் தத்துவ அடிப்படையில் உள்ள சுருக்க விமர்சனம் நூல்வாசகத்தில் உள்ளது; இதை நான் பின்னால் ''முதலாளித்துவத்தின் வளர்ச்சி''யில் நிறைவாக்கி முடித்தேன். (1908-ம் பதிப்புக்கு ஆசிரியரின் குறிப்பு.—பதிப்பாசிரியர்.)

** மேலும் வலுவாக.—(பதிப்பாசிரியர்.)

*** காப்புமுறை என்பது வெளிநாட்டுப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் உயர்வான சுங்கவரிகள், செலாவணித் தடுப்புகள், உள்நாட்டுப் பண்டங்களின் ஏற்றுமதிக்கு உதவி செய்வது, ஏற்றுமதிச் சுங்கவரிகளை இறக்குதல் இவையெல்லாவற்றின் வழியாக ஒரு குறிப்பிட்ட நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சியைத் தூண்டுவது, அதை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து காப்பாற்றுவது ஆகியவை நோக்கமாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் ஓர் அமைப்பு முறையாகும்.—(பதிப்பாசிரியர்.)

றது. பிரிட்டனின் தானிய வரிச் சட்ட எதிர்ப்பு இயக்கம்* சம்பந்தப்பட்டது அது. இந்தப் பிரச்சினையைப் பின்னுல் பார்ப்போம், ஏனெனில் அதில் வேறு, மேலும் விரிவான, பிரச்சினைகள் அடங்கியுள்ளன. இப்பொழுது இங்கே நமக்கு அக்கறையுள்ள விஷயம் காப்புமுறை பற்றிய ஸிஸ்மொந்தீயின் **பார்வைநிலையாகும்.** இப்பிரச்சினையில் சுவையாயிருக்கும் அம்சம் ஸிஸ்மொந்தீயின் ஒரு புதிய, விவாதிக்கப்படாத, பொருளாதாரக் கருத்துரு அல்ல, ''பொருளாதாரத்துக்கும்'' ''மேற்கட்டுமானத்துக்கும்'' உள்ள உறவைப் பற்றிய அவரது ஞானமேயாகும். ஸிஸ்மொந்தீ ''நவீன காலத்திய வரலாற்றுக் கருத்துப் பிரிவின் முதன்முதலான ஆற்றல் மிக்க முன்னேடிகளில் ஒருவர்'' என்றும், அவர் ''பொருளாதார நிகழ்ச்சித் தோற்றங்களை மற்றெல்லாச் சமுதாயக் காரணங்களினின்று தனிமைப்படுத்துவதை எதிர்க்கிறவர்'' என்றும் ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வின் வாசகர்களுக்கு எஃப்ரூஸி உறுதிகூறுகிறுர். ''பொருளாதார நிகழ்ச்சித் தோற்றங்களை மற்ற சமுதாயக் காரணிகளினின்று தனிமைப்படுத்தலாகாது, சமுதாய-அரசியல் தன்மையுள்ள உண்மைகளோடு தொடர்புபடுத்தி அவற்றைப் பயிலவேண்டும் எனும் கருத்து ஸிஸ்மொந்தீயின் நூல்களில் வெளியிடப்படுகிறது'' (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ, இதழ் 8, பக்கங்கள் 38-39). சரி, நாம் எடுத்துக் கொண்டுள்ள உதாரணத்திலிருந்து பொருளாதார நிகழ்ச்சித் தோற்றங்களுக்கும் சமுதாய-அரசியல் நிகழ்ச்சித் தோற்றங்களுக்கும் உள்ள சம்பந்தத்

* தானியச் சட்டங்கள்—1815ல் பணக்கார நிலவுடைமைக்காரர்களின் நலன்களுக்காக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் தானிய ஏற்றுமதியின் மீது போடப்பட்ட உயர்ந்த சுங்கவரிகள். மிக ஏழ்மையான மக்கள் பகுதியினரின் நிலைமையை மோசமாக்கி வந்த தானியச் சட்டங்கள் அதே நேரத்தில் தொழில் முதலாளிகளுக்கும் இலாபகரமானவையாக இருக்கவில்லை; ஏனென்றுல் இச்சட்டங்கள் உழைப்புச் சக்தியின் விலையை உயர்த்தின, உள்நாட்டுச் சந்தையின் அளவைக் குறைத்தன, வெளிநாட்டு வியாபாரத்தின் வளர்ச்சியைத் தடுத்தன. தானியச் சட்டங்களுக்கெதிராகத் தொழில்முதலாளிகள் பல ஆண்டுகளாக நடத்திய போராட்டம் 1846ல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அவற்றை நீக்குவதற்கான சட்டத்தை நிறைவேற்றியதோடு முடிவடைந்தது.—(பதிப்பாசிரியர்.)

தை ஸிஸ்மொந்தீ எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார் என்று பார்ப்போம்.

''சுங்க வரிகள் பற்றி'' எனும் அத்தியாயத்தில் (I.IV, அத்தியாயம் 9) ஸிஸ்மொந்தீ கூறுவதாவது: ''ஏற்றுமதிக்குத் தடை விதிப்பது போலவே இறக்குமதிக்குத் தடை விதிப்பதும் விவேகமற்றது, நாசகரமானது. நாட்டில் இன்னமும் அமையாதிருக்கும் பட்டறைத்தொழிலை உண்டாக்கித் தருவதற்காகவே அது புனையப்பட்டது; பிறந்த நிலையிலிருக்கும் தொழிலுக்கு அது மிக வலுவான ஊக்க போனஸ் போன்று இருப்பதை மறுக்க முடியாது. நாடு நுகர்கிற ஒரு வகைச் சரக்குகளில் நூற்றில் ஒரு பகுதியை இந்தப் பட்டறைத் தொழில் ஒரு வேளை உற்பத்தி செய்கிறதாயிருக்கலாம். ஒரே யொரு வியாபாரியிடம் சரக்குகள் வாங்குவதற்கு நூறு பேர் போட்டியிட்டுக் கொள்ளவேண்டும், அவன் விற்க மறுக்கும் தொண்ணூற்று ஒன்பது பேர் கள்ளச் சரக்குகளைக் கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கும். அப்படியானால், நாட்டுக்கு நஷ்டம் நூறுக்குச் சமமாயும் இலாபம் ஒன்றுக்குச் சமமாயும் இருக்கும். இந்தப் புதிய பட்டறைத்தொழிலால் நாடு எவ்வளவுதான் இலாபமடைந்த போதிலும் இவ்வளவு பெரிய தியாகத்தை நியாயப்படுத்தமுடியாதபடி சொற்பமாகத் தான் இருக்கும். இப்படிப்பட்ட பட்டறைத் தொழிலைச் செயலுக்கு ஊக்கிவிட குறைந்த வீண்செலவுள்ள வழிதுறைகளை எப்போதும் தேடிக்கொள்ள முடியும்'' (I, 440-441).

எவ்வளவு எளிதாக இந்தப் பிரச்சினையை ஸிஸ்மொந்தீ தீர்க்கிறார், பாருங்கள்: ''நாட்டுக்கு'' நஷ்டம் என்பதால் காப்புமுறை ''விவேகமற்றதாம்''!

நமது பொருளாதாரவாதி எந்த ''நாட்டை''ப் பற்றிப் பேசுகிறார்? குறிப்பிட்ட சமுதாய-அரசியல் உண்மையுடன் எந்தப் பொருளாதார உறவுகளை அவர் சம்பந்தப்படுத்துகிறார்? அவர் திட்ட வட்டமான உறவுகளை எடுத்துக்கொள்கிறதில்லை, பொதுப்படையாகவே வாதிக்கிறார், **எப்படி இருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறாரோ அப்படி இருக்க வேண்டிய** ஒரு நாட்டைப்பற்றி. எப்படி இருக்கவேண்டும் என்கிற இந்தக் கருத்தோட்டம் முதலாளித்துவத்தை விலக்கி வைக்கிறதை, சிறிய சுதந்தரமான உற்பத்தி ஆட்சி புரிவதை, அடிப்படையாகக் கொண்டிருப்பதை நாமறிவோம்.

ஆனால், குறிப்பிட்ட பொருளாதார அமைப்புமுறைக்கு மட்டும் சொந்தமான ஒரு சமுதாய—அரசியல் காரணியை ஏதோவொரு கற்பனையான அமைப்புமுறையுடன் சேர்ப்பது முற்றும் அபத்தமாகும். காப்புமுறை என்பது முதலாளித்துவத்தின் ''சமுதாய-அரசியல் காரணி'', ஆனால் ஸிஸ்மொந்தீ அதை முதலாளித்துவத்துடன் சேர்க்கிறதில்லை, பொதுப்படையான ஏதோவொரு நாட்டுடன் (அல்லது சிறிய சுதந்தரமான உற்பத்தியாளர்களைக் கொண்ட ஒரு நாட்டுடன்) சேர்க்கிறார். உதாரணத்துக்குச் சொன்னால், அவர் காப்புமுறையை ஒருவேளை இந்தியக் கிராமச் சமூகத்துடன் சேர்த்து, அந்தக் காப்புமுறையின் ''மடமை'' பற்றியும் ''அழிவு'' பற்றியும் மேலும் விளக்கமான உதாரணத்தைப் பெற்றிருக்க முடியும். ஆனால் இந்த ''மடமை'' காப்புமுறைக் குரியதல்ல, அவரது சேர்க்கையினுடையதாகவே இருக்கும். திரளான மக்களின் நஷ்டத்தில் வெகு சிலருக்கு மட்டும் காப்புமுறை இலாபகரமானது என்று காட்டுவதற்கு ஒரு குழந்தைத்தனமான கணக்குப் போடுகிறார் ஸிஸ்மொந்தீ. அப்படிச் செய்யவேண்டிய தேவையில்லை, ஏனெனில் காப்புமுறை (அது ஒரு நேரடியான மானியம் எனும் வடிவம் கொண்டிருந்தாலும் சரி, அல்லது வெளிநாட்டுப் போட்டியாளர்களை நீக்குகிற வடிவம் கொண்டிருந்தாலும் சரி, வித்தியாசம் ஏதும் இல்லை) எனும் கருத்துருவிலிருந்தே ஏற்கனவே தெளிவாயிருக்கிற விஷயமாகும். காப்புமுறை ஒரு சமுதாய முரண்பாட்டைக் காட்டுகிறது என்பது சர்ச்சைக்கிடமற்றது. ஆனால் காப்புமுறையை உண்டாக்கிய அமைப்புமுறையின் பொருளாதார வாழ்க்கையில் முரண்பாடுகள் கிடையாதா? நிறைய முரண்பாடுகள் உண்டு, அவற்றை ஸிஸ்மொந்தீயே தமது நூல் முழுவதிலும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் குறிப்பிட்டிருந்த பொருளாதார அமைப்புமுறையின் முரண்பாடுகளிலிருந்து இந்த முரண்பாட்டை முடிவாக வருவிப்பதற்குப் பதிலாக ஸிஸ்மொந்தீ முரண்பாடுகளைப் புறக்கணிக்கிறார், முற்றும் பொருளற்ற ''அப்பாவித்தனமான விருப்பங்கள்'' நிலைக்குத் தமது வாதத்தைத் தாழ்த்துகிறார். அவர் கருத்துப்படி ஒரு சின்னஞ்சிறு குழுவுக்கு ஆதாயமளிக்கிற இந்த அமைப்பை இந்தக் குழு நாட்டின் பொருளாதாரத்தில் வகிக்கும் நிலையுடனும் இக்குழுவின் நலன்களுடனும் சேர்ப்பதற்குப்

பதிலாக, அதைப் ''பொது நலம்'' எனும் சூட்சுமக் கோட்பாட்டுடன் சேர்க்கிறார். எனவே, எஃப்ருஸியின் வல்லுரைக்கு மாறாக, ஸிஸ்மொந்தீ பொருளாதார நிகழ்ச்சித் தோற்றங்களை (காப்புமுறையைப் பொருளாதார அமைப்புமுறைக்கு அப்பால் நிறுத்திக் கருதுவதனால்) மற்றவற்றினின்று தனிமைப் படுத்தவே செய்கிறார், பொருளாதார உண்மைகளுக்கும் சமுதாய-அரசியல் உண்மைகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய கருத்தோட்டம் ஏதும் இல்லை. நாம் மேற்கோள் காட்டிய கண்டனவுரையிலே அவர் தத்துவாசிரியர் என்கிற முறையில் காப்புமுறைப் பிரச்சினைக்கு அளிக்கக்கூடிய பங்கு அனைத்தும் அடங்கியுள்ளது, பாக்கியுள்ளதெல்லாம் வெறுமே அதன் பொழிப்புரைதான். ''இந்த ஆதாயத்துக்காக (பட்டறைத் தொழில் வளர்ச்சிக்காக) என்ன விலை கொடுக்கிறோம், நுகர்வோர் மீது என்ன கொடிய தியாகங்களைச் சுமத்துகிறோம் என்று அரசாங்கங்கள் முற்றாக உணர்ந்திருப்பது சந்தேகந்தான்'' (I, 442-443). ''ஐரோப்பாவிலுள்ள அரசாங்கங்கள் மீற விரும்பியது'' (faire violence à la nature) எந்த இயல்பை? முதலாளித்துவத்தின் இயல்பையா காப்புமுறை ''மீறுகிறது''? ''ஒரு வகையில் (en quelque sorte) நாடு பொய்யான நடவடிக்கையில் செல்லும்படி பலவந்தப்படுத்தப்பட்டது'' (I, 448). ''மேலும் மலிவாக விற்க உதவும் நோக்குடன் வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்கும் அளவுக்குச் சில அரசாங்கங்கள் சென்றுள்ளன; எவ்வளவுக்கெவ்வளவு இந்தத் தியாகம் விந்தையாயிருக்கிறதோ, எவ்வளவுக் கெவ்வளவு அது மிக எளிதான கணக்குடனும் முரண்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது மேலிடத்து அரசியலாகக் கருதப்படுகிறது.... குடிமக்களின் நஷ்டத்தில் வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்கிறது அரசாங்கம்'', (I, 421), என்றவாறு. இவ்வகை வாதங்களைத்தான் ஸிஸ்மொந்தீ நம் முன் வைக்கிறார்! அவரது நூலின் பிற பகுதிகளில், இவ்வாதங்களிலிருந்து முடிவு எடுப்பதுபோல, அவர் முதலாளித்துவத்தை ''செயற்கையானது'', ''புகுத்தப்பட்டது'' (I, 379),''செயற்கை வெப்பமுள்ள தோட்டத்து விளைபொருள்'' (II,456) என்றெல்லாம் அழைக்கிறார். குறிப்பிட்ட முரண்பாடுகள் பற்றிய பகுப்பாய்வுக்குப் பதிலாக அப்பாவித்தனமான விருப்பங்களை வைத்ததிலே தொடங்கி அந்த விருப்பங்களுக்குப்

பொருந்தும் வகையிலே யதார்த்தத்தைப் பச்சையாகத் திரித்துவிடுகிற நிலைக்கு வந்து சேருகிறார். அவர் கருத்தில், எவ்வளவோ வெறியார்வத்துடன் ''ஆதரிக்கப்படுகிற'' முதலாளித்துவம் பலவீனமானது, அடிப்படையற்றது, என்றவாறு; அது நாட்டின் பொருளாதாரத்தில் மேலாதிக்கமுள்ள பாத்திரம் வகிக்கிறதில்லை, எனவே சிற்றளவு உற்பத்தி முறையே மேலாதிக்கமுள்ள பாத்திரம் வகிக்கிறது, என்றவாறு. ஒரு திட்டவட்டமான பொருளாதார அமைப்பு முறைதான், அந்த அமைப்பு முறையின் திட்டவட்டமான முரண்பாடுகள் தாம் காப்புமுறையைத் தோற்றுவித்தன என்கிற ஐயப்பாடற்ற, சர்ச்சைக்கிடமற்ற உண்மை—தேசியப் பொருளாதாரத்தில் **மேலாதிக்கமுள்ள** பாத்திரம் வகிக்கிற ஓர் உண்மையான வர்க்கத்தின் உண்மையான நலன்களையே அது வெளியிடுகிறது எனும் உண்மை—ஒரு சில உணர்ச்சிவகைப்பட்ட சொற்றொடர்களைக் கொண்டு ஒன்றும் அற்றதாகச் செய்யப்படுகிறது, அதன் எதிர்மறையாகக்கூடச் செய்யப்படுகிறது! இதோ, மற்றொரு முன்மாதிரி (விவசாயப் பாதுகாப்பு பற்றி—I, 265, தானியச் சட்டங்கள் பற்றிய அத்தியாயம்):

''விவசாயத்தை மேம்படுத்துவதற்கு—அதாவது, மேலும் நிறைவாக விவசாயப் பொருட்களை மேலும் மலிவான விலைக்குத் தாங்கள் பெற்றுக்கொள்வதற்கு—உள்ள ஒரே சாதனம் தங்களுடைய பெரிய பண்ணைகள்தாம் என்று ஆங்கிலேயர்கள் நம்மை நம்பச் சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலே பார்த்தால், அவர்கள் செய்வது எதிர்மாறானதாகும்; மேலும் உயர்ந்த விலைக்குத்தான் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்''....

தன்னுணர்ச்சிவாதியின் வாதமுறைகளை வெகு விளக்கமாக வெளிப்படுத்தும் இந்த வாசகப்பகுதி வியக்கத்தக்க வகையிலே தன்மைக்குறிப்பானதாயுள்ளது; இந்த வாதமுறைகள் அப்படியே முற்றாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ருஷ்ய நரோத்னிக்குகள். முதலாளித்துவ முறையிலான சாகுபடியும் சரி, அத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றமும் சரி, வேண்டுமென்றே புகுத்தப்பட்ட ஓர் அமைப்புமுறையாகச் சித்திரிக்கப்படுகிறது: இந்த அமைப்புமுறைதான் விவசாயத்தை மேம்படுத்துவதற்குள்ள ஒரே சாதனம் என்று ஆங்கிலேயர்கள் (அதாவது, ஆங்கிலேயப் பொரு

ளாதாரவாதிகள்) நம்மை நம்பச் சொல்கிறார்களாம். விவசாயத்தை மேம்படுத்துவதற்கு முதலாளித்துவ முறையிலான சாகுபடி தவிர வேறு சாதனமும் ''இருக்க முடியும்'' என்று ஸிஸ்மொந்தீ சொல்ல விரும்புகிறார் — அதாவது, ஏதோவொரு சூட்சுமநிலையிலுள்ள சமுதாயத்தில் ''இருக்க முடியும்'', ஒரு திட்டவட்டமான வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த யதார்த்தமான சமுதாயத்தில் அல்ல, ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகள் சொல்கிற — ஸிஸ்மொந்தீயும் சொல்லியிருக்கவேண்டிய—பண்ட உற்பத்தி அடிப்படையிலிருக்கும் ''சமுதாயத்தில்'' அல்ல. ''விவசாயத்தை மேம்படுத்துவது, **அதாவது** மேலும் நிறைவாக விவசாயப் பொருட்களைத் தாங்கள் பெற்றுக் கொள்வது''—இங்கே ''தாங்கள்'' என்பது நாட்டைக் குறிக்கிறதா? ''அதாவது'', அப்படியில்லவேயில்லையாம். விவசாயத்தின் மேம்பாடு என்பதும் மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட உணவு என்பதும் ஒன்றல்ல. அவ்விரண்டும் ஒன்றாகப் பொருந்த மாட்டா என்பது சாத்தியம் மட்டுமல்ல, ஸிஸ்மொந்தீ எவ்வளவோ வெறியார்வத்துடன் தவிர்க்க விரும்பும் பொருளாதார அமைப்புமுறையின்கீழ் அது தவிர்க்கமுடியாததுமாகும். எடுத்துக்காட்டாக, உருளைக்கிழங்குச் சாகுபடியில் காண்கிற உயர்வு விவசாயத்தில் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளதை (கிழங்குவகைப் பயிர்களைப் புகுத்தல்) குறிக்கக் கூடும், மிகுதி மதிப்பு உயர்ந்துள்ளதையும் குறிக்கக் கூடும், அதே நேரத்தில் தொழிலாளர்களின் உணவு ஊட்டங்குறைந்தும் போகலாம். சொற்றொடர்களைக் கொண்டு யதார்த்த வாழ்க்கையின் முரண்பாடுகளை நீக்கி விடும் நரோத்னிக்கின்... அதாவது, தன்னுணர்ச்சிவாதியின்... பழக்கத்துக்கு இது மற்றோர் உதாரணம்.

ஸிஸ்மொந்தீ தொடர்கிறார்: ''இந்தச் சாகுபடியாளர்கள் எவ்வளவோ பணமும் அறிவும் படைத்தவர்கள், விஞ்ஞான முன்னேற்றத்தின் ஆதரவும் இவர்களுக்கு எவ்வளவோ உண்டு (secondés), எவ்வளவோ நேர்த்தியான குதிரைகளும், திடமான வேலிகளும், துப்புரவாகக் களையெடுக்கப்பட்ட நிலங்களும் உடையவர்கள்; என்றாலும் இவர்கள் போலந்து நாட்டு விவசாயியுடன் போட்டியிட முடியாது. அவன் பரம ஏழை, அறியாமையில் மூழ்கியிருப்பவன், அடிமை முறை

யால் நசுக்கப்பட்டவன், மனத்தைத் தேற்றிக்கொள்ளச் சாராயத்தை நாடுகிறவன், அவனது விவசாயம் ஆதிகால நிலேயிலேயே இருக்கிறது. போலந்தின் மத்தியப் பிரதேசத்தில் அறுவடையான தானியம், கட்டணம் செலுத்தி நதி, தரை, கடல் வழிகளிலே பல்லாயிரக் கணக்கான மைல்கள் கடந்து வந்து, மதிப்பளவுக்குத்தக்கபடி 30, 40 சதவீத இறக்குமதி வரிகளும் செலுத்திய பிறகும் இங்கிலாந்தின் செல்வமிக்க மாநிலங்களின் தானியத்தைவிட மலிவாகவே உள்ளது'' (I, 265). ''இந்த வேறுபாட்டைக் கண்டு ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகள் திகைக்கின்றனர்''. வரிகள் முதலியவற்றை அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனுல் விஷயம் அதுவல்ல. ''சுரண்டும் அமைப்புமுறையே மோசமானது, அது ஆபத்தான அடிப்படையில் நிற்கிறது.... அண்மைக் காலத்தில், இந்த அமைப்புமுறையை நாம் வியந்து பாராட்டக் கூடிய பொருளாக எல்லா எழுத்தாளர்களும் காட்டி வந்துள்ளனர். நம்மைப் பொருத்தவரை, அதைக் காப்பியடிப்பதைத் தவிர்க்கும் நோக்குடன் அதை நன்கு ஆய்ந்து பயிலவேண்டும்'' (I, 266).

உண்மையிலே, இந்தத் தன்னுணர்ச்சிவாதியின் அப்பாவித்தனத்துக்கு எல்லேயேயில்லே! இவர் ஆங்கிலநாட்டு முதலாளித்துவத்தை (வர்த்தக முறையிலான சாகுபடியை) பொருளாதாரவாதிகளின் தவருன அமைப்புமுறையாகக் காட்டுகிருர்; வர்த்தக முறையிலான சாகுபடியின் முரண்பாடுகளேக் காண மறுக்கும் பொருளாதாரவாதிகளின் ''திகைப்பு'' சாகுபடியாளர்களுக்கு எதிராக இருக்கக்கூடிய போதிய வலுவுள்ள வாதம் என்று நிளேத்துக் கொள்கிருர்! இவரது ஞானமும் எவ்வளவு மேலோட்டமானதாயிருக்கிறது! பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளுக்குரிய விளக்கத்தை வெவ்வேறு வர்க்கங்களின் நலன்களிலே தேடியடைவதற்குப் பதிலாக, பொருளாதாரவாதிகள், எழுத்தாளர்கள், அரசாங்கங்கள் ஆகியோரின் தவறுகளிலே அதைத் தேடிக் கொண்டிருக்கிருர்! நல்லவர் அல்லவா ஸிஸ்மொந்தீ, அவர் ஆங்கிலேயச் சாகுபடியாளர்களின் மனச்சாட்சியையும் (ஐரோப்பா கண்டத்தின் சாகுபடியாளர்களின் மனச் சாட்சியையும்) குத்தித்தூண்டிவிட்டு, இப்படிப்பட்ட ''மோசமான'' அமைப்பு முறைகளேக் ''காப்பியடிக்காத படி'' தடுக்கும் நோக்குடன் அவர்களே வெட்கித் தலே குனியச் செய்ய விரும்புகிருர்!

இடையே ஒரு சொல். இது எழுபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது என்பதையும், இன்னமும் முற்றுகப் புதிதாக வே இருந்த இந்த நிகழ்ச்சித் தோற்றங்களின் முதற் படிகளேயே ஸிஸ்மொந்தீ கண்ணெதிரே பார்த்து வந்தார் என்பதையும் மறந்துவிடாதீர்கள். அவரது அப்பாவித்தனம் மன்னிக்கத் தக்கதே. காரணம், மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளுங்கூட (அவருக்குச் சமகாலத்தவர்கள்) அதே அப்பாவித்தனத்துடனேயே இந்தப் புதிய நிகழ்ச்சித் தோற்றங்கள் மனித இயல்பின் நிரந்தரமான, இயற்கையான பண்புகளின் விளைபொருள் என்றே கருதினர். ஆனால் நாம் கேட்கிறோம்: ருஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ந்து வருவதற்கு நமது நரோத்னிக்குகள் தெரிவிக்கும் ''ஆட்சேபணைகளில்'' ஸிஸ்மொந்தீயின் வாதங்களுக்குக் கூடுதலாக ஒரு புதிய சொல்லாவது அளித்திருக்கிறார்களா?

ஆக, காப்புமுறை பற்றிய ஸிஸ்மொந்தீ வாதங்கள் அவருக்கு வரலாற்றுவழிப்பட்ட பார்வைநிலை முற்றும் புறம்பானது என்று புலப்படுத்துகின்றன. சொல்லப் போனால், பதினெட்டாம் நூற்றாண்டின் மெய்யறிஞர்கள், பொருளாதாரவாதிகள் போலவே அவர் முற்றும் கருத்தியலான முறையிலேயே வாதிடுகிறார்; அவர்களுக்கும் இவருக்கும் ஒரே வேற்றுமை இதுதான்: இவர் முதலாளித்துவச் சமுதாயத்தை யல்லாமல் சிறிய சுதந்தரமான உற்பத்தியாளர்களைக் கொண்ட சமுதாயத்தையே சகஜமானது, இயற்கையானது என்று பறைசாற்றுகிறார். என்வே, காப்புமுறைக்கும் ஒரு திட்டவட்டமான பொருளாதார அமைப்பு முறைக்கும் உள்ள தொடர்பை அவர் அறவே புரிந்து கொள்ளவில்லை; மேலும், சமுதாய-அரசியல் துறையில் உள்ள இந்த முரண்பாட்டைப் ''பொய்யானது'', ''ஆபத்தானது'', தவறானது, விவேகமற்றது, முதலான—பொருளாதார வாழ்க்கையின் முரண்பாடுகளை நீக்கிவிடப் பயன்படுத்திய சொற்றொடர்களைப்போன்ற—சொற்றொடர்களைக் கொண்டு தீர்த்துவிடுகிறார். எனவே, விஷயத்தை அவர் மிகவும் மேம்போக்காகச் சித்திரித்து, காப்புமுறை, சுயேச்சையான வாணிபம்* ஆகியவற்றைப் பற்றிய

* சுயேச்சையான வாணிபம் (free trade) பொருளாதாரக் கொள்கையில் ஒரு போக்கு. அது சுயேச்சையான வாணி

பிரச்சினையை ''தவறான'' பாதை அல்லது ''சரியான'' பாதை பற்றிய பிரச்சினையாக (அதாவது, அவரது சொற்களில் சொல்வதென்றால், முதலாளித்துவம் பற்றிய பிரச்சினை, அல்லது முதலாளித்துவமல்லாத பாதை) முன்வைக்கிறார்.

காப்புமுறைக்கும், சமுதாயப் பொருளாதாரத்தின் ஒரு திட்டவட்டமான, வரலாற்றுவழியே வந்த, அமைப்புமுறைக்கும் இடையேயுள்ள தொடர்பையும் காப்புமுறைக்கும் அந்த அமைப்புமுறையில் மேலாதிக்க நிலையிலுள்ள வர்க்கத்தின் நலன்களுக்கும்—அரசாங்கங்களின் ஆதரவைப் பெற்ற இந்நலன்களுக்கும்—இடையேயுள்ள தொடர்பையும் நவீன காலத் தத்துவம் வெளிப்படுத்தி இந்தப் பிரமைகளை முற்றாக அம்பலப்படுத்தியுள்ளது. காப்புமுறையா அல்லது சுயேச்சையான வாணிபமா என்கிற பிரச்சினை தொழில்முயற்சியாளர்கள் இடையே இருக்கிற பிரச்சினை என்று அது காட்டியது (சில சமயங்களில் வெவ்வேறு நாடுகளின் தொழில் முயற்சியாளர்களிடையேயுள்ள பிரச்சினையாகவும், சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குள்ளே இருக்கும் தொழில்முயற்சியாளர்களின் வெவ்வேறு குழுக்களிடையே இருக்கும் பிரச்சினையாகவும் உள்ளது).

காப்புமுறை பற்றிய இவ்விரண்டு பார்வைநிலைகளை நரோத்னிக்குப் பொருளாதாரவாதிகள் அதன்பால் கொண்டுள்ள கண்ணோட்டத்துடன் ஒப்பிடும்போது, இதிலேயும் அவர்கள் தன்னுணர்ச்சிவாதப் பார்வைநிலையை முற்றாக ஏற்றுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்; அவர்கள் காப்புமுறையை ஒரு முதலாளித்துவ நாட்டுடன் சேர்க்காமல் ஏதோவொரு சூட்சும நாட்டுடன், tout court ''நுகர்வோருடன்'' சேர்த்துவைத்து அது ''செயற்கைவெப்ப தோட்டத்து'' முதலாளித்துவத்துக்கு அளிக்கிற ''தவறான'', ''விவேக

பத்தையும், அரசு தனிப்பட்ட பொருளாதார நடவடிக்கையில் தலையிடக் கூடாது என்பதையும் கோருகிறது. இங்கிலாந்தில் 1830-40 ஆண்டுகளில் சுயேச்சையான வாணிபத்தின் காப்பரணாக மாஞ்செஸ்டர் நகரத்தின் தொழிற்சாலை உடைமையாளர்கள் இருந்து வந்தனர்; அதனால்தான் அதற்கு ''மாஞ்செஸ்டர் போக்கு'' என்று பெயர் சூட்டப்பட்டது. அப்போக்கின் தலைமையில் கோப்டனும் பிரைட்டும் இருந்தனர்.—(பதிப்பாசிரியர்.)

மற்ற'' ஆதரவு என்றெல்லாம் பறைசாற்றுகின்றனர். எடுத்துக்காட்டாக, தீர்வை வரியின்றி விவசாய இயந்திரங்களை இறக்குமதி செய்யும் விஷயத்தில்—இது தொழில்துறை முயற்சியாளர்கள், விவசாயத்துறை முயற்சியாளர்கள் இடையே சச்சரவு உண்டாக்கிவிடுகிறது—நரோத்னிக்குகள் இயல்பாகவே விவசாயத்துறை முயற்சியாளர்களைத் திடமாக ஆதரிக்கிறார்கள். அவர்கள் செய்வது தவறு என்று சொல்ல நாம் விரும்பவில்லை. ஆனால் அது உண்மை பற்றிய பிரச்சினை, இன்றைய வரலாற்றுக் காலத்தைப் பற்றிய பிரச்சினை, முதலாளித்துவ வளர்ச்சியின் மேலும் பொதுவான நலன்களை எந்த முயற்சியாளர் பிரிவு வெளியிடுகிறது என்பது பற்றிய பிரச்சினை. நரோத்னிக்குகள் செய்வது சரியாக இருந்தாலுங் கூட, அதற்குக் காரணம் காப்பு வரிகள் போடுவது ''செயற்கையாக'' ''முதலாளித்துவத்துக்கு ஆதரவளிப்பதையும்'', அவ்வரிகளை எடுத்துவிடுவது''தொன்றுதொட்டுள்ள'' தொழிலுக்கு ஆதரவளிப்பதையும் குறிக்கிறது என்பது அல்ல; அதற்குக் காரணம், விவசாயத்துறை முதலாளித்துவம் (அதற்கு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன) கிராமப்புறங்களில் மத்தியகால உறவுகளின் மறைவைத் துரிதப்படுத்தித் தொழிலுக்கு ஓர் உள்நாட்டுச் சந்தையை உண்டாக்குவதையும் துரிதப்படுத்துவதின் மூலமாக பொதுவாகவே மேலும் விரிவான, சுதந்தரமான, விரைவான முதலாளித்துவ வளர்ச்சியைக் குறிக்கிறது என்பதே.

இப்பிரச்சினையில் நரோத்னிக்குகளைத் தன்னுணர்ச்சிவாதிகளோடு சேர்த்து நிறுத்துவதற்கு ஓர் ஆட்சேபணை கிளம்பும் என்று எதிர்பார்க்கிறோம். இங்கே திரு. நி.—ன்னைத் தனியாகக் குறிப்பிடுவது அவசியம் என்று பெரும்பாலும் குரல் எழலாம். சொல்லப்போனால், சுயேச்சையான வாணிபம், காப்புமுறை ஆகியவை பற்றிய பிரச்சினை முதலாளித்துவப் பிரச்சினையே என்று அவர் பகிரங்கமாகச் சொல்கிறாரே, பல தடவை சொல்கிறாரே, ''மேற்கோள்கள்'' கூடக் காட்டுகிறாரே... ஆம், உண்மையாகவே திரு. நி.—ன் மேற்கோள் கூடக் காட்டுகிறார்! ஆனால் அவரது ''வரையுருக்'' களிலிருந்து இந்தப் பகுதியை யாராவது நமக்குக் காட்டுவார்களேயானால் நாம் **வேறு பகுதிகளைச்** சுட்டிக் காட்டுவோம்; அவற்றில் அவர் முதலாளித்துவத்துக்கு ஆதரவளிப்பது முத

லாளித்துவத்தைப் ''புகுத்துவதாகும்'' என்று (அதுவும் தமது ''சுருக்கமும் முடிவுகளும்'' எனும் பகுதியில்! பார்க்க: பக்கங்கள் 331, 323, மற்றும் 283) பறைசாற்றுகிறார்; மேலும், முதலாளித்துவத்தை ஊக்குவிப்பது ''ஒரு மரணப் பிழை'', ஏனெனில் ''நாம் காணத் தவறிவிட்டோம்'', ''நாம் மறந்துவிட்டோம்'', ''நமது அறிவு குழம்பிவிட்டது'' என்றெல்லாம் அவற்றில் கூறுகிறார் (பக்கம் 298. இதை ஸிஸ்மொந்தீயுடன் ஒப்புநோக்குங்கள்!).(ஏற்றுமதி போனஸ்களைக் கொண்டு) முதலாளித்துவத்தை ஆதரிப்பது ''நமது பொருளாதார வாழ்க்கையில் மலிந்து கிடக்கும் எண்ணிறைந்த முரண்பாடுகளில் ஒன்று*; மற்றவை போலவே இதுவும் இருக்கக் காரணம் உற்பத்தியனைத்தும் எடுத்துவரும் வடிவமேயாகும்'' (பக்கம் 286) என்கிற வல்லுரையுடன் இதை எப்படிச் சமரசப்படுத்த முடியும்? கவனியுங்கள்: **''உற்பத்தியனைத்தும்!** பாரபட்சமற்ற எவரையும் கேட்கிறோம்: **உற்பத்தியனைத்தும் எடுத்துவரும் வடிவத்துக்கு''** ஆதரவு அளிப்பது ''தவறு'' என்று பறைசாற்றும் இந்த ஆசிரியரின் பார்வை நிலை என்ன? ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையா, விஞ்ஞானத் தத்துவத்தின் பார்வை நிலையா? இங்கேயும் (மேலே நாம் பரிசீலித்த விஷயங்கள் சம்பந்தமாக இருப்பது போலவே) திரு. நி.—னின் ''மேற்கோள்கள்'' பொருத்தமற்ற நேர்த்தியற்ற இடைச்செருகல்களாகிவிடுகின்றன, இந்த ''மேற்கோள்களை'' ருஷ்யாவின் யதார்த்தநிலைக்குச் செயல்படுத்த முடியும் என்கிற உண்மையான துணிபை அவை வெளியிடவில்லை. நவீனகாலத் தத்துவத்திலிருந்து திரு. நி.—ன் தரும் மேற்கோள்கள் வெளிவேஷமேயாகும், அவை வாசகரை வழி தவறச் செய்யலாம், அவ்வளவுதான். அது நாசூக்கின்றி அணிந்த ''யதார்த்தவாத'' உடுப்பாகும்; அதனுள்ளே பச்சைத் தன்னுணர்ச்சிவாதி ஒளிந்துகொள்கிறான்.**

---

* ''நாம்'' என்கிற வியப்புரைகளோடும் அதுபோன்ற சொற்றொடர்களோடும் ''நமக்கு'' ''அளிக்கப்படும், இந்த முரண்பாடுகளைப் புறக்கணிக்கிற அறிவுரைகள் ''வரையுருக்''களில் ''மலிந்திருப்பது'' போல.

** இந்த ''மேற்கோள்கள்'' தம்மை விமர்சனத்திலிருந்து காக்கும் தாயத்து என்று திரு. நி.—ன் நினைக்கிறாரோ, என்று நமக்கு ஒரு சந்தேகம். இல்லையேல் பின்வரும் விஷயத்தை

XI

அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றில் ஸிஸ்மொந்தீ பெறும் இடம்

பொருளாதாரத் தத்துவத்துடன் தொடர்புள்ள ஸிஸ்மொந்தீயின் எல்லா முக்கியமான முன்கூற்றுக்களையும் இப்போது தெரிந்துகொண்டோம். சுருங்கச்சொன்னால், எல்லாவற்றிலும் ஸிஸ்மொந்தீ முற்றுகத் தன்னிலை பற்றி நிற்கிறதையும் அவரது பார்வைநிலை மாருதிருப்பதையும் காண்கிறோம். ஒரு புறம், எல்லா அம்சங்களிலும் அவர் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளிடமிருந்து வேறுபடுகிறார், ஏனெனில் அவர் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். மறு புறம், எந்த அம்சத்திலும் அவர் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளின் பகுப்பாய்வை விரிவுபடுத்த முடியவில்லை (விரும்பவுமில்லை); எனவே, சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலையில் நின்று முதலாளித்துவத்தைப் பற்றி உணர்ச்சி வகைப்பட்ட விமர்சனம் அளிப்பதோடு நின்றுவிடுகிறார். இவ்வாறு விஞ்ஞானப் பகுப்பாய்வுக்குப் பதிலாக உணர்ச்சி வகைப்பட்ட முறையீடுகளும் ஒப்பாரிகளும் வைப்பதால் அவரது கருத்தோட்டம் மிகவும் மேலோட்டமானதாகிறது. நவீனகாலத் தத்துவம் முதலாளித்துவத்தைப் பற்றிய சுட்டுக்குறிப்புகளை ஏற்றுக் கொண்டு, விஞ்ஞான வழியிலே பகுத்தாய்ந்து, எல்லா அம்சங்களிலும் ஸிஸ்மொந்தீயின் முடிவுகளினின்று தீவிரமாக வேறுபடுகிற முடிவுகளுக்கு

விளக்குவது கஷ்டம்: தமது தத்துவம் ஸிஸ்மொந்தீ தத்துவத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளதாக திருவாளர்கள் ஸ்துருவே, துகான்-பாரனேவ்ஸ்கி ஆகியோரிடமிருந்து கேள்விப்பட்டதும் திரு. நி.—ன் ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'' வில் (1894, இதழ் 6, பக்கம் 88) எழுதிய கட்டுரைகளில் ஒன்றில் நவீனகாலத் தத்துவத்தின் பிரதிநிதி ஒருவரின் கருத்தை ''மேற்கோள்'' காட்டினர்; அந்தப் பிரதிநிதி ஸிஸ்மொந்தீ ஒரு சிறுபூர்ஷ்வாப் பிற்போக்காளர், கற்பனுவாதி என்று வர்ணிக்கிறர். எனவே, இப்படிப்பட்ட ''மேற்கோள்'' மூலமாக ஸிஸ்மொந்தீயுடன் தாம் ஒப்பிடப்பட்டதை ''மறுத்துமெய்ப்பித்துள்ளதாக'' திரு. நி.—ன் திடமாக நம்புகிறர் என்பது உறுதி.

வந்தது; அக்காரணம் பற்றியே முதலாளித்துவத்தைக் குறித்து நேரெதிரான பார்வைநிலைக்கு அவை கொண்டுசெல்கின்றன.

''அரசியல் பொருளாதாரத்தின் சில முன்கூற்றுகளைப் பற்றிய ஒரு விமர்சனவுரை'' ("Zur Kritik"*, ருஷ்ய மொழிப் பெயர்ப்பு, மாஸ்கோ, 1896) எனும் நூலில் ஸிஸ்மொந்தீ விஞ்ஞானத்தின் வரலாற்றில் பெறும் இடம் இவ்வாறு வர்ணிக்கப்படுகிறது:

''பயன்பாடு மதிப்பை உண்டாக்கும் உழைப்பு பணத்தால் கலப்படம் செய்யப்படுகிறது எனும் புவாகில்பேர் கருத்தில் மேற்கொண்டு ஸிஸ்மொந்தீ உழன்று கொண்டிருக்கவில்லை; ஆனால் புவாகில்பேர் பணத்தைக் கண்டித்தது போலவே ஸிஸ்மொந்தீயும் பெரும் தொழில் மூலதனத்தைக் கண்டிக்கிறார்'' (பக்கம் 36).

ஆசிரியர் சொல்ல விரும்புவதாவது: பண்டமாற்று ஓர் இயல்பான அமைப்புமுறை என்று புவாகில்பேர் மேலோட்டமாகக் கருதிப் பணத்தை எதிர்த்தது—பணத்தை அவர் ''அயலான அம்சமாக'' கருதினார்—போலவே (மேலே குறித்துள்ள நூல், பக்கம் 30) ஸிஸ்மொந்தீ சிற்றளவான உற்பத்தி ஓர் இயல்பான அமைப்புமுறை எனக் கருதி பெரும் மூலதனத்தை—அதை அவர் அயலான அம்சமாகக் கருதினார்—எதிர்த்தார். பணத்துக்கும் பண்டப் பரிமாற்றத்துக்கும் உள்ள பிரிக்கவொண்ணாத, இயல்பான தொடர்பை புவாகில்பேர் புரிந்துகொள்ளவில்லை, ''பூர்ஷ்வா உழைப்பின்'' இரண்டு வடிவங்களை அயலான அம்சங்கள் என்று எதிரெதிரே தாம் நிறுத்துவதையும் புரிந்துகொள்ளவில்லை (மேலே குறித்துள்ள நூல், பக்கங்கள் 30-31). பெரும் மூலதனத்துக்கும் சிறிய சுதந்தரமான உற்பத்திக்கும் உள்ள பிரிக்கவொண்ணாத, இயல்பான தொடர்பை ஸிஸ்மொந்தீ புரிந்துகொள்ளவில்லை, இவை பண்டப் பொருளாதாரத்தின் இரண்டு வடிவங்களே என்பதையும் புரிந்துகொள்ளவில்லை. புவாகில்பேர் ''ஒரு வடிவத்திலுள்ள பூர்ஷ்வா உழைப்பை எதிர்த்

---

* கா. மார்க்ஸ் எழுதிய ''அரசியல் பொருளாதாரத்தின் மீது விமர்சனத்தைப் பற்றி'' எனும் நூலுக்குரிய தலைப்பின் ஆரம்பப் பகுதி.—(பதிப்பாசிரியர்.)

துக்கொண்டே'' ''வேருெரு வடிவத்திலுள்ளதைக் கற்பஞ வாதிபோல் புகழ்கிருர்'' (மேலே குறிப்பிட்ட நூல்). ஸிஸ் மொந்தீ பெரும் மூலதனத்தை—அதாவது, ஒரு வடிவத்தி லுள்ள, மிகு வளர்ச்சி வடிவத்திலுள்ள, பண்டப் பொருளாதா ரத்தை—எதிர்த்துக்கொண்டே சிறு உற்பத்தியாளனே (குறிப் பாக, விவசாயி மக்களே)—அதாவது, வேருெரு வடிவத்தி லுள்ள, தொடக்கநிலே வடிவத்திலுள்ள, பண்டப் பொருளா தாரத்தை—கற்பஞவாதி போல் புகழ்கிருர்.

''விமர்சனவுரை''யின் ஆசிரியர் மேலும் கூறுவதாவது: ''ரிக்கார்டோ இலக்கியத்தில் அரசியல் பொருளாதாரம் மடத்துணிச்சலோடு தனது இறுதி முடிவுகளே எடுத்துக் கொண்டு உச்சநிலே எட்டியது; ஆனுல் ஸிஸ்மொந்தீ அதன் ஐயப்பாடுகளே உருவகப் படுத்தி அதன் பிற்சேர்க்கை ஆனுர்'' (பக்கம் 36).

ஆக, ஸிஸ்மொந்தீ முதலாளித்துவத்தின் முரண்பாடுக ளேப் பற்றிய **பிரச்சினேயை எழுப்பி** அதன் வழியே மேற் கொண்டு பகுப்பாய்வு செய்யவேண்டிய பணியை முன்வைத் தார் என்கிற அளவிலே ''விமர்சனவுரை''யின் ஆசிரியர் ஸிஸ் மொந்தீயின் முக்கியத்துவத்தை வடித்தளித்தார். நாம் மேற் கோள் காட்டிய ஆசிரியர், இந்தப் பிரச்சினேக்கு **விடை யளிக்க** விரும்பிய ஸிஸ்மொந்தீயின் எல்லாச் சுதந்தரமான கருத்துக்களும் விஞ்ஞானத்திற்கு ஒவ்வாதவை, மேலோட்ட மானவை என்றும் அவரது பிற்போக்கான சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலேயைப் பிரதிபலிப்பவை என்றும் (மேலே மேற் கோள் காட்டிய கருத்துக்களேயும், எஃப்ருஸியின் ''மேற் கோள்'' சம்பந்தமாகக் கீழே மேற்கோள் காட்டப்பட்டுள்ள கருத்தையும் பார்க்க) கருதுகிருர்.

ஸிஸ்மொந்தீ தத்துவத்தை நரோதியத்துடன் ஒப்பிடுகை யில், கிட்டத்தட்ட எல்லா அம்சங்களிலும் (ஸிஸ்மொந்தீ ரிக்கார்டோவின் வாடகை பற்றிய தத்துவத்துக்கு விடுத்த மறுப்பும், விவசாயிகளுக்கு ஸிஸ்மொந்தீ விடுத்த மால் துஸ் வழிப்பட்ட இடித்துரைகளும் தவிர) வியக்கத் தக்க ஒற்றுமையைக் காண்கிருேம், சில சமயங்களில் சொற்க ளும் கூட ஒன்ருகவே உள்ளன. நரோத்னிக்குப் பொருளா தாரவாதிகள் ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலேயை முற்ருக ஏற்கின்றனர். பின்னுல், தத்துவத்தை விட்டு நடைமுறைப்

பிரச்சினைகள் பற்றிய ஸிஸ்மொந்தீயின் கருத்துக்களுக்கு வரும்போது இதைப் பற்றி மேலும் தெளிவடைவோம்.

கடைசியாக, எஃப்ரூஸி பொருத்த வரை, அவர் எந்த அம்சத்திலும் ஸிஸ்மொந்தீ பற்றிச் சரியான மதிப்பீடு வழங்கவில்லை. முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை ஸிஸ்மொந்தீ வலியுறுத்துவதையும் கண்டிப்பதையும் சுட்டிக் காட்டும் எஃப்ரூஸி, ஸிஸ்மொந்தீயின் தத்துவத்துக்கும் விஞ்ஞானப் பொருள்முதல்வாதத் தத்துவத்துக்கும் உள்ள கூர்மையான வேற்றுமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை, முதலாளித்துவத்தைப் பற்றிய தன்னுணர்ச்சிவாதப் பார்வைநிலையும் விஞ்ஞானப் பார்வைநிலையும் நேரெதிராக உள்ளதையும் புரிந்துகொள்ளமுடியவில்லை. தன்னுணர்ச்சிவாதியிடம் நரோத்னிக்குக்கு இருக்கும் தோழமையுணர்ச்சியும் கனிவான கருத்தொற்றுமையும் ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''க் கட்டுரைகளின் ஆசிரியரைப் பொருளாதார விஞ்ஞானத்தில் தன்னுணர்ச்சிவாதத்தின் இந்த மூலச்சிறப்பான பிரதிநிதியைச் சரியாகப் பண்பு விளக்கம் செய்யாதவாறு தடுத்துவிட்டன.

மூலச்சிறப்பான அரசியல் பொருளாதாரத்தின் ''ஐயப்பாடுகளை அவர் உருவகப்படுத்தினர்'' என்று ஸிஸ்மொந்தீ பற்றிய கருத்தைச் சற்றுமுன் மேற்கோள் காட்டினேம்.

ஆனல் ஸிஸ்மொந்தீ இந்தப் பாத்திரத்தை (இது அவருக்குப் பொருளாதாரவாதிகளிடையே ஒரு மாண்புமிக்க நிலையை வழங்குகிறது) வகிப்பதோடு நின்றுவிட நினைக்கவில்லை. நாம் பார்த்தவாறு, அவர் ஐயப்பாடுகளைத் தீர்க்க முயன்றார், ஆனல் சிறிதும் வெற்றி பெறவில்லை. அது மட்டுமல்ல. அவர் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளுக்கும் அவர்களின் விஞ்ஞானத்துக்கும் எதிராக எழுப்பிய குற்றச்சாட்டு அவர்கள் முரண்பாடுகளைப் பகுத்தாய்ந்திடாமல் நின்று விட்டார்கள் என்பதல்ல, அவர்கள் தவறான வழிமுறைகளைக் கையாண்டார்கள் என்பதே. தமது நூலின் இரண்டாம் பதிப்புக்குரிய முன்னுரையில், புதிய விபத்துக்களைப் ''புரிந்துகொள்ளவோ தவிர்க்கவோ நமக்குப் பழைய விஞ்ஞானம் போதிக்கிறதில்லை'' (I, XV) என்று ஸிஸ்மொந்தீ சொல்கிறார். இந்த விஞ்ஞானம் செய்த பகுப்பாய்வு முழுமையற்றது முரணுள்ளது என்று குறிப்பிட்டு அவர் இவ்வுண்மையை விளக்கவில்லை; அவ்விஞ்ஞானம் ''சூட்சுமக் கருத்துக்க

ளிலே மூழ்கிவிட்டது'' (I, 55: இங்கிலாந்தில் ஆதாம் ஸ்மித்தின் புதிய சீடர்கள் சூட்சுமக் கருத்துக்களிலே மூழ்கிவிட்டார்கள் (se sont jetés), ''மனிதனை'' மறந்துவிட்டார்கள்) என்றும், ''ஒரு தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது'' (II, 448) என்றும் சொல்லி அதை விளக்குகிறார். ஸிஸ்மொந்தீ இந்த முடிவுக்கு வருவதற்கு இடமளிக்க அவர் மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் மேல் என்ன குற்றச்சாட்டு வீசுகிறார்?

''பொருளாதாரவாதிகள்—அவர்களில் மிகப் புகழ் வாய்ந்தவர்கள் —நுகர்வு, சந்தை ஆகிய விஷயங்களில் செலுத்திய கவனம் அற்பமானது'' (I, 124).

ஸிஸ்மொந்தீயின் காலத்திற்குப்பின் இக்குற்றச்சாட்டு கணக்கற்ற தடவைகளில் திருப்பிச் சொல்லப்பட்டுள்ளது. விஞ்ஞானத்தின் ஒரு தனி பிரிவாக ''நுகர்வை'' ''உற்பத்தியிலிருந்து'' பிரித்துவிடுவது அவசியம் என்று கருதப்பட்டது; உற்பத்தி இயற்கையான விதிகளைச் சார்ந்து நிற்கிறதென்றும், ஆனால் நுகர்வு வினியோகத்தால் நிர்ணயிக்கப்படுகிறதென்றும், அந்த வினியோகம் மனிதனின் சித்தத்தைச் சார்ந்துள்ளது என்றெல்லாம் சொல்லப்பட்டது. நமது நரோத்னிக்குகளும் இதே கருத்துக்களை வைத்திருக்கிறார்கள், வினியோகத்தை முன்னணியில் நிறுத்துகிறார்கள், என்பது எல்லோருக்கும் தெரியும்.*

* எஃப்ரூஸி இதைக் குறித்தும் ஸிஸ்மொந்தீயைப் புகழாமல் இருக்கவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 56-ல் நாம் படிக்கிறதாவது: ''ஸிஸ்மொந்தீ தத்துவத்தில் அவர் முன்மொழிந்த பல்வேறு குறிப்பான நடவடிக்கைகள் அவ்வளவாக முக்கியமான விஷயமல்ல, அவரது முழு அமைப்பு முறையில் நிறைந்திருக்கும் பொது உணர்ச்சியே முக்கியமாகும். மூலச்சிறப்புள்ள கருத்துப்பிரிவினருக்கு மாறாக, அவர் வினியோகம் பற்றிய நலன்களைச் சிறப்பாக வலியுறுத்துகிறார், உற்பத்தி பற்றிய நலன்களை அல்ல.'' எஃப்ரூஸி திரும்பத்திரும்ப ''நவீனகால''ப் பொருளாதாரவாதிகளைக் ''குறிப்பிட்டு''ச் சொன்னபோதிலும் அவர்களின் தத்துவத்தை அவர் புரிந்துகொள்ளவே இல்லை; முதலாளித்துவத்தைப் பற்றிய பழங்கால விமர்சனவுரையைத் தனிவேறுபடுத்திக் காட்டும் உணர்ச்சிவகைப்பட்ட முட்டாள்தனத்திலேயே

இந்தக் குற்றச்சாட்டின் பொருள் என்ன? அரசியல் பொருளாதாரத்தின் விஷயப் பொருள் பற்றியே மிகவும் விஞ்ஞானக்கேடான கருத்தோட்டம் ஒன்றே அதற்கு அடிப்படையாக இருக்கிறது. அடிக்கடி சொல்லப்படுவது போல அதன் விஷயப் பொருள் ''பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி'' என்பதல்ல (அது தொழில்நுட்பவியலின் விஷயப் பொருளாகும்), உற்பத்தியில் மனிதர்களிடையேயுள்ள சமுதாய உறவுகளே அதன் விஷயப் பொருளாகும். முந்தைய அர்த்தத்தில் ''உற்பத்தியை'' வியாக்கியானப்படுத்திஞல் மட்டுமே அதினின்று ''வினியோகத்தை''ப் பிரிக்க முடியும்; அப்படிச் செய்கிறபோது, சமுதாயப் பொருளாதாரத்தின் வரலாற்று வழியே நிர்ணயிக்கப்பட்ட வடிவங்களின் வகையினங்கள் உற்பத்தியின் ''பிரிவில்'' இரா, பொதுவாக உழைப்பின் நிகழ்ச்சிப்போக்குடன் சம்பந்தப்பட்ட வகையினங்களே இருக்கும். இப்படிப்பட்ட சாரமற்ற வெற்றுரைகள் வரலாற்று வழிப்பட்ட, சமுதாய நிலைமைகளை இருட்டடிப்பதற்கு மட்டுமே பின்னுல் பயன்படுகின்றன. (எடுத்துக்காட்டாக, மூலதனம் பற்றிய கருத்துருவத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.) ஆனுல், ''உற்பத்தியை'' நாம் உற்பத்தியிலே உள்ள சமுதாய உறவுகள் என்று முன்பின் முரணின்றிக் கருதிவந்தோமேயானுல் அப்போது ''வினியோகம்'', ''நுகர்வு'' ஆகிய இரண்டுமே சுதந்தரமான முக்கியத்துவமனைத்தையும் இழந்துவிடுகின்

தொடர்ந்து முனைந்திருந்தார். இங்கேயும் நமது நரோத்னிக்கு ஸிஸ்மொந்தீயை ''வரலாற்றுவழிப்பட்ட கருத்துப்பிரிவினரின் பல முக்கியப் பிரதிநிதிகளோடு'' ஒப்பிட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிருர்; ஆகவே, ''ஸிஸ்மொந்தீ மேலும் முன்னே சென்ருர்'' (மேலே குறிப்பிட்ட நூல்), அதில் எஃப்ரூஸிக்குப் பரம திருப்தி! ஜெர்மன் பேராசிரியர்களைவிட ''மேலும் முன்னே சென்ருர்'' என்ருல் —வேறென்ன வேண்டும்? எல்லா நரோத்னிக்குகள் போலவே எஃப்ரூஸி ஸிஸ்மொந்தீ முதலாளித்துவத்தை விமர்சித்தார் என்கிற அம்சத்தையே முக்கியமாக வலியுறுத்த முயல்கிருர். முதலாளித்துவத்தை வெவ்வேறு வழிகளிலே விமர்சிக்க முடியும், உணர்ச்சி வகைப்பட்ட வழியிலும் விமர்சிக்கலாம், விஞ்ஞான வழியிலும் விமர்சிக்கலாம் என்று ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வின் பொருளாதாரவாதிக்குத் தெரியாது என்பது தெளிவு.

றன. உற்பத்தியிலுள்ள உறவுகள் விளக்கப்பட்டவுடனே **அதன் வழியாக** வெவ்வேறு வர்க்கங்கள் உற்பத்திப் பொருளிலிருந்து எடுத்துக்கொள்கிற பங்கும், அதன் விளைவாக ''வினியோகமும்'' ''நுகர்வும்'', விளக்கப்பட்டுவிடுகின்றன. இதையே முன்பின்னுகச் சொல்வதானுல்: உற்பத்தி உறவுகள் விளக்கப்படாமலே இருக்குமானுல் (எடுத்துக்காட்டாக, மொத்தமான சமுதாய மூலதனத்தின் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கைப் புரிந்துகொள்ளாவிட்டால்) நுகர்வு, வினியோகம் பற்றிய வாதங்கள் அனைத்தும் வெற்றுரைகளாகவோ வெகுளித்தனமான தன்னுணர்ச்சிவகைப்பட்ட விருப்பங்களாகவோ மாறிவிடுகின்றன. ஸிஸ்மொந்தீ இவ்வகைப்பட்ட வாதங்களுக்கு மூலவர் ஆவார். ரொட்பெர்டஸூம் ''தேசிய உற்பத்திப் பொருளின் வினியோகம்'' பற்றி நிறையப் பேசினுர், எஃப்ருஸியின் ''நவீனகால'' நிபுணர்கள் தனிச்சிறப்பான ''கருத்துப் பிரிவுக் குழுக்கள்'' கூட அமைத்தனர், வினியோகத்தின்பால் தனிக் கவனம் செலுத்துவது அவற்றின் கோட்பாடுகளில் ஒன்று.* ''வினியோகம்'', ''நுகர்வு'' பற்றிய இந்தத் தத்துவாசிரியர்களில் யாராலும் சமுதாய மூலதனத்துக்கும் சமுதாய வருவாய்க்கும் உள்ள வேற்றுமை பற்றிய அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. எந்த முரண்பாடுகளின் எதிரே ஆதாம் ஸ்மித் நின்றுவிட்டாரோ அவற்றிலே எல்லோரும் தடந்தடவிக்கொண்டிருந்தார்கள்.** என்றைக்கும் வினியோகத்தைத் தனித்தெடுக்காத

---

* இன்கிராம் ஸிஸ்மொந்தீயை ''கதீதர்-சோஷலிஸ்டுகளுடன்'' ஒப்பிடுவது முற்றும் சரி (பக்கம் 212, ''அரசியல் பொருளாதாரத்தின் வரலாறு'', மாஸ்கோ, 1891), அவர் வெகுளித்தனத்தோடு கூறுவதைப் பாருங்கள்: ''சமுதாய ஒன்றியத்தின், நவீன முன்னேற்றத்தின் நன்மைகளை ஆனமட்டும் விரிந்த அளவிலே சமூகத்தின் எல்லா வர்க்கங்களிடையேயும் விரித்தளிக்கும் பணிக்குப் பொறுப்பாக்கப்பட்ட.... சக்தியாக அரசைப்பற்றி வைத்திருக்கும் ஸிஸ்மொந்தீயின் கருத்தை நாங்கள் ஏற்கனவே(!) ஒப்புக்கொண்டோம். (215). ஸிஸ்மொந்தீயின் இந்தக் ''கருத்துக்''களின் ஆழத்தை நாம் ஏற்கனவே காப்புமுறை விஷயத்தில் கண்டுள்ளோம்.

** எடுத்துக்காட்டாக, Handw. der. st. ''அரசுப் பொருளாதாரம் பற்றிய கைநூலில்'' (ருஷ்ய மொழிபெயர்ப்பு, ''தொழில்'' என்கிற தலைப்புக் கொண்ட கட்டுரைத்தொகுதியில்

பொருளாதாரவாதி ஒருவர் தான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தார், அவர் ''வினியோகத்தை''ப் பற்றிய ''விஞ்ஞானத்திற்கொவ்வாத'' வாதங்களை மிகக் கடுமையாக ஆட்சேபித்தவர் (கோதா வேலைத்திட்டம்* பற்றிய மார்க்ஸ் விமர்சனவுரையைப் பார்க்க: திரு. ஸ்துருவே இதைத் தமது ''விமர்சனக் குறிப்புரைகள்'', பக்கம் 129, 4-ம் அத்தியாயத்துக்குள்ள மகுடவுரையில் மேற்கோள் காட்டுகிறார்). அது மட்டுமல்ல. இப்பிரச்சினைக்குரிய தீர்வே சமுதாய மூலதனத்தின் **மறுவுற்பத்தி** பற்றிய பகுப்பாய்வில் இருந்தது. ஆசிரியர் நுகர்வையோ வினியோகத்தையோ ஒரு தனிப் பிரச்சினை ஆக்கவில்லை; ஆனால், **உற்பத்தி** பற்றிய பகுப்பாய்வு அதன் முடிவுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் அவ்விரண்டும் முற்றாக விளக்கம் பெற்றன.

''... இந்த உற்பத்தி உறவுகளோடு மொத்தத்தில் பொருந்திநிற்கிற வினியோக உறவுகள் அவற்றின் எதிர்ப்பக்கமே யாகும், எனவே இரண்டுக்கும் ஒரே வரலாற்றுவழிப்பட்ட தாற்காலிகத் தன்மை உள்ளது... என்று முதலாளித்துவ உற்பத்தி முறை பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வு நிரூபித்துக் காட்டுகிறது''. ''கூலி என்பதற்கு முன் கூலி உழைப்பு இருந்தாகவேண்டும், இலாபம் என்பதற்கு முன் மூலதனம் இருந்தாகவேண்டும். எனவே இந்தத் திட்டவட்டமான வினியோக வடிவங்களுக்கு முன் உற்பத்திநிலைமைகளின் திட்டவட்டமான சமுதாய வழிப்பட்ட தனிப்பண்புகளும் (Charaktere) உற்பத்தி ஏஜெண்டுகளின் திட்டவட்டமான சமுதாய உறவுகளும் இருந்தாகவேண்டும். எனவே, அந்தந்தக் குறிப்

உள்ள) **ரா. மேயெர்** எழுதிய ''வருமானம்'' எனும் கட்டுரையைப் பார்க்க. இவ்விஷயப்பொருள் குறித்து ''நவீன கால'' ஜெர்மன் பேராசிரியர்களின் வாதங்களிலேயுள்ள உருப்படாத குழப்பத்தை அது வெளிப்படுத்துகிறது. ரா. மேயெர் ஆதாம் ஸ்மித்தை நேரடியாகக் குறிப்பிடுகிறார், ஆதாம் ஸ்மித்தை முற்றாக மறுத்து நிரூபிக்கும் ''மூலதனத்''தின் 2-ம் தொகுதியிலுள்ள **அதே அத்தியாயங்களையும்** தமது நூல்பட்டியிலில் குறிக்கிறார், என்றபோதிலும் இதைத் தமது நூல் வாசகத்தில் குறிப்பிடாமலிருப்பது விந்தையே.

* ''கோதா வேலைத்திட்டத்தைப் பற்றிய வமர்சனவுரை'' எனும் கா. மார்க்ஸின் நூலைப் பார்க்க.—(பதிப்பாசிரியர்.)

பிட்ட வினியோக உறவுகள் வெறுமே அந்தந்தக் குறிப்பிட்ட வரலாற்றுவழிப்பட்ட உற்பத்தி உறவுகளின் வெளியீடேயாகும்'' .... ''வினியோகத்தின் ஒவ்வொரு வடிவமும் எந்தக் குறிப்பிட்ட உற்பத்தி வடிவத்திலிருந்து உதித்தும் அத்துடன் பொருந்தியும் இருக்கிறதோ அந்த உற்பத்தி வடிவம் மறைகிறபோது கூடவே மறைந்துவிடுகிறது.''

''வினியோக உறவுகள் மட்டுமே வரலாற்று வழிப்பட்டவை, உற்பத்தி உறவுகள் அப்படி இல்லை, எனும் கருத்து, ஒரு புறத்திலே பார்த்தால், முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றிய தொடக்கநிலையான, இன்னமும் தளையுண்டிருக்கிற (முரண்பட்ட, befangen) விமர்சனத்தின் கருத்து மட்டுமே ஆகும். மறு புறத்தில், செயற்கையான முறையிலே தனிமைப்பட்டுப்போன ஒரு மனிதன் எவ்விதமான சமுதாய உதவியும் இன்றிச் செய்யக் கூடியதாயிருப்பது போன்ற எளிய உழைப்பு நிகழ்ச்சிப்போக்குடன் சமுதாய உற்பத்தியின் நிகழ்ச்சிப்போக்கைப் போட்டுக் குழப்பிக் கொண்டு ஒன்றுக்கிப்பார்ப்பதே இக்கருத்துக்கு ஆதாரமாகும். எந்த அளவுக்கு உழைப்பு நிகழ்ச்சிப் போக்கு மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள நிகழ்ச்சிப்போக்காக மட்டுமே உள்ளதோ அந்த அளவுக்கு அதன் எளிமையான அம்சங்கள் எல்லாச் சமுதாய வளர்ச்சி வடிவங்களுக்கும் பொதுவாக இருந்து வருகின்றன. ஆனால் இந்த நிகழ்ச்சிப் போக்கின் ஒவ்வொரு குறிப்பிட்ட வரலாற்றுவழிப்பட்ட வடிவமும் அதன் பொருளாயத அடிப்படைகளையும் சமுதாய வடிவங்களையும் மேலும் வளர்க்கிறது'' (''மூலதனம்'', தொகுதி III, 2, பக்கங்கள் 415, 419, 420, ஜெர்மன் மூலநூல்).*

மூலச்சிறப்புள்ள பொருளாதாரவாதிகளை எதிர்க்கும் வேறு வகையான தாக்குகளிலும் ஸிஸ்மோந்தீக்கு அதிர்ஷ்டம் கிட்டவில்லை; இந்தத் தாக்குகள் அவரது “Nouveaux Principes” என்ற நூலில் மேலும் அதிகமான பக்கங்கள் எடுத்துக்கொள்கின்றன. ''இங்கிலாந்திலுள்ள ஆதாம் ஸ்மித்தின் புதிய சீடர்கள் மனிதனை மறந்து விட்டுச் சூட்சுமக் கருத்துக்களிலே மூழ்கிவிட்டார்கள்...'' (I, 55). ரிக்கார்டோ

---

* கா. மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 3.—(பதிப்பாசிரியர்.)

வுக்குச் ''செல்வமே எல்லாம், மனிதன் ஒன்றுமில்லை'' (II, 331). ''(சுயேச்சையான வாணிபத்தை ஆதரிக்கும் பொருளாதார வாதிகளான) அவர்கள் ஒரு சூட்சுமப்பொருளான தத்துவத்துக்காக அடிக்கடி மனிதர்களையும் உண்மையான நலன்களையும் பலியிடுகிறார்கள்'' (II, 459), என்றவாறு.

இத்தாக்குகள் எத்துணைப் பழைமையானவை, இருந்தும் எத்துணைப் புதுமையாயும் உள்ளன! நரோத்னிக்குகள் அவற்றிற்கு மறுவுயிர்ப்பு அளித்துள்ளதையே மனத்தில் கொண்டு சொல்கிறேன்; ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சியானது ருஷ்யாவின் உண்மையான, யதார்த்தமான, தவிர்க்கமுடியாத வளர்ச்சியேயாகும் என்று மனந்திறந்து ஒப்புக்கொள்கிறதைப் பற்றி நரோத்னிக்குகள் எவ்வளவு கூச்சல் போட்டார்கள். ''பணபலத்துக்கு வக்காலத்து'' ''சமுதாய-பூர்ஷ்வாக் குணம்'' என்றெல்லாம்* அவர்கள் கூச்சலிட்ட போது இதைத்தானே வெவ்வேறு சுருதிகளில் திருப்பிச் சொன்னார்கள்? "Man schreie nicht zu sehr über den Zynismus! Der Zynismus liegt in der Sache, nicht in den Worten, welche die Sache bezeichnen! அதன் பண்புமறுப்பு குறித்துக் கூக்குரலிடாதீர்கள். பண்புமறுப்பு உண்மைகளிலேதான் உள்ளதே தவிர, அவ்வுண்மைகளை வெளியிடும் சொற்களிலே அல்ல''** என்கிற குறிப்புரை முதலாளித்துவத்தை உணர்ச்சி வகையிலே விமர்சித்தவர்களை நோக்கிச் சொல்லப்பட்டதல்லவா, அது ஸிஸ்மொந்தியைவிட அவர்களுக்கே **மேலும் அதிகமாகப்** பொருந்தும்.

''மேலும் அதிகமாக'' என்று சொல்கிறோம்—காரணம், மேற்கு ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதிகள் முன்னே முத

---

* இங்கே மார்க்ஸியவாதிகளை எதிர்த்து வாதப்பிரதிவாதத் தன்மையுள்ள, நரோத்னிக்குகளின் கட்டுரைகள் குறிக்கப்படுகின்றன; அதாவது ''இக்காலத்தின் தனிக்குறிப்பு என்ற முறையில் பணத்தின் ஆட்சியைப் போற்றுதல்'' எனும் நி. பி. டானியெல்ஸோன் என்பவரின் கட்டுரை, ''ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதமும் ருஷ்ய பூர்ஷ்வாத் தன்மையும்'' எனும் வா. பா. வரன்ட்ஸோவ் என்பவரின் கட்டுரை, ஆகியன.—(பதிப்பாசிரியர்.)

** பார்க்க: கா. மார்க்ஸ், ''மெய்யறிவின் வறுமை''.—(பதிப்பாசிரியர்.)

லாளித்துவத்தின் முரண்பாடுகளைப் பற்றிய ஒரு விஞ்ஞானப் பகுப்பாய்வு இருக்கவில்லை; காரணம், அவர்கள்தாம் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை முதன்முதலில் குறிப்பிட்டவர்கள்; காரணம், இந்த முரண்பாடுகளைப் பார்க்காதவர்களை அவர்கள் (''புலம்பும் சொற்களில்'' என்போம்) கண்டித்தார்கள்.

ரிக்கார்டோ முதலாளித்துவச் சமுதாயத்தைப் பற்றிய தமது காட்சியறிவுகளிலிருந்தும் பயிற்சியிலிருந்தும் எல்லா முடிவுகளையும் ஈவிரக்கமற்ற திறந்தமனத்துடன் எடுத்ததற்காக அவரை ஸிஸ்மொந்தீ கடுமையாகத் தாக்கினுர். உற்பத்திக்கென்றே உற்பத்தி இருப்பதையும், உழைப்புச் சக்தியும் வேறெந்த பண்டத்தையும் போலவே ஒரு பண்டமாக உருமாற்றப் பெற்றிருப்பதையும் ஒருங்கே குறித்துக் காட்டினுர், நிகர வருவாய்—அதாவது, இலாபத்தின் தொகை—ஒன்றுதான் ''சமுதாயத்துக்கு'' முக்கியமாயிருக்கிறது எனும் உண்மையையும், ரிக்கார்டோ பச்சையாகக் குறித்துக்காட்டினுர்.* ரிக்கார்டோ முழு உண்மையையே சொன்

---

* எடுத்துக்காட்டாக, தொழில்முயற்சியாளனின் நிகர வருவாயில் ஏற்படும் உயர்வு தேசியப் பொருளாதாரத்துக்கு ஆதாயம் ஆகாது, என்பதுபோன்ற ஸிஸ்மொந்தீயின் உணர்ச்சி வகைப்பட்ட சொற்ருெடர்களை எஃப்ரூஸி அமுத்தலாகத் திருப்பிச் சொல்லி அவர் இதை ''இன்னமும் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ளவில்லை'' என்று மட்டுமே குறை கூறுகிருர் (பக்கம் 43, இதழ் 8).

முதலாளித்துவத்தைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாயின் விளைவுகளை இத்துடன் ஒப்பிட விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்:

சமுதாயத்தின் மொத்த வருமானம்(Roheinkommen)என்பது கூலி+இலாபம்+வாடகை ஆகியவற்றைக் கொண்டது; நிகர வருமானம் (Reineinkommen) என்பது மிகுதி மதிப்பு ஆகும்.

''சமுதாய முழுமையின் வருமானத்தைப் பார்க்கும் போது, தேசிய வருமானம் என்பது கூலி+இலாபம்+வாடகை கொண்டதாகும்; அதாவது, மொத்த வருமானமாகும். ஆனுல் இதுவுங்கூட ஒரு சூட்சுமக் கருத்தேயாகும், எந்த அளவுக்கு என்ருல்: சமுதாயம் முழுவதும் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படையில் முதலாளித்துவத்தின் பார்வை நிலையை ஆதாரமாகக் கொள்கிறது, அதன் வழியாக இலாபம், வாடகை என்று வடிக்கப்பட்ட வருமானத்தை மட்டுமே நிகர வருமானமாகக் கருதுகிறது'' (III, 2, 375-376).

ஞர்; அப்படியே அவர் சொல்கிறவாறுதான் எல்லாம் உள்ளன. ஸிஸ்மொந்திக்கு இந்த உண்மை ஓர் ''இழிவான உண்மையாக''த் தோன்றியிருக்குமேயானல் இந்த இழிதன்மைக்குரிய காரணங்களை அவர் ரிக்கார்டோவின் தத்துவத்தில் தேடியிருக்கவே கூடாது, ''சூட்சுமக் கருத்துக்கள்'' மீது தாக்குகள் தொடுத்திருக்கக் கூடாது; அவர் ரிக்கார்டோவைப் பற்றிச் சொன்ன வியப்புரைகள் ''தம்மை உயர்த்திப் பேசும் ஏமாற்று'' வகைப்பட்டதாகும்.

நிற்க. நமது நவீனகாலத் தன்னுணர்ச்சிவாதிகளின் சங்கதி என்ன? ''பண பலத்தின்'' யதார்த்தத்தை அவர்கள் மறுக்க நினைக்கிருர்களா? தொழில்துறை மக்களிடையே மட்டுமல்ல, எந்தக் ''கிராமச் சமூகத்தைச்'' சேர்ந்த, எந்தக் குக்கிராமத்தையும் சேர்ந்த விவசாயி மக்களிடையேயும் சரி, பண பலத்துக்குரிய எல்லாம் வல்ல தன்மையை மறுக்க நினைக்கிருர்களா? இந்த உண்மைக்கும் பண்டப் பொருளாதாரத்துக்கும் இடையே அவசியகரமான தொடர்பு உள்ளதை மறுக்க நினைக்கிருர்களா? இதை ஐயத்திற்குள்ளாக்கக் கூட அவர்கள் முயலவில்லை. வெறுமே மௌனம் சாதிக்கவே பார்க்கிருர்கள். உண்மைகளை உண்மை என்று அழைக்க அஞ்சுகிருர்கள்.

அவர்களின் அச்சத்தை நாம் முழுக்கப் புரிந்து கொள்கிறோம்: மனம் விட்டு உண்மையை ஒப்புக் கொண்டால் முதலாளித்துவத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட (நரோத்னிக்கு) விமர்சனத்தின் அடிப்படையே தகர்ந்துவிடும். தன்னுணர்ச்சிவாதத்தின் துருப்பிடித்த ஆயுதத்தைத் துடைத்தெடுத்துக் கொள்ள நேரம் கிடைப்பதற்கு முன்பே அவர்கள் இவ்வளவு ஆர்வத்தோடு போரில் குதிப்பதில் வியப்பேதும் இல்லை. அவர்கள் பின்பற்றும் வழிமுறைகளில் நன்மை,

---

ஆக, ஆசிரியர் ரிக்கார்டோவுடனும் ''சமுதாயத்தின் நிகர வருமானம்'' பற்றிய அவரது வரையறுப்புடனும் முற்ருக ஒருமனப்பட்டுள்ளார். இந்த வரையனுப்பைப் பற்றித்தான் ''என்ன! பணமே எல்லாம், மனிதர்கள் ஒன்றுமேயில்லையா?'' (II, 331) என்கிற ஸிஸ்மொந்தியின் ''பிரபலமான ஆட்சேபணை'' (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 44) எழுந்தது. நவீனகாலச் சமுதாயத்தில்—ஆம், அப்படித்தான்.

தீமை பற்றிய ஐயத்தயக்கம் எதுவும் இல்லாதிருப்பதிலும் வியப்பில்லை. **உணர்ச்சி வகைப்பட்ட** விமர்சனத்திடம் காட்டும் பகைமையைப் பொதுவாக விமர்சனத்திடம் பகைமை காட்டுவதாகச் சித்திரிக்க விரும்புகிறார்கள். என்ன இருந்தாலும், அவர்கள் வாழும் உரிமைக்காகப் போராடுகிறார்களல்லவா!

ஸிஸ்மொந்தீ தமது உணர்ச்சி வகைப்பட்ட விமர்சனத்தைச் **சமுதாய விஞ்ஞானத்தின் ஒரு தனி வழிமுறை** எனும் மட்டத்துக்கு உயர்த்தக்கூட முயன்றார். முன்பே பார்த்தோம்: முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை எதிர்கொண்டதும் தமது புறநிலைப்பகுப்பாய்வை ரிக்கார்டோ நிறுத்திக் கொண்டார் என்று குறைகூறுவதற்குப் பதிலாக (இந்தக் குறைக்கு நியாயம் இருந்திருக்கும்) ஸிஸ்மொந்தீ அவரது பகுப்பாய்வின் **புறநிலைத்தன்மையைக்** குறை கூறினார். ரிக்கார்டோ "மனிதனை மறந்துவிடுகிறார்" என்கிறார் அவர். "Nouveaux Principes" எனும் நூலின் இரண்டாம் பதிப்புக்கு அவர் எழுதிய முகவுரையில் இக்கண்டனவுரை காணப்படுகிறது:

"சமுதாய விஞ்ஞானங்கள் பற்றிய ஒரு நூலை மதிப்பீடு செய்வதில் வழக்கமாயுள்ள வழிமுறைகளை—அடிக்கடி எவ்வளவோ மேலோட்டமாகவும், பொய்யாகவும் உள்ள வழிமுறைகளை—கண்டிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். அவை தீர்க்கவேண்டியுள்ள பிரச்சினை இயற்கை விஞ்ஞானங்களின் எல்லாப் பிரச்சினைகளைக் காட்டிலும் ஒப்பிட முடியாதபடி எவ்வளவோ பல்பிரிவுச்சிக்குள்ளது; அதே நேரத்தில் அது அறிவைக் கவர்வது போலவே நெஞ்சையும் கவர்கிறது" (I, XVI). இயற்கை விஞ்ஞானங்களைச் சமுதாய விஞ்ஞானங்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டுவதும் சமுதாய விஞ்ஞானங்கள் "நெஞ்சை"க் கவர்வன என்கிறதும் ருஷ்ய வாசகருக்கு எவ்வளவோ பழக்கமான சேதியாயிற்றே!* இங்

* அரசியல் பொருளாதாரம் வெறுமே கணக்கீடு பற்றிய விஞ்ஞானம் (n'est pas une science de calcul) அல்ல அது ஒழுக்கநெறி பாற்பட்ட ஒரு விஞ்ஞானமாகும்.... அது மனிதர்களின் உணர்ச்சிகளையும் தேவைகளையும் வேட்கைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறபோதுதான் தனது குறிக்கோளைச் சாதிக்கிறது" (I, 313). ஸிஸ்மொந்தீயும் சரி,

கே ஸிஸ்மொந்தீ வெளியிடுகிற இதே கருத்துக்கள் பின்னுல் சில பத்தாண்டுகள் கழித்து ஐரோப்பாவின் தூரக்கிழக்கில் ''ருஷ்ய சமுதாயவியலாளர்''களால் ''புதிதாகக் கண்டுபிடிக் கப்பட''விருந்தது, ஒரு தனி ''சமுதாயவியல் பற்றிய அக நிலை வழிப்பட்ட வழிமுறையாகவும்'' விளங்கவிருந்தது.... நம் நாட்டு சமுதாயவியலாளர்கள் போலவே ஸிஸ்மொந்தீ யும் ''ஒருங்கே அறிவையும் நெஞ்சையும்'' கவர்ந்து விடு கிருர்*. எனினும் நாம் ஏற்கனவே பார்த்தது போல, எல் லா மிக முக்கியமான பிரச்சினைகளிலும் சிறு பூர்ஷ்வாவின் ''நெஞ்சம்'' பொருளாதாரத் தத்துவாசிரியனின் ''அறிவை'' வென்றுவிட்டது.

இதே வியப்புரைகளை வெளியிடும் அகநிலைப் பிரிவைச் சேர் ந்த ருஷ்யச் சமுதாயவியலாளர்களும் சரி, இந்த உணர்ச்சி வகைப்பட்ட சொற்ருெடர்களைச் சமுதாய விஞ்ஞானம் பற் றிய புதிய கருத்தோட்டங்களாகக் கருதுகின்றனர்; இச் சொற் ருெடர்கள் முதலாளி வர்க்கத்தைப் பற்றிய விமர்சனம் இன்னமும் குழந்தைத்தனமான, தொடக்க நிலையிலேயே இருந் ததைத்தான் உண்மையிலே காட்டுகின்றன. முரண்பாடுக ளைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வு கண்டிப்பான புறநிலை வழிப்பட்ட ''கணக்கீடாக'' இருந்த படியே **திட்டவட்ட மான வர்க்கங்களைச் சேர்ந்த மனிதர்களின்**—பொதுப்படை யான ''மனிதர்கள்'' அல்ல, இந்தச் சூட்சுமக் கருத்துக்குத் தன்னுணர்ச்சிவாதியும் நரோத்னிக்கும் ஒருங்கே ஒரு குறிப் பான சிறுபூர்ஷ்வா உள்ளடக்கம் தருகின்றனர்—''உணர்ச் சிகளையும் தேவைகளையும் வேட்கைகளையும்'' புரிந்துகொள் வதற்கு உறுதியான அடிப்படையும் கொடுப்பதில்லையா? எனி னும், ஸிஸ்மொந்தீ பொருளாதாரவாதிகளைத் **தத்துவார் த்த ரீதியிலே மறுக்க முடியாததால்** உணர்ச்சி வகைப்பட்ட சொற்ருெடர்களொடு நின்றுவிட்டார் என்பதே விஷயம். ''முத லாளித்துவ அமைப்பு முறையின் எந்த ஏறத்தாழ அறிவுள்ள காவலருக்கும் கற்பனுவாத நுனிப்புல் புலமை தத்துவார்த்த வகைப்பட்ட விட்டுக்கொடுத்தல்கள் செய்யக் கட்டாயப் படுத்தப்பட்டது. தனது வீர்யமின்மையைப் பற்றித் தன்னுள் எழும் உணர்வைத் தணிப்பதற்காக இந்தக் கற்பனுவாதி தனது எதிர்ப்பாளர்கள் புறநிலைப்பார்வை உள்ளவர்கள் என்று குறைகூறித் தேற்றிக்கொண்டார். என்னைவிட உன க்கு அறிவு அதிகம் என்று ஒப்புக் கொள்வோம், ஆனுல் உன் னைவிட அன்பு மிக்கவன் நான்!'' (பெல்டாவ், பக்கம் 43).

* இயற்கை விஞ்ஞானங்களிலிருந்து எழுகிற ''பிரச்சினை கள்'' ஏதோ ''நெஞ்சை''க் கவர்வனவாயில்லாதது போல!

பின்குறிப்பு*

விஞ்ஞானமுறையிலே ''புறநிலை வழிப்பட்டவரான'' ரிக்கார்டோவுடன் சம்பந்தப்படுத்திய நிலையில் உணர்ச்சிவழிப் பட்ட ஸிஸ்மொந்தீயைப் பற்றி இங்கு அளித்திருக்கும் மதிப்பீடு சரியே என்பதை மார்க்ஸின் கருத்து முற்றுக உறுதிப் படுத்துகிறது; மார்க்ஸின் இக்கருத்து 1905-ல் வெளியான ''மிகுதி மதிப்பு பற்றிய தத்துவங்கள்'' ("Theorien über den Mehrwert", II. B., I. T., S. 304 u. ff. "Bemerkungen über die Geschichte der Entdeckung des sogenannten Ricardoschen Gesetzes") எனும் நூலின் இரண்டாம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.** ரிக்கார்டோ ஒரு விஞ்ஞானி என்றும் அவருடன் ஒப்புநோக்கும் போது மால்துஸ் ஒரு மோசமான இலக்கியத்திருடன், பணமூட்டைகளின் கூலிக்கமர்த்திய வக்கீல், வெட்கங்கெட்ட அடிவருடி என்று காட்டி மார்க்ஸ் கூறுவதாவது:

''முதலாளித்துவ உற்பத்தி முறையானது பொதுவாக வே உற்பத்திக்கு மிகவும் அனுகூலமானது, செல்வத்தை உண்டாக்குவதற்கு மிகவும் அனுகூலமானது என்று ரிக்கார்டோ கருதுகிருர்; அந்தக் காலத்துக்கு அவர் கருதியது முற்றும் சரியேயாகும். **உற்பத்திக்காக உற்பத்தி வேண்டும் என்று விரும்புகிருர்**, அவர் விரும்புவதும் சரியே. ரிக்கார்டோவின் உணர்ச்சி வழிப்பட்ட எதிர்ப்பாளர்கள் செய்ததுபோலத் தன்னிலையில் உற்பத்தி ஒரு குறிக்கோள் அல்ல என்கிற உண்மையைச் சுட்டிக்காட்டி இதை ஆட்சேபிப்பது, உற்பத்திக்காகவே உற்பத்தி என்ருல் மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி—அதாவது, **தன்னிலையிலே ஒரு குறிக்கோளாக** மனித இயல்பின் செல்வத்தை வளர்ப்பது—தவிர வேருென்றுமில்லை என்பதை மறப்பதாகவே பொருள்படும். ஸிஸ்மொந்தீ செய்ததுபோல் தனிநபர்களின் நலவுரிமையினின்று

---

* இந்தப் பின்குறிப்பு 1908-ம் வருடப் பதிப்புக்கு எழுதப்பட்டது.—(பதிப்பாசிரியர்.)

** ''மிகுதி மதிப்பு பற்றிய தத்துவங்கள்'', நூல்தொகுதி 2, பிரிவு, பக்கம் 304, அடுத்தவை. ''ரிக்கார்டோ விதி எனப்படுவதின் கண்டுபிடிப்பு பற்றிய வரலாறு குறித்த குறிப்புகள்''.—(பதிப் பாசிரியர்.)

வேறுபட்டதாக இக்குறிக்கோளை வைத்துக்காட்டினுல், தனிநபர்களின் நலவுரிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு மொத்தமான மனிதகுலத்தின் வளர்ச்சியை மட்டுப்படுத்தித் தீர வேண்டும் என்று அடித்துப் பேசுவதாகவே பொருள்படும்—எடுத்துக்காட்டாக, போர் தனிநபர்களைச் சாகச்செய்கிறதினுல் போர் செய்யவே கூடாது என்பதுபோல. இந்தப் பகைமையை இருட்டடிக்கிற, மறுக்கிற பொருளாதாரவாதிகளை எதிர்க்கும் நிலையிலே மட்டுமே ஸிஸ்மொந்தீ சொல்வது சரி'' (பக்கம் 309).* ரிக்கார்டோவின் பார்வைநிலையில், முதலாளித்துவ உற்பத்தியில் பாட்டாளிகளையும், இயந்திரங்களையும் பண்டங்களையும் ஒரே தரத்தில் வைக்க அவருக்கு முழு உரிமை உண்டு. "Es ist dieses stoisch objectiv, wissenschaftlich". இது பற்றறுத்தநிலை, இது புறநிலைவழிப்பட்டது, இது விஞ்ஞான வழிப்பட்டது'' (பக்கம் 313). இந்த மதிப்பீடு ஒரு திட்டவட்டமான காலப்பகுதிக்கு, பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்துக்கு, மட்டுமே பொருந்தும் என்பது சொல்லாமலே விளங்கும்.

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''மிகுதி மதிப்பு பற்றிய தத்துவங்கள்'', பகுதி 2.—(பதிப்பாசிரியர்.)

அத்தியாயம் 2

முதலாளித்துவத்தைப் பற்றித் தன்னுணர்ச்சிவாதிகள் அளிக்கும் விமர்சனத்தின் தன்மை

ஏற்கனவே நாம் ஸிஸ்மொந்தீயின் ''அறிவை''ப் போதிய அளவுக்குக் கவனித்தோம். இப்போது அவரது ''நெஞ்சத்தை''ச் சற்று நெருங்கிப் பார்ப்போம். அவரது பார்வை நிலை (தத்துவார்த்தப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட ஓர் அம்சமாக மட்டுமே இதுவரை இதை ஆய்ந்தோம்), முதலாளித்துவத்தின்பால் அவரது கண்ணேட்டம், அவரது சமுதாயரீதியான அனுதாபங்கள், அவர் செயலாற்றிவந்த காலத்தின் ''சமுதாய-அரசியல்'' பிரச்சினைகளைப் பற்றிய அவரது கருத்தோட்டம், சம்பந்தப்பட்ட எல்லாச் சுட்டுக்குறிப்புகளையும் திரட்ட முயல்வோம்.

I

முதலாளித்துவத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட விமர்சனம்

ஸிஸ்மொந்தீ எழுதிய காலத்தைத் தனிவேறுபடுத்திக் காட்டிய உருக்கூறு, பரிமாற்றத்தின் (நவீனகால மொழியில் சொன்னல், பணப் பொருளாதாரத்தின்) விரைவான வளர்ச்சியேயாகும்; பிரெஞ்சுப் புரட்சி நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை ஒழித்தபின் இது குறிப்பான கூர்மையுடன் வெளிப்பட்டது. ஸிஸ்மொந்தீ பரிமாற்றத்தின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் ஐயந்திரிபுக்கிடமின்றிக் கண்டித்தார், ''நாசகரமான போட்டியை''ப் பழித்துக்கூறினர், ''போட்டியின் விளைவுகளினின்று மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கங்களை'' அவர் அறைகூவியழைத்

தார் (அத்தியாயம் 8, I. VII), மற்றும் மற்றும்.''விரைவான பரிமாற்றங்கள் மக்களின் நன்னம்பிக்கையைக் கெடுக்கின்றன. இலாபத்துக்கு விற்பது எனும் இடையருத அக்கறை விலையை மிதமிஞ்சி உயர்த்திக் கேட்கவும் ஏமாற்றவும் செய்கிறது, இடையருத பரிமாற்றங்களால் பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவனின் வாழ்க்கை கடினமாகக் கடினமாக, அவன் ஏமாற்றுவதில் இறங்கத் தூண்டப்படுவதும் அதிகமாகிறது'' (I, 169). நமது நரோத்னிக்குகள் தாக்குவது போல் பணப் பொருளாதாரத்தைத் தாக்குவதற்குத் தேவைப்பட்ட வெகுளித்தனம் இதுதான்!''...பொருளாதார அமைப்புமுறையில் வர்த்தகச் செல்வம் இரண்டாந்தர முக்கியத்துவம் மட்டுமே உள்ளதாகும்; பிழைப்புக்குச் சாதனமாயுள்ள நிலச் (territoriale) செல்வம் முதலில் அதிகரித்தாகவேண்டும். வர்த்தகத்தால் வாழ்ந்துவருகிற எண்ணிறைந்த தொகையிலுள்ள வர்க்கம் முழுவதும் இந்நிலப் பலன்களில்—அவை உள்ள அளவுக்கு மட்டுமே—பங்கு கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படவேண்டும். இந்த விளைபொருள் வளர்கிற அளவுக்குத் தான் இது (இந்த வர்க்கம்) வளரவேண்டும்'' (I, 322-323). விவசாய வளர்ச்சியை முந்திக்கொண்டு வர்த்தகமும் தொழிலும் வளர்வது பற்றிக் குறைகூறிப் பலப்பல பக்கங்களை நிரப்பும் திரு. நி.—ன் இந்தத் தந்தைவழியாட்சிக்கால தன்னுணர்ச்சிவாதிக்குமேல் ஓர் அடியாவது முன்னெடுத்து வைத்திருக்கிறாரா? தன்னுணர்ச்சிவாதி, நரோத்னிக்கு ஆகியோரின் குறைகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தை முற்றுகத் தவறுகப் புரிந்து கொண்டிருப்பதைத் தான் மெய்ப்பிக்கின்றன. விவசாயத்தை முந்திக்கொள்ளாமல் இருக்கிற வர்த்தக, தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவம் இருக்க முடியுமா? ஏன், முதலாளித்துவ வளர்ச்சி என்பதே பண்டப் பொருளாதாரத்தின்—அதாவது, கச்சா பொருட்களைச் செய்முறைப்படுத்தும் கிளைகளை ஒன்றன்பின் ஒன்றாக விவசாயத் துறையிலிருந்து பிரித்து இந்தக் கச்சாபொருட்களின் உற்பத்தியையும் செய்முறைப்படுத்தலையும் நுகர்வையும் இணைத்துக் கொண்டு, தனியொரு நிலையிலிருந்த இயற்கைப் பொருளாதாரத்தை உடைத்தெறிந்த சமுதாயரீதியான உழைப்புப் பிரிவினையின்—வளர்ச்சியாகும். எனவேதான் முதலாளித்துவம் எப்பொழுதும் எங்கும் விவசாயத்தின் வளர்ச்சி

யைவிட மேலும் விரைவான வர்த்தக, தொழில் வளர்ச்சியையும், மேலும் விரைவான வர்த்தக, தொழில் துறை மக்கள்தொகையின் வளர்ச்சியையும், மொத்த சமுதாயப் பொருளாதார அமைப்புமுறையிலே வர்த்தகமும் தொழிலும் மேலும் அதிகமான செல்வாக்கும் முக்கியத்துவமும் பெற்றிருப்பதையும், குறிக்கிறது.* அது வேறுவிதமாக இருக்கவும் முடியாது. திரு. நி.—ன் இவ்வகைக் குறைகளைத் திருப்பிச் சொல்வதின் வழியாக அவர் தமது பொருளாதாரக் கருத்துக்களில் மேம்போக்கான உணர்ச்சிவகைப்பட்ட தன்னுணர்ச்சிவாதியைத் தாண்டி மேலே போகவில்லை என்றே மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொள்கிறார். ''இந்த விவேகமற்ற ஆர்வமுயற்சியுணர்ச்சிக்கும் (esprit d'entreprise), எல்லா விதமான மித மிஞ்சிய வாணிபத்துக்கும்—இவற்றால் அமெரிக்காவில் எத்தனையோ முறிவுகள் ஏற்படுகின்றன—காரணம், வங்கிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, உண்மையான சொத்துக்கு (fortune reélle) பதிலாகப் பொய்த் தோற்றமான கடன்மதிப்பு சுளுவாக அமர்ந்து விடுவது'' (II, III), மற்றும் மற்றும். ஸிஸ்மொந்தீ ஏன் பணப் பொருளாதாரத்தை (முதலாளித்துவத்தையும் கூட) தாக்கினார்? அதற்கு அவர் பதிலாக அளிப்பதென்ன? சிறிய, சுதந்தரமான உற்பத்தி, கிராமப்புறங்களில் விவசாயிகளின் இயற்கைப் பொருளாதாரம், நகரப்புறங்களில் கைவினைஞர்களின் உற்பத்தி, என்பதே. முந்தியதைப் பற்றி அவர் ''தந்தை வழியாட்சிக்கால விவசாயத்தைப்பற்றி'' என்று தலைப்பிட்ட அத்தியாயத்தில் (அத்தியாயம் III, I. III, “De l'exploitation patriarcale”. ''நிலத்தைத் தந்தைவழியாட்சிக்கால முறையில் பயன்படுத்தல்''. நூல் III ''பிரதேச'' அல்லது நிலச் செல்வம் குறித்து ஆய்கிறது) சொல்வதாவது:

''நிலத்தின் முதன்முதலான சொந்தக்காரர்கள் தாங்களே உழவர்களாயிருந்தனர்; தங்களுடைய குழந்தைகளின்,

---

* முதலாளித்துவம் வளர வளர எங்கும் எப்போது விவசாயம் வர்த்தகத்துக்கும் தொழிலுக்கும் பின்னடைந்துவிடுகிறது, அது அவற்றிற்குக் கீழ்ப்பட்டுவிடுகிறது, அவற்றால் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது, கொஞ்சகாலத்துக்குப்பிறகு தான் அது முதலாளித்துவ உற்பத்திப் பாதைக்கு அவற்றால் எப்போதும் இழுத்துவரப்படுகிறது.

தங்களுடைய வேலையாட்களின் உழைப்பைக் கொண்டே எல்லாச் சாகுபடி வேலையும் செய்யப்பட்டுவந்தது. நாட்டின் எண்ணிக்கையில் மிகுந்த வர்க்கத்துக்கு இதைவிட மேலான இன்பத்தையும் நற்பண்பையும், எல்லோருக்கும் இதைவிட விரிவான செழிப்பையும் (opulence), பொது ஒழுங்குக்கு இதைவிட மேலான ஸ்திரத்தன்மையையும் உத்தரவாதம் செய்கிற சமுதாய அமைப்பு* வேறு இல்லை.... சாகுபடியாளர்களே நிலத்தின் சொந்தக்காரர்களாகவும் (où le fermier est propriétaire) வேலையனைத்தையும் செய்யும் மக்களுக்கே முற்றுக (sans partage) விளைபொருள் சொந்தமானதாயும் இருக்கிற நாடுகளில்—அதாவது, நாம் சொல்கிற தந்தைவழியாதிக்க முறையில் விவசாயம் இருக்கிற நாடுகளில்—உழவன் தான் குடியிருக்கும் வீட்டையும் உழுகிற நிலத்தையும் நேசிக்கிறதின் அறிகுறிகளை ஒவ்வொரு படியிலும் காண்கிறோம்.... அவனுக்கு வேலை செய்வதே ஓர் இன்பமாக உள்ளது.... விவசாயம் தந்தைவழியாதிக்க முறையிலுள்ள இன்பகரமான நாடுகளில் ஒவ்வொரு வயலின் குறிப்பான தன்மையும் பயிலப்படுகிறது, இந்த அறிவு தந்தையிடமிருந்து மகனுக்கு மாற்றித்தரப்படுகிறது.... பணக்காரர்கள் இயக்கிவரும் பெருமளவான பண்ணைமுறை ஒருக்கால் ஒரு

* அப்படியே நமது நரோத்னிக்குகள் செய்வதுபோல் ஸிஸ்மொந்தி எடுத்த எடுப்பிலேயே விவசாயிகளின் சுதந்தரமான பொருளாதாரத்தை ஒரு ''சமுதாய அமைப்பாக'' உருமாற்றிவிட்டதைக் கவனியுங்கள். இது ஒரு வெளிப்படையான செப்பிடு வித்தையாகும். வெவ்வேறு வட்டாரங்களைச் சேர்ந்த இந்த விவசாயிகளை இணைப்பது எது? நிலப்பிரபுத்துவ உறவுகளை நீக்கிவிட்ட சமுதாய உழைப்புப்பிரிவினையும் பண்டப் பொருளாதாரமுமாகும். பண்டப் பொருளாதார அமைப்புமுறையின் ஒரு பிரிவைக் கற்பனுவாத உச்சிக்குத் தூக்கிவைப்பதும் மற்ற பிரிவுகளைப் புரிந்துகொள்ளத் தவறுவதும் நமக்குப் பளிச்சென்று தெரிகிறது. திரு. நி.—ன் 322-ம் பக்கத்தில் ''உற்பத்திக் கருவிகள் விவசாயிகளின் உடைமையாயிருப்பதின் அடிப்படையில் அமைந்த தொழில் வடிவம்'' என்று சொல்கிறதுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். உற்பத்திக்கருவிகள் விவசாயிகளின் உடைமையாயிருப்பதுதான்—வரலாறுவழியிலும் தர்க்க வழியிலும் — **முதலாளித்துவ** உற்பத்திக்குத் **தொடக்கப்புள்ளியாக** இருக்கிறதுங் கூடத் திரு. நி.—ன்னுக்குத் தெரியாது!

தலைப்போக்கையும் பழக்க மரபையும் தவிர்க்கிறதாயிருக்கலாம். ஆனால் அறிவு (l'intelligence—விவசாயத்தைப் பற்றிய அறிவு) என்பது வேலை செய்கிறவனை அடையாது, மோசமாகவும் செயல்படுத்தப்படும்.... தந்தைவழியாதிக்க முறையிலான பொருளாதாரம் வயல்களில் எல்லா வேலைகளும் செய்கிற நாட்டின் எண்ணிக்கை மிக்க பகுதியினரின் ஒழுக்க நெறிகளையும் குணவியல்பையும் மேம்படுத்துகிறது. சொத்து ஒழுங்குப் பழக்கங்களையும் சிக்கனத்தையும் வளர்க்கிறது; நிலையான செழிப்பு பெருந்தீனிப்போக்கையும் (gourmandise) மிகைக்குடிப் போக்கையும் ஒழிக்கிறது.... அநேகமாக இயற்கையோடு மட்டும் பரிமாற்றம் செய்கிற அவனுக்கு (உழவனுக்கு) மனிதர்களிடம் அவநம்பிக்கை கொள்வதற்கோ நேர்மையின்றி நடந்துகொள்வதற்கோ நியாயம் குறைவு—தொழிலாளிக்கு இருப்பதை விட'' (I, 165-170). ''முதன் முதலான சாகுபடியாளர்கள் சாதாரண உழைப்பாளிகளாவர்; அவர்களே பெரும்பகுதியான விவசாயவேலை செய்து வந்தனர்; தத்தம் குடும்பத்தின் உழைக்கும் திறத்துக்குத் தக்க அளவிலே அவர்களின் நிலபுலங்களின் அளவும் வைத்திருந்தனர்....அவர்கள் விவசாயிகளாக இருக்கிற நிலை போய்விடவில்லை; அவர்களே ஏர் பிடித்து உழுதார்கள் (tiennent eux-mêmes les cornes de leur charrue); வயல்வெளியிலும் கொட்டிலிலும் அவர்களே கால்நடைகளைக் கவனித்துப் பேணி வந்தனர்; சுத்தமான காற்றிலே வசித்து, உடல்வலுவுள்ள குடிமக்களையும் தாட்டிமையுள்ள படைவீரர்களையும் படைக்கிற வகையில் தீராத உழைப்புக்கும் எளிய உணவுக்கும் பழக்கப்பட்டுவிட்டார்கள்.* உடன் வேலைசெய்வதற்கு அன்றாடக் கூலிக்காரர்களை அமர்த்திக்கொள்வது அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். வீட்டோடு இருக்கும் வேலைக்காரர்களைத்தான் (des domestiques) வைத்திருந்தார்கள். எப்போதும் தமக்குச் சமதையானவர்களிடையேயிருந்துதான்இந்த வேலைக்காரர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு சமதையானவர்

---

* திரு. ஸ்துரூவே தமது ''விமர்சனக் குறிப்புரைகள்'' 17-ம் பக்கத்தில் குறிப்பிடுகிற 19-ம் நூற்றாண்டின் இறுதியைச் சேர்ந்த ''முற்போக்கான'' நூலாசிரியரின் அறிக்கைகளோடு இந்தத் தேன் சொட்டும் பாட்டிக்கதைகளை ஒப்புநோக்குமாறு வாசகரைக் கேட்டுக்கொள்கிறோம்.

களாகவே நடத்திவந்தார்கள்; ஒரே மேஜையண்டை உட்கார்ந்து அவர்கள் குடிக்கும் ஒயினையே இவர்களும் குடித்தார்கள்; அவர்கள் உடுத்தும் உடுப்பையே இவர்களும் உடுத்தார்கள். எனவே, இந்தச் சாகுபடியாளர்களும் அவர்களின் வேலைக்காரர்களும் ஒரே விவசாயி வர்க்கமாவர்; அதே உணர்ச்சிகளால் உந்தப்பட்டும், அதே இன்பங்களில் ஈடுபட்டும், அதே பாதிப்புகளுக்கு ஆட்பட்டும், அதே உறவுகளால் நாட்டுடன் பந்தப்பட்டும் இருந்துவந்தார்கள்'' (I, 221).

ஆக, இதுதான் அந்தப் புகழ்பெற்ற ''மக்களுடைய உற்பத்தி'' என்பது! உற்பத்தியாளர்களை ஒன்றுபடுத்திவைக்கும் தேவையை ஸிஸ்மொந்தீ புரிந்துகொள்ளவில்லை என்று சொல்லி விடாதீர்கள்: (ஃபூரியே, ஓவன், தாம்ப்ஸன், முய்ரோன் போல) ''அவரும் சேர்க்கையை விரும்புவதாக'' (II, 365) வெளிப்படையாகச் சொல்கிறார் (கீழே பார்க்க). அவர் **சொத்தை** ஆதரிக்கிறவர் என்று சொல்லப்படாது; மாறாக, அவர் வலியுறுத்துவது சிறு பொருளாதாரத்தைத்தானே தவிர (பார்க்க: II, 355) சிறு சொத்தையல்ல. சிறிய சுதந்தரமான பொருளாதாரத்தை இப்படி இலட்சியநிலைக்கு உயர்த்துவது வெவ்வேறு வரலாற்றுவழிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளில் வேறுவேறாகத் தோற்றமளிக்கிறது என்பது தெளிவு. என்ற போதிலும், தன்னுணர்ச்சி வாதமும் நரோதியமும் ஒருங்கே ஏற்றிப்போற்றிக்கொள்வது சிறு விவசாயிப் பொருளாதாரத்தைத்தான் என்பதில் ஐயம் இருக்கமுடியாது.

இதேபோல், ஸிஸ்மொந்தீ ஆதிநிலை கைவினைஞர் உற்பத்தியையும் கில்டு அமைப்புகளையும் இலட்சியநிலைக்கு உயர்த்துகிறார்.

''கிராமத்துச் செருப்புத் தைக்கிறவனே வியாபாரியாகவும் தொழிற்சாலைச் சொந்தக்காரனாகவும் தொழிலாளியாகவும் இருக்கிறான்; அவன் வாங்குறுதி பெறாமல் ஒரு ஜோடி செருப்பு கூடச் செய்வதில்லை'' (II, 262); ஆனால் முதலாளித்துவப் பட்டறைத்தொழில் கிறுக்கியைப் பற்றி அறியாத நிலையில் திவாலாகிவிடக்கூடும். ''தத்துவார்த்தப் பார்வை நிலையிலிருந்தும் சரி, நடைமுறையுண்மையின் பார்வைநிலையிலிருந்தும் சரி, கில்டு (corps de métier) அமைப்பு மிகையான மக்கள்தொகை உருப்பெறுவதைத் தடுத்தது, தடுத்துத் தீரவேண்டியதாயும் இருந்தது என்பதில் ஐயமேயில்லை.

தற்காலத்தில் அப்படிப்பட்ட மிகை மக்கள்தொகை இருப்பதும், அது இன்றைய அமைப்புமுறையின் அவசியமான விளைவாக உள்ளதும் ஐயத்திற்கிடமற்றது'' (I, 431). இது போன்ற பல மேற்கோள் பகுதிகளை மேலும் காட்டமுடியும், எனினும் ஸிஸ்மொந்தீயின் நடைமுறைப் பரிகாரங்களைப்பற்றிய நமது பரிசீலனையைப் பின்னால் வைத்துக் கொள்வோம். இங்கே நாம் மேற்கோள் காட்டியவற்றுடன் நின்றுகொண்டு ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையைப் பரிசீலிப்போம். நாம் மேற்கோள் காட்டிய வாதங்களை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்: 1) சிறு உற்பத்தியாளர்களின் பாதுகாப்பையும் அவர்களிடையேயுள்ள நெருக்கமான உறவுகளையும் (கைவினைஞனும் அவனது வாடிக்கைக்காரர்களும் நெருங்கி இருத்தல், அல்லது உழவனும் அவனுக்கு சமதையான மற்ற உழவர்களும் நெருங்கி இருத்தல், எனும் வடிவத்தில் உள்ளவை) அழித்ததற்காகப் பணப் பொருளாதாரம் கண்டிக்கப்படுகிறது; 2) உற்பத்தியாளனின் சுதந்தரத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அகற்றுவதற்காகவும் சிறு உற்பத்தி ஏற்றிப்போற்றப்படுகிறது.

இவ்விரண்டு கருத்துக்களும் நரோதியத்தின் முக்கியமான பகுதியாக இருப்பதைக் குறித்துக் கொண்டு,* அவற்றின் பொருளைப் பரிசீலிக்க முயல்வோம்.

தன்னுணர்ச்சிவாதிகளும் நரோத்னிக்குகளும் பணப்பொருளாதாரத்தை விமர்சிப்பதின் சாராம்சம் பின்வருமாறு: தனிநபர்போக்கும்** பகைமையும் (போட்டியும்), மற்றும் உற்பத்தியாளனின் பாதுகாப்பின்மையும் சமுதாயப் பொரு

---

* இப்பிரச்சினையிலும் திரு. நி.—ன் முரண்பாடுகளைக் கொட்டிக் குவித்திருக்கிறார்; ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத எத்தனை முன்கூற்றுக்கள் வேண்டுமாயினும் அவற்றிலிருந்து நாம் பொறுக்கிக் கொள்ளமுடியும். என்றபோதிலும், ''மக்களுடைய உற்பத்தி'' எனும் தெளிவற்ற சொல்லைப் பயன்படுத்தி அவர் விவசாயிப் பொருளாதாரத்தை இலட்சியநிலைக்கு உயர்த்துவது பற்றி ஐயம் இருக்கமுடியாது. எல்லா வகையான மாறுவேடங்கள் போட்டுக் கொள்வதற்கும் மூடுபனி மிகவும் இசைவானதல்லவா?

** ஒப்புநோக்குக: திரு. நி.—ன், பக்கம் 321 இறுதியும், பிறவும்.

ளாதாரத்தின் ஸ்திரமற்றநிலையும்* இந்தப் பணப் பொருளாதாரத்தின் பலன்களாகும் என்று இவ்விமர்சனம் சுட்டிக் காட்டுகிறது.

முதலில் ''தனிநபர்போக்கை'' எடுத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள விவசாயிகளின் சேர்க்கையை அல்லது ஒரு குறிப்பிட்ட கைத்திறத் தொழிலின் கைவினஞர்களின் (அல்லது கைத்தொழில் செய்வோரின்) சேர்க்கையை, அவர்களைப் பிணைத்துவைக்கும் பந்தங்களை அழித்துப் போட்டியை வைக்கிற முதலாளித்துவத்தோடு எதிர்நிலையில் வைத்து வேறுபாடு செய்வது வழக்கம். இந்த வாதம் தன்னுணர்ச்சிவாதத்தின் இனக்குறிப்பான தவற்றைத் திரும்பச்செய்வதாகும்: அதாவது, முதலாளித்துவம் முரண்பாடுகளால் இழுபறிக்காளாகிறது என்கிற காரணத்தால் அது ஒரு **மேலான சமுதாய அமைப்பின் வடிவம்** அல்ல என்பதாகும். மத்தியகாலக் கிராமச் சமூகம், கில்டு, ஆர்டெல், இன்னும் இவை போன்ற மற்ற பந்தங்களை அழிக்கும் முதலாளித்துவம் அவற்றின் இடத்தில் வேறு பந்தங்களை வைப்பதில்லையா? பண்டப் பொருளாதாரம் என்பதே உற்பத்தியாளர்களிடையேயுள்ள ஒரு **பந்தம்**, சந்தையினுல் நிலைநாட்டப் பெற்ற ஒரு பந்தம், இல்லையா?** ஏற்ற இறக்கங்களும்

---

* மேலே குறிப்பிட்ட நூல், 335. பக்கம் 184: முதலாளித்துவம் ''ஸ்திரநிலையைப் பறித்துவிடுகிறது.'' மற்றும் பல.

** உண்மையென்னவென்ருல், **சமுதாயம், சேர்க்கை** என்பவை இடுகுறிப்பெயர்களே; அவற்றை ஒவ்வொரு சமுதாயத்துக்கும் சூட்டலாம்; நிலப்பிரபுத்துவச் சமுதாயத்துக்கும் சூட்டலாம், முதலாளித்துவச் சமுதாயத்துக்கும் சூட்டலாம். முதலாளித்துவச் சமுதாயம் என்பது போட்டியை அடிப்படையாகக் கொண்ட சேர்க்கையாகும். அப்படியிருக்க, சேர்க்கை என்கிற ஒரே சொல்லைக்கொண்டு போட்டியை மறுத்துவிடமுடியும் என்று நினைக்கும் எழுத்தாளர்கள் எப்படி இருக்கமுடியும்?'' (மார்க்ஸ், "Das Elend der Philosophie" ''மெய்யறிவின் வறுமை''). — (பதிப்பாசிரியர்.) உணர்ச்சிவகைப்பட்ட முறையிலே போட்டியைக் கண்டிப்பதை இவ்வாசிரியர் கடுமையாக விமர்சித்து, ''தொழில் நுட்ப முன்னேற்றத்தையும் சமுதாய முன்னேற்றத்தையும்'' வளர்க்கிற அதன் **முற்போக்கான அம்சத்தை**, அதன் உந்து சக்தியை, தெளிவாக வலியுறுத்துகிருர்.

முரண்பாடுகளும் நிறைந்த இந்தப் பந்தத்தின் பகைமைத் தன்மையை வைத்து இந்தப் பந்தமே கிடையாது என்று கூற யாருக்கும் உரிமையில்லை. மேலும், முரண்பாடுகளின் வளர்ச்சி இந்தப் பந்தத்தின் வலிமையை மேன்மேலும் அதிகமான சக்தியுடன் வெளிப்படுத்துகிறதையும், சமுதாயத்தின் எல்லாத் தனித்தனி கூறுகளையும் வர்க்கங்களையும் ஒன்றுபட முயற்சிக்குமாறு கட்டாயப்படுத்துகிறதையும், ஒரு கிராமச் சமூகத்தின் அல்லது ஒரு மாவட்டத்தின் குறுகிய வரம்புக்குள் மேற்கொண்டு ஒன்றுபடுவதற்குப் பதிலாக முழுமையாக ஒரு நாட்டுக்குள்ளேயும், வெவ்வேறு நாடுகளிலும்கூட இருக்கிற அந்தந்த வர்க்கங்களின் எல்லா உறுப்பினர்களும் ஒன்றுபடும் படியும் கட்டாயப்படுத்துகிறதையும் நாம் அறிவோம். ஒரு தன்னுணர்ச்சிவாதி மட்டுமே தனது பிற்போக்கான பார்வை நிலையைக் கொண்டு இந்தப் பந்தங்கள் இருப்பதையும் மேலும் ஆழமான அவற்றின் முக்கியத்துவத்தையும் மறுக்க முடியும்; இந்த முக்கியத்துவம் பிரதேச வகைப்பட்ட, வேலை சம்பந்தப்பட்ட, மதம் சம்பந்தப்பட்ட, இன்னோரன்ன பிற நலன்களில் அல்லாமல் தேசியப் பொருளாதாரத்தில் வகிக்கும் பொதுவான பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவம் தோற்றுவித்த இந்தப் புதிய பந்தங்கள் கரு நிலையில் இன்னமும் இருந்த காலத்தில் எழுதிய ஸிஸ்மொந்தீக்கு இவ்வகை வாதம் தன்னுணர்ச்சிவாதி எனும் பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தது என்றால் அவ்வகை மதிப்பீட்டைப் பெறுவதற்கு நமது நரோத்னிக்குகளுக்கு மேலும் தகுதியுண்டு; காரணம், இன்றைய நாட்களில் இந்தப் பந்தங்களின் பிரம்மாண்டமான முக்கியத்துவத்தை முழுக்குருடர்களே மறுக்கமுடியும்.

பாதுகாப்பின்மை, ஸ்திரமின்மை முதலியவற்றைப் பொருத்தவரை, வெளிநாட்டுச் சந்தை குறித்து நாம் விவாதிக்கையில் கேட்ட அதே பாட்டுதான் இங்கும் கேட்கிறோம். இவ்வகைத் தாக்குகள் தன்னுணர்ச்சிவாதியைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. முதலாளித்துவத்தில் எதை மிகவும் மதிப்புள்ளதாக விஞ்ஞானத் தத்துவம் கருதுகிறதோ அதைத் தான் அவன் பயத்துடன் கண்டிக்கிறான்: அதாவது, முதலாளித்துவத்துக்கு உள்ளார்ந்த நிலையிலே உள்ள வளர்ச்சிக்

கான முனைப்பான முயற்சி, முன்னேறுவதற்கான அடக்க வொண்ணு விழுப்பம், ஒரு நிலையில் நின்றுவிட இயலாத் தன்மை, பொருளாதார நிகழ்ச்சிப்போக்குகளை அவற்றின் முந்தைய இறுகிப்போன பரிமாணங்களில் மறுபடியும் தோற்றுவிக்க இயலாத்தன்மை—இதையே அவன் கடுமையாகக் கண்டிக்கிறன். (கிராமச்சமூகம் போன்ற) மத்தியகாலச் சேர்க்கைகளைச் சமுதாயம் முழுவதற்கும் பரவச் செய்வதற்குக் கற்பனுவினேதமான திட்டங்களைப் புனைகிற ஒரு கற்பனுவாதிதான், முதலாளித்துவத்தின்''ஸ்திரமின்மையே'' ஒரு மாபெரும் முற்போக்கான காரணி, அது சமுதாய வளர்ச்சியை விரைவுபடுத்தி, மேன்மேலும் திரளான மக்களைச் சமுதாய வாழ்க்கையின் சுழலில் இழுத்துவிட்டு, அதன் கட்டமைப்பு குறித்து ஆழ்ந்து சிந்திக்கக் கட்டாயப்படுத்தி, தங்களுடைய சொந்தக் கையாலேயே ''இன்பவாழ்க்கையை உருவாக்க''ச் செய்கிறது என்கிற உண்மையைப் புறக்கணிக்க முடியும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஸ்திரமின்மை, பரிமாற்றத்தின் வளர்ச்சியில் தகவுப்பொருத்தமின்மை, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையேயும் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையேயும் உள்ள சமனநிலை சீர்குலைக்கப்படுவது, நெருக்கடிகளின் இயற்கைக்கு விரோதமான தன்மை, முதலானவற்றைப் பற்றிய திரு. நி.—ன்னின் சொற்றெடர்கள் அவர் முற்றுகத் **தன்னுணர்ச்சிவாதத்தின்** பார்வைநிலையையே இன்னமும் வைத்திருப்பதை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன. ஆகவே, ஐரோப்பிய தன்னுணர்ச்சிவாதத்தைப் பற்றிய விமர்சனம் **சொல்லுக்குச் சொல்** அவரது தத்துவத்துக்கும் பொருந்துகிறது. சான்றுக்கு இது:

''முதியவரான புவாகில்பேர் கூறுவதைக் கேட்போம்:

'' 'அவர் சொல்வதாவது: பண்டங்களின் விலை எப்போதும் **தகவுப் பொருத்தமாக** இருக்கவேண்டும்; ஏனெனில், அப்படிப்பட்ட பரஸ்பர ஏற்பாடு மட்டுமே அவை பரஸ்பரமாக ஒன்றையொன்று உண்டாக்கிக்கொள்ளச் செய்யமுடியும்....' எனவே, செல்வம் என்பது மனிதர்களிடையே, கைத்திறத்தொழில்களிடையே, என்றவாறு பரஸ்பரமாயுள்ள இடையருத தொடர்பு தவிர வேறில்லையாதலால், விலைகளின் தகவுப்பொருத்தத்தின் சீர்குலைவின் விளைவாக இப்படிப்பட்ட தொடர்பு நின்றுபோனதிலே வறுமைக்குரிய

காரணத்தைத் தேடியடையாமல் வேறெங்கோ தேடிக் கொண்டிருப்பது பயங்கரமான குருட்டுத்தனமாகும்.''

''ஒரு நவீனகாலத்திய* பொருளாதாரவாதி கூறுவதையும் கேட்போம்:

'' 'உற்பத்தியோடு அவசியமாக இணைக்கப்படவேண்டிய மாபெரும் விதி **தகவுப்பொருத்தம்** பற்றிய விதியாகும் (the law of proportion), அது ஒன்றுதான் மதிப்பின் தொடர்ச்சியைப் பாதுகாத்துவைக்க முடியும்.... சமமதிப்பு உத்தரவாதம் செய்யப்படவேண்டும்.... எல்லா நாடுகளும் தத்தம் வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் எண்ணிறைந்த வர்த்தக ஒழுங்கியக்கிச் சட்டங்களும் வரையறைச் சட்டங்களும் போட்டு இங்கே விளக்கியுள்ள குறிக்கோளை ஓர் அளவுக்காவது சாதிக்க முயன்றுள்ளன.... ஆனால் மனிதனுக்கு இயல்பாயும் உள்ளார்ந்தபடியும் உள்ள தன்னலமானது... இவ்வகை ஒழுங்கியக்கிச் சட்டங்களை உடைத்தெறியும்படி தூண்டியுள்ளது. தகவுப் பொருத்தமான உற்பத்தி என்பது (proportionale production) சமுதாயப் பொருளாதாரத்தின் விஞ்ஞானத்திற்குரிய முழு உண்மையைக் கைவரப் பெறுவதாகும்' (W. Atkinson. “Principles of Political Economy”, London, 1840, p. 170, 195).**

“Fuit Troja!*** மீண்டும் எத்தனையோ விருப்பங்களுக்குக் குறிக்கோளாக இருக்கத் தொடங்கியிருக்கும் கிறுக்கி, வரத்துக்கு இடையேயுள்ள இந்தச் சரியான தகவுப் பொருத்தம் வெகுகாலத்துக்கு முன்பே ஒழிந்துபோய்விட்டது, அது முதுமைப்பருவத்தில் இறங்கிவிட்டது; உற்பத்திச் சாதனங்கள் வரம்புக்குட்பட்டதாயிருந்த காலத்திலேதான், பரிமாற்ற இயக்கம் மிகவும் குறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் நிகழ்ந்துவந்து காலத்திலேதான், அது சாத்தியமாயிருந்தது. பெருமளவான தொழிலின் தோற்றத்தையொட்டி இந்தச் சரியான தகவுப் பொருத்தம் முடிவெய்தித் தீரவேண்டியிருந்தது (mußte), உற்பத்தியும் தவிர்க்கமுடியாதவாறு

---

* இது 1847-ல் எழுதப்பட்டது.

** ''அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்'', லண்டன், 1840, பக்கங்கள் 170-ம், 195-ம்). — (பதிப்பாசிரியர்.)

*** ''டிராய் ஒழிந்தது''.—(பதிப்பாசிரியர்.)

செழிப்பு, வீழ்ச்சி, நெருக்கடி, தேக்கம், மறுவுயிர்த்த செழிப்பு என்றவாறுள்ள தசைகளினூடே இடையறுத் தொடராகக் கடக்கவேண்டியதாயிற்று.

''ஸிஸ்மொந்தீ போல் சமுதாயத்தின் இன்றைய அடிப்படையைப் பேணிக்காத்தபடியே சரியான தகவுப் பொருத்தத்துக்குத் திரும்பிப்போக விரும்புகிறவர்கள் பிற்போக்காளர்களே. ஏனெனில், அவர்கள் முன்பின் முரணின்றி இருக்க வேண்டுமானுல், முந்திய காலங்களைச் சேர்ந்த தொழில் நிலைமைகள் அனைத்தையும் திரும்பக் கொண்டுவரவும் அவர்கள் விரும்பித்தீரவேண்டும்.

''உற்பத்தியைச் சரியான, ஏறத்தாழச் சரியான, தகவுப் பொருத்தங்களில் வைத்திருந்தது எது? வரத்து மீது ஆதிக்கம் செலுத்தி வந்த, வரத்துக்கு முந்தி வந்த, கிருக்கியேயாகும்; நுகர்வின் அடியொற்றிக்கூடவே பின்னே வந்துகொண்டிருந்தது உற்பத்தி. மேன்மேலும் அதிக அளவிலே உற்பத்தி செய்யுமாறு தன் வசமுள்ள உற்பத்திக் கருவிகளாலேயே கட்டாயப்படுத்தப்படுகிற பெருமாளவான தொழில் மேற்கொண்டு கிருக்கிக்காகக் காத்திருக்க முடியாது. உற்பத்தி நுகர்வை முந்தி முன்னே செல்கிறது; வரத்து கிருக்கியை நிர்ப்பந்திக்கிறது.

''இன்றுள்ள சமுதாயத்தில், தனித்தனி பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில், எவ்வளவோ துன்பத்துக்குக் காரணமாயிருக்கும் உற்பத்தியின் அராஜகம் அதே நேரத்தில் எல்லா முன்னேற்றத்துக்கும் தோற்றுவாயாகவும் உள்ளது.

''ஆக, இரண்டில் ஒன்று: ஒன்று, தற்காலத்திய உற்பத்திச் சாதனங்களை வைத்துக்கொண்டு சென்ற நூற்றுண்டுகளில் இருந்த உண்மையான தகவுப்பொருத்தங்களை விரும்புகிறீர்கள்; அப்படியானுல் ஒருங்கே பிற்போக்குவாதியாகவும் கற்பனுவாதியாகவும் இருக்கிறீர்கள்.

''அல்லது, அராஜகம் இல்லாத முன்னேற்றத்தை விரும்புகிறீர்கள்: அப்படியானுல், உற்பத்திச் சக்திகளைப் பேணிக் காப்பதற்காக நீங்கள் தனித்தனி பரிமாற்றத்தைக் கைவிட்டுத் தீரவேண்டும்'' "Das Elend der Philosophie, S. 46, 48.*

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''மெய்யறிவின் வறுமை''.—(பதிப்பாசிரியர்.)

கடைசி வார்த்தைகள் புரூதோனுக்குப் பொருந்தும், அவரை எதிர்த்து இவ்வாசிரியர் வாதித்துக் கொண்டிருந்தார்; அதன் வழியாக, தமது சொந்தப் பார்வை நிலைக்கும் ஸிஸ்மொந்தீ, புரூதோன் ஆகிய இருவரின் பார்வை நிலைக்கும் இருக்கும் வேற்றுமையை வரையறுத்தார். திரு. நி.—ன் தமது எல்லாக் கருத்துக்களிலும் ஸிஸ்மொந்தீயையோ புரூதோனையோ போன்றவராக மாட்டார் என்பது உண்மை.* எனினும் இங்கே கொடுத்துள்ள வாசகப்பகுதியின் உள்ளடக்கத்தைப் பாருங்கள். நாம் மேற்கோள் காட்டிய இவ்வாசிரியரின் முக்கியமான ஆய்வுரை என்ன, அடிப்படையான கருத்து என்ன, தமக்கு முன்சென்றவர்களோடு சமரசப்படுத்தமுடியாத எதிர்ப்புநிலையில் அவரை வைப்பது எது? முதலாளித்துவத்தின் ஸ்திரமின்னமை பற்றிய பிரச்சினையை (இதை இந்த ஆசிரியர்கள் மூவரும் ஒப்புக்கொள்கின்றனர்) அவர் ஒரு வரலாற்று மட்டத்தில் வைக்கிறார், அந்த ஸ்திரமின்மையை முன்னேற்றத்துக்குரிய காரணியாக அவர் கருதுகிறார், என்பதே. அதாவது: முதலாவதாக, தகவுப்பொருத்தமின்மைகள், நெருக்கடிகள் முதலியவற்றினூடே செல்கிற இன்றைய முதலாளித்துவ வளர்ச்சியானது அவசியமான வளர்ச்சி என்று அவர் அங்கீகரிக்கிறார்; உற்பத்திச் சாதனங்களின் (இயந்திரங்களின்) தன்மையே உற்பத்தியை வரம்பின்றி விரிவாக்கும் விருப்பத்தை உண்டாக்குகிறது, வரத்து இடையறுது கிருக்கியை எதிர்பார்க்கும் நிலைமையையும் உண்டாக்குகிறது, என்று அவர் கூறுகிறார். இரண்டாவதாக, இந்த வளர்ச்சியில் அவர் முன்னேற்றத்திற்கான அம்சங்களை அங்கீகரிக்கிறார்; அவையாவன: உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, சமுதாயமுழுமையின் வரம்புக்குள் உழைப்பு சமுதாயமயமாக்

* என்றபோதிலும், அவர் ஏன் ஆகமாட்டார் என்பது பெரிய கேள்விதான். பொதுப்படையாக இன்றுள்ள பொருளாதார அமைப்பு முறையையும், மொத்தமான மனிதகுலத்தின் வளர்ச்சியில் அது வகிக்கும் இடத்தையும் முக்கியத்துவத்தையும் மனத்தில் கொண்டு இவ்வாசிரியர்கள் பிரச்சினைகளை மேலும் விரிவான மட்டத்தில் எழுப்பினுர்கள், தமது கண்ணோட்டத்தை ஒரு நாட்டுடன் குறுக்கிக்கொள்ளவில்லை—குறுக்கிக்கொண்டிருந்தால் அந்த நாட்டுக்கு என்று ஒரு தனி தத்துவத்தைப் புனைந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கலாம்—என்பது ஒரு காரணமாக இருக்குமோ?

கப்படுவது, மக்களின் பெயர்ப்புத்தன்மை அதிகரித்தல், மக்களின் அறிவு வளர்தல், முதலியவை. அவருக்கு ஸிஸ்மொந்தீயுடனும் புரூதோனுடனும் இருக்கும் வேற்றுமை இவ்விரண்டு அம்சங்களிலேதான். அவர்கள் முதலாளித்துவத்தின் ''ஸ்திரமின்மையையும்'' அது தோற்றுவிக்கும் முரண்பாடுகளையும் குறிப்பிட்டுக்காட்டுவதிலும் இந்த முரண்பாடுகளைக் களைந்தெறிவதில் அவர்கள் வெளிப்படுத்தும் நேர்மையான விருப்பம் கொண்டிருப்பதிலும் அவருடன் ஒத்துப்போகிறார்கள். எல்லா முதலாளித்துவத்துக்கும் சரி, பொதுப்படையாக பண்டப் பொருளாதாரத்துக்கும் சரி, இந்த ''ஸ்திரமின்மை'' ஓர் **அவசியமான** பண்புக்கூறு என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத்தவறியதால் **கற்பனாவாதத்துக்குப்** போய்ச் சேர்ந்தார்கள். இந்த ஸ்திரமின்மையில் **உள்ளார்ந்திருக்**கும் முன்னேற்றத்துக்கான அம்சங்களை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியதால் அவர்களின் தத்துவங்கள் **பிற்போக்கானதாக*** ஆகின்றன.

இனி, நரோத்னிக்குப் பிரமுகர்களை இந்தக் கேள்விக்கு விடையளிக்க அழைக்கிறோம்: மேற்சொன்ன இரண்டு அம்சங்கள் பற்றி விஞ்ஞானத் தத்துவம் கொண்டிருக்கும் கருத்துக்களைத் திரு. நி.—ன் ஒப்புக் கொள்கிறாரா? இன்றைய அமைப்புமுறைக்கும் தற்கால வளர்ச்சிக்கும் ஸ்திரமின்மை ஒரு பண்புக்குறி என்று கருதுகிறாரா? இந்த ஸ்திரமின்மையில் முன்னேற்றத்துக்கான அம்சங்கள் இருப்பதை ஒப்புக்கொள்கிறாரா? இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

---

* இச்சொல் அதன் **வரலாற்றுவழிப்பட்ட-மெய்யறிவு வழிப்பட்ட** பொருளில் பயன்படுத்தப்படுகிறது; **காலாவதியாகிவிட்ட** சமுதாய வடிவங்களிலிருந்து தமது தத்துவங்களுக்கு வேண்டிய முன்மாதிரிகளை எடுத்துக்கொள்கிற தத்துவாசிரியர்களின் **தவற்றை** மட்டுமே இச்சொல் வர்ணிக்கிறது. இது இந்தத் தத்துவாசிரியர்களின் தனிப்பட்ட குணங்களுக்கோ அவர்களின் வேலைத்திட்டங்களுக்கோ முற்றிலும் பொருந்தாது. இச்சொல்லின் சாதாரணமான பொருளில் ஸிஸ்மொந்தீயும் புரூதோனும் பிற்போக்காளர்களில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தச் சாதாரணமான உண்மைகளை நாம் விளக்கக் காரணம் நரோத்னிக்குப் பிரமுகர்கள் இவற்றை இன்றையவரைக்கும் புரிந்துகொள்ளவில்லை. இதைப் பின்னால் பார்ப்போம்.

மாருக, திரு. நி.—ன் முதலாளித்துவத்தின் இந்த ''ஸ்திரமின்மையை'' வெறுமே ஓர் இயல்புக்கேடு, ஒரு வழிவிலகல் என்றெல்லாம் பறைசாற்றுகிறுர்; அதை நலிவு, பின்னடைவு (''ஸ்திரத்தன்மையைப் பறிக்கிறது'' என்று முன்னே கூறியுள்ளதைக் கவனிக்க) என்று கருதுகிறுர்; பொருளாதாரத் தேக்கத்தை (''தொன்மைமிக்க அடிப்படைகள்'', ''காலத்தால் தூய்மைபெற்ற கோட்பாடுகள்'' முதலியவற்றை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்) இலட்சியநிலைக்கு உயர்த்துகிறுர்; இந்தப் பொருளாதாரத் தேக்கத்தை ஒழித்ததுதான் ''ஸ்திரமற்ற'' முதலாளித்துவத்தின் வரலாற்றுச் சிறப்பாகும். ஆகவே, அவரை நாம் தன்னுணர்ச்சிவாதிகளோடு சேர்த்தது சரியே என்பது தெளிவு; அவர் ''மேற்கோள்களும்'', ''சுட்டுக்குறிப்புகளும்'' கொடுத்தும் என்ன, அவரது சொந்த வாதங்களின் இந்தத் தன்மையை அவை மாற்றிவிடா.

இந்த ''ஸ்திரமின்மை'' குறித்துப் பின்னுல் மறுபடியும் பார்ப்போம் (தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள்தொகைக்குச் சாதகமாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்தொகை குறைவதில் தன்னுணர்ச்சிவாதமும் நரோதியமும் காட்டும் பகைமை சம்பந்தமாக); தற்சமயத்துக்கு ''அரசியல் பொருளாதாரத்தின் சில முன்கூற்றுகள் பற்றிய ஒரு விமர்சனவுரை'' எனும் நூலிலிருந்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டுவோம். இதில் பணப் பொருளாதாரத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட தாக்குகள் பரிசீலிக்கப்படுகின்றன.

''இந்தத் திட்டவட்டமான சமுதாயச் செயற்பண்புகள்'' (அதாவது வாங்குபவனின் செயற்பண்புகளும் விற்பவனின் செயற்பண்புகளும்) ''மனித இயல்பின் விளைவுகள் அல்ல, அவை பண்ட வடிவத்தில் தமது பொருட்களை உற்பத்திசெய்கிற மனிதர்களிடையேயுள்ள பரிமாற்ற உறவுகளின் விளைபொருட்களே. வாங்குபவனுக்கும் விற்பவனுக்கும் இடையேயுள்ள சுத்தமான தனிப்பட்ட உறவுகள் அல்ல அவை. எனவேதான், எந்த அளவுக்கு அவர்களின் தனிப்பட்ட உழைப்பு புறக்கணிக்கப்பட்டு ஒரு தனிநபரைச் சேராத உழைப்பு என்கிற வகையில் பணமாக மாற்றப்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் அவ்விருவரும் இவ்வுறவுகளில் ஈடுபடுகிறுர்கள். எனவே, வாங்குபவன், விற்பவன் எனும் இந்த முதலாளித்துவப் பொருளாதாரப் பாத்திரங்களை மனிதத்

தனித்தன்மையின் நிரந்தரமான சமுதாய வடிவங்களாகக் கருதுவது எப்படிக் குழந்தைத்தனமாகுமோ அதே போல் தனித்தன்மையின் அழிவுக்கு அவை காரணம் என்று அவற்றைப் பற்றி ஒப்பாரி வைப்பது பகுத்தறிவுக் கேடானதாகும்.

''வாங்குவதிலும் விற்பதிலும் நிலைபெறுகிற பகைமையின் மேலோட்டமான அம்சம் எப்படிச் சில நல்லுள்ளங்களைப் புண்படுத்துகிறது என்பதை திரு. இசாக் பெரேரா எழுதிய "Leçons sur l'industrie et les finances". Paris, 1832.* எனும் நூலின் பின்வரும் பகுதியில் காணலாம். "Crédit mobilier"** எனும் நிறுவனத்தின் புனைவாளரும் சர்வாதிகாரியுமான இதே இசாக் பாரிஸ் பங்குமாற்று நிலையத்தில் ஓநாய் என்று பெயரெடுத்திருப்பதிலிருந்து பொருளாதாரத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட விமர்சனத்தில் மறைந்துநிற்பது என்னவென்று புலப்படும். அக்காலத்தில் ஸான்-ஸிமோனின் தூயப்பிரச்சராகராக இருந்த திரு. பெரேரா சொல்கிறார்: ''மனிதர்கள் தத்தம் உழைப்பிலும் நுகர்விலும் ஒருவரிடமிருந்து ஒருவர் தனிமையாக்கப்பட்டும் பிரிக்கப்பட்டும் இருப்பதால் முறையே தத்தம் தொழில்களின் உற்பத்திப்பொருட்களை அவர்கள் பரிமாறிக்கொள்கிறார்கள். பரிமாற்றத்தின்அவசியத்திலிருந்து பொருட்களின் சார்புமதிப்பை நிர்ணயிக்கவேண்டிய அவசியம் உண்டாகிறது. எனவே, மதிப்பு, பரிமாற்றம் பற்றிய கருத்துக்கள் நெருங்கப் பிணைக்கப்பட்டுள்ளன. இரண்டும் தத்தம் அசல் வடிவத்தில் தனித்தன்மையையும் பகைமையையும் வெளியிடுகின்றன.... விலைக்குக் கொள்வதும் கொடுப்பதும் இருப்பதனால் மட்டுமே உற்பத்திப் பொருட்களின் மதிப்பை நிர்ணயிப்பதும் நிகழ்கிறது. வேறு விதமாகச் சொல்வதென்றால், சமுதாயத்தின் வெவ்வேறு உறுப்பினர்களிடையே ஒரு பகைமை இருப்பதனால்தான் உற்பத்திப் பொருட்களின் மதிப்பை நிர்ணயிப்பதும் நிகழ்கிறது. எங்கே வாங்குவதும் விற்பதும் நடக்கிறதோ—அதாவது, எங்கே ஒவ்வொரு தனிநபரும் தன் பிழைப்பை நடத்திவருவதற்கு அவசியமான பொருட்களைப் பெறு

---

* ''தொழிலும் நிதிகளும் பற்றிய சில படிப்பினைகள்'', பாரிஸ், 1832.—(பதிப்பாசிரியர்.)

** இயங்கு சொத்து பிணையாகக் கொண்டு கடன் தரும் ஒரு வங்கி.—(பதிப்பாசிரியர்.)

வதற்குப் போராடித் தீரவேண்டியிருக்கிறதோ—அங்கே தான் ஒருவன் விலை, மதிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது'' (மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 68).*

கேள்வி இதுவே: திரு. பெரேராவின் உணர்ச்சி இயல்பு எதில் உள்ளது? அவர் முதலாளித்துவத்தில் தனித்தன்மை, பகைமை, போராட்டம் ஆகியவற்றைப் பற்றி மட்டுமே பேசுகிறார்; நமது நரோத்னிக்குகள் வெவ்வேறு சுருதிகளில் சொல்கிற அதே விஷயத்தைத்தான் அவரும் சொல்கிறார். அது மட்டுமல்ல, அவர்கள் உண்மையே பேசுவது போலவும் தோன்றுகிறது; காரணம், ''தனித்தன்மை, பகைமை, போராட்டம்'' உண்மையிலே பரிமாற்றத்திற்குரிய, பண்ட உற்பத்திக்குரிய அவசியமான பண்புகளாகும். அவருடைய உணர்ச்சி இயல்பு எதிலே உள்ளதென்றால்: இந்த ஸான்-ஸிமோன் ஆதரவாளர் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைக் கண்டிப்பதிலே மூழ்கிப்போய் இந்த முரண்பாடுகளின் பின்னே இருக்கிற உண்மையைக் கூர்ந்தறியத் தவறுகிறார்—அதாவது பரிமாற்றமும் கூட சமுதாயப் பொருளாதாரத்தின் ஒரு தனிச்சிறப்பான வடிவத்தை வெளியிடுகிறது, எனவே அது மனிதர்களைப் பிரித்துவைக்கிறதோடல்லாமல் (மத்தியகாலச் சங்கங்கள் விஷயத்திலேதான் அது பிரித்து வைக்கிறது, இச்சங்கங்களை முதலாளித்துவம் ஒழிக்கிறது) ஒன்றுபடுத்தவும் செய்கிறது, சந்தை மூலமாக ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளும்படியும் கட்டாயப்படுத்துகிறது.** முதலாளித்துவத்தை (கற்பனாவாதப் பார்வை நிலையிலிருந்து) ''அடித்துநொறுக்கும்'' அவர்களின் ஆர்வத்திலே பிறந்த இந்த மேலோட்டமான ஞானத்தின் காரணமாகத்தான் பெரேராவின் விமர்சனம் உணர்ச்சிவகைப்பட்டது என்று மேலே மேற்கோள் காட்டப்பட்ட ஆசிரியர் கூறவேண்டியதாயிற்று.

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''அரசியல் பொருளாதாரத்தின்மீது விமர்சனத்தைப் பற்றி''.—(பதிப்பாசிரியர்.)

** உள்ளூர் சேர்க்கைகள், சமூக-படிநிலை சேர்க்கைகள் ஆகியவற்றிற்குப் பதிலாக முழுமையாக ஒரு நாட்டின், உலக முழுமையின் சமுதாய அந்தஸ்து, சமுதாய நலன்கள் என்கிற வகைப்பட்ட ஒற்றுமையை வைக்கிறது.

என்றோ மறக்கப்பட்டுப்போன ஸான்-ஸிமோனியத்தின் என்றோ மறக்கப்பட்டுப்போன பிரச்சாரகரான பெரேரா குறித்து நாம் ஏன் கவலைப்படவேண்டும்? அதைவிட நரோதியத்தின் ''நவீனகால''ப் பிரச்சாரகரைக் கவனிப்பது மேல் அல்லவா?

''உற்பத்தியின்... மக்கள்தன்மை பறிக்கப்பட்டு அது தனிப்பட்ட, முதலாளித்துவத் தன்மையை எடுத்துக் கொண்டுள்ளது'' (திரு. நி.—ன், ''வரையுரைகள்'', பக்கங்கள் 321-322).

இந்த மாரீச தன்னுணர்ச்சிவாதி வாதிடுவதைப் பாருங்கள்: ''மக்களுடைய உற்பத்தி தனிநபர் உற்பத்தி ஆகிவிட்டது''. ''மக்களுடைய உற்பத்தி'' என்பதன் வழியாக இவ்வாசிரியர் கிராமச் சமூகத்தை* உட்கிடையாகக் குறிக்க

---

* ருஷ்யாவில் கிராமச் சமூகம்—விவசாயிகளின் ஒரு கூட்டமைப்பு வடிவம். அதில் நிலம் அவ்விடத்து விவசாயிகளுக்கும், கிராமச் சமூகத்தினருக்கும் பொதுவில் சொந்தமாயிருந்தது. கிராமச் சமூகத்தில் பயிரிடப்படும் நிலம் முறையாக விவசாயிகளின் குடும்பங்களுக்கு இடையே மீண்டும் பங்கிடப்பட்டு வந்தது; நிலத்தை வாங்குவதோ விற்பனை செய்வதோ தடை செய்யப்பட்டிருந்தது; கட்டாயமான கூட்டுப் பொறுப்பு முறையானது நிலச்சுவான்தர்களுக்கும் ஜார் அரசாங்கத்துக்கும் விவசாயிகளிடமிருந்து தலைக்கட்டு வரியையும் மீட்புப் பணத்தையும் வாங்குவதை எளிதாக்கிக் கொண்டிருந்தது.

நரோத்னிக்குகள் கிராமச் சமூகத்தை சோஷலிஸத்தை நோக்கிச் செல்லக்கூடிய ருஷ்யாவின் ''தனிப் பாதை''யாகக் கருதினர். கிராமச் சமூகம் விவசாயிகளின் வாழ்க்கையில் முதலாளித்துவ உறவுகள் ஊடுருவாதவாறு அவர்களைப் பாதுகாத்து வருகிறதென்றும் அது விவசாயிகளை வர்க்க முறையில் வெவ்வேறு பகுதிகளாகப் பிளவுபட்டுப் போவதிலிருந்தும் பாழாகிப் போவதிலிருந்தும் காப்பாற்றி வருகிறதென்றும் நிரூபிக்க முயன்றனர். 19-ம் நூற்றாண்டின் 80-களில் கி. வா. பிளெஹானவ் ''கிராமச் சமூகவழிப்பட்ட சோஷலிஸத்''தைப் பற்றிய நரோத்னிக்குகளின் பிரமைகளை விமர்சித்தார். ''ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி'' எனும் தமது நூலிலும் மற்ற நூல்களிலும் வி. இ. லெனின் நரோத்னிக்குகளின் தத்துவம் முழுக்க முழுக்க ஆதாரமற்றது என்று காட்டினார்.—(பதிப்பாசிரியர்.)

விரும்புகிறார், ஆதலால் உற்பத்தியின் சமுதாயத் தன்மை நலிந்துவிட்டதை, உறபத்தியின் சமுதாய வடிவம் சுருங்கி விட்டதை, அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால், அப்படியா நடக்கிறது? மற்றெல்லாச் சமூகங்களிலிருந்தும் தனிமைப்பட்டிருக்கும் நிலையிலுள்ள தனியொரு சமூகத்திலேமட்டுமே அமைப்புரீதியான உற்பத்தியை ''கிராமச் சமூகம்'' அளித்தது (அதாவது, அளித்தது என்று வைத்துக் கொண்டால்; ஆசிரியருக்கு நாம் என்ன சலுகை வேண்டுமானாலும் காட்டத் தயார்.). உற்பத்தியின் சமுதாயத் தன்மை அந்த ஒரு கிராமச் சமூகத்தின் உறுப்பினர்களை மட்டுமே தழுவி நின்றது.* ஆனால், முதலாளித்துவம் ஒரு நாடு முழுவதிலும் உற்பத்திக்குச் சமுதாயத் தன்மை அளிக்கிறது. ''தனித்தன்மை'' என்றால் சமுதாய பந்தங்களின் அழிவு என்று பொருள்; ஆனால் இந்தப் பந்தங்களை அழிப்பது சந்தையே; அவற்றின் இடத்தில் ஒரு கிராமச் சமூகத்தாலோ, சமூகப்படிநிலையாலோ, குறிப்பிட்ட தொழிலாலோ, குறிப்பிட்ட தொழிலின் வரம்புக்குறுக்கப்பட்ட பரப்பு முதலியவற்றாலோ பிணைக்கப்படாத திரளான தனி மனிதர்களின் இடையேயுள்ள பந்தங்களை அது வைக்கிறது. முதலாளித்துவம் படைத்துள்ள பந்தம் முரண்பாடுகளின், பகைமையின் வடிவத்திலே தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. எனவே, இந்த பந்தத்தை நமது தன்னுணர்ச்சிவாதி காண மறுக்கிறார் (உற்பத்தியின் அமைப்புவகைப்பட்ட வடிவம் என்கிற முறையில் கிராமச் சமூகமும் கூடப் பழைய உற்பத்தி முறைகளிலே உள்ளார்ந்திருக்கும் முரண்பாடுகளின், பகைமையின் மற்ற வடிவங்கள் இல்லாமல் என்றைக்கும் இருந்ததில்லை என்ற போதிலும்). கற்பனாவாதப் பார்வைநிலை முதலாளித்துவத்தைப் பற்றிய அவரது விமர்சனத்தையும் உணர்ச்சிவகைப்பட்ட ஒன்றாக உருமாற்றிவிடுகிறது.

---

* ஜெம்ஸ்ட்வோ புள்ளிவிபரங்களின்படி (பிளாகவெஷென்ஸ்கியின் ''இணைக்கப்பட்ட ஆவணங்கள்''), 22 குபெர்னியாக்களிலுள்ள 123 உயெஸ்டுகளில் ஒரு கிராமச்சமூகத்தின் சராசரி அளவு 53 குடும்பங்கள், அவற்றில் ஆணும் பெண்ணுமாக 323 பேர் இருந்தனர்.

II

தன்னுணர்ச்சிவாதத்தின் சிறுபூர்ஷ்வாத் தன்மை

சிறு உற்பத்தியை இலட்சியநிலைக்கு உயர்த்துவது தன்னுணர்ச்சிவாதிகளின், நரோத்னிக்குகளின், விமர்சனத்தில் இருக்கும் மற்றொரு இனக்குறிப்பான சிறப்பியல்பை, அதாவது அதன் சிறுபூர்ஷ்வாத் தன்மையை, வெளிப்படுத்துகிறது. சிறு உற்பத்தியை ஒரு ''சமுதாய அமைப்பாகவும்'', ''உற்பத்தியின் வடிவமாகவும்'' மாற்றிவிடுவதிலும் அதை முதலாளித்துவத்துக்கு எதிர்நிலையில் வேறுபடுத்திக்காட்டுவதிலும் பிரெஞ்சுத் தன்னுணர்ச்சிவாதியும் ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதியும் ஒருமனதாயிருப்பதைப் பார்த்தோம். இப்படி ஒன்றைமற்றொன்றுடன் எதிர்நிலையில் வேறுபடுத்திக் காட்டுவது மிகமிக மேலோட்டமான ஞானத்தைப் புலப்படுத்துகிறதே தவிர வேறில்லை, பண்டப் பொருளாதாரத்தின் ஒரு வடிவத்தை (பெருமளவான தொழில் மூலதனம்) செயற்கையாகவும் தவருகவும் தனித்தெடுத்துக் கண்டிப்பதும் அதே நேரத்தில் அதே பண்டப் பொருளாதாரத்தின் மற்ருெரு வடிவத்தை (சிறு உற்பத்தியை) கற்பனுவாத முறையிலே இலட்சியநிலைக்கு உயர்த்துவதுமாகும் என்றும் பார்த்தோம். பத்தொன்பதாம் நூற்ருண்டின் துவக்கப்பகுதியைச் சேர்ந்த ஐரோப்பிய தன்னுணர்ச்சிவாதிகளுக்கும் சரி, பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிப்பகுதியைச் சேர்ந்த ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதிகளுக்கும் சரி, இருக்கிற துரதிர்ஷ்டம் என்னவென்ருல், உற்பத்தியின் சமுதாய உறவு முறைகளுக்கு வெளியே இருப்பதான ஒருதினுசான சூட்சுமவகைப்பட்ட சிறு உற்பத்தியைத் தங்களுக்கென்று புனைந்துகொள்கிருர்கள், உண்மையிலே இந்தச் சிறு உற்பத்தி பண்டப் பொருளாதாரத்தின் சூழ்நிலையில் உள்ளது என்கிற அற்பமான தருவாயைப் புறக்கணிக்கிருர்கள்—1820-களில் ஐரோப்பா கண்டத்திலிருந்த சிறு பொருளாதாரத்துக்கும் சரி, 1890-களில் ருஷ்யாவிலிருக்கும் விவசாயிப் பொருளாதாரத்துக்கும் சரி, இது பொருந்தும். எனவே, உண்மையிலே, தன்னுணர்ச்சிவாதிகளும் நரோத்னிக்குகளும் ஏற்றிப் போற்றும் சிறு உற்பத்தியாளன் ஒரு சிறு பூர்ஷ்வா, அவனும் முதலா

ளித்துவச் சமுதாயத்தின் மற்றெல்லா உறுப்பினர்கள் போலவே அதே முரண்பாடுள்ள உறவுகளிலே இருந்துவருகிறுன், அவனும் ஒரு போராட்டத்தின் மூலமாக தனது நலன்களைப் பாதுகாக்கிறுன்; அந்தப் போராட்டம், ஒரு புறத்தில், சிறிய சிறுபான்மையான பெரும் பூர்ஷ்வாக்களை இடையருது படைத்துக்கொண்டே, மறு புறத்தில், பெரும்பான்மையினரைத் பாட்டாளிவர்க்கத்தின் அணிகளில் தள்ளிவிடுகிறது. உண்மையிலே, எல்லோரும் பார்த்தும் அறிந்தும் உள்ளபடி, இந்த இரண்டு எதிர்நிலையான வர்க்கங்களுக்கும் இடையே நில்லாத சிறு உற்பத்தியாளர்கள் யாரும் இல்லை. இந்த இடைநிலை சிறு பூர்ஷ்வாப் பகுதியினருக்குரிய தனிக்குறிப்பான தன்மையை, அதன் இரட்டைத் தன்மையை, அதன் இருமுக இயல்பை, அது போராட்டத்தில் வெற்றிபெற்ற சிறுபான்மையின் பால் ஈர்க்கப்படுவதையும், ''தோல்வியடைந்தவர்கள்'' அதாவது பெரும்பான்மையானவர்கள்பால் பகைமை காட்டுவதையும் அவசியமாக நிர்ணயிக்கிறது. பண்டப் பொருளாதாரம் வளர வளர இந்தப் பண்புகள் மேன்மேலும் வலுவாகவும் கூராகவும் வெளிக்காட்டிக்கொள்கின்றன; சிறு உற்பத்தியை இலட்சியநிலைக்கு உயர்த்துவது வெறுமே ஒரு பிற்போக்கான, சிறு பூர்ஷ்வா பார்வை நிலையைத் தான் வெளியிடுகிறது என்று மேன்மேலும் தெளிவாகிறது.

''அரசியல் பொருளாதாரத்தின் சில முண்கூற்றுகள் பற்றிய ஒரு விமர்சனவுரை'' எனும் நூலின் ஆசிரியர் ஸிஸ்மொந்தீயைச் சுட்டிக் குறிப்பாகப் பயன்படுத்திய இச் சொற்களின் பொருள் விஷயத்தில் நாம் தவறு செய்யக் கூடாது. இச்சொற்களின் பொருள் ஸிஸ்மொந்தீ பிற்பட்ட நிலையிலுள்ள சிறு பூர்ஷ்வாக்களைப் பாதுகாக்கிருர் என்பது அல்ல. ஸிஸ்மொந்தீ அவர்களை எங்குமே பாதுகாக்கவில்லை; பொதுவாக உழைக்கும் வர்க்கங்களின் பார்வைநிலையை அவர் எடுத்துக்கொள்ள விரும்புகிருர், இவ்வர்க்கங்களைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களிடத்திலும் தமது அனுதாபத்தைக் காட்டுகிருர்; எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைச் சட்டங்கள் அவருக்கு மகிழ்ச்சியளிக்கின்றன; அவர் முதலாளித்துவத்தைத் தாக்குகிருர், அதன் முரண்பாடுகளை அம்பலப்படுத்துகிருர். சுருங்கச் சொன்னுல், அவரது பார்வைநிலை அப்படியே நவீனகால நரோத்னிக்குகளின் பார்வைநிலையாகும்.

கேள்வி இதுதான்: அப்படியானல் அவரை ஒரு சிறு பூர்ஷ்வா என்று அழைக்க ஆதாரங்கள் என்ன? (அவர் இலட்சியநிலைக்கு உயர்த்தும்) சிறு உற்பத்திக்கும், (அவர் தாக்கும்) பெரும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளவில்லை என்ற ஆதாரத்தின் மீது, அவர் நேசிக்கும் சிறு உற்பத்தியாளஞகிய விவசாயி யதார்த்தத்தில் ஒரு சிறு பூர்ஷ்வாவாக ஆகிவருவதை அவர் பார்க்கவில்லை என்ற ஆதாரத்தின் மீது. பல்வேறு ஆசிரியர்களின் தத்துவங்களை வெவ்வேறு வர்க்கங்களின் நலன்களோடும் பார்வை நிலைகளோடும் இனப்படுத்துவது பற்றிய பின்வரும் விளக்கத்தை நாம் என்றைக்கும் மறக்கலாகாது:

''கோட்பாடு வகையிலே சிறு பூர்ஷ்வா வர்க்கம் தன் முனைப்பான வர்க்க நலனைச் செயல்படுத்த விரும்புகிறது எனும் குறுகிய எண்ணப்போக்கு உருவாக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டும். பார்க்கப்போனல், தனது விடுதலைக்குரிய தனிச்சிறப்பான நிலைமைகளே நவீனச் சமுதாயத்தைக் காத்து வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்க முடிவதற்கான பொதுவான நிலைமைகளாகும் என்று அது நம்புகிறது. அதே போல் ஜனநாயகப் பிரதிநிதிகள் எல்லோரும் கடைக்காரர்களே, அல்லது கடைக்காரர்களின் ஆர்வமிக்க ஆதரவாளர்களே என்றும் நினைத்துவிடக்கூடாது. அவர்களின் கல்வி, தனிப்பட்ட நிலை ஆகியவற்றிற்கேற்ப அவர்களிடையே பூமிக்கும் ஆகாயத்துக்கும் உள்ள தூரம் இருக்கலாம். அவர்களைச் சிறுபூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதிநிதிகளாகச் செய்வது, சிறு பூர்ஷ்வா வர்க்கம் வாழ்க்கையில் எந்த எல்லைக்கப்பால் போகவில்லையோ அந்த எல்லைக்கப்பால் இவர்கள் சிந்தையிலும் போகவில்லை என்கிற உண்மைதான்; எனவே, நடைமுறையில் சிறுபூர்ஷ்வா வர்க்கம் தனது பொருளாயத நலனலும் சமுதாய நிலையாலும் உந்தப்பட்டு வந்து சேருகிற அதே பிரச்சினைகளுக்கும் தீர்வுகளுக்கும் இவர்களும் தத்துவார்த்தவகையிலே வந்துசேரும்படி உந்தப்படுகிருர்கள். பொதுவாக, இதுதான் ஒரு வர்க்கத்தின் அரசியல், இலக்கியப் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்துக்கும் இடையிலுள்ள உறவுமுறை'' (கார்ல் மார்க்ஸ், ''லுயீ போனபார்த்தின் பதினெட்டாம் புரூமேர்'',

ருஷ்ய மொழியில் பாஸரோவும் ஸ்தெபானவும் பெயர்த்தது, பக்கங்கள் 179-180).

ஆக, சிறுபூர்ஷ்வாத் தன்மையைக் குறிப்பிடுவதின் ஒரே நோக்கம் வன்மம் வைத்து எதையாவது சொல்வது, வாதத்தில் பயன்படுத்தும் சூது, என்று நினைக்கிற நரோத்னிக்குகள் கோமாளிகளாகக் காட்டிக் கொள்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தால் அவர்கள் தங்களுடைய எதிர்ப்பாளர்களின் பொதுக் கருத்துக்களைத் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறார்கள், முதலாளித்துவத்தைப் பற்றிய எந்த விமர்சனத்தை அவர்கள் அனைவரும் ''ஒப்புக்கொள்கிறார்களோ'' அதே விமர்சனத்தின் அடிப்படையையும், அந்த விமர்சனம் உணர்ச்சிவகைப்பட்ட, சிறுபூர்ஷ்வா விமர்சனத்தினின்று எவ்வகையில் வேறுபடுகிறது என்பதையும் தவறாகப் புரிந்துகொணடிருப்பதையும் வெளிப்படுத்துகிறார்கள். பின்சொன்ன விமர்சன வடிவங்கள் பற்றிய பிரச்சினையையும், அவை மேற்கு ஐரோப்பாவில் இருப்பதையும், அவற்றிற்கும் விஞ்ஞானவழிப்பட்ட விமர்சனத்துக்கும் உள்ள உறவையும், தட்டிக்கழிக்க அவர்கள் இவ்வளவு கடுமையாக முயல்வதிலிருந்தே நரோத்னிக்குகள் ஏன் இந்த வேற்றுமையைப் புரிந்துகொள்ள விரும்புவில்லை என்று தெளிவாகப் புலப்படுகிறது.*

---

* எடுத்துக்காட்டாக, ''முதலாளித்துவத்தின் வளர்ச்சியை எப்படி ஸிஸ்மொந்தீ கருதினார்'' என்கிற விஷயத்தின் மீது எஃப்ருஸி இரண்டு கட்டுரைகள் எழுதினார் (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 7, பக்கம் 139), என்ற போதிலும் அதை எப்படி ஸிஸ்மொந்தீ கருதினார் என்பதைப் புரிந்து கொள்ள முற்றாகத் தவறிவிட்டார். ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ''வின் கட்டுரையாளர் ஸிஸ்மொந்தீயின் சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலையைக் கவனிக்கவில்லை. எஃப்ருஸிக்கு ஸிஸ்மொந்தீ இலக்கியத்துடன் பழக்கமுண்டு என்பதில் சந்தேகமில்லை; ஸிஸ்மொந்தீயை அவ்வகையில் வர்ணித்த நவீனகாலத் தத்துவத்தின் பிரதிநிதியுடனும் பழக்கமுண்டு (இதைப் பின்னால் பார்ப்போம்); மற்றும், இந்தப் புதிய தத்துவத்தின் பிரதிநிதியுடன் அவரும் ''உடன்பட'' விரும்புகிறார்—இவ்வாறிருந்தும் அவர் புரிந்துகொள்ளத் தவறினார் என்றால் அதற்குத் திட்டவட்டமான முக்கியத்துவம் உண்டு. தன்னுள் இருப்பதைக் காணாத நரோத்னிக்கு அதைத் தன்னுணர்ச்சிவாதியிடம் காண முடியாதுதான்.

மேலே சொன்னதை ஓர் எடுத்துக்காட்டு கொடுத்து விளக்குவோம். ''ருஸ்ஸ்காயா மிஸ்ல்'', 1896, இதழ் 5-ன் (பக்கம் 229 மற்றும்) நூற்பட்டியல் பகுதியில், அறிவுஜீவிப் பகுதியினரிடையே ''அண்மையில் ஒரு குழு தோன்றி வியக்கத்தக்க வேகத்துடன் வளர்ந்து வருகிறது'' என்றும் அக்குழு கோட்பாடுரீதியிலே நரோதியத்தை முழுமூச்சுடன் எதிர்க்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பகைமையின் காரணங்களையும் தன்மையையும் விமர்சகர் சுருக்கமாகக் காட்டுகிறார்; நரோதியத்துக்குப் பகையான பார்வைநிலையின் சாராம்சத்தை அவர் சரியாகக் கொடுப்பதைப் பாராட்டிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.* விமர்சகர் இந்தப் பார்வைநிலையை ஏற்கவில்லை. வர்க்க நலன்கள் முதலியவை பற்றிய கருத்துக்கள் நம்மை ''மக்களுடைய இலட்சியங்களை'' (''வெறுமே மக்களுடைய இலட்சியங்கள், நரோத்னிக்குகளுடையவையல்ல''; மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 229) மறுக்கும் படிக் கட்டாயப்படுத்துவதை அவர் புரிந்து கொள்ளவில்லை; ''மக்களுடைய இலட்சியங்கள்'' என்பவை விவசாயி மக்களின், அதாவது பெரும்பான்மையான மக்களின் நலவுரிமை, சுதந்தரம், உணர்வு என்கிறார் அவர்.

அவ்விமர்சகர் கூறுவதாவது: ''மற்றவர்களுக்குச் சொன்ன மாதிரி, நமக்கும் சொல்வார்கள்: அதாவது, இந்த விவசாயி ஆசிரியரின் இலட்சியங்கள்'' (இது யாரோ ஒரு விவசாயி வெளியிட்ட விருப்பங்களைக் குறிப்பிடுகிறது) ''சிறு பூர்ஷ்வாத் தன்மையுடையவை என்றும், ஆகவே இன்றையநாள் வரை நமது இலக்கியம் சிறு பூர்ஷ்வாவர்ககத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பாதுகாத்து வந்திருக்கிறது என்றும் சொல்வார்கள். ஆனால் இது வெறும் பூச்சாண்டியே. ஸமோஸ்க்வொரிசி** வியாபாரியின் மனைவியின் உலகக் கண்

* மாற்றுனின் கருத்துக்களைச் சரியாக எடுத்துச்சொல்வதற்கு ஒருவரைப் புகழ்வது மிகவும் விநோதமாகப் படக்கூடும், உண்மைதான்!! ஆனால் என்ன செய்வது? ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', பழைய ''நோவோயே ஸ்லோவோ'', பத்திரிகைகளின் சாதாரண சர்ச்சைக்காரர்களான திருவாளர்கள் கிரிவேன்கோ, வரன்ட்ஸோவ் ஆகியவர்களிடம் இப்படிப்பட்ட சர்ச்சைமுறை அரிதான விதிவிலக்குத்தான்.

** மாஸ்கோவின் ஒரு பகுதி.—(மொழிபெயர்ப்பாளர்.)

ணோட்டமும் சிந்தனைப் பழக்கங்களும் கொண்டிருக்கிறவனைத் தவிர வேறு யார் இந்தப் பூச்சாண்டிக்குப் பயப்படமுடியும்?...''

போட்டாரே ஒரு போடு! அவர் மேலும் சொல்வதைக் கேட்போம்:

''மனிதக் கூட்டறவுக்குரிய நிலைமைகளுக்கும் சரி, அறிவு பூர்வமான சமுதாய நடவடிக்கைகளுக்கும் சரி, அடிப்படையான மதிப்பீடுகோல் பொருளாதார வகையினங்கள் அல்ல, அதிலும் இந்த நாட்டுக்கு அயலான நிலைமைகளிலிருந்து இரவலாகப் பெற்றதும் வேறு சூழ்நிலைமைகளில் உருப்பெற்றதுமான பொருளாதார வகையினங்கள் அல்ல, பெரும்பான்மையான மக்களின் பொருளாயத, ஆன்மீக இன்பம் நலவுரிமை ஆகியவைதாம் மதிப்பீடுகோலாகும். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைமுறையும் இந்த வாழ்க்கை முறையை நிலைநிறுத்தி வளர்ப்பதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகளும் இந்த இன்பத்துக்குக் கொண்டுபோய்விடுகின்றன என்றால், அதைச் சிறுபூர்ஷ்வா என்று அழைத்தாலும் சரி, இஷ்டம் போல் எப்படி அழைத்தாலும் சரி, அதனால் நிலைமை மாறிவிடப்போவதில்லை. இவை—இந்த வாழ்க்கை முறையும் இந்த நடவடிக்கைகளும்—தொடர்ந்து சாராம்சத்தில் முற்போக்கானதாகவே இருந்துவரும், அக்காரணத்தாலேயே அவை **இன்றுள்ள நிலைமைகளில் சமுதாயமானது தனது இன்றைய நிலையில் எட்டக்கூடிய உச்ச** இலட்சியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்'' (மேலே சொன்ன நூல், பக்கங்கள் 229-230, கொட்டையெழுத்தில் போட்டது ஆசிரியர்).

வாதத்தின் சூட்டிலே பிரச்சினையைத் தட்டிக் கழித்ததை உண்மையிலே இவ்விமர்சகர் பார்க்கவில்லையா?

நரோதியம் சிறுபூர்ஷ்வாத்தன்மையானது எனும் குற்றச்சாட்டு ''வெறும் பூச்சாண்டியே'' என்று அவர் மிகக் கடுமையாக வர்ணித்தபோதிலும் இந்த வன்கூற்றுக்கு அவர் சான்று எதுவும் காட்டவில்லை, நம்பவொண்ணு அளவுக்குத் திகைப்பூட்டும் பின்வரும் முன்கூற்று தவிர: ''மதிப்பீடுகோல் பொருளாதார வகையினங்கள் அல்ல, பெரும்பான்மையினரின் இன்பமேயாகும்''. இது, தட்பவெப்ப நிலையை வானிலை இயல் குறிப்புகளை வைத்து மதிப்பிடக்கூடாது, பெரும்பான்மையினரின் உடல்நலமே அதற்கு மதிப்பீடுகோலாகும் என்று

சொல்வதை ஒக்கும்! இந்தப் ''பொருளாதார வகையினங்கள்'' என்பவை மக்களின்—அதிலும், பொதுப்படையான ''மக்கள்'' அல்ல, சமுதாயப் பொருளாதாரத்தின் இன்றைய அமைப்புமுறையின்கீழ் ஒரு திட்டவட்டமான இடம் பெற்றிருக்கும் திட்டவட்டமான மக்கட்குழுக்களின்—பொருளாதார, வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய விஞ்ஞான வகைப்பட்ட வரையறுப்பு தவிர வேறென்ன? ''பெரும்பான்மையினரின் இன்பம்'' எனும் மிகச் சூட்சுமமான கருத்தை ''பொருளாதார வகையினங்களுக்கு'' எதிர்நிலையில் வைப்பதின் வழியாக இவ்விமர்சகர் சென்ற நூற்ருண்டின் இறுதியிலிருந்து சமுதாய விஞ்ஞானம் கண்டுள்ள வளர்ச்சி முழுவதையும் வெறுமே அடித்துவிட்டு, திட்டவட்டமன சமுதாய உறவுகள் இருப்பதையும் வளர்வதையும் புறக்கணிக்கும் வெகுளித்தனமான பகுத்தறிவுவாதச் சிந்தை விசாரத்திற்குத் திரும்பிப்போகிருர். சமுதாய நிகழ்ச்சித் தோற்றங்களைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியில் மனிதசிந்தனை பன்னூற்ருண்டுகளாகத் தேடிச் சாதித்ததனைத்தையும் பேனுவால் ஒரே அடியில் அடித்துவிடுகிருர்! இவ்வாறு எல்லா விஞ்ஞானக் கட்டுத்தளைகளிலிருந்தும் தம்மை விடுவித்துக்கொண்ட பிறகு பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவ்விமர்சகர் நம்புகிருர். உண்மையிலே, நிர்த்தாட்சண்யமாக இவ்வாறு முடிக்கிருர்: ''ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைமுறை... இந்த இன்பத்துக்குக் கொண்டுபோய் விடுகிறதென்ருல், அதை இஷ்டம்போல் எப்படி அழைத்தாலும்சரி, அதனுல் நிலைமை மாறிவிடப்போவதில்லை'' என்று. எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? ஆனுல் பிரச்சினை முழுதும் என்ன வாழ்க்கை முறை என்பதே. சற்று நேரத்துக்குமுன்புதான் இவ்வாசிரியரே சொன்னுர், விவசாயப் பொருளாதாரத்தை ஒரு தனிச்சிறப்பான வாழ்க்கை முறை (''மக்களுடைய உற்பத்தி'', அல்லது இஷ்டம்போல் வேறெப்படி அழைத்தாலும் சரி) என்று கருதியவர்களை, அது தனிச்சிறப்பான வாழ்க்கைமுறை ஒன்றுமில்லை, சாதாரணமான சிறுபூர்ஷ்வா வாழ்க்கை முறையே, பண்டப் பொருளாதாரமும் முதலாளித்துவமும் உள்ள ஒரு நாட்டின் மற்றெல்லா வகையான சிறு உற்பத்திக்கும் உள்ளதுபோன்ற வாழ்க்கை முறையே, என்று கருதியவர்கள் எதிர்த்தார்கள் என்று. இந்த ''வாழ்க்கை முறை'' (''மக்களுடைய உற்பத்தி'')

''இன்பத்துக்குக் கொண்டுபோய் விடுகிறது'' என்று முந்தைய கருத்திலிருந்து தன்னியல்பாகப் பெறப்படுகிறது என்று சொன்ஞல், ''இந்த வாழ்க்கை முறை'' (சிறு பூர்ஷ்வா முறை) வேறெதற்குமல்ல முதலாளித்துவத்துக்குத்தான் கொண்டுபோய் விடுகிறதென்றும், ''பெரும்பான்மையான மக்கள்'' தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் தள்ளப்படுவதிலும் சிறுபான்மையினர் கிராமப் புறத்து (தொழில்துறை) முதலாளி வர்க்கமாக மாற்றப்படுவதிலும் கொண்டுபோய் விடுகிறதென்றும் பிந்தைய கருத்திலிருந்தும் தன்னியல்பாகப் பெறப்படுகிறது. இவ்விமர்சகர் சும்மா ஒரு வேட்டு கிளப்பி விட்டு அந்தச் சந்தடியில், ''வெறும் பூச்சாண்டி'' என்று நேயமின்றிக் கூறப்பட்ட இரண்டாம் கருத்து எதை மறுத்ததோ அதை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக அவர் எடுத்துக் கொண்டுவிட்டார் என்பது தெளிவல்லவா?

அவர் இரண்டாம் கருத்தைச் செயல்பற்ருேடு பிரிசீலிக்க விரும்பியிருந்தால் இவ்விரண்டில் ஒன்றை நிரூபித்திருக்க வேண்டும்: ஒன்று, ''சிறு பூர்ஷ்வா வர்க்கம்'' என்பது ஒரு தவருன விஞ்ஞான வகையினம், சிறு பூர்ஷ்வா வர்க்கம் ஒன்று இல்லாத முதலாளித்துவம் பற்றியும் பண்டப் பொருளாதாரம் பற்றியும் சிந்திக்க முடியும் (இப்படித்தான் உண்மையிலே நரோத்னிக் சீமான்கள் சிந்திக்கிருர்கள், அவ்வழியே ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலேக்குத் திரும்பிப் போகிருர்கள்); அல்லது இந்த வகையினம் ருஷ்யாவுக்குப் பொருந்தாது, அதாவது: இங்கே முதலாளித்துவமும் இல்லே, பண்டப் பொருளாதார நிலவரமும் இல்லே, சிறு உற்பத்தியாளர்கள் பண்ட உற்பத்தியாளர்களாக ஆகிறதில்லே, பெரும்பான்மையினரைத் தள்ளிவிட்டுச் சிறுபான்மையினரின் ''சுதந்தரத்தை''ப் பலப்படுத்துகிற மேற்சொன்ன நிகழ்ச்சிப் போக்கு அவர்களிடையே நடக்கவில்லே, என்று. ஆனுல், நரோதியத்தின் சிறுபூர்ஷ்வாத் தன்மை பற்றிய குறிப்பை நரோத்னிக் சீமான்களேப் ''புண்படுத்தவேண்டும்'' என்கிற விருப்பமாக அவர் எடுத்துக்கொள்வதைப் பார்க்கும் போது, ''பூச்சாண்டி'' பற்றி மேலே மேற்கோள் காட்டிய சொற்ருெடரைப் பார்க்கும் போது, ''என்ன, கிட் கிடீச்! உங்களே யார் புண்படுத்தப் போகிருர்கள்? நீங்களே யாரையும் புண்

படுத்தமுடியுமே!'' எனும் புகழ்பெற்ற சொல்* நம்மையறி யாமலே நினைவுக்கு வருகிறது.

III

விவசாயத்துறை மக்கள்தொகைக்குப் பாதகமாகத் தொழில்துறை மக்கள்தொகையின் வளர்ச்சி பற்றிய பிரச்சினை

ஸிஸ்மொந்தீயிடம் திரும்பிவருவோம். அவர் சிறு பூர்ஷ்வா வர்க்கத்தை இலட்சிய நிலைக்கு உயர்த்துவதுடன் கூடவே, இன்றைய சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையின் கீழ் எப்படி ''விவசாயிமக்கள்'' ஒரு சிறுபூர்ஷ்வா வர்க்கமாக உருமாற்றப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளத் தன்னுணர்ச்சிவாத வகையிலே தவறியதுடன் கூடவே, தொழில் துறை மக்கள்தொகைக்குச் சாதகமாக விவசாயத்துறை மக்கள்தொகை குறைவது பற்றி ஒரு மிகத் தனிக்குறிப்பான கருத்து வைத்துள்ளார். ஒரு நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சியை மிக எடுப்பாகக் காட்டும் வெளிப்பாடுகளில் ஒன்றாகிய இந்த நிகழ்ச்சித் தோற்றம் எல்லா நாகரிக நாடுகளிலும், ருஷ்யாவிலும் கூட, காணப் படுவதை அனைவரும் அறிவார்கள்.*

---

* அகந்தைக்காரனும் கொடுங்கோலனும் ஆன ஒரு ருஷ்ய வியாபாரியிடம்—அவன் ஆ. நி. ஓஸ்த்ரோவ்ஸ்கி எழுதிய ஒரு நாடகத்தில் வரும் ஒரு பாத்திரம்—சொல்லப்பட்ட வார்த்தைகளை லெனின் மேற்கோள் காட்டுகிறார். ருஷ்ய மொழியில் ''கிட்'' ''திமிங்கிலம்'' என்று பொருள்படும்.—(பதிப்பாசிரியர்.)

* ருஷ்யாவின் ஐரோப்பியப் பகுதியிலுள்ள நகரப்புற மக்கள்தொகையின் சதவீதம் சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட காலத்தில் வளர்ந்துவந்திருக்கிறது. மிகப் பொதுவாகத் தெரிந்திருக்கிற இந்த அறிகுறியை இங்கே குறிப்பதோடு நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும்—அது இந்நிகழ்ச்சித் தோற்றத்தை முழுமையாக வெளியிடவில்லை என்கிறபோதிலும்; ஏனெனில், மேற்கு ஐரோப்பாவுடன் ஒப்பிடும் நிலையில் ருஷ்யாவுக்குக் குறிப்பாக இருக்கிற முக்கியமான பண்புக்கூறுகள் அதில் அடங்கியிருக்கவில்லை. இந்தக் குறிப்பான பண்புக் கூறுகளை (விவசாயிகளுக்கு இடமாற்றச் சுதந்தரம் இல்லாதிருப்பது, தொழில்வகைப்பட்ட, தொழிற்சாலை வகைப்பட்ட கிராமங்கள் இருப்பது, நாட்டுக்குள்ளேயே காலனியமைப்பு இருப்பது, முதலியவை) பரிசீலிப்பதற்கு இது இடமல்ல.

தம் காலத்தில் ஒரு தலைசிறந்த பொருளாதாரவாதியான ஸிஸ்மொந்தீ இந்த உண்மையைப் பார்த்திருக்கவேண்டும் என்பது உறுதி. அதை வெளிப்படையாகப் பதிவு செய்கிறார்; ஆனால் அதற்கும் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கும் (மேலும் பொதுவாகச் சொன்னால்: அதற்கும் சமுதாய உழைப்பின் பிரிவினைக்கும், இந்நிகழ்ச்சித் தோற்றத்தால் ஏற்பட்ட பண்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும்) உள்ள அவசியமான தொடர்பைப் புரிந்துகொள்ள முற்றாகத் தவறுகிறார். அது இந்த ''அமைப்பு முறையில்'' உள்ள ஒரு குறைபாடு என்று வெறுமே **கண்டிக்கிறார்.**

ஆங்கிலநாட்டு விவசாயத்தின் மாபெரும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியபின் ஸிஸ்மொந்தீ கூறுவதாவது:

''கவனிப்புடன் சாகுபடி செய்யப்படும் வயல்களைப் பாராட்டுகிறபோதே அவற்றைச் சாகுபடி செய்கிற மக்களையும் நாம் பார்க்கவேண்டும்; சமப் பரப்புள்ள ஒரு வயலில் பிரான்ஸில் எத்தனை பேர் வேலைசெய்கிறார்களோ அதில் பாதிப் பேர்தான் இங்கிலாந்தில் வேலைசெய்கிறார்கள். சில பொருளாதாரவாதிகள் இதை இலாபம் என்று கருதுகிறார்கள்; இது நஷ்டம் என்பதே என் கருத்து'' (I, 239).

பூர்ஷ்வா வர்க்கத்தின் சித்தாந்திகள் ஏன் இதை இலாபம் என்று கருதினர் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும் (முதலாளித்துவத்தைப் பற்றிய விஞ்ஞான விமர்சனவுரையின் கருத்தும் **இதுவே** என்று விரைவில் பார்க்கப் போகிறோம்); இவ்விதமாக அவர்கள் முதலாளித்துவச் செல்வம், வர்த்தகம், தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியை வரையறுத்தார்கள். இந்நிகழ்ச்சித்தோற்றத்தைக் **கண்டிக்க** விரையும் ஸிஸ்மொந்தீ அதற்கான காரணங்களைப் பற்றிச் சிந்திக்க மறந்துவிடுகிறார்.

அவர் கூறுவதாவது: ''மக்கள்தொகையில் ஐந்தில் நான்கு பகுதியினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பிரான்ஸிலும் இத்தாலியிலும் நாட்டின் ஐந்தில் நான்கு பகுதியினர் உண்பதற்குச் சொந்த நாட்டு உணவு இருக்கும்,—வெளிநாட்டுத் தானியத்தின் விலை எப்படியிருந்தபோதிலும்'' (I, 264). Fuit Troja! — என்றுதான் இதைப்பற்றிச் சொல்ல முடியும். **தானியத்தின் விலையை** முற்றாகச் சார்ந்திராத— அதாவது, உலக முதலாளித்துவத் தானிய உற்பத்தியைச்

சார்ந்திராத—நாடுகள் (விவசாயத்தில் மிகுவளர்ச்சி பெற்ற வைகூட) எவையும் இப்போது கிடையாது.

''அதே சம்பளத்துக்கு ஒவ்வொருவரும் மேலும் அதிகமாக உழைக்காவிட்டால் ஒரு நாட்டின் வர்த்தகத்துறையின் மக்கள்தொகையைப் பெருக்கமுடியாது என்ருல் அதன் தொழில்துறையின் மக்கள்தொகை அதிகரிக்கத்தான் செய்யும் என்று எதிர்ப்பார்க்கவேண்டும்'' (I, 322). இது அன்பான ஆனுல் முற்றிலும் பொருளற்ற அற்ப அறிவுரையே என்று வாசகர் காணலாம். ஏனெனில் இங்கே ''நாடு'' எனும் கருத்துருவம் இந்த ''நாடு'' என்பதிலுள்ள வர்க்கங்களுக்கிடையே இருக்கும் பகைமைகளைச் செயற்கையாக விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எப்போதும் போலவே ஸிஸ்மொந்தீ வெறுமே இந்த முரண்பாடுகளிலிருந்து **நழுவிவிடுகிருர்,** — முரண்பாடுகளே இருக்கக்கூடாது என்கிற நல்லெண்ணமுள்ள விருப்பத்தைச் சொல்லி.

''இங்கிலாந்தில் விவசாயத்தில் 770,199 குடும்பங்களும், வர்த்தகம், தொழில் துறைகளில் 959,632 குடும்பங்களும், மற்ற துறைகளில் 413,316 குடும்பங்களும் வேலை செய்கின்றன. மொத்தம் உள்ள 2,143,147 குடும்பங்களில், அல்லது 10,150,615 நபர்களில், இவ்வளவு பெரும் பகுதியான மக்கள் வர்த்தகச் செல்வத்தைக் கொண்டு வாழ்வது உண்மையிலே பயங்கரமானதாகும் (effrayante). நல்ல வேளை, பிரான்ஸில் இவ்வளவு ஏராளமான தொழிலாளர்கள் எங்கோயுள்ள சந்தையை நம்பி வாழவேண்டிய நிலைமைக்கு இன்னமும் வரவில்லை'' (I, 434). இந்த ''நல்ல வேளைக்கு''க் காரணம் முதலாளித்துவ வளர்ச்சியில் பிரான்ஸ் பின்னடைந்து இருப்பதே என்பதைக்கூட ஸிஸ்மொந்தீ மறக்கிறதாகத் தோன்றுகிறது.

தமது பார்வை நிலையில் ''விரும்பத்தக்கதாக'' இன்றைய அமைப்பு முறையில் செய்ய வேண்டிய மாற்றங்களை ஸிஸ்மொந்தீ சித்திரித்துவிட்டு (இவற்றைப் பின்னுல் விவாதிப்போம்), (தன்னுணர்ச்சிவாதத்துக்கு விருப்பமான சீர்திருத்தங்களின்) ''விளைவாக''த் ''தொழிலை மட்டும் கொண்டு வாழ்ந்துவரும் பல நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருகப் பல தொழிற்சாலைகளை மூடவேண்டியிருக்கும், மிதமிஞ்சி அதிகரித்துவிட்ட தொழில்துறை மக்கள்தொகை விரைவாகக் குறை

யும், அதேநேரத்தில் கிராமப்புறத்து மக்கள்தொகை வளரத் தொடங்கும், என்பதில் ஐயமில்லை'' (II, 367) என்று கூறு கிறார்.

முதலாளித்துவத்தைப் பற்றிய உணர்ச்சிவகைப்பட்ட விமர்சனத்தின் ஏலாமையையும் சிறுபூர்ஷ்வாவின் நபுஞ்சகத் தனமான வெறுப்பையும் இந்த எடுத்துக்காட்டு எடுப்பாகக் காட்டுகிறது! விவகாரங்கள் எங்கோ போகின்றனவே என்று ஸிஸ்மொந்தீ முறையிடுகிறார்*. கிராமப்புற மக்களின் தந்தைவழியாட்சிக்கால ஒளியற்ற வாழ்க்கை, ஒடுக்கப்பட்ட நிலைமைகள் எனும் சொர்க்கம் நாசமடைவதில் அவருக்கு ஏற்படுகிற பெருந்துயரத்திலே இந்தப் பொருளாதாரவாதி அது ஏன் நிகழ்கிறதென்றுகூடக் கூர்ந்தறியவில்லை. எனவே, தொழில்துறை மக்கள்தொகையின் அதிகரிப்பு அவசியமாக வும் பிரிக்கொணாத வகையிலும் பண்டப் பொருளாதாரத் துடனும் முதலாளித்துவத்துடனும் பிணைக்கப்பட்டிருக்கும் உண்மையைப் புறக்கணித்தார். சமுதாய உழைப்புப் பிரி வினையின் வளர்ச்சிக்கு ஏற்ற அளவிலே பண்டப் பொருளா தாரம் வளர்கிறது. உழைப்புப் பிரிவினை என்றால், தொழில் களும் கச்சா பொருளைச் செய்முறைப்படுத்தும் வடிவங்களும் ஒன்றன்பின் ஒன்றாக விவசாயத்திலிருந்து பிரிந்து, சுதந்தர மாக நின்று, அதன் விளைவாக ஒரு தொழில்துறை மக்கள் தொகையைத் தோற்றுவிக்கிறது என்று பொருள். எனவே, பண்டப் பொருளாதாரத்தையும் முதலாளித்துவத்தையும் விவாதிக்கையில் தொழில்துறை மக்கள்தொகையின் சார்பு நிலை வளர்ச்சி பற்றிய விதியைப் புறக்கணிப்பதின் பொருள் சமுதாயப் பொருளாதாரத்தின் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையின் அடிப்படையான பண்புக்குறிகளைப் பற்றி ஒன்றும் தெரியாதிருப்பதாகும்.

''விவசாயத்துறையைச் சேராத மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில் விவசாயத் துறையைச் சேர்ந்த மக்கள்

---

* ''கடைசியிலே... இந்த சோஷலிஸ வடிவம்'' (அதா வது, சிறுபூர்ஷ்வா வகைப்பட்ட விமர்சனப் போக்கு; இதன் தலைவர் ஸிஸ்மொந்தீ) ''மோசமான நிராசை நோய்க்கா ளாகி முடிந்தது.'' (பார்க்க: கா. மார்க்ஸ். பி. எங்கெல்ஸ், ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'', அத்தியாயம் 3.— (பதிப்பாசிரியர்.)

தொகையை இடையருது குறைத்துக்கொண்டேவருவது முதலாளித்துவ உற்பத்தியின் இயல்பில் உள்ளதாகும்; காரணம், தொழில்துறையில் (அதன் கருரான அர்த்தத்தில் கூறுகிருேம்) மாறுபடும் மூலதனத்துக்குச் சார்புநிலையில் நிலையான மூலதனம் அதிகரித்துவருவது மாறுபடும் மூலதனம் சார்புநிலையில் குறைந்து வந்தாலும்* மொத்தத்தில் அதிகரித்து வருவதுடன் கைகோத்துச் செல்கிறது; மறுபுறத்தில், விவசாயத்தில் ஒரு குறிப்பிட்ட விளைநிலத்தில் சாகுபடி செய்வதற்கு வேண்டிய மாறுபடும் மூலதனம் மொத்தத்தில் குறைகிறது; எனவே சாகுபடிக்குப் புதிய நிலத்தை** எடுத்துக் கொண்டு வரும் அளவுக்குத்தான் அது அதிகரித்து வர முடியும், ஆனல் இதற்கு முன்தேவையாக விவசாயத் துறையைச் சேராத மக்கள்தொகை முன்னைவிடப் பெரிதாக வளர்ச்சியடைந்திருக்கவேண்டும்'' (III, 2, 177).***

---

* இதிலிருந்து வாசகர் திரு. நி.—ன் அவர்களின் மனக்கூர்மையைப் பற்றி முடிவு செய்து கொள்ளலாம். அவர் தமது ''வரையுரைக''ளில் மாறுபடும் மூலதனம், தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் சார்புநிலைக் குறைவை சாராநிலைக் குறைவு என்று தாட்சண்யமின்றி உருமாற்றிவிட்டு அதிலிருந்து உள்நாட்டுச் சந்தை ''சுருங்குவது'' முதலான இன்னேரன்ன பிற விஷயங்களைப் பற்றி மிகவும் அபத்தமான பல முடிவுகளுக்கு வருகிருர்.

** தொழில்துறை மக்கள்தொகையின் மேலான வளர்ச்சி பற்றிய விதி வெளிப்படுத்திக் கொள்வதற்கு ருஷ்யாவின் உள்நாட்டுக் குடியேற்றமுறை தடங்கலாக இருக்கிறது என்று நாம் இந்த நிபந்தனையை மனத்தில் வைத்துத் தான் சொன்னேம். தொழில்துறை மக்கள்தொகை நகரங்களைவிடத் தொழிற்சாலையுள்ள கிராமங்களிலும் நகரமைப்புகளிலும் அதிகமாக வளர்ந்த ருஷ்யாவின் தொலைக்குடியேற்றமுள்ள மத்தியப் பிரதேசங்களுக்கும் சீர்திருத்தத்துக்குப்பின் குடியேற்றம் நிகழ்ந்து அமெரிக்காவில் நடந்ததுபோல விரைவாக நகரங்கள் வளர்ந்து வருகிற நவ ருஷ்யா போன்ற பிரதேசங்களுக்கும் உள்ள வேற்றுமையை நினைவூட்டிக் கொண்டால் போதும். இந்தப் பிரச்சினையைப் பற்றி வேருேரிடத்தில் மேலும் விபரமாகக் கவனிக்கலாம் என்று நம்புகிருேம்.

*** பார்க்க: கா. மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 3, அத்தியாயம் 37.—(பதிப்பாசிரியர்.)

உணர்ச்சி வகைப்பட்ட முறையீடுகளைக் கொண்ட தனனுணர்ச்சிவாதம் இவ்விஷயத்திலும் காட்டும் கருத்துக்கு நேர் எதிரானது நவீனகாலத் தத்துவத்தின் கருத்து. தவிர்க்கவியலாதது என்று ஒன்றை நாம் புரிந்துகொள்கிற போது அதன்பால் நாம் முற்றிலும் வேறுபட்ட கண்ணோட்டத்தை எடுத்துக் கொள்வது இயல்பு, அதன் வெவ்வேறு அம்சங்களை மதிப்பிடவும் நமக்கு முடிகிறது. நாம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சித் தோற்றம் முதலாளித்துவ அமைப்புமுறைக்குரிய மிகவும் ஆழமான, மிகவும் பொதுவான முரண்பாடுகளில் ஒன்ருகும். நாட்டுப்புறத்தினின்று நகரம் பிரிக்கப்படுவது, அவற்றின் எதிர்த்தன்மை, நாட்டுப்புறத்தை நகரம் சுரண்டுவது ஆகியவை—வளர்ந்து வரும் முதலாளித்துவத்தின் உலகப்பொதுவான உடனிகழ்ச்சிகள் இவை—''நிலப்பரப்புவகைப்பட்ட செல்வத்தை'' (விவசாயச் செல்வத்தை) விட ''வர்த்தகச் செல்வம்'' (ஸிஸ்மொந்தீயின் சொல்லைப் பயன்படுத்துகிருேம்) மிகுந்திருப்பதின் அவசியமான விளைவாகும். எனவே, நாட்டுப்புறத்தின் மீது (பொருளாதாரம், அரசியல், அறிவுத்துறை, இன்னும் மற்றெல்லாத் துறைகளிலும்) நகரம் மேலாதிக்க நிலை வகிப்பது பண்ட உற்பத்தியும் முதலாளித்துவமும் இருக்கும், ருஷ்யா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் இருக்கக்கூடிய உலகப்பொதுவான, தவிர்க்கவியலாத விஷயமாகும். உணர்ச்சிவசப்பட்ட தன்னுணர்ச்சிவாதிகள் மட்டுமே இதைப்பற்றி ஓலமிட முடியும். அதற்கு மாருக, பெருமளவான தொழில் மூலதனம் இந்த முரண்பாட்டுக்கு அளிக்கும் முற்போக்கான அம்சத்தை நவீனகாலத் தத்துவம் சுட்டிக்காட்டுகிறது. ''முதலாளித்துவ உற்பத்தியானது மக்களைப் பெரிய நகரங்களில் திரட்டுவதின் மூலமாகவும், நகர மக்கள்தொகை மேன்மேலும் மிகுந்து வரச் செய்வதின் மூலமாகவும்... சமுதாயத்தின் வரலாற்று வகைப்பட்ட உந்து சக்தியை (die geschichtliche Bewegungskraft der Gesellschaft) குவிக்கிறது.''* நகரம் மேலாதிக்க நிலை

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 1, அத்தியாயம் 13.—(பதிப்பாசிரியர்.)

1845-ல் வெளியான "Die Lage der arbeit.Klasse in England" (''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'') எனும்

பெறுவது தவிர்க்கவியலாததென்றால் மக்கள் நகரங்கள்பால் ஈர்க்கப்படுவது ஒன்றுதான் இந்த ஆதிக்க நிலையின் ஒரு சார்பான தன்மையை முறிக்கமுடியும் (உண்மையிலே முறிக்கத்தான் செய்கிறது என்று வரலாறு புலப்படுத்துகிறது). கிராமத்தை கீழ்நிலையிலே, வளர்ச்சியற்றதாக, நிராதரவாக, ஒடுக்கப்பட்டதாக விட்டுவைத்து நகரம் அவசியமாக தனக்கென்று ஒரு சிறப்புரிமையுள்ள நிலையைப் பெற்றுக் கொள்கிறதென்றால், கிராம மக்கள் நகரங்களில் புகுவது ஒன்றுதான், விவசாயத்துறையைச் சேர்ந்த மக்கள் விவசாயமல்லாத துறைகளைச் சேர்ந்த மக்களுடன் கலந்து ஒன்றாகிவிடுவது ஒன்றுதான் கிராம மக்களை அதன் நிராதரவான நிலையிலிருந்து தூக்கிவிட முடியும். எனவே, தன்னுணர்ச்சிவாதிகளின் பிற்போக்கான முறையீடுகளுக்கும் ஓலங்களுக்கும் நவீனகாலத் தத்துவம் விடையளிக்கும் முறையிலே, விவசாயத்துறை மக்களின் வாழ்க்கை நிலைமைகளுக்கும் விவசாயமல்லாத துறைகளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கை நிலைமைகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி இவ்வாறு குறுக்கப்படுவது எப்படி நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் உள்ள எதிர்நிலையை அகற்றுவதற்குரிய நிலைமைகளைப் படைக்கிறது என்று சரிநுட்பமாகக் குறித்துக்காட்டுகிறது.

இப்பிரச்சினை குறித்து நமது நரோத்னிக் பொருளாதாரவாதிகளின் பார்வைநிலை என்ன என்பதே இப்போதுள்ள கேள்வி. அது உணர்ச்சி வசப்பட்ட தன்னுணர்ச்சிவாதியினுடைய பார்வைநிலைதான் என்பதில் ஐயமில்லை. இன்றைய சமுதாயப் பொருளாதார அமைப்பு முறையின்கீழ் தொழில் துறை மக்கள்தொகை வளர்ச்சி **அவசியம்** என்று புரிந்துகொள்வதற்குப் பதிலாக அந்த நிகழ்ச்சித் தோற்றத்தைப்

நூலில் மக்களின் அறிவு வளர்ச்சியில் தொழில் மையங்கள் வகிக்கிற முற்போக்கான பாத்திரம் குறித்து உள்ள மிக முனைப்பான பண்புரையையும் ஒப்பு நோக்குக. ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' எனும் நூலின் ஆசிரியர் இந்தப் பாத்திரத்தை அங்கீகரித்ததினால் நாட்டுப்புறத்தினின்று நகரம் பிரிதலில் வெளிப்படுகிற முரண்பாட்டை ஆழ்ந்த வகையிலே புரிந்துகொள்வதினின்று தடுக்கப்படவில்லை என்பதை அவர் டூரிங்குக்கு மறுப்பாக எழுதிய வாத நூல் நிரூபிக்கிறது.

பார்க்காதபடிக் கண்ணை மூடிக் கொள்ளவும் முயல்கிறார்கள், சிறகுக்குள் தலையை மறைத்துக் கொள்ளும் பறவையைப் போல. முதலாளித்துவத்தைப் பற்றிய திரு. நி.—ன் வாதங்களிலே மாறுபடும் மூலதனத்தில் சாராநிலைக் குறைவு இருக்கிறதென்று அடித்துப் பேசுவதில் மோசமான தவறு செய்கிறார் என்றும் (''விமர்சனக் குறிப்புரைகள்'', பக்கம் 255) ருஷ்யாவில் தொழில் துறை மக்கள்தொகையின் குறைவான சதவீதம் இருக்கும் விஷயத்தில் ருஷ்யாவை மேற்கத்திய நாடுகளினின்று வேறுபடுத்திக் காட்டுவதும் அதே நேரத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் விளைவாக ஏற்படும் இந்தச் சதவீதத்தின் வளர்ச்சியைப் புறக்கணிப்பதும் ("Sozialpolitisches Centralblatt", 1893, இதழ் 1) அபத்தம் என்றும் பி. ஸ்துரூவே பேசுவதற்கு நாம் எதிர்பார்த்தபடி ஒரு பதில் கூடக் கிடைக்கவில்லை.* ருஷ்யாவின் தனிக்குறிப்பான சிறப்புக்கூறுகளைப் பற்றி இடைவிடாமல் பேசிக்கொண்டிருக்கும் நரோத்னிக் பொருளாதாரவாதிகள், ருஷ்யாவில் தொழில் துறை மக்கள்தொகை உருப்பெறுவதின் அசல் தனிக்குறிப்பான சிறப்புக்கூறுகளைப் பற்றிய பிரச்சினையை—இதை நாம் மேலே சுருக்கமாகச் சுட்டிக் காட்டினோம் — முன்வைக்கக் கூட முடியாமற்போயுள்ளனர்.** இதுதான் இப்பிரச்சினையில் நரோத்னிக்குகள் கொண்டுள்ள தத்துவார்த்தக் கண்ணோட்டம். எனினும், நரோத்னிக்குகள் தத்துவார்த்த ஐயப்பாடுகளால் விலங்கிடப்படாமல் சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட காலத்து நாட்டுப்புறத்திலுள்ள விவசாயிகளின் நிலைமைகளைப்பற்றி விவாதிக்கும் போது விவசாயத்தினின்று வெளியேற்றப்பட்ட விவசாயிகள் நகரங்களிலும் தொழிற்

---

* ஸிஸ்மொந்தீ இதே தவற்றைச் செய்ததை வாசகர் நினைவூட்டிக் கொள்ளலாம். ''அதிருஷ்ட வசமாக'' பிரெஞ்சு மக்களில் எண்பது சதவீதம் விவசாயத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள் என்று அவர் சொன்னார்; இது ஏதோவொரு ''மக்கள்பாற்பட்ட உற்பத்தி'' முதலானவற்றின் தனிச் சிறப்புக்கூறு போலவும் முதலாளித்துவ வளர்ச்சியில் பின்னடைந்திருப்பதை அது காட்டாதது போலவும் கூறினார்.

** பார்க்க: வோல்கின் எழுதிய ''திரு. வரன்ட்ஸோவ் நூல்களில் நரோதியத்தைப் பற்றிய நிரூபணம்,'' செயின்ட்-பீட்டர்ஸ்பர்க், 1896, பக்கங்கள் 215-216.

சாலை வட்டாரங்களிலும் குடியேறுகின்றனர் என்று ஒப்புக் கொள்கிறார்கள், எனினும் இந்த நிலவரங்களைப் பற்றிப் புலம்புவதோடு நின்றுவிடுகின்றனர், ஸிஸ்மொந்தீ புலம்பியது போல.* சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட காலத்திய ருஷ்

---

* நேர்மையாகப் பார்த்தால், சில நாடுகளில் தொழில் துறை மக்கள்தொகை வளர்ச்சியை ஸிஸ்மொந்தீ பார்க்கிறார், அதன் பொதுவான தன்மையை அங்கீகரிக்கிறார், இது ஏதோ வெறுமே ஒரு ''முறைகேடு'' என்றபடியெல்லாம் கிடையாதென்றும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளிலுள்ள ஓர் ஆழ்ந்த மாற்றம் இது, ஏற்கப்பட்டபடி இந்த மாற்றத்தில் நல்ல அம்சம் ஒன்றிருக்கிறது என்று புரிந்துகொண்டிருப்பதை அவர் இங்கும் அங்குமாகப் புலப்படுத்திக் கொள்கிறார் என்று சொல்லித்தீரவேண்டும். எப்படி இருந்துபோதிலும், உழைப்புப் பிரிவினையின் தீங்கு குறித்து அவர் தரும் பின்வரும் ஆய்வுக்கூற்று திரு. மிஹாய்லோவ்ஸ்கியின் கருத்துக்களைவிட எவ்வளவோ ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்துகிறது; எடுத்துக் காட்டாக, திரு. மிஹாய்லோவ்ஸ்கி சமுதாயப் பொருளாதாரத்தின் வெவ்வேறான அமைப்புகளில் வெவ்வேறான வளர்ச்சிக்காலப் பகுதிகளில் உழைப்புப் பிரிவினை தாங்கிய வெவ்வேறு வடிவங்களைப் பகுத்தாய்வதற்குப் பதிலாக ஒரு பொதுவான ''முன்னேற்றத்துக்குரிய சூத்திரத்தை''ப் புனைந்தார்.

''தொழிலாளர்களின் எல்லா நடவடிக்கைகளும் சமசீரான வேலைக்கூறுகளாகத் தாழ்த்தப்படுவது அவர்களின மன வளர்ச்சிக்குத் (intelligence) தீங்கானது என்பது வெளிப்படையென்றாலும், நேர்மையாகப் பார்த்தால் சிறந்த நிபுணர்களின் (juges) கருத்துப்படி இங்கிலாந்தில் விவசாயத் தொழிலாளிகளை (ouvriers des champs) விட தொழிற்சாலைத் தொழிலாளிகள் அறிவுத்திறத்திலும் கல்வியிலும் ஒழுக்கங்களிலும் மேலாக விளங்குகின்றனர் என்பதைச் சொல்லித்தீர வேண்டும்'' (I, 397). மற்றும் இதற்கான காரணத்தையும் ஸிஸ்மொந்தீ குறிப்பிடுகிறார்: Vivant sans cesse ensemble, moins épuisés par la fatigue, et pouvant se livrer davantage à la conversation, les idées ont circulé plus rapidement entre eux (இடையறாது கூடி வாழ்வதினால் அவர்களின் களைப்பு குறைந்துள்ளது, ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகப்பட்டிருப்பதினால் அவர்களிடையே மேலும் விரைவாகக் கருத்துக்கள் பரவியுள்ளன, என்று.—பதிப்பாசிரியர்.) ஆனால், aucun attachement à l'ordre établi (நிலைநாட்டப்பெற்ற அமைப்பு மீது பாசம் காட்டுகிறவர்களாக இல்லை—பதிப்பாசிரியர்) என்றும் சோகக் குரலில் கூறுகிறார்.

யாவில் மக்கள்திரளின் வாழ்க்கை நிலைமைகளில் உண்டான ஆழ்ந்த மாற்றத்தின் பொருளாதாரக் குறிபொருளையோ ஒழுக்கம், கல்வி சம்பந்தப்பட்ட குறிபொருளையோ (ஒரு வேளை இது மேலும் முக்கியமாயிருக்கலாம்) இவர்கள் பார்க்கிறதேயில்லை; முதல் தடவையாக இந்த நிகழ்வுப்போக்கு விவசாயிகளின் நிலையான குடிவாழ்வை, தமது வட்டாரங்களோடு பிணைக்கப்பட்டிருக்கும் நிலையைக் குலைத்துவிட்டது, அவர்களுக்குக் குடிமாறுந்தன்மையைக் கொடுத்துள்ளது, விவசாயத் தொழிலாளிகளுக்கும் விவசாயத்துறையைச் சேராத தொழிலாளிகளுக்கும் இடையேயுள்ள, கிராமப்புறத்துத் தொழிலாளிகளுக்கும் நகரத் தொழிலாளிகளுக்கும் இடையேயுள்ள அகழியைக் குறுக்கியுள்ளது.* நரோத்னிக்குகள் இதிலிருந்து பெற்றுக்கொண்டது உணர்ச்சிவகைப்பட்ட தன்னுணர்ச்சிவாதப் புலம்பலுக்குரிய சந்தர்ப்பத்தைத் தான்.

---

* ஐரோப்பாவையொட்டிய ருஷ்யாவின் மத்தியப் பகுதிகளில் இந்த நிகழ்வுப்போக்கு தாங்கிநிற்கும் வடிவங்கள் எல்லைப்பிரதேசங்களோடு ஒப்புநோக்கும்போது வேறுபட்டுள்ளன. முக்கியமாக மத்தியக் கரியநில மாநிலங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளிகளும் ஓரளவுக்குத் தொழில் வளர் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயத் துறையல்லாத தொழிலாளிகளும் எல்லைப்பிரதேசங்களுக்குக் குடியேறி அங்கே பச்சையான விவசாய மக்கள்தொகையிடையே ''தொழில்கள்'' பற்றிய அறிவைப் பரப்பித் தொழில் துறையை ''வேறூன்றச் செய்கின்றனர்.'' தொழில்வளர் பிரதேசத்துக் குடியேறிகள் விவசாயத்துறை யல்லாத தொழிலாளிகளே, அவர்களில் ஒரு பகுதியினர் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளுக்கும் சிதறிச் செல்கிறுர்கள் என்ருலும் மிகப்பெரும்பான்மையினர் தலைமையான நகரங்களிலும் பெரிய தொழிற்கேந்திரங்களிலும் பெருகிப்புகுகின்றனர். இந்தத் தொழில் வளர்ச்சியோட்டம் மிகவும் வலுவாயுள்ளதால் விவசாயத் தொழிலாளிகளுக்குப் பற்ருக்குறை உண்டாக்குகிறது, அவர்கள் மத்தியக் கரியநில மாநிலங்களிலிருந்து தொழில்வளர் மாநிலங்களில் (மாஸ்கோ, யாரஸ்லாவல், இன்ன பிற மாநிலங்களில்) குடியேறுகிருர்கள். பார்க்க: எஸ். ஏ. கரலேன்கோ, ''கூலிக்கமர்த்தப்பட்ட உழைப்பு, முதலியவை''.

IV

தன்னுணர்ச்சிவாதத்தின் நடைமுறைக்கான யோசனைகள்

இனி முதலாளித்துவத்தைப் பற்றிய ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலையைத் தொகுத்தளிக்க முயல்வோம் (இந்தப் பணியை எஃப்ரூஸியும் மேற்கொண்டது வாசகர்களுக்கு நினைவிருக்கும்), தன்னுணர்ச்சிவாதத்தின் நடைமுறை வேலைத் திட்டத்தையும் பரிசீலிப்போம்.

முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை முதன்முதலாகச் சுட்டிக் காட்டியவர்களில் ஒருவர் என்பது ஸிஸ்மொந்தீயின் சிறப்பு என்பதைப் பார்த்தோம். எனினும் அவற்றைச் சுட்டிக்காட்டியதில் அவற்றைப் பகுத்தாய்ந்திடவும் அவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் போக்கையும் விளக்கவும் முயலவில்லை என்பதோடல்லாமல் அவற்றை இயற்கைக் கொவ்வாதவையாகவும், சகஜநிலையிலிருந்து பிசகாக விலகிச் செல்கிற திரிபுகளாகவும் கருதினர். இன்றையச் சமுதாயப் பொருளாதாரத்தின் பொதுவான அமைப்புமுறையில் ஒரு திட்டவட்டமான இடத்தை வகிக்கிற உண்மையான மக்கட் குழுக்களின் யதார்த்தமான நலன்களை இந்த முரண்பாடுகள் வெளியிடாததுபோல் பாவித்து, ஒழுக்கநெறி போதிக்கிற சொற்றொடர்களாலும் கண்டனங்களாலும் இந்த ''விலகிச்செல்கிற திரிபுகளை'' அவர் வெகுளித்தனமாகக் கண்டித்தார், அவற்றை நீக்கிவிடுங்கள் என்றெல்லாம் அறிவுரை அளித்தார். நலன்களின் பகைமையை (இது சமுதாயப் பொருளாதாரத்தின் அசல் அமைப்புமுறையிலேயே ஆழமாக வேரூன்றியிருப்பதாகும்) சித்தாந்தம், அமைப்பு முறை, நடவடிக்கைகள் முதலியவைகளின் முரண்பாடாகவோ தவருகவோ கருதுவது—இதுவே தன்னுணர்ச்சிவாதத்தின் மிகமுக்கியமான முனைப்புக் கூறும். வளர்ச்சியுற்ற முரண்பாடுகளினின்று விலகி நின்றுகொண்டு இரண்டு துருவங்களுக்கும் இடையே ஓர் இடைப்பட்ட மாற்றப்போக்கிலுள்ள நிலையை வகிக்கும் Kleinbürger*-இன் குறுகிய பார்வை இங்கே ஒரு வெகுளித்தனமான கருத்துமுதல்வாதத்துடன் — அதிகார

---

* சிறுபூர்ஷ்வா.—(பதிப்பாசிரியர்.)

வர்க்கப் போக்கான பார்வை என்று சொல்லவும் அநேகமாகத் தயாராயிருக்கிறோம் — பிணைக்கப்பட்டிருக்கிறது; இந்தக் கருத்துமுதல்வாதம் ஒரு சமுதாய அமைப்புமுறையின் இருத்தலுக்கு மனிதர்களின் (குறிப்பாக ஆட்சியதிகாரத்திலிருப்பவர்களின்) கருத்துக்களைக் காரணமாகக் கற்பிக்கிறது, மனிதர்களுடைய கருத்துக்களுக்கு அமைப்புமுறையைக் காரணமாகக் கருதுவதற்குப் பதிலாக. ஸிஸ்மொந்தீயின் இவ்வகைப்பட்ட எல்லா வாதங்களுக்கும் எடுத்துக்காட்டுகளை மேற்கோள் காட்டுவோம்.

''பொருட்களுக்காக மனிதர்களை மறந்ததிலே இங்கிலாந்து இலட்சியத்தை வழிமுறைகளுக்குப் பலியிட்டுவிடவில்லையா?

''இங்கிலாந்து சுதந்திரமுள்ளதாகவும், அறிவுத்தெளிவுள்ளதாகவும் நல்லாட்சியுள்ளதாகவும் இருப்பதனுல் இங்கிலாந்தின் எடுத்துக்காட்டு எவ்வளவோ எடுப்பாக இருக்கிறது, இந்த நாட்டின் எல்லாக் கஷ்டங்களுக்கும் காரணம் ஒரு தவருன பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுவது ஒன்றுதான்'' (I, பக்கம் IX). பொதுவாகவே ஸிஸ்மொந்தீ ஐரோப்பாக் கண்டத்தைப் பயமுறுத்துவதற்காக இங்கிலாந்தை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகிருர்—நமது தன்னுணர்ச்சிவாதிகளைப் போல; இவர்கள் பங்காகச் செலுத்துவது மிகப்பழங்குப்பையல்ல, ஏதோ புதிதான ஒன்று, என்று நினைத்துக் கொள்கிருர்கள்.

''எனது வாசகர்களின் கவனத்தை இங்கிலாந்துபால் ஈர்த்ததிலே நான் காட்ட விரும்பியது... நமது சொந்த எதிர்காலத்தின் வரலாற்றைத்தான்,—இங்கிலாந்து பின்பற்றிய கோட்பாடுகளை வைத்து நாம் தொடர்ந்து செயலாற்றுவோமேயானுல்'' (I, பக்கம் XVI).

''...இங்கிலாந்தின் தொழில்துறை வளர்ச்சிப்போக்கு விஷயத்தில் இங்கிலாந்தைப் பின்பற்றுவது அவசியம் என்று ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன'' (II, 330). ''இங்கிலாந்து காட்டுவதை விட திகைப்பூட்டுகிற, பயங்கரமான காட்சி வேருென்று கிடையாது'' (II, 332).*

---

* ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதத்துக்கும் ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதத்துக்கும் இருக்கும் உறவைத் தெளிவாகக் காட்டுவதற்குத் திரு. நி.—ன் இடமிருந்து நூற்பகுதிகளை

''வாழ்க்கையின் இன்பங்களேயும் வசதி நலங்களேயும் பிரதிநிதித்துவப்படுத்துவதே (n'est que la représentation) செல்வம் என்பதை மறக்கலாகாது'' (இங்கே முதலாளித்துவச் செல்வத்துக்குப் பதிலாகப் பொதுப்படையாகச் செல்வம் வைக்கப்படுகிறது!), ''மற்றும், செயற்கையான செல்வத்தைப் படைத்து அதன் வழியே வறுமையையும் துன்பத்தையும் குறிக்கிற அனைத்துக்கும் ஒரு நாட்டைப் பலியிடுவது பெயரையே அசல் பொருளாகக் கருதி எடுத்துக்கொள்வதாகத்தான் (prendre le mot pour la chose) அர்த்தம்'' (I, 379).

''இயற்கையின் ஆணைகளை (கட்டளைகளை, indications) மட்டும் நாடுகள் பின்பற்றி வெப்பதட்ப நிலையும் மண்வளமும் அமைவிடமும் கச்சாப்பொருள் உடைமையும் அளிக்கிற நற்கூறுகளை அனுபவித்துவந்த வரை அவை இயற்கைக்கொவ்வாத ஒரு நிலையில் (une position forcée) தம்மை வைத்துக் கொள்ளவில்லை, மக்களுக்கு உண்மையான வறுமையாக ஆகிற வெளித் தோற்றமான செல்வத்தை (une opulence apparente) அவை தேடிச் செல்லவில்லை'' (I, 411). முதலாளித்துவச் செல்வம் வெறுமே வெளித்தோற்றமான செல்வமாம்! ''வெளிநாட்டு வர்த்தகத்துக்குத் தனது கதவுகளை மூடிவிடுவது ஒரு நாட்டுக்கு அபாயமானதாகும்; இது ஒரு வகையில் (en quelque sorte) அந்த நாட்டை பொய்யான நடவடிக்கையில் ஈடுபடும்படிக் கட்டாயப்படுத்துகிறது, அது நாட்டின் அழிவுக்குக் கொண்டுபோய் விடுகிறது'' (I, 448).*

அடிக்குறிப்புகளில் மேற்கோள் காட்டுவோம். ''மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார வளர்ச்சிப் போக்கு போதித்த பாடத்தை நாம் கற்க மறுத்திருக்கிறோம். இங்கிலாந்தில் முதலாளித்துவம் பெற்ற வளர்ச்சியின் ஒளியைக் கண்டு நம் கண் பூத்துப்போயுள்ளது, அதைவிட அளவிடவொண்ணு வேகத்திலே அமெரிக்காவில் முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு நாம் அப்படியே திகைத்து நிற்கிறோம்,'' என்றவாறு (323). ஆக, திரு. நி.—ன்னின் சொற்களிலே கூட புதுமையின் சிறப்பு இல்லாததைக் காண்கிறோம்! இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் ஸிஸ்மொந்தீயை ''திகைக்கச் செய்த'' அதே பொருளேக் கண்டு அவரும் ''திகைப்படைகிறார்.''

* ''...சென்ற முப்பது ஆண்டுகளாக நாம் பின்பற்றி வந்துள்ள பொருளாதாரப் பாதை தவருக இருந்திருக்கிறது''

''கூலியில் ஓர் அவசியமான பகுதியுண்டு, அது அந்தக் கூலி பெறுகிறவர்களின் வாழ்க்கையையும், வலுவையும், உடல்நலத்தையும் பேணிக்காத்துத் தீரவேண்டும்.... இந்தப் பகுதி மீது கைவைக்கும் அரசாங்கத்தைக் கேடு சூழட்டும்—அது எல்லாவற்றையும்—மனிதர்களையும், எதிர்காலச் செல்வம் பற்றிய நம்பிக்கையையும்—பலியிடுகிறது (il sacrifie tout ensemble).... தொழிற்சாலைச் சொந்தக்காரர்களின், வியாபாரிகளின், சொத்துடைமையாளர்களின் நிகர வருவாய்களை உயர்த்துவதற்குத் தேவையான மட்டத்துக்கு உழைக்கும் வர்க்கங்களின், கூலியைக் குறைத்திருக்கும் அரசாங்கங்களின் கொள்கை எப்படித் தவறானது என்று இந்த வேற்றுமை நமக்குப் புரியவைக்கிறது'' (II, *169)**.

''எங்கே நாம் போக விரும்புகிறோம் (où l'on veut aller) எனும் கேள்வி கேட்கும் நேரம் கடைசியாக வந்துவிட்டது'' (II, *328)*.

''அவர்கள் பிரிக்கப்பட்டது'' (*சொத்துடைமையுள்ள வர்க்கம் உழைக்கும் மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டது*) ''அவர்களின் நலன்களின் பகைமை நாம் மனித சமுதாயத்

---

(281).... ''முதலாளித்துவத்தின் நலன்களும் தேசியப் பொருளாதாரத்தின் நலன்களும் ஒன்றே என்று வெகுகாலமாக வைத்து வந்திருக்கிறோம்—இது மிகச் சாவுக்கேடான ஒரு தவறு.... தொழில்துறைக் காப்பின் வெளித்தோற்றமான விளைவுகள்... மக்கள்-சமுதாய அம்சத்தை முற்றாகப் பார்க்கத்தவறுகிற அளவுக்கு நம் பார்வையை மங்கச்செய்தன... இந்த வளர்ச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலையைப் பார்க்கத் தவறியுள்ளோம், எல்லா உற்பத்தியின் குறிக்கோளை நாம் மறந்துவிட்டோம்'' *(298)*—முதலாளித்துவ உற்பத்தியைத் தவிர!

''சொந்தப் பழங்காலத்தைப் பற்றி இளக்காரம் காட்டுவது... முதலாளித்துவத்தை வேரூன்றுவது''... *(283)....* ''நாம்... முதலாளித்துவத்தை வேரூன்றுவதற்கு எல்லா வழிமுறைகளையும் கையாண்டோம்''... *(323)* ...''நாம் பார்க்கத் தவறினோம்''... *(மேலே குறிப்பிட்ட நூலிலிருந்து)*.

* ''...முதலாளித்துவ உற்பத்தி வடிவங்கள் விவசாயிகளின் உடைமைகளைப் பறிப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும் நாம் அவற்றின் வளர்ச்சிக்குத் தடங்கல் செய்யவில்லை'' *(323)*.

துக்குக் கொடுத்துள்ள தற்காலத்தியச் செயற்கையான அமைப்பின் விளைவாகும்... சமுதாய முன்னேற்றத்தின் இயற்கையான ஒழுங்குமுறை மனிதர்களைப் பொருட்களிடமிருந்தோ செல்வத்தை உழைப்பிடமிருந்தோ எவ்விதத்திலும் பிரித்திடும் போக்கில் இருந்ததில்லை; கிராமப்புறங்களில் சொத்துடைமையாளன் உழவனுகவே நீடித்திருக்கமுடிந்தது; நகரங்களில் முதலாளி கைவினைஞனுகவே (artisan) நீடித்திருக்கமுடிந்தது; உழைக்கும் வர்க்கத்தை உழைக்காத வர்க்கத்திடமிருந்து பிரிப்பது சமுதாயத்தின் இருத்தலுக்கோ உற்பத்திக்கோ முற்றிலும் இன்றியமையாததல்ல; எல்லோருடைய உன்னதமான நன்மைக்காகவே அதைப் புகுத்திஞேம்; இந்த நன்மையை உண்மையிலே சாதிப்பதற்கு அதை ஒழுங்கியக்கிவருவது நம்மெல்லோருடைய பொறுப்பாகும் (il nous appartient)'' *(II, 348)*.

''ஒருவர்க்கொருவர் எதிராக நிறுத்தப்பட்டவர்களாய், உற்பத்தியாளர்கள்'' (அதாவது, எஜமானர்களும் தொழிலாளிகளும்) ''சமுதாயத்தின் நலன்களுக்கு நேர் எதிரான பாதையிலே போகும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.... கூலியைக் குறைக்கும் இந்த இடையருத போராட்டத்தில் எல்லோரும் பொதுநலனை — அதில் எல்லோரும் கலந்துகொள்கிறபோதிலும்—மறந்துவிடுகிருர்கள்'' *(II, 359-360)*. இதற்கும் முன்பாக வரலாறு விட்டுச்சென்ற பாதைகள் குறிப்பிடப்படுகின்றன: ''சமுதாய வாழ்க்கையின் தொடக்கத்தில் ஒவ்வொரு மனிதனும் மூலதனம் வைத்திருக்கிருன், அதன் மூலமாகத் தனது உழைப்பைச் செயல்படுத்துகிருன், அநேகமாக எல்லாக் கைவினைஞர்களும் இலாபமும் கூலியும் சமமாக அடங்கியுள்ள வருவாயைக் கொண்டு வாழ்கின்றனர்'' *(II, 359)*.*

---

* ''நமது பழங்கால மரபுகளை உறுதியாகப் பற்றிநிற்பதற்குப் பதிலாக; உற்பத்திச் சாதனங்களுக்கும் நேரடியான உற்பத்தியாளனுக்கும் இடையே நெருக்கமான பிணையல் எனும் கோட்பாட்டை வளர்ப்பதற்குப் பதிலாக... அதன் (**விவசாயிகளின்**) கைகளிலே உற்பத்திச் சாதனங்களைக் குவிப்பதின் மூலம் அதன் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக... அதற்குப் பதிலாக, நேர் எதிரான பாதையில் சென்றிருக்கிருேம்'' *(322-323)*. ''முதலாளித்து

போதும், என்றே தோன்றுகிறது.... ஸிஸ்மொந்தீயை யோ திரு. நி.—னேயோ அறியாத வாசகருக்கு இவ்விரண்டு தன்னுணர்ச்சிவாதிகளின் பார்வை நிலைகளில் (ஒன்று அடிக் குறிப்பிலும் மற்றொன்று நூல்வாசகத்திலும் உள்ளது) எது மற்றதைவிடப் பழைமையானது, வெகுளித்தனமானது என்று சொல்வது கஷ்டமாயிருக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

ஸிஸ்மொந்தீயின் நடைமுறைக்கான யோசனைகள் இதற்கு முற்றும் பொருத்தமாக உள்ளன; "Nouveaux Principes" எனும் தமது நூலில் இந்த யோசனைகளுக்கு நிறைய பக்கங்கள் செலவழித்திருக்கிறார்.

ஸிஸ்மொந்தீ தமது நூலின் முதற் புத்தகத்திலேயே கூறுவதாவது, ''ஆதாம் ஸ்மித் நிராகரித்த அதே அரசாங்கத் தலையீட்டைத்தான் நாம் அநேகமாக எப்போதும் கோரிவருகிறோம்'' (I, 52) என்பதிலேதான் உள்ளது நமக்கும் ஆதாம் ஸ்மித்துக்கும் உள்ள வேற்றுமை, என்று. ''வினியோகத்தை அரசு சரிப்படுத்துகிறதில்லை (I. 80).... ''உலகளாவிய போட்டிக்கு எதிராக ஏழைக்குச் சில உத்தரவாதங்களைச் சட்டமன்றத்தினன் உறுதிசெய்யமுடியும்'' (I, 81). ''உற்பத்தி சமுதாய வருவாயுடன் சம அளவுள்ளதாயிருக்க வேண்டும், இந்த வருவாய் என்ன என்று உறுதிப்படுத்திக் கொள்ளச் சிரமம் எடுத்துக் கொள்ளாமல் வரம்பற்ற உற்பத்தியை ஊக்கிவிடுகிறவர்கள் நாட்டை அழிவுநோக்கித் தள்ளுகிறார்கள்—செல்வத்துக்கான பாதையை (le chemin des richesses) நாட்டுக்குத் திறந்துவிடுவதாக அவர்கள் நினைத்த போதிலுங்கூட'' (I, 82). ''செல்வத்தின் முன்னேற்றம் படிப்படியாய் (gradué) இருக்கும் போது, தன்னோடு தகவுப் பொருத்தமாக இருக்கும்போது, அதன் பகுதிகளில் எதுவும் மிதமிஞ்சிய வேகத்தில் வளராதிருக்கும்போது, அது எல்லோருக்கும் செழிப்பைப் பரவச்செய்கிறது.... இந்த இயக்கத்தை ஒழுங்கியக்கிச் செலுத்துவதற்கு இதைக் கட்டுப்படுத்

வத்தின் வளர்ச்சியை மக்கள் உற்பத்தி முழுமையின் வளர்ச்சியாகத் தவறுகக் கருதினோம்... ஒன்றின் வளர்ச்சி... மற்றொன்றின் நஷ்டத்திலேதான் நடக்கமுடியும் என்கிற உண்மையைப் பார்க்கத்தவறினோம்'' (323). கொட்டையெழுத்தில் போட்டது நாம்.

துவது (ralentir!!) ஒருக்கால் அரசாங்கங்களின் கடமையாக இருக்கலாம்.'' (I, 409-410).

இதே முரண்பாடுகள், தகவுப்பொருத்தக் கேடுகள் மூலமாக சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் வளர்ந்து வருவதின் பிரம்மாண்டமான வரலாற்று முக்கியத்துவத்தைப் பற்றி ஸிஸ்மொந்திக்கு ஒன்றுமே தெரியவில்லை!

''செல்வத்தைத் தேடிச் செல்வதின் மீது அரசாங்கம் ஒழுங்குமுறைப்படுத்தும், மிதப்படுத்தும் செல்வாக்கைச் செலுத்தினால் அது எவ்வளவோ நன்மையாயிருக்க முடியும்'' (I, 413). ''தற்காலத்தில் மக்களால் கண்டிக்கப்பட்டு வரும் சில வர்த்தக ஒழுங்குமுறைக்கான நடவடிக்கைகள் தொழில் துறைக்கு ஊக்கி என்கிற வகையில் கண்டிக்கத் தக்கவையேயாயினும் அவற்றை ஒரு கடிவாளம் என்கிற வகையில் ஒரு வேளை நியாயப்படுத்தலாம்.'' (I, 415).

ஸிஸ்மொந்தியின் இவ்வாதங்கள் திகைப்பூட்டும் அளவுக்கு அவருக்கு வரலாற்று அறிவுணர்ச்சி இல்லாதிருப்பதை ஏற்கனவே வெளிப்படுத்துகின்றன: மத்தியகால ஒழுங்குமுறைப்படுத்தலினின்று விடுதலை பெற்றதே தாம் வாழும் காலப்பகுதியின் முழுமையான வரலாற்றுக் குறிபொருளாகும் என்பதை அவர் அறியவில்லை. தமது வாதங்கள் பழைய ஆட்சிமுறையின் (ancien régime) ஆதரவாளர்களுக்கு ஊக்கமளிப்பதாயிருப்பதையும் அவர் உணரவில்லை—பழைய ஆட்சிமுறையின் ஆதரவாளர்கள் அக்காலத்தில் பிரான்ஸிலேகூட எவ்வளவோ வலுவுடன் இருந்து வந்தார்கள் என்றால் அவர்கள் ஆட்சி புரிந்துவந்த மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.*

---

* ஸிஸ்மொந்தியின் இந்த மனவருத்தங்களிலும் வேட்கைகளிலும் ''சமூகச்சார்பான தைரியத்தை'' எஃப்ருஸி கண்டார் (இதழ் 7, பக்கம் 139). ஆக, உணர்ச்சிவகைப்பட்ட வேட்கைகளை வெளியிடச் சமூகச்சார்பான தைரியம் வேண்டியிருக்கிறதாம்!! உயர்நிலைப் பள்ளிக்குரிய ஏதாவதொரு வரலாற்றுப் பாடப்புத்தகத்தைத் திறந்து பாருங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் காற்பகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் Polizeistaat (போலீஸ் அரசு.—பதிப்பசிரியர்) என்று அரசியல் நிர்ணயச் சட்ட இயல் பெயரிட்டுள்ளதின் வழியிலே அமைக்கப் பெற்றிருந்ததைத்

எனவே, ஸிஸ்மொந்தீயின் நடைமுறைக்கான யோசனைகளின் தொடக்கப்புள்ளி—படியாள் நிலை, கட்டுத்திட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல் என்பதாம்.

ஸிஸ்மொந்தீயின் மொத்தமான கருத்துப்பரப்பிலிருந்து இந்தப் பார்வைநிலை மிக இயல்பாகவும் தவிர்க்கவியலாததாகவும் வெளிப்புறப்படுகிறது. ஐரோப்பா கண்டத்தில் பெருமளவான தொழில்துறை முதல் அடிகள் எடுத்து வைத்து வந்த அதே காலத்தில், இயந்திரங்களின் செல்வாக்கின் கீழ் (இயந்திரத் தொழிலின் செல்வாக்கின் கீழ், பொதுப்படையான ''முதலாளித்துவத்தின்'' கீழ் அல்ல, என்பதைக் கவனிக்க) எல்லாச் சமுதாய உறவுகளும் கூராகவும் திடீரென்றும் மாற்றம் அடையத் தொடங்கிய அதே காலத்தில்*, அவர் வாழ்ந்தார். இந்த மாற்றம் பொருளாதார விஞ்ஞானத்தில் industrial revolution (தொழிற் புரட்சி.—பதிப்பாசிரியர்.) என்று அறியப்பட்டுள்ளது. தந்தையாதிக்கக் காலத்திய, அரை மத்தியகால வகைப்பட்ட, சமுதாயங்களின் இடத்திலே நவீன ஐரோப்பியச் சமுதாயங்களைப் படைத்த புரட்சியின் விரிவாழத்தை முற்றுகப் புரிந்து கொள்ள முடிந்த முதன்முதலான பொருளாதாரவாதிகளில் ஒருவர் அதை எப்படி வர்ணிக்கிறுர் என்று பாருங்கள்:

''சுருங்கச் சொன்னுல், இப்படித்தான் சென்ற அறுபது ஆண்டுகளில்'' (இது 1844-ல் எழுதப்பட்டது)'' ஆங்கிலேயத் தொழில் வளர்ச்சியின் வரலாறு இருக்கிறது, இந்த வரலாற்றுக்கு இணையாக மனிதகுலத்தின் வரலாற்றில்

தெரிந்துகொள்வீர்கள். அந்த நூற்றுண்டின் அந்தக் காற்பகுதிக்கு மட்டுமல்ல, அடுத்துவந்த காற்பகுதிக்குங்கூட அதை எதிர்த்துப் போராடுவதே வரலாற்றுக் கடமையாக இருந்ததையும் தெரிந்துகொள்வீர்கள். அப்பொழுது புரிந்து கொள்வீர்கள்—ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலை முடியரசு மீட்சிக் காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சிறு விவசாயியின் மழுங்கிய அறிவுத் திறம் போல இருக்கிறது என்று, சிறு பூர்ஷ்வா உணர்ச்சிவகைப்பட்ட தன்னுணர்ச்சிவாதம் அளப்பரிய மக்கட்சார்ந்த பக்குவமின்மையுடன் இணைந்துள்ளதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறுர், என்று.

* இங்கிலாந்தில் முதலாளித்துவம் தொடங்கியது பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து அல்ல, அதற்கும் வெகுவாக முற்பட்ட காலப்பகுதியிலிருந்தேயாகும்.

ஏதுமில்லை. அறுபது, எண்பது ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்து மற்றெல்லா நாடுகளைப் போலவே இருந்தது—சிற்றூர்கள், வெகுசில எளிய தொழில்கள், நெருக்கமற்ற ஆனால் தகவுப்பொருத்தத்தில் பெரிதான விவசாய மக்கள்தொகை, என்று கொண்டு. இன்று அது போல் வேறெந்த நாடும் இல்லை; அதன் தலைநகரில் 25 லட்சம் மக்கள் உள்ளனர்; அதில் மாபெரும் தொழிற்சாலை நகரங்கள் உள்ளன; அதன் தொழில் துறை உலகத்துக்குப் பண்டங்கள் அனுப்புகிறது, மிகவும் நுட்பச் சிக்கலான இயந்திரவகைகளைக் கொண்டு அநேகமாக அனைத்தையும் உற்பத்தி செய்கிறது; சுறுசுறுப்பும் அறிவும் உள்ள அடர்த்தியான மக்கள்தொகை உண்டு, அதில் மூன்றில் இரண்டு பேர் வீதாச்சாரத்தில் தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளனர், அதில் முற்றிலும் வேறுபட்ட வர்க்கங்கள் அமைந்துள்ளன; உண்மையிலே, பிற வழக்கங்களும் பிற தேவைகளும் வைத்திருப்பதைப் பார்த்தால் அந்தக் காலத்து இங்கிலாந்திலிருந்து வேறுபட்ட நாடாக அமைந்துள்ளது. அரசியல் புரட்சி பிரான்ஸுக்கு எவ்வளவு முக்கியமோ, மெய்யறிவுப் புரட்சி ஜெர்மனிக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்குத் தொழிற்புரட்சி இங்கிலாந்துக்கு முக்கியம்; மேலும், 1760-லிருந்த இங்கிலாந்துக்கும் 1844-லிருக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள வேற்றுமை பழைய ஆட்சிமுறையின் கீழிருந்த பிரான்ஸுக்கும் ஜூலைப்புரட்சியின்போது இருந்த பிரான்ஸுக்கும் இருந்த வேற்றுமை போல் குறைந்தபட்சம் அவ்வளவு பெரிதாக இருக்கிறது''*.

சிறு உற்பத்தியைப் பொருளாதார அடிப்படையாகக் கொண்டிருந்த எல்லாப் பழைய, ஆழவேர்விட்டிருந்த உறவு முறைகளின் முழுமையான ''முறிவு'' இது. பிற்போக்கான, சிறுபூர்ஷ்வா பார்வைநிலை கொண்டிருந்த ஸிஸ்மொந்தீ இந்த ''முறிவின்'' குறிபொருளைப் புரிந்துகொள்ள முடியாமற்போனது இயல்புதான். இந்த ''முறிவு'' தடுத்து நிறுத்தப்படவேண்டும்''** என்று அவர் எல்லாவற்றிற்கும் முத

---

* எங்கெல்ஸ்: "Die Lage der arbeitenden Klasse in England" எனும் நூல்.

** இந்தச் சொல்லை திரு. நி.—ன் இடமிருந்து (பக்கம் 345) நாம் இரவல் வாங்கியதற்கு அவர் கோபிக்கமாட்டார் என்று நம்பத் துணிகிறோம். அந்தச் சொல் மிகவும் பொருத்தமாகவும் தன்மைக்குறிப்புள்ளதாகவும் உள்ளது.

னிலையாகவும் மேலாகவும் விரும்பினுர், வற்புறுத்தினுர், கெஞ்சினுர், கோரினுர் என்பதும் இயல்புதான்.

ஆனுல் எப்படி இந்த ''முறிவைத் தடுத்து நிறுத்துவது''? முதலில், மக்களின்... அதாவது, ''தந்தையாட்சிக்காலத்திய உற்பத்தியையும்'', விவசாயிகளேயும், பொதுவாகவே சிறு சாகுபடிமுறையையும் ஆதரிப்பதின் மூலமாக. ''போட்டியின் பின்வளேவுகளிலிருந்து மக்களே அரசாங்கம் எப்படிப் பாதுகாக்கவேண்டும்'' எனும் விஷயத்துக்கு ஸிஸ்மொந்தீ முற்ருக ஓர் அத்தியாயத்தைச் செலவழிக்கிருர் (தொகை II, I. VII, அத்தியாயம் VIII).

''விவசாய மக்களேப் பொறுத்த வரை, உழைக்கிறவர்களுக்குச் (à ceux qui travaillent) சொத்தின் ஒரு பகுதியை உத்தரவாதம் செய்வது, அல்லது மற்றெல்லா வகைப்பட்டவற்றையும் விடத் தந்தையாதிக்கால முறையிலுள்ள விவசாயம் என்று நாம் அழைக்கிற விவசாயத்துக்கு ஆதரவு அளிப்பது (favoriser) அரசாங்கத்தின் பொதுக் கடமையாகும்'' (II, 340).

''எலிஸபெத் இராணியின் ஒரு சட்டம் ஒவ்வொரு மனேக்கும் (cottage) நான்கு ஏகரா நிலம் ஒதுக்கப்பட்டாலொழிய மனேகள் கட்டக்கூடாது என்று தடை செய்தது, இந்தச் சட்டம் புறக்கணிக்கப்பட்டது. இந்தச் சட்டத்துக்குப் பணிந்து நடந்திருந்தால் நாட்கூலியாள் எவனும் ஒரு cottage பெருமல் திருமணம் செய்திருக்கமுடியாது, எவனும் cottager* கொடிய வறுமையில் தள்ளப்பட்டிருக்க மாட்டான். இது ஒரு முன்னேற்றப்படியாக இருந்திருக்கும் (c'est quelque chose), என்ருலும் இது மட்டும் போதியதாயிருந்திராது; இங்கிலாந்தின் வெப்பதட்ப நிலேயில் ஒரு குடும்பத்துக்கு நான்கு ஏகரா எனும் முறையில் விவசாயி மக்கள் வறுமையிலே வாழ்ந்திருப்பார்கள். இன்று, மிகப்பெரும்பான்மையான ஆங்கிலேய மனேக்காரர்கள் ஒன்றரை ஏகரா அல்லது இரண்டு ஏகரா நிலந்தான் வைத்திருக்கிருர்கள், ஓரளவுக்கு உயர்வான வாடகையும் கொடுக்கிருர்கள்.... நிலச்சுவான்தார் தமது நிலத்தைப் பல cottagers இடையே வினியோகிக்கும்போது ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கைக்குப் போதிய நிலம் கொடுக்கு

---

* மனேக்காரன். (—பதிப்பாசிரியர்.)

மாறு நிலச்சுவான்தாரை... சட்டம் நிர்ப்பந்திக்கவேண்டும்'' (II, 342-343).*

தன்னுணர்ச்சிவாதத்தின் யோசனைகள் நரோத்னிக்குகளின் யோசனைகளுடனும் வேலைத்திட்டத்துடனும் முற்

---

* ''நமது பழங்கால மரபுகளைப் பற்றி நிற்கவேண்டும்''; (இது நாட்டுப்பற்று அல்லவா?) ''உற்பத்திச் சாதனங்களுக்கும் நேரடியான உற்பத்தியாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு எனும் நாம் மரபுவழியாகப் பெற்ற நமது கோட்பாட்டை வளர்க்கவேண்டும்''... (திரு. நி.—ன், 322). ''பன்னூற்றுண்டுகளாக நாம் பின்பற்றி நடந்திருக்கும் பாதையை விட்டுத் திரும்பிவிட்டோம்; நேரடியான உற்பத்தியாளனுக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு, விவசாயத்துக்கும் பட்டறைத் தொழில் துறைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு எனும் அடிப்படையில் அமைந்த உற்பத்தியை நீக்கிவிடத் தொடங்கிவிட்டோம், முதலாளித்துவ உற்பத்தியை வளர்ப்பது எனும் கோட்பாட்டை நமது பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படையாக்கிக் கொண்டோம். முதலாளித்துவ உற்பத்தி உற்பத்திச் சாதனங்களை நேரடியான உற்பத்தியாளர்களிடமிருந்து அகற்றுவதை—அதையொட்டி வருகிற எல்லாப் பேரிழப்புகளுடன்கூட—அடிப்படையாகக் கொண்டது, இந்தப் பேரிழப்புகளை இன்று மேற்கு ஐரோப்பா அனுபவித்துக் கொண்டிருக்கிறது'' (281). ''மேற்கு ஐரோப்பா அனுபவித்துக் கொண்டிருக்கும் பேரிழப்புகள்'' முதலியவை குறித்து மேற்கு ஐரோப்பியர்களின் மேலே மேற்கோள் காட்டிய கருத்துடன் இதை வாசகர் ஒப்புநோக்கட்டும். ''விவசாயிகளுக்கு நிலம் ஒதுக்குவது அல்லது... உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திக் கருவிகள் கொடுப்பது...எனும் கோட்பாடு'' (பக்கம் 2) ...''மக்கள் வாழ்க்கையின் பழங்கால அடிப்படைகள்'' (75).... ''எனவே, இந்தப் புள்ளிவிபரங்களில்'' (அதாவது, ''இன்றையப் பொருளாதார நிலைமைகளின் கீழ் கிராமப்புறத்து மக்களின் பொருளாயதப் பந்தோபஸ்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான குறைந்தபட்ச நில அளவை'' காட்டும் புள்ளிவிபரங்கள்) ''பொருளாதாரப் பிரச்சினையின் தீர்வுக்குரிய அம்சங்களில் ஒன்று நமக்கு இருக்கிறது, ஆனல் அந்த அம்சங்களில் ஒன்றே ஒன்றுதான்'' (65) ஆக, மக்கள் உற்பத்திக்குப் ''பழங்கால மரபுகளில்'' ''ஒப்புதலாணை'' தேடுவதில் மேற்கு ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதிகளுக்கு இருக்கும் விருப்பம் ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதிகளுக்கு இருக்கிறதைவிட குறைந்ததல்ல என்று பார்க்கிறோம்.

றெருமைப்பட்டிருப்பதை வாசகர் காண்பார்; அசல் பொருளாதார வளர்ச்சியைப் புறக்கணிப்பது, மற்றும் பெருமளவான இயந்திரத் தொழிலும், கடுமையான போட்டியும், நலன்கள் பற்றிய சச்சரவும் கொண்டுள்ள சகாப்தத்தில் மிகப்பழங்காலத்தின் தந்தையாதிக்கமுறையிலான நிலைமைகளை முட்டாள்தனமாக உயிர்ப்பிக்க முயல்வது இவ்விரண்டையும் அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

V

தன்னுணர்ச்சிவாதத்தின் பிற்போக்கான தன்மை

அசல் வளர்ச்சி எப்படி நடந்தேறிவருகிறது என்பதை ஸிஸ்மொந்தீ உணராமல் இருக்கமுடியவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். எனவே, ''சிறு சாகுபடிமுறைக்கு ஊக்கமளிக்க'' அவர் கோரியதில் (II, 355) ''இன்று இங்கிலாந்தில் விவசாயம் பின்பற்றிவரும் பாதைக்கு நேரெதிரான பாதையிலே விவசாயத்தைச் செலுத்துவது'' அவசியம் என்று பட்டவர்த்தனமாகக் கூறினர். (II, 354-355).*

''நல்லவேளையாக, இக்கிலாந்து தனது மிகப்பெரிய பொதுச்சமூக நிலங்களை (ses immenses communaux) கிராம ஏழைகளிடையே பிரித்தளிப்பதின் வழியாக அவர்களுக்கு நிறையச் செய்வதற்குரிய வழிதுறைகள் பெற்றிருக்கிறது.... அதன் பொதுச்சமூக நிலங்கள் இருபது, முப்பது ஏகரா கொண்ட இலவசமான பாத்தீடுகளாகப் (en propriétés franches) பிரித்தளிக்கப்பட்டால் அவர்கள்'' (ஆங்கிலேயர்கள்) ''இன்று வருந்துகிறார்களே அநேகமாக முற்றிலும் அழிந்துபோய்விட்டதே என்று, அந்த அழிந்துபட்ட yeomanry** எனும் கிராமவாசிகளின் பெருமையும் சுதந்திரமும் கொண்ட வர்க்கம் மறுவுயிர்ப்பெய்துவதைக் காண்பார்கள்'' (II, 357-358).

---

* ஒப்புநோக்குக: ''வரலாற்றை மற்றொரு பாதையில் இழுத்துச் செல்வதற்கு'' திரு. வி. வி.-யின் நரோத்னிக்கு வேலைத்திட்டம். ஒப்புநோக்குக: வோல்கின், மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 181.

** வீரவேளான் படை.—(பதிப்பாசிரியர்.)

தன்னுணர்ச்சிவாதத்தின் ''திட்டங்கள்'' சுளுவாக நடைமுறையில் சாதிக்கத்தக்கவை என்று சித்திரிக்கப்படுகின்றன —அவை யதார்த்த நலன்களைப் புறக்கணிக்கிற அதே காரணத்தால் இதுவே தன்னுணர்ச்சிவாதத்தின் சாராம்சமாகும். ''இப்படிப்பட்ட யோசனை'' (சிறுசிறு நிலப்பகுதிகளை நாட்கூலியாட்களுக்கு ஒதுக்கீடு செய்து அவர்களைப் பாதுகாத்து வரும் கடமையை நிலச்சுவான்தார்கள் மீது சுமத்துவது) ''இன்று இங்கிலாந்தில் தாங்கள் மட்டுமே சட்டமியற்றும் அதிகாரம் பெற்றவர்களாக இருக்கும் பெரிய நிலச்சுவான்தார்களின் சீற்றத்தைப் பெரும்பாலும் கிளப்பிவிடலாம்; இருந்தாலும், அது நியாயமானது.... பெரிய நிலச்சுவான்தார்களுக்கு மட்டுமே நாட்கூலியாட்களின் ஊழியம் தேவைப்படுகிறது; அவர்கள்தான் இவர்களைப் படைத்தார்கள்—எனவே, அவர்களே இவர்களைப் பேணி வரட்டும்'' (II, 357).

இந்நூற்றுண்டின் துவக்கத்தில் எழுதப்பட்ட இப்படிப்பட்ட வெகுளித்தனமான விஷயங்களைப் படிப்பதில் வியப்பில்லை: தன்னுணர்ச்சிவாதத்தின் ''தத்துவம்'' பொதுவாக முதலாளித்துவத்தின் ஆதிநிலையோடு பொருந்துகிறது; முதலாளித்துவத்தின் ஆதிநிலையே இப்படிப்பட்ட ஆதிப் பார்வைநிலையை வரையறைப்படுத்தியது. அந்தக் காலத்தில் முதலாளித்துவத்தின் அசல் வளர்ச்சிக்கும்—அதைப் பற்றிய தத்துவார்த்தக் கருத்தோட்டத்துக்கும்—முதலாளித்துவத்தைப் பற்றிய கண்ணோட்டத்துக்கும் இடையே இன்னமும் ஒத்தியல்பு இருந்தது; எப்படியிருந்தபோதிலும் சரி, ஸிஸ்மொந்தீ முன்பின் முரணில்லாத, தன்னுள் உண்மையான எழுத்தாளராகத் தோற்றமளிக்கிறார்.

ஸிஸ்மொந்தீ சொல்கிறார்: ''கில்டுகளும் கார்பரேஷன்களும் (des jurandes et des maîtrises) நிறுவப்பட்டதிலே ஒரு காலத்தில் இந்த வர்க்கம்'' (அதாவது, கைவினைஞர்களின் வர்க்கம்) ''பாதுகாப்பு பெற்றதை ஏற்கனவே காட்டியிருக்கிறோம்.... அவர்களின் விநோதமான, கட்டுத்திட்டமுள்ள அமைப்பை திரும்பவும் அமைக்க வேண்டும் என்று நாம் யோசனை வைக்கவில்லை.... ஆனால், தொழில்துறை உழைப்பின் சன்மானத்தை உயர்த்தும் குறிக்கோளை, தொழிலில் வேலைசெய்துவருகிறவர்களின் நிலையற்ற (précaire) வாழ்க்

கை நிலைமைகளிலிருந்து அவர்களைக் கரையேற்றி விடும் குறிக்கோளை, இறுதியாக அந்தஸ்து* (un état) என்று சொல்லப்படுவதை அவர்கள் பெறுவதைச் சுளுவாக்கும் குறிக்கோளை, சட்டமன்றத்தினன் வைத்துக்கொள்ளவேண்டும்... இன்று தொழிலாளிகள் தொழிலாளிகளாகவே பிறந்து தொழிலாளிகளாகவே இறக்கிறார்கள், ஆனால் முன்பு தொழிலாளி எனும் அந்தஸ்து மேலும் உயர்வான ஓர் அந்தஸ்துக்குப் பூர்வாங்கமான கட்டமாக, முதற்படியாக மட்டுமே இருந்தது. முன்னேறுவதற்கான இந்தத் திறத்தைத்தான் (cette faculté progressive) திருப்பிக்கொடுப்பது முக்கியம். தமது தொழிலாளிகளை மேலும் உயர்வான அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு முதலாளிகளுக்கு ஊக்கி அளிக்கவேண்டும்; ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு வரும் நபர் வெறுமே கூலிக்கு வேலை செய்வதிலிருந்து அசலில் தொடங்க வேண்டும், ஆனால் அவனுடைய நடத்தை நன்றாக இருக்குமேயானால் அந்தத் தொழிலமைப்பின் இலாபங்களில் பங்கு பெறலாம் எனும் நம்பிக்கை அவனுக்கு எப்போதும் இருக்கும்படியாக ஏற்பாடு செய்ய முதலாளிகளுக்கு ஊக்கி அளிக்க வேண்டும்'' (II, 344-345).

இதைவிட எடுப்பாகச் சிறுபூர்ஷ்வாக் கருத்துநிலையை வெளியிடுவது கஷ்டமாயிருக்கும்! கில்டுகள் ஸிஸ்மொந்தீயின் இலட்சியம்; அவற்றைத் திரும்பக் கொணர்வது விரும்பத்தக்கதல்ல என்று அவர் வில்லங்கம் வைப்பதின் பொருள் கில்டுகள் பற்றிய கோட்பாடும் கருத்தும் எடுத்துக்கொண்டு அதன் கொடிய மத்தியகால முனைப்புக்கூறுகளைத் தள்ளிவிடவேண்டும் என்பது மட்டுமே என்பது வெளிப்படை; (இது, கிராமச் சமூகம் பற்றிய கோட்பாடு, கருத்து மட்டுமே எடுத்துகொள்ளவேண்டும், கிராமச் சமூகம் என்று அழைக்கப்படும் நம் காலத்திய வருமானத்துறைச் சங்கம் வேண்டியதில்லை என்று நரோத்னிக்குகள் விரும்புவது போலத்தான் உள்ளது.) ஸிஸ்மொந்தீ திட்டத்தின் அபத்தம் அவர் கில்டுகளை மொத்தமாகத் தாங்கிவாதிடுகிறார் என்பதல்ல, அவற்றை முழுமையாகத் திருப்பியமைக்க விரும்புகிறார் என்பதும் அல்ல—அந்த வேலையில் அவர் இறங்க

* கொட்டையெழுத்தில் போட்டது ஆசிரியர்.

வில்லே. அதன் அபத்தம் எதில் உள்ளது என்ருல், உள்ளூர் கைவினைஞர்களுக்கு அமைப்பு வேண்டும் என்கிற குறுகிய, ஆதிநிலைத் தேவையிலிருந்து தோன்றிய ஒரு சங்கத்தை அவர் தமது முன்மாதிரியாகக் கொண்டு இந்த அளவுகோலே, இந்த முன்மாதிரியை, முதலாளித்துவச் சமுதாயத்தோடு பொருத்திச் செயல்படுத்த விரும்பியதுதான்; இந்த முதலாளித்துவச் சமுதாயத்தின் அமைப்புத்திறமுள்ள, சமுதாயமயமாக்கும் அம்சம் பெருமளவான இயந்திரத் தொழில், அது மத்தியகாலத் தடைகளை நொறுக்கித்தள்ளி இடம், தோற்றம், தொழில்முறை சம்பந்தப்பட்ட வேற்றுமைகளை அழித்துவிடுகிறது. ஏதாவது ஒரு வடிவத்தில் சங்கம் வேண்டும், பொதுவாக அமைப்பு வேண்டும் என்கிற தேவையை உணர்ந்து தன்னுணர்ச்சிவாதி தனக்கு முன்மாதிரியாகத் தந்தையாதிக்கக் காலத்திய அசைவற்ற சமுதாயத்தின் அமைப்புக்குரிய குறுகிய தேவையை நிறைவாக்கிய சங்கத்தை எடுத்துக்கொண்டு அதை முற்ருக உருமாற்றம் பெற்றுவிட்ட ஒரு சமுதாயத்தோடு பொருத்திச் செயல்படுத்த விரும்புகிருன்—இந்தச் சமுதாயம் அசைவுள்ள மக்களைக் கொண்டுள்ளது, அதன் உழைப்பு ஒரு கிராமச் சமூகத்தின் அல்லது ஒரு கார்பரேஷனின் வரம்புக்குள் சமுதாயமயமாக்கப்பட்டதல்ல, முழுமையாக ஒரு நாட்டின் வரம்புக்குள், ஒரு நாட்டின் வரம்புக்கு அப்பாற்பட்டுங்கூட, சமுதாயமயமாக்கப்பட்டதாகும்.*

---

* இதே போன்ற தவற்றை நரோத்னிக்குகள் மற்ருெரு சங்கத்தின் (கிராமச் சமூகத்தின்) விஷயத்தில் செய்கிருர்கள்; விளை நிலம், மேய்ச்சல் நிலம் முதலானவற்றிலுள்ள கூட்டுடைமையால் (ஆனுல் முக்கியமாக நிலப்பிரபுக்களின், அதிகாரவர்க்கத்தினரின் கூட்டாட்சியால்) ஒருவரோடொருவர் பிணைக்கப்பட்டுள்ள உள்ளூர் விவசாயிகளின் அமைப்புக்கான குறுகிய தேவையை இது நிறைவாக்கியது, ஆனுல் உள்ளூர் வகைப்பட்ட, சமுதாயப்படிநிலை வகைப்பட்ட, இன்னேரன்ன பிற தடைகளை உடைத்தெறிந்து கிராமச் சமூகத்தின் உள்ளே நலன்கள் பற்றிய ஆழ்ந்த பொருளாதாரப் பகைமையைப் புகுத்தும் பண்டப் பொருளாதாரத்தின், முதலாளித்துவத்தின் தேவைகளை இது எவ்வகையிலும் நிறைவாக்குவதில்லை. சங்கத்துக்கான, அமைப்புக்கான தேவை முதலாளித்துவச் சமுதாயத்தில் குறைந்துவிடவில்லை; மாருக, அளவிடற்கரிய முறையில் வளர்ந்திருக்கிறது. ஆனுல்

இந்தத் தவறுதான் தன்னுணர்ச்சிவாதிக்கு பிற்போக்காளர் எனும் பெயரை நியாயமாகவே சம்பாதித்துக் கொடுக்கிறது; வெறுமே மத்தியகால அமைப்புகளைத் திரும்பக் கொணரும் விருப்பத்தைக் குறிப்பதற்காக இந்தச் சொல் பயன்படுத்தப்படவில்லை; புதிய சமுதாயத்தைப் பழைய தந்தையாதிக்கக்கால அளவுகோலைக் கொண்டு அளக்கும் முயற்சியையும் பழைய அமைப்புமுறையிலும் மரபுகளிலும் ஒரு முன்மாதிரியைத் தேடிக்கொள்ளும் விருப்பத்தையும்—இவை மாறுபட்ட பொருளாதார நிலைமைகளுக்கு முற்றிலும் பொருந்தாதவையாகும்—குறிப்பதற்காக இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

எஃப்ரூஸி இந்த விஷயத்தைக் கொஞ்சமேனும் புரிந்து கொள்ளவில்லை. ஸிஸ்மொந்தீயின் தத்துவம் பிற்போக்கானது எனும் பண்புரையை அவர் கொச்சையான, விஞ்ஞானக் கேடான பொருளில் புரிந்துகொண்டார். எஃப்ரூஸிக்குத் திகைப்பு வந்துவிட்டது.... நீங்கள் சொல்வதின் பொருள் என்ன? ஸிஸ்மொந்தீ கில்டுகளைத் திரும்பக் கொணர விரும்பவில்லை என்று பட்டவர்த்தனமாகச் சொல்கிருரே, அவரை எப்படிப் பிற்போக்காளர் என்று கூறமுடியும்?—என்று வாதித்தார். ''பின்னேக்கிப்போகும் போக்குள்ளவராக'' ஸிஸ்மொந்தீயைக் ''குற்றஞ் சாட்டுவது'' நேர்மையல்ல என்றும், மாருக ''கில்டு அமைப்பு சம்பந்தமாக'' ஸிஸ்மொந்தீயின்

புதிய சமுதாயத்தின் இந்தத் தேவையை நிறைவாக்குவதற்குப் பழைய அளவுகோலைப் பயன்படுத்துவது சுத்த அபத்தமாகும். புதிய சமுதாயம் ஏற்கனவே கோருகிறதாவது: முதலாவதாக, உள்ளூர்வகைப்பட்டதாகவோ, சமுதாயப் படிநிலை வகைப்பட்டதாகவோ, அப்படிப்பட்ட வேறெந்த வகையினப்படியோ சங்கம் இருக்கக்கூடாது; இரண்டாவதாக, முதலாளித்துவத்தாலும் விவசாயிகளிடையேயுள்ள வேற்றுமைப்படுத்தலாலும் அந்தஸ்திலும் நலங்களிலும் படைக்கப்பட்ட வேற்றுமையே அதன் தொடக்கப்புள்ளியாக இருக்கவேண்டும், என்று. மறுபக்கத்தில், பொருளாதார அந்தஸ்திலும் நலங்களிலும் ஒருவரிடமிருந்தொருவர் தீவிரமாக வேறுபடுகிற விவசாயிகளை இணைக்கிற உள்ளூர் வகைப்பட்ட, சமுதாயப்படிநிலை வகைப்பட்ட சங்கம் தனது கட்டாயப்படுத்தும் இயல்பின் காரணமாக இன்று விவசாயிகளுக்கே தீங்காகவும் மொத்தத்தில் சமுதாய வளர்ச்சிக்கும் தீங்காகவும் ஆகிறது.

கண்ணேட்டம்''சரியானது''என்றும்அவர்''அதன் வரலாற்று வகைப்பட்ட முக்கியத்துவத்தை முற்றுக உணர்ந்திருந் தார்'' என்றும் (இதழ் 7, பக்கம் 147)—கில்டு அமைப்பின் நல்ல அம்சங்களைப் பற்றி இன்னின்ன பேராசிரியர்கள் நடத் திய வரலாற்ருராய்ச்சிகள் இதை மெய்ப்பித்துள்ளன என்று எஃப்ருஸி முடிவு செய்தார்.

அரைகுறையான விஞ்ஞான எழுத்தாளர்கள் தனி மரங் களைப் பார்க்கிறபோது மொத்தமாகக் காட்டைப் பார்க்கா மல் விடுகிற ஒரு திறமை அடிக்கடி பெற்றுவிடுகிருர்கள்! கில்டுகளைப் பற்றிய ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலை தன் மைக்குறிப்புள்ளதாகவும் முக்கியமாகவும் இருக்கக் காரண மே அவர் தமது நடைமுறைக்கான யோசனைகளை அவற் றுடன் இணைப்பதுதான்.* எனவேதான் அவரது தத்துவம் பிற்போக்கானது என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனுல் எஃப் ருஸி கில்டுகளைப் பற்றிய நவீனகால வரலாற்று நூல்களைப் பற்றிக் காரணமொன்றுமில்லாமல் பேசத் தொடங்குகிருர்!

பொருத்தமற்ற அரைகுறை விஞ்ஞான வகைப்பட்ட இந்த வாதங்களின் விளைவாக, பிரச்சினையின் உட்சத்தையே —அதாவது, ஸிஸ்மொந்தீயின் தத்துவத்தைப் பிற்போக் கானதாக வர்ணிப்பது நேர்மையா இல்லையா என்பதையே — எஃப்ருஸி தட்டிக்கழித்துவிட்டார். எது மிக முக்கியமோ அதையே—ஸிஸ்மொந்தீயின் பார்வை நிலையையே—அவர் பார்க்கத் தவறினுர். ஸிஸ்மொந்தீ சொல்கிருர்: ''அரசியல் பொருளாதாரத்தில் நான் சமுதாய முன்னேற்றத்துக்குப் பகைவன் என்றும், அநாகரிகமான நிர்ப்பந்த முறையிலான அமைப்புகளின் ஆதரவாளன் என்றும் குற்றஞ்சாட்டப்பட் டிருக்கிறேன். இல்லை, ஏற்கனவே இருந்து மறைந்ததை நான் விரும்பவில்லை, இன்றிருப்பதைவிட மேலானதையே நான் விரும்புகிறேன். சென்ற காலத்தோடு ஒப்பிடாமல் நிகழ் காலத்தைப்பற்றி நான் தீர்ப்புக்கூறமுடியாது, சமுதாயத்தின் நிரந்தரத் தேவைகளை நிதர்சனப்படுத்துவதற்காகப் பழைய

---

* மேலே பார்க்க: கில்டுகளைப் பற்றிய வாதங்களை நாம் மேற்கோள் காட்டிய அத்தியாயத்தின் தலைப்பையாவது குறைந்தபட்சம் பார்க்க (எஃப்ருஸியும் இவற்றை மேற் கோள் காட்டியுள்ளார்: பக்கம் 147).

அழிவுக்குவியல்களைக் குறிப்பிடுகிறபோது அவற்றைத் திரும்பக்கொணரவேண்டும் என்பதல்ல எனது விருப்பம்'' (II, 433). தன்னுணர்ச்சிவாதிகளின் விருப்பங்கள் (நரோத்னிக்குகளின் விருப்பங்களைப் போலவே) மிகவும் நல்லவைதாம். முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அவர்கள் அங்கீகரித்திருப்பது அந்த முரண்பாடுகள் இருப்பதை மறுக்கும் குருட்டுத்தனமான நம்பிக்கையாளர்களுக்கு மேலாக அவர்களை வைக்கிறது. மேலும், மத்தியகாலத்துக்குத் திரும்பிப்போக விரும்பினார் என்பதற்காக அவர் பிற்போக்காளராகக் கருதப்படவில்லை; தமது நடைமுறைக்கான யோசனைகளில் அவர் எதிர்காலத்தோடு ஒப்பிடாமல் ''நிகழ்காலத்தைச் சென்ற காலத்தோடு ஒப்பிட்டார்'' என்பதற்காகத்தான், நவீனகால வளர்ச்சியின் போக்குகளைக் குறிப்பிடாமல் ''அழிவுக்குவியல்களை''க் குறிப்பிட்டு ''சமுதாயத்தின் நிரந்தரத் தேவைகளை நிதர்சனப்படுத்தினார்''* என்பதற்காகத்தான். ஸிஸ்மொந்தீயின் இந்தச் சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலைதான் அவரை மற்ற ஆசிரியர்களிடமிருந்து—அவர்களும் அவர் வாழ்ந்த காலத்திலும் அதற்குப் பின்பும் ''சமுதாயத்தின் நிரந்தரத் தேவைகளை'' நிதர்சனப்படுத்தினர்—சிறப்பாக வேறுபடுத்திக் காட்டுகிறது; இந்த சிறுபூர்ஷ்வாப் பார்வைநிலையையே எஃப்ரூஸி புரிந்துகொள்ளத் தவறினார்.

எஃப்ரூஸியின் இந்தத் தவற்றுக்குக் காரணம், ''சிறு பூர்ஷ்வா''ச் சித்தாந்தம், ''பிற்போக்கான'' சித்தாந்தம் எனும் சொற்களுக்குக் கொடுக்கப்படும் குறுகிய வியாக்கியானம் தான், இதை முன்குறிப்பிட்ட முதற்சொல் சம்பந்தமாக ஏற்கனவே குறிப்பிட்டோம். சிறு கடைக்காரரின் தன்னலமிக்க பேராசையையோ, சமுதாய வளர்ச்சியை நிறுத்திவிடவேண்டும் பின்னோக்கிப் போய்விடவேண்டும் எனும் விருப்பத்தையோ இச்சொற்கள் உட்கிடையாகக் கொண்டிருக்கவில்லை: சம்பந்தப்பட்ட ஆசிரியரின் தவறான பார்வைநிலையை, அவருடைய வரம்புக்குறுக்கமுள்ள அறி

---

* மீண்டும் சொல்கிறோம்: இந்தத் தேவைகள் இருப்பதை அவர் நிதர்சனப்படுத்தினார் என்கிற விஷயம், குறுகிய மனப்பான்மையுள்ள பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகளைவிட அவர் எவ்வளவோ மேல் என்று வைத்துக்காட்டியது.

வை, குறுகிய கண்ணேட்டத்தை, அவை வெறுமே குறிக் கின்றன; இவை நடைமுறையில் பயன்திறமுள்ளவையாக இருக்கமுடியாத வழிமுறைகளை (மிகவும் நேர்த்தியான குறிக் கோளைச் சாதிப்பதற்கான வழிமுறைகளை) தேர்ந்துகொள் ளத் தூண்டுகின்றன, சிறு உற்பத்தியாளனை மட்டுமே திருப் திப்படுத்தக்கூடிய அல்லது பழங்காலத்தைத் தாங்குகிறவர் களுக்குப் பயனளிக்கக்கூடிய வழிமுறைகளைத் தேர்ந்துகொள் ளத் தூண்டுகின்றன. எடுத்துக்காட்டாக, ஸிஸ்மொந்தீ சிறு சொத்துடைமையை வெறித்தனமாக ஆதரித்துப் பேசுகிற வர் அல்ல. நம் காலத்தைச் சேர்ந்த நரோத்னிக்குகள் போல வே அவர் அமைப்புக்கான தேவையை, சங்கத்துக்கான தே வையைப் புரிந்துகொண்டிருக்கிருர். தொழில் நிறுவனங் களின் ''இலாபங்களில் பாதி'' ''கூடியுழைக்கும் தொழிலாளி களிடையே வினியோகிக்கப்பட'' வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவிக்கிருர் (II, 346). ''உற்பத்தியின் எல்லாச் சாதனைகளும் அதில் ஈடுபட்டுள்ளவனுக்கு நன்மையளிக்கக் கூடியதாயுள்ள'' ஒரு ''சங்கத்துக்கான அமைப்புமுறையை'' அவர் வெளிப்படையாக ஆதரித்துப்பேசுகிருர் (II, 438). தமது சித்தாந்தத்துக்கும் அன்று நன்கறியப்பட்டிருந்த ஓவன், ஃபூரியே, தாம்ப்ஸன், முய்ரோன் ஆகியோரின் சித் தாந்தங்களுக்கும் உள்ள உறவு குறித்து அவர் பேசுகையில் ஸிஸ்மொந்தீ கூறுகிருர்: ''ஒன்ருகக்கூடி ஒரு குறிப்பிட்ட சாமானை உற்பத்திசெய்கிறவர்களிடையே பரஸ்பர எதிர்ப் புக்குப் பதிலாக சங்கம் இருக்கக் காணவே நானும் அவர்கள் மாதிரியே விரும்புகிறேன். ஆனுல் இந்தக் குறிக்கோளைச் சாதிப்பதற்கு அவர்கள் முன்மொழியும் வழிமுறை அதை நோக்கி என்றைக்கும் கொண்டுபோய்விட முடியும் என்று நான் நினைக்கவில்லை'' என்று (II, 365).

ஸிஸ்மொந்தீக்கும் இந்த ஆசிரியர்களுக்கும் உள்ள வேற் றுமை பார்வைநிலை பற்றிய வேற்றுமையே யாகும். எனவே, இந்தப் பார்வைநிலையைப் புரிந்துகொள்ளாத எஃப்ருஸி இந்த ஆசிரியர்கள்பால் ஸிஸ்மொந்தீ கொண்டுள்ள கண் ணேட்டத்தை முற்ருகத் திரித்து வியாக்கியானப்படுத்துவது இயல்புதான்.

'' 'ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ', இதழ் 8, பக்கம் 57-ல் நாம் படிக்கிறதாவது: ''ஸிஸ்மொந்தீ தம் காலத்த

வர்கள் மீது மிகக்குறைவாகவே செல்வாக்குச் செலுத்தினார், அவர் முன்மொழிந்த சமுதாயச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமலே விடப்பட்டன என்பதற்கு முக்கியமான காரணம் அவர் தம் காலத்தை விட்டு வெகு தொலைவுக்கு முன்னே போயிருந்ததுதான். முதலாளி வர்க்கம் தனது தேனிலாவை அனுபவித்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் எழுதினார்... இந்நிலைமைகளில், சமுதாயச் சீர்திருத்தங்களைக் கோருகிற ஒருவருடைய குரல் வெற்று வெளியிலே கூக்குரல் எழுப்பும் குரலாக இருந்துவிட்டது இயல்புதான். ஆனால் பின்வந்த சந்ததியினரும் அவரை அதற்கு மேலாக நடத்தவில்லை என்பதை நாமறிவோம். ஒரு வேளை இதற்குக் காரணம், நாம் ஏற்கனவே கூறியவாறு, மாற்றத்துக்குரிய இடைக் காலத்திலே எழுதிய ஆசிரியராக ஸிஸ்மொந்தீ இருந்துவிட்டதுதான்; அவர் பெரும் மாற்றங்களை விரும்பியபோதிலும் பழங்காலத்தை அவரால் முற்றாகத் தள்ளிவிட முடியவில்லை. எனவே, அவர் மிகவும் தீவிரவாதியாக இருப்பதாக மிதப் போக்குள்ளவர்கள் கருதினர், மேலும் தீவிரமான போக்குகளின் பிரதிநிதிகள் அவர் அளவுக்குமீறிய மிதப் போக்குள்ளவராகக் கருதினர்.''

முதலாவதாக, ஸிஸ்மொந்தீ தமது சீர்திருத்தங்களை முன்மொழிந்ததிலே ''தம் காலத்தை விட்டு வெகு தொலைவுக்கு முன்னே போயிருந்தார்'' என்று கூறுவது ஸிஸ்மொந்தீ சித்தாந்தத்தின் அசல் உட்சத்தை முழுக்க முழுக்க தவறாகப் புரிந்துகொண்டிருப்பதைக் குறிக்கிறது, நிகழ்காலத்தைச் சென்றகாலத்துடன் ஒப்பிட்டதாக அவரே சொல்லியிருக்கிறார். ஸிஸ்மொந்தீ தொழிற்சாலைச் சட்டம் முதலானவற்றை ஆதரித்தார்* என்கிற ஒரே காரணத்துக்காக ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் பொதுவான உணர்ச்சியையும் பொதுவான குறிபொருளையும் பார்க்கத் தவறுவதற்கு ஒருவன்

---

* இவ்விஷயத்திலும் ஸிஸ்மொந்தீ தம் காலத்துக்கு ''முந்திச் சென்றவர்'' அல்ல; காரணம், ஏற்கனவே இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்ததைத்தான் அவர் வெறுமே ஏற்றுக் கொண்டார், இந்த மாற்றங்களுக்கும் பெருமளவான இயந்திரத் தொழிலுக்கும் இருந்த தொடர்பையோ அது செய்துவந்த முற்போக்கான வரலாற்றுப் பணியையோ அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

வரம்பற்ற பார்வைக்கேடு உள்ளவனுக இருந்துதீரவேண்டும் (அல்லது தன்னுணர்ச்சிவாதத்தின் பால் வரம்பற்ற பாரபட்சம் காட்டுகிறவனுக இருந்துதீரவேண்டும்).

இரண்டாவதாக, இவ்வழியே எஃப்ரூஸி அனுமானித்துக் கொள்வது, ஸிஸ்மொந்தீக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் உள்ள வேற்றுமை அவர்கள் முன்மொழிந்த சீர்திருத்தங்களின் தீவிரத்தன்மையின் அளவிலே மட்டும் இருக்கிறதாகும் என்று, அவர்கள் மேலும் முன்னே சென்றுர்கள், இவரோ சென்றகாலத்தை முற்றுகக் கைவிடவில்லை என்று.

அதுவல்ல விஷயம். ஸிஸ்மொந்தீக்கும் இந்த ஆசிரியர்களுக்கும் உள்ள வேற்றுமை மிகவும் ஆழமானது—சிலர் மேலும் முன்னே போனுர்கள் மற்றவர்கள் நெஞ்சுரமற்றவர்களாயிருந்தனர் என்பதல்ல,* சீர்திருத்தங்களின் தன்மையையே அவர்கள் இரண்டு நேரெதிரான பார்வைநிலைகளிலிருந்து பார்த்தனர் என்பதே விஷயம். ''சமுதாயத்தின் நிரந்தரத் தேவைகளை'' ஸிஸ்மொந்தீ நிதர்சனப்படுத்திஞர். அவ்வாறே இந்த ஆசிரியர்களும் செய்தனர். ஸிஸ்மொந்தீ ஒரு கற்பனுவாதி; அவர் தமது யோசனைகளை யதார்த்த நலன்கள் மீது ஆதாரப்படுத்தாமல் ஒரு சூக்குமக்கருத்து மீது ஆதாரப்படுத்திஞர். அவ்வாறே இந்த ஆசிரியர்களும் செய்தனர்; இவர்களும் தத்தம் திட்டங்களை ஒரு சூக்குமக் கருத்துமீது ஆதாரப்படுத்தினர். ஆனுல் இரு சாராரின் திட்டங்களின் தன்மையே முற்றுக வேறுபட்டிருந்தது; காரணம், ''நிரந்தரத் தேவைகளை''ப் பற்றிய பிரச்சினையை முன் வைத்த நவீனகாலப் பொருளாதார வளர்ச்சியை அவர்கள்

---

* குறிக்கப்பட்ட ஆசிரியர்களிடையே இந்த அம்சத்தில் வேற்றுமை இல்லை என்று நாம் சொல்ல விரும்பவில்லை; ஆனுல் அது விஷயத்தை விளக்குவதாயில்லை, அது ஸிஸ்மொந்தீக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் உள்ள உறவைத் திரித்துக் காட்டுகிறது: அவர்கள் ஒரே பார்வை நிலையைக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் எடுத்த முடிவுகளின் தீவிரத்தன்மையிலும் முரணற்றதன்மையிலும் மட்டுமே வேறுபட்டிருந்தனர் என்றும் தோன்றும்படிச் செய்யப்படுகிறது. ஆனுல் ஸிஸ்மொந்தீ அவ்வளவாக முன்னே ''செல்லவில்லை'' என்பதல்ல விஷயம்; அவர் பின்னேக்கிப் ''போனுர்'', மற்ற ஆசிரியர்களோ முன்னேக்கிப் ''போனுர்கள்'' என்பதே விஷயம்.

நேரெதிரான கோணங்களிலிருந்து பார்த்தனர். குறிக்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்காலத்தை முன்கூட்டி அறிந்திருந்தனர்; அக்காலத்திய இயந்திரத்தொழில் தம் கண்ணெதிரே செய்துவந்த ''முறிவு'' போகக்கூடிய போக்கை அவர்கள் மேதையின் முன்பார்வையுடன் உய்த்தறிந்தனர். யதார்த்தத்தில் வளர்ச்சி போய்க்கொண்டிருந்த திசையில் அவர்கள் பார்த்தனர்; உண்மையிலே அவர்கள் அந்த வளர்ச்சியின் முன்னே சென்றனர். ஸிஸ்மொந்தீயோ அவ்வளர்ச்சியின் புறம் முதுகைத் திருப்பிக் கொண்டார்; அவரது கற்பனையுலகத்திட்டம் எதிர்காலத்தை முன்னறிந்ததாயிருக்கவில்லை, சென்றகாலத்தைத்தான் திரும்பக் கொணர்ந்தது; அவர் முன்னே பாராமல் பின்னே பார்த்தார், குறிக்கப்பட்ட ஆசிரியர்கள் எந்த ''முறிவிலிருந்து'' தமது கற்பனையுலகத்திட்டங்களை உய்த்துணர்ந்தார்களோ அந்த ''முறிவை நிறுத்துவது'' குறித்து அவர் கனவு கண்டார்.* எனவேதான் ஸிஸ்மொந்தீயின் கற்பனையுலகத்திட்டம் பிற்போக்கானதாக—மிகச் சரியாகவே—கருதப்படுகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே இருந்த பழைய அரை மத்தியகால, தந்தையாதிக்க முறையிலான சமுதாய உறவுகளில் சென்ற நூற்றுண்டின் இறுதியிலே பெருமளவான இயந்திரத் தொழில் நிகழ்த்தத் தொடங்கிய ''முறிவின்'' முற்போக்கான குறிபொருளை ஸிஸ்மொந்தீ புரிந்துகொள்ளவில்லை என்பது மட்டுமே இந்தப் பண்புரைக்கு ஆதாரங்கள் என்று மீண்டும் கூறுகிறோம்.

ஸிஸ்மொந்தீயின் இந்தக் குறிப்பிட்ட பார்வைநிலையைப் பொதுவான ''சங்கம்'' பற்றிய அவரது வாதங்களிலும் உற்றறியமுடியும். அவர் சொல்கிறதாவது; ''தொழிற்சாலை

---

* மார்க்ஸ் சொல்கிறுர்: ''ராபர்ட் ஓவன் கூட்டுறவுத் தொழிற்சாலைகளின் பண்டகசாலைகளின் தந்தையாவார், என்றுலும் அவர் ...இந்தத் தனித்துநிற்கும் உருமாற்றக் கூறுகளின் குறிநிலையை (Tragweite) பற்றித் தமது ஆதரவாளர்கள் கொண்டிருந்த பிரமைகளை எவ்விதத்திலும் பெற்றிருக்கவில்லை; அவர் நடைமுறையிலே தொழிற்சாலை அமைப்புமுறையைத் தமது பரிசோதனைகளுக்கு ஒரே அடிப்படையாகக் கொண்டது மட்டுமின்றி, தத்துவரீதியிலே 'சமுதாயப் புரட்சியின்' தொடக்கப்புள்ளி இந்த அமைப்புமுறையே என்று பிரகடனப்படுத்தினுர்'' என்று.

களின் உடைமை (la propriété des manufactures) பெருந் தொகையான மத்தியதர முதலாளிகளிடையே பங்கிடப்பட வேண்டும் என்று விரும்புகிறேன், பல கோடிகள் வைத்துள்ள ஒரேயொரு மனிதனிடம் அது குவிக்கப்பட்டிருக்கலாகாது'' (II, 365). சிறுபூர்ஷ்வாவின் பார்வைநிலை மேலும் துல்லிய மாகப் பின்வரும் கூற்றில் தெரிகிறது: ''ஏழைகளின் வர்க் கம் அல்ல, நாட்கூலியாட்களின் வர்க்கந்தான் ஒழிக்கப் படவேண்டும்; இது சொத்துள்ள வர்க்கத்துக்குத் திருப்பிக் கொணரப்படவேண்டும்'' (II, 308). சொத்துள்ள வர்க் கத்துக்குத் ''திருப்பிக் கொணரப்பட வேண்டும்''—இந்தச் சொற்கள் ஸிஸ்மொந்தீ சித்தாந்தத்தின் மொத்தமான உட் சத்தை வெளியிடுகின்றன!

ஸிஸ்மொந்தீயே தமது நேர்த்தியான விருப்பங்கள் காரிய சாத்தியமற்றவை என்று உணர்ந்திருக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும், அவை அக்காலத்திய நலன்கள் பற்றிய சச்சரவோடு பொருந்தா என்று உணர்ந்திருக்க வேண்டும். ''ஒரே உற்பத்தி நிகழ்வுப் போக்கில் கூடியுழைக் கிறவர்களின் (qui concourrent à la même production) நலன் களை மீண்டும் ஒன்றுபடுத்தும் வேலை... கஷ்டமானது என் பதில் ஐயமில்லை, எனினும் நீங்கள் நினைக்கிற மாதிரி அவ் வளவு கஷ்டமானது என்று நான் நினைக்கவில்லை'' (II, 450).* தமது விருப்பங்கள், ஆவலாதிகள் ஆகியவைகளுக்கும் யதார்த் த நிலைமைகள், அவற்றின் வளர்ச்சி, ஆகியவைகளுக்கும் இடையேயுள்ள பொருந்தாத்தன்மை பற்றிய உணர்வு ''திரும் பிப்போவதற்கு... இன்னும் காலம் கடந்துவிடவில்லை'' என்று நிரூபிப்பதற்கான விருப்பத்தை இயல்பாகவே தூண்டி விடுகிறது. இருந்துவரும் அமைப்புமுறையின் முரண்பாடு களின் வளரா நிலையை, நாட்டின் பிற்பட்ட நிலையைத் தனது ஆதாரமாகக் கொள்ளவே தன்னுணர்ச்சிவாதி முயல்கிறான். ''நாடுகள் சுதந்திரத்தின் ஓர் அமைப்புமுறையை வென்றுள் ளன, அதில் நாம் நுழைந்திருக்கிறோம்'' (இது நிலப்பிரபுத் துவத்தின் வீழ்ச்சியைக் குறிப்பிடுகிறது); ''ஆனால், இத்தனை

---

* ''ருஷ்யச் சமுதாயம் நிறைவேற்றவேண்டிய பணி நாட்பட நாட்பட மேன்மேலும் சிக்கலாகி வருகிறது. நாள் தோறும் முதலாளித்துவம் தனது வெற்றிகளை விரிவாக்கி வருகிறது....'' (மேலே குறிப்பிட்ட நூல்.).

காலமாகச் சுமந்து வந்த நுகத்தடியை அவை ஒழித்த காலத்தில் உழைப்பாளிகள் (les hommes de peine—உழைப்பின் பிரதிநிதிகள்) சொத்தனைத்தும் இழந்தவர்களாக இருக்கவில்லை. கிராமப் பிரதேசங்களில் விளைச்சலில் சரிபாதி அளவுக்கு அவர்கள் நிலம் பெற்றிருந்தனர், சின்ஷ் விவசாயிகளாக (censitaires) இருந்தனர், குத்தகைச் சாகுபடியாளர்களாக இருந்தனர் (ils se trouvèrent associés à la propriété du sol). நகரங்களிலே, தங்களுடைய பரஸ்பரப் பாதுகாப்புக்காக நிறுவிக் கொண்ட கார்பரேஷன்களின் கைவினை (métiers) கில்டுகளின் உறுப்பினர்கள் என்கிற முறையில் அவர்கள் சுதந்திரமுள்ள தொழில் புரிபவர்களாக இருந்தனர் (ils se trouvèrent associés á la propriété de leur industrie). நம் காலத்திலேதான், மிகச் சமீபத்திய காலத்திலேதான் (c'est dans ce moment même), செல்வத்தின் முன்னேற்றமும் போட்டியும் இந்தச் சங்கங்கள் அனைத்தையும் முறித்துவருகின்றன. ஆனால் இந்த முறிவு (révolution) இன்னமும் பாதி முற்றுப்பெறுமலுள்ளது'' (II, *437*).

''உண்மை, ஒரே நாடுதான் இன்று இந்த இயற்கைக் கொவ்வாத நிலையில் இருக்கிறது; வெளித்தோற்றமான செல்வத்துக்கும் (richesse apparente) மக்களில் பத்து சதவீதத்தினரிடையேயுள்ள பயங்கரமான வறுமைக்கும்—அவர்கள் பொதுத் தானதர்மத்திலே பிழைப்பு நடத்திவரக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்—இடையேயுள்ள நிரந்தரமான வேற்றுமையை ஒரேயொரு நாட்டிலேதான் பார்க்கிறோம். எனினும் இந்த நாடு—வேறு அம்சங்களில் எவ்வளவோ பின்பற்றப்படத்தகுதியுள்ள இந்த நாடு, தனது தவறுகளிலுங்கூடக் கண்ணைப்பறிக்கும் ஒளி பொருந்திய இந்த நாடு—தனது எடுத்துக்காட்டு மூலமாக ஐரோப்பாவின் அரசியலறிஞர்கள் அனைவருக்கும் சபலமூட்டியுள்ளது. இந்தச் சிந்தனைகள் அதற்கு இன்று பயன்படாமற்போனாலும் சரி, அந்த நாடு பின்பற்றிவரும் பாதையின் அபாயத்தைச் சுட்டிக்காட்டுவதின் மூலமாக, தங்குதடையற்ற போட்டி எனும் கோட்பாடு மீது அரசியல் பொருளாதாரத்தை ஆதாரப்படுத்துவதின் அர்த்தம் எல்லாத் தனிப்பட்ட அவாவெழுச்சிகளும் ஒரே காலத்தில் தலைவிரித்தாடுவதற்கு மனிதகுலத்தின் நலன்களைப் பலியிடுவதாகும் என்று அந்த நாட்டின்

அனுபவத்தை வைத்துக் காட்டுவதின் மூலமாக, குறைந்த பட்சமாகவாவது மனிதகுலத்துக்கும் என் நாட்டினருக்கும் ஒரு சேவை செய்கிறவனுவேன் என்று நினைக்கிறேன்'' (II, 368).* இப்படித்தான் ஸிஸ்மொந்தி "Nouveaux Principes" எனும் தமது நூலை முடிக்கிருர்.

ஸிஸ்மொந்தியும் அவரது தத்துவமும் குறிக்கும் பொதுவான குறிபொருளை மார்க்ஸ் பின்வரும் விமர்சனக்குறிப்பில் தெளிவாக வகுத்தளித்தார்; அது முதலில் இப்படிப்பட்ட தத்துவத்தைத் தோற்றுவித்த மேற்கு ஐரோப்பிய பொருளாதார வாழ்க்கையின் நிலைமைகளை உருவரை செய்கிறது (அங்கே முதலாளித்துவம் அப்பொழுதுதான் பெருமளவான இயந்திரத் தொழிலைப் படைக்கத் தொடங்கியிருந்த காலத்தில் அவ்வாறு உருவரை செய்தது), பிறகு அதைப் பற்றி மதிப்பீடும் வழங்குகிறது.**

''மத்திய காலத்திய நகரத்தாரும் சிறு விவசாயி உடைமையாளர்களும் நவீன முதலாளி வர்க்கத்தின் முன்னேடிகளாவர். தொழில், வர்த்தகத் துறைகளில் அற்ப வளர்ச்சியுள்ள நாடுகளில் இவ்வர்க்கம் எழுச்சியுற்றுவரும் முதலாளிவர்க்கததோடு இன்னமும் அக்கம் பக்கமாகப் பிழைத்து வருகிறது.

''நவீன நாகரிகம் முற்ருக வளர்ந்துள்ள நாடுகளில் சிறு பூர்ஷ்வாக்களைக் கொண்ட ஒரு புதிய வர்க்கம் உருவாக்கப் பட்டுள்ளது, அது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருப்பது. அது எப்போதும் முதலாளித்துவச் சமுதாயத்தின் ஒரு துணைப் பகுதியாகத் தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. என்ற போதிலும், இவ்வர்க்கத்தின் தனித்தனி உறுப்பினர்கள் போட்டி

* ''ருஷ்யச் சமுதாயம் ஒரு மகத்தான பணியை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, அது மிகமிகக் கடினமானது, ஆயினும் அசாத்தியமானதல்ல—ஓர் அற்பமான சிறுபான்மைக்காக அல்லாமல் மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கும் வடிவத்தில் மக்களின் உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதே அந்தப் பணி.'' (நி.—ன், பக்கம் 343).

** ஒப்புநோக்குக: ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 57-ல் உள்ள மேற்கோள்கள், மற்றும் ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 6, பக்கம் 94-ல் உள்ள திரு. நி.—ன் கட்டுரை.

யின் செய்கையால் பாட்டாளி வர்க்கத்தினுள் இடையருது தள்ளப்பட்டு வருகின்றனர்; மேலும், நவீனகாலத் தொழில் துறை வளர வளர, நவீன சமுதாயத்தின் ஒரு சுதந்திரமான பகுதியாக இருந்த வகையில் மறைந்துபோய் அதனிடத்தில் தொழிலுற்பத்தியிலும் வர்த்தகத்திலும் விவசாயத்திலும் மேற்பார்வையாளர்களும் அமீனுக்களும் கடைக்காரர்களும் வரக்கூடிய தருணத்தைக்கூட அவர்கள் பார்க்கின்றனர்.

''மக்கள் தொகையில் பாதிக்கு மேல் விவசாயிகளாக உள்ள பிரான்ஸ் போன்ற நாடுகளில், முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் சேர்ந்த எழுத்தாளர்கள் முதலாளித்துவ ஆட்சிமுறையைப் பற்றிய தமது விமர்சனத்தில் விவசாயி, சிறு பூர்ஷ்வா ஆகியோரின் வரையளவைப் பயன்படுத்துவதும், இந்த இடைப்பட்ட வர்க்கங்களின் நிலேயில் நின்று பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாகப் போராடுவதும் இயல்பாக இருந்தது. இவ்வழியே உதித்தது சிறுபூர்ஷ்வா சோஷலிஸம். இந்தக் கருத்துப்பிரிவினருக்கு பிரான்ஸ் மட்டுமின்றி இங்கிலாந்திலுங்கூட ஸிஸ்மொந்தீ தலேவராக இருந்தார்.

''நவீனகால உற்பத்தி நிலேமைகளிலுள்ள முரண்பாடுகளே இந்தச் சித்தாந்தம் வெகு கூர்மையாக அறுத்துக் காட்டியது. அது பொருளாதாரவாதிகளின் பாசாங்கான பரிந்துரைகளே அம்பலப்படுத்தியது. இயந்திரங்கள், உழைப்புப் பிரிவினே ஆகியவற்றின் நாசகரமான பாதிப்புகள், ஒரு சில கைகளில் மூலதனமும் நிலமும் குவிக்கப்படுதல்; மிகையுற்பத்தி, நெருக்கடிகள்—இவையெல்லாவற்றையும் அது மறுக்க முடியாதவாறு நிரூபித்தது. சிறு பூர்ஷ்வா, விவசாயி ஆகியோரின் தவிர்க்கமுடியாத அழிவையும், பாட்டாளி வர்க்கத்தின் துன்பத்தையும், உற்பத்தியில் உள்ள அராஜகத்தையும், செல்வ வினியோகத்திலுள்ள தீவிரமான சமமின்மைகளேயும், நாடுகளிடையே நடக்கிற அழித்துத்தீர்க்கும் தொழில் துறைப்போர்களேயும், பழைய ஒழுக்கநெறி உறவுகள், பழைய குடும்ப உறவுகள், பழைய தேசிய இனங்கள் கலேக்கப்பட்டதையும் அது சுட்டிக்காட்டியது.*

---

* ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 57-ல் எஃப்ருஸி இந்த நூற்பகுதியை மேற்கோள் காட்டுகிருர் (கடைசிப் பாராவின் துவக்கத்திலிருந்து).

''என்றபோதிலும், தனது நேருறுதியான குறிக்கோள்களைப் பொருத்தவரை, பழைய உற்பத்திச் சாதனங்களையும், பரிமாற்றச் சாதனங்களையும் அவற்றோடு கூடவே பழைய சொத்து உறவுகளையும் பழைய சமுதாயத்தையும் அது திரும்பக் கொணர விரும்புகிறது; அல்லது பழைய சொத்து உறவுகளின் கட்டுச்சட்டத்துக்குள் நவீனகால உற்பத்திச் சாதனங்களையும் பரிமாற்றச் சாதனங்களையும் கட்டிப்பிடித்து வைத்திட விரும்புகிறது—இந்தச் சாதனங்களால் பழைய சொத்து உறவுகள் உடைத்தெறியப்பட்டுள்ளன, உடைத்தெறியப்பட்டுத்தீரும் என்கிற நிலைமையிலுங்கூட. இரண்டு வழக்குகளிலும் அது பிற்போக்கானது, கற்பனையுலகவகைப்பட்டது.

''அதன் இறுதிச் சொற்கள் இவையே: தொழில் துறைக்குக் கூட்டமைப்புள்ள கில்டுகள், விவசாயத் துறையில் தந்தையாதிக்க முறையிலான உறவுகள்.''*

ஸிஸ்மொந்தீ சித்தாந்தத்தின் ஒவ்வொரு தனி இனத்தையும் பரிசீலிக்கையில் இந்த வர்ணனை சரியே என்று நிரூபிக்க முயன்றோம். எஃப்ரூஸி தமது விரிவிளக்கத்திலும் விமர்சனத்திலும் தன்னுணர்ச்சிவாதம் பற்றிய மதிப்பீட்டிலும் செய்த எல்லாப் பிழைகளுக்கும் மகுடமிட்டாற்போல் அவர் பயன்படுத்திய வேடிக்கையான தந்திரத்தை இங்கே வெறுமே குறித்துவைப்போம். தமது கட்டுரையின் துவக்கத்தில்

---

* ஒப்புநோக்குக: ''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', 1894, இதழ் 6, பக்கம் 88, குறிக்கப்பட்ட கட்டுரை. இந்த நூற்பகுதியின் மொழிபெயர்ப்பில் திரு. நி.—ன் இரண்டு தவறான மொழிபெயர்ப்புகளும் ஒரு விலக்கலும் செய்துள்ளார். ''சிறுபூர்ஷ்வா'' ''சிறு விவசாயி'' என்பதற்குப் பதிலாக ''குறுகிய நகரத்தார்'' ''குறுகிய விவசாயி'' என மொழிபெயர்க்கிறார். ''பாட்டாளி வர்க்கத்துக்காகப் போராட'' என்பதற்குப் பதிலாக ''மக்களுக்காகப் போராட'' என்று மொழிபெயர்க்கிறார், மூலநூலில் der Arbeiter (தொழிலாளி) எனும் சொல் இருந்துங்கூட. (எங்கெல்ஸ் அதிகாரபூர்வமாக ஒப்புதல் அளித்த 1888-ன் ஆங்கிலப் பதிப்பில் ''தொழிலாளி வர்க்கம்'' என்று உள்ளது.—பதிப்பாசிரியர்.) ''உடைத்தெறியப்பட்டுத்தீரும்'' (gesprengt werden mußten) எனும் சொற்களை அவர் விலக்கி விட்டார். (பார்க்க: கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'', அத்தியாயம் 3.—பதிப்பாசிரியர்.)

(''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 7-ல் உள்ளது) பிற்போக்காளர்கள், கற்பனுவாதிகள் ஆகியோருடன் ஸிஸ்மொந்தியைச் சேர்ப்பது ''நேர்மையல்ல'', ''சரியல்ல'' என்று கூறியது வாசகருக்கு நினைவிருக்கும் (முன்னே குறிப்பிட்ட நூல், பக்கம் 138). இந்த ஆய்வுரையை நிரூபிப்பதற்கு முதலாவதாக அவர் மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி—ஸிஸ்மொந்தீயின் பார்வை நிலேக்கும் முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள சிறு உற்பத்தியாளர்கள் எனும் தனிச்சிறப்பான வர்க்கத்தின் நிலேக்கும் நலன்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி—ஏதும் சொல்லாமல் சமாளித்தார்; இரண்டாவதாக, ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் பல்வேறு கொள்கைகளேப் பரிசீலிக்கையில் எஃப்ரூஸி ஒரு பகுதியில் நவீன தத்துவத்தின் பால் அவருக்குள்ள கண்ணேட்டத்தை நாம் மேலே காட்டியவாறு முற்றிலும் தவருன வெளிச்சத்தில் காட்டிஞர், ஒரு பகுதியில் நவீன தத்துவத்தை அப்படியே புறக்கணித்துவிட்டு ஸிஸ்மொந்தீயைத் ''தாண்டி மேலே போகாத'' ஜெர்மன் புலவர்களேக் குறிப்பிட்டு ஸிஸ்மொந்தீயைத் தாங்கிப் பிடித்தார்; மூன்ருவதாக, இறுதியாக, ஸிஸ்மொந்தீ பற்றிய தமது மதிப்பீட்டை எஃப்ரூஸி பின்வரும் முறையில் தொகுத்தளிக்க மனம் ஒப்பிஞர்: ''ஸிமொன்த் தெ ஸிஸ்மொந்தீ பற்றிய நமது (!) கருத்தை'' ஒரு ஜெர்மன் பொருளாதாரவாதியின் ''பின்வரும் சொற்களில் நாம் தொகுத்தளிக்கமுடியும்(!!)'' (''ருஸ்ஸ்கோயே பொகாட்ஸ்ட்வோ'', இதழ் 8, பக்கம் 57) என்று; பிறகு மேலே குறிப்பிட்ட நூற்பகுதி தொடர்கிறது—அதாவது, அந்தப் பொருளாதாரவாதி கொடுத்த பண்புரையின் ஒரு பகுதி மட்டும் தொடர்கிறது; ஆனல், ஸிஸ்மொந்தீ தத்துவத்துக்கும் நவீன சமுதாயத்திலுள்ள ஒரு தனிச்சிறப்பான வர்க்கத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கும் பகுதியும், ஸிஸ்மொந்தீ பிற்போக்காளர், கற்பனுவாதி என்று இறுதியான முடிவு எடுக்கும் பகுதியும் விலக்கப்படுகின்றன! இதற்கு மேலும் உண்டு. விமர்சனக் குறிப்பின் ஒரு துண்டு மட்டும் எடுத்துக் கொண்டு—இது முழுமையான விமர்சனக்குறிப்புபற்றி ஒரு கருத்தும் கொடுக்கிறதில்லே—அதன்வழியே ஸிஸ்மொந்தீ பற்றிய இந்தப் பொருளாதாரவாதியின் கண்ணேட்டத்தை முற்றிலும் தவருன வெளிச்சத்தில் காட்டுவதோடு எஃப்ரூஸி நிற்கவில்லே;

மேலே போய், அந்தப் பொருளாதாரவாதியின் கருத்தை வெறுமே எடுத்துச் சொல்வதாகப் பாசாங்கு செய்தபடியே அவர் ஸிஸ்மொந்தீயை மெருகிட்டுக் காட்ட முயன்றார்.

எஃப்ரூஸி சொல்கிறார்: ''இத்துடன் ஒன்று சொல்வோம், தமது சில தத்துவார்த்தக் கருத்துக்களில் ஸிஸ்மொந்தீ தலைசிறந்த நவீன பொருளாதாரவாதிகளுக்கு* முன்தோன்றலாக இருந்தார்: மூலதனத்திலிருந்து பெறப்படும் வருவாய், நெருக்கடிகள் பற்றிய அவரது கருத்துக்களையும், தேசிய வருவாய் பற்றிய அவரது வகைப்பிரித்தலையும் இன்னோரன்ன பிறவற்றையும் நினைவூட்டுகிறோம்'' (மேலே குறிப்பிட்ட நூல்). ஆக, ஸிஸ்மொந்தீயின் சிறப்பு பற்றிய இந்த ஜெர்மன் பொருளாதாரவாதியின் குறிப்புடன் ஸிஸ்மொந்தீயின் சிறு பூர்ஷ்வா பார்வைநிலை, அவரது கற்பனையுலகத் திட்டத்தின் பிற்போக்குத்தன்மை பற்றிய இதே பொருளாதாரவாதியின் குறிப்பை இணைத்தளிப்பதற்குப் பதிலாக எஃப்ரூஸி ஸிஸ்மொந்தீயின் சிறப்புகள் பற்றிய பட்டியலோடு இதே பொருளாதாரவாதியின் கருத்தில் விஞ்ஞானச் சொல் ஒன்றேனும் இல்லாதவையான ஸிஸ்மொந்தீ தத்துவத்தின் பகுதிகளை (அவருடைய ''தேசிய வருவாய் பற்றிய வகைப்பிரித்தல்'' போன்றவை) இணைத்தளிக்கிறார்.

நம்மிடம் சொல்லக்கூடும்: பொருளாதாரச் சித்தாந்தங்களுக்கான விளக்கத்தைப் பொருளாதார யதார்த்தத்தில் தேடித் தீரவேண்டும் எனும் கருத்தை எஃப்ரூஸி கொஞ்சமேனும் ஏற்காமலிருக்கக் கூடும்; ''தேசிய வருவாய் பற்றிய வகைப் பிரித்தல்'' சம்பந்தமாக அ. வாக்னரின் தத்துவம் ''தலைசிறந்த தத்துவம்'' என்று அவர் ஆழ்ந்த துணிபு கொண்டிருக்கலாம். இதை நாம் முற்றிலும் நம்பத் தயார். ஆனால், அந்தத் தத்துவத்தின் ஸிஸ்மொந்தீ பற்றிய கண்ணோட்டத்தை அவர் உண்மையில் முற்றிலும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கும்போது, இந்தக் கண்ணோட்டத்தை முற்றிலும் தவறான வெளிச்சத்தில் காட்டுவதற்குச் சாத்தியமானதனைத்தையும் (சாத்தியமற்றதையுங்கூடத்தான்) செய்

* அடோல்ஃப் வாக்னர் போன்றவர்களா? — K. T. (வி.இ. லெனின். — பதிப்பாசிரியர்.)

திருக்கும்போது, நரோத்னிக் சீமான்கள் ''ஏற்றுக்கொள்வதாக''ச் சொல்ல எவ்வளவோ ஆசைப்படும் இந்தத் தத்துவத்துடன் அவர் ஊடிப் பிணங்குவதற்கு என்ன உரிமை பெற்றிருந்தார்?

இந்தப் பிரச்சினை எஃப்ரூஸியோடு மட்டும் சம்பந்தப்பட்டதாயிருந்திருந்தால் அதற்கு இவ்வளவு பக்கம் ஒதுக்கியிருக்க மாட்டோம்—நரோத்னிக் இலக்கியத்தில் ஒருக்கால் முதல் தடவையாக இந்த ஆசிரியரின் பெயரைச் சந்திக்கிறோம். எஃப்ரூஸியின் மூர்த்தியோ, அவரது கருத்துக்களோ கூட, நமக்கு முக்கியமில்லை; தாங்கள் ஏற்பதாகச் சொல்லிக் கொள்ளும் அந்தப் புகழ்பெற்ற ஜெர்மன் பொருளாதாரவாதியின் தத்துவத்தின்பால் நரோத்னிக்குகளின் பொதுவான கண்ணோட்டம்தான் நமக்கு முக்கியம். எஃப்ரூஸி எவ்வகையிலும் ஒரு விதிவிலக்கல்ல; மாறாக, அவர் பொதுப்போக்கைக் குறிப்பவராகவே இருக்கிறார்; இதை நிரூபிக்கவே நாம் நெடுகிலும் ஸிஸ்மொந்தீயின் பார்வைநிலை, தத்துவம் ஆகியவற்றிற்கும் திரு. நி.—ன்னின் பார்வைநிலை, தத்துவம் ஆகியவற்றிற்கும் இடையே ஒற்றுமை இருப்பதைக் காட்டிவந்தோம்.* அந்த ஒற்றுமை முழுமையானது என்று நிரூபித்துக் கொண்டது: இரு ஆசிரியர்களின் தத்துவார்த்தக் கருத்துக்களும், முதலாளித்துவம் பற்றிய பார்வைநிலையும், அவர்களின் நடைமுறைக்கான முடிவுகள், யோசனைகள் ஆகியவற்றின் தன்மையும் முற்றொருமையுள்ளவையாக நிரூபித்துக் கொண்டன. மேலும், திரு. நி.—ன்னின் கருத்துக்கள் நரோதியத்தின் இறுதிச் சொல்லாக வர்ணிக்கப்படலாம் ஆதலால் நரோத்னிக்குகளின் பொருளாதாரத் தத்துவம் வெறுமே ஐரோப்பியத் தன்னுணர்ச்சிவாதத்தின் ருஷ்ய வகையேயாகும் என்று முடிவுகட்ட நமக்கு உரிமை உண்டு.

ஒருபுறத்தில் ருஷ்யாவின் தனிக்குறிப்பான வரலாற்று, பொருளாதார முனைப்புக்கூறுகளும், மறுபுறத்தில் அதன்

---

* மேலே குறிப்பிட்ட மிக முக்கியமான பிரச்சினைகளில் மற்றொரு நரோத்னிக் பொருளாதாரவாதியாகிய திரு. வி. வி. திரு. நி.—ன்னுடன் ஒத்துப்போகிறார், திரு. வி. வி.-யின் பார்வைநிலை மேலும் ஆதிநிலை வகைப்பட்டது என்பதிலேதான் அவர் வேறுபடுகிறார்.

ஒப்பிடவியலாத அளவிலே பெரிதான பிற்பட்டநிலையும் நரோதியத்துக்கு மிகவும் குறிக்கத்தக்க தனி வேறான முனைப் புக்கூறுகள் அளிக்கின்றன என்பது சொல்லாமலே விளங்கும். எனினும் இந்தத் தனிவேறுபாடுகள் ஒரே இனத்தைச் சேர்ந்த வகைகளிடையே யுள்ளவை தவிர வேறில்லை, என வே இவை நரோதியத்துக்கும் சிறுபூர்ஷ்வாத் தன்னுணர்ச்சி வாதத்துக்கும் உள்ள ஒற்றுமையைப் பொய்ப்பிக்கவில்லை.

ஒருக்கால் அதன் மிகவும் முக்கியமான மிகவும் எடுப்பான தனிவேறுபாடு, நவீன தத்துவத்துடன் தாங்கள் ''உடன்படு வதாக''ச் சொல்லிக் கொண்டும் முடிந்தவரை அடிக்கடி அதைக் குறிப்பிட்டும் நரோத்னிக் பொருளாதாரவாதிகள் தமது தன்னுணர்ச்சிவாதத்தை மாறுவேடமிட்டு மறைப் பதற்குச் செய்கிற முயற்சியேயாகும்; இந்தத் தத்துவம் தன்னுணர்ச்சிவாதத்தைத் தீவிரமாக மறுத்துக்கண்டிக்கிறது, எல்லா வகைப்பட்ட சிறு பூர்ஷ்வா சித்தாந்தங்களையும் எதிர்த்து நடத்திய கடுமையான போராட்டத்தின் போக்கிலே அது வளர்ந்திருக்கிறது, என்றிருந்துங்கூட.

இந்த மாறுவேடம் அணிவதில் பயன்படுத்தப்படும் பொது வான வழிமுறைகளைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பளிக்கிற காரணத்தாலேயே ஸிஸ்மொந்தீ தத்துவத்தைப் பற்றிய பகுப்பாய்வு தனி அக்கறை பெற்றதாகும்.

நம் காலத்திய சமுதாயப் பொருளாதாரத்தில் இருக்கும் அதே முரண்பாடுகளைத்தான் தன்னுணர்ச்சிவாதமும் நவீன தத்துவமும் ஒருங்கே குறிக்கின்றன என்று பார்த்தோம். நெருக்கடிகளிலும், வெளிநாட்டுச் சந்தைக்கான வேட்டை யிலும், நுகர்வு நலிந்துவருகிற அதே நேரத்தில் உற்பத்தி வளர்வதிலும், காப்பு வரிகளிலும், இயந்திரத் தொழிலின் தீங்கான பாதிப்புகளிலும், இன்னோரன்ன பிறவற்றிலும் வெளிப்படுத்திக்கொள்கிற முரண்பாடுகளை நவீன தத்துவம் அங்கீகரிக்கும் விஷயத்தை நரோத்னிக்குகள் சுட்டிக்காட்டு கிற பொழுது இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நரோத்னிக்குகள் சொல்வது சரியே; நவீனத் தத்துவம் இந்த முரண்பாடுகள் அனைத்தையும் அங்கீகரிக்கிறது, தன்னுணர்ச்சி வாதமும் அப்படியே அங்கீகரித்தது. ஆனால் கேள்வி இது தான்: இன்றையப் பொருளாதார அமைப்பு முறையிலிருந்து தோன்றுகிற வெவ்வேறான நலன்களாக வடித்தெடுக்கும் இம்

முரண்பாடுகள் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வுக்கும், வெறுமே நல்ல விருப்பங்களைச் சொல்வதற்காக முரண்பாடுகளைப் பற்றிய சுட்டுக்குறிப்புகளைப் பயன்படுத்தலுக்கும் உள்ள வேற்றுமை எங்கே இருக்கிறதென்று ஒரு நரோத்னிக்காவது என்றைக்காவது கேட்டதுண்டா? கிடையாது, நவீன தத்துவத்துக்கும் தன்னுணர்ச்சிவாதத்துக்கும் உள்ள வேற்றுமை பற்றிய பிரச்சினையைப் பரிசீலித்த ஒரு நரோத்னிக்கைக்கூட நாம் காணவில்லை. முரண்பாடுகள் பற்றிய தங்கள் சுட்டுக் குறிப்புகளை நரோத்னிக்குகள் நல்ல விருப்பங்களைச் சொல்லவே பயன்படுத்துகிறார்கள்.

அடுத்த கேள்வி: முதலாளித்துவத்தைப் பற்றிய உணர்ச்சி வகைப்பட்ட விமர்சனத்துக்கும் முதலாளித்துவத்தைப் பற்றிய விஞ்ஞான, இயக்க இயல் வழிப்பட்ட விமர்சனத்துக்கும் உள்ள வேற்றுமை எதிலே உள்ளது என்று எப்போதாவது ஒரு நரோத்னிக்காவது கேட்டதுண்டா? நவீன தத்துவத்துக்கும் தன்னுணர்ச்சிவாதத்துக்கும் உள்ள இரண்டாவது முக்கியமான வேற்றுமை பற்றிய இந்தக் கேள்வியை அவர்களில் ஒருவர்கூட எழுப்பவில்லை. தனது தத்துவங்களுக்குத் தேர்வுகோலாக சமுதாய, பொருளாதார உறவுகளின் இன்றைய வளர்ச்சியைப் பயன்படுத்துவது அவசியம் என்று அவர்களில் ஒருவர்கூடக் கருதவில்லை (எனினும் இந்தத் தேர்வுகோலைச் செயல்படுத்துவதே விஞ்ஞானவகைப்பட்ட விமர்சனத்தின் சிறப்பான முனைப்புக்கூறுகும்).

இறுதியான கேள்வி: சிறு உற்பத்தியை இலட்சிய நிலையில் வைத்து ''முதலாளித்துவம்'' அதன் அடிப்படைகளை ''முறித்து வருகிறது'' என்று புலம்புகிற தன்னுணர்ச்சிவாதத்தின் பார்வை நிலைக்கும், பெருமளவான முதலாளித்துவ இயந்திரத் தொழிலைத் தனது தொடக்கப்புள்ளியாக எடுத்துக் கொண்டு இந்த ''அடிப்படைகளின் முறிவு'' முற்போக்கானது என்று பிரகடனப்படுத்தும் நவீன தத்துவத்தின் பார்வைக்கும் வேற்றுமை எதிலே உள்ளது என்று எப்போதாவது ஒரு நரோத்னிக்காவது கேட்டதுண்டா? (பொதுவாக ஏற்கப்பட்டுள்ள இந்த நரோத்னிக் சொல்லை நாம் பயன்படுத்துகிறோம்; பெருமளவான இயந்திரத்தொழிலின் செல்வாக்கின் விளைவாகச் சமுதாய உறவுகளில் நிகழ்கிற மாற்றப் போக்கை அது எடுப்பாக வர்ணிக்கிறது; இந்த

மாற்றப்போக்கு ருஷ்யாவில் மட்டுமின்றி எல்லாவிடங்களிலும் சமுதாய சிந்தனையைத் திகைப்பில் ஆழ்த்தும் அளவுக்குத் திடீரென்றும் கூராகவும் நிகழ்ந்திருக்கிறது.) கிடையாது என்கிற பதிலே மீண்டும் கிடைக்கிறது. ஒரு நரோத்னிக் கூட இக்கேள்வியைத் தன்னிடம் கேட்டுக்கொள்ளவில்லை, மேற்கு ஐரோப்பிய ''முறிவு'' முற்போக்கானது என்று மக்களை அங்கீகரிக்கச் செய்த அளவுகோல்களை ருஷ்ய ''முறிவுக்கு''ச் செயல்படுத்துவதற்கு அவர்களில் ஒருவர்கூட முயலவில்லை. அவர்களனைவரும் இந்த அடிப்படைகளைப் பற்றிக் கண்ணீர் வடிக்கிறார்கள், இந்த முறிவு நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார்கள், அழுதவாறே இது தான் ''நவீன தத்துவம்'' என்று நமக்கு உறுதிகூறுகிறார்கள்....

முதலாளித்துவம் பற்றிய பிரச்சினைக்கு ஒரு புதுமையான, சுதந்திரமான தீர்வு இது, மேற்கு ஐரோப்பிய விஞ்ஞானத்தின், வாழ்க்கையின், கடைசியாக வந்த சொல்லை அடிப்படையாகக் கொண்டது, என்று அவர்கள் முன்வைத்திருக்கும் ''தத்துவத்தையும்'' ஸிஸ்மொந்தீ தத்துவத்தையும் ஒப்புநோக்கியது தெளிவாக நிரூபித்துக் காட்டுகிறது, அந்தத் தத்துவத்தின் தோற்றம் முதலாளித்துவத்தின், சமுதாயச் சிந்தனையின் ஆதிநிலை வளர்ச்சிக்கட்டத்தைச் சேர்ந்தது என்று. இந்தத் தத்துவம் பழையது என்பதல்ல விஷயம். பல மிகப்பழைமையான ஐரோப்பியத் தத்துவங்கள் உண்டு, அவை ருஷ்யாவுக்கு மிகப் புதுமையாக இருக்கும்! ஆக, விஷயம் என்னவென்றால், அந்தத் தத்துவம் தோன்றியபோதே ஒரு சிறுபூர்ஷ்வா வகைப்பட்ட, பிற்போக்கான தத்துவமாக இருந்தது.

VI

தன்னுணர்ச்சிவாதத்தாலும் விஞ்ஞான வழிப்பட்ட தத்துவத்தாலும் மதிப்பிடப்பட்ட முறையில் இங்கிலாந்தின் தானியக் காப்பு வரிகள்

நம் காலத்திய பொருளாதார இயலின் முக்கியமான விஷயங்கள் பற்றிய தன்னுணர்ச்சிவாதத்தின் தத்துவத்துக்கும்நவீன தத்துவத்துக்கும் நாம் செய்த ஒப்பீட்டுக்குத் துணையாக ஒரு குறிப்பிட்ட நடைமுறைப் பிரச்சினையில் அவர்

களின் விளக்கமுறைகள் இடையே செய்த ஒப்பீடும் தருகி ரேம். இப்படிப்பட்ட ஒப்பீடு மேலும் சுவையுள்ளதாக இருக் கும்—காரணம், ஒருபுறத்தில், இந்த நடைமுறைப் பிரச்சினே முதலாளித்துவத்தின் மிகவும் பெரிய, மிகவும் அடிப்படை யான பிரச்சினேகளில் ஒன்ருகும்; மறுபுறத்தில், இந்தப் பகை யான தத்துவங்களின் இரண்டு தலேசிறந்த விளக்கவல்லுநர் கள் இப்பொருள் பற்றித் தங்களுடைய கருத்துகளே வெளி யிட்டுள்ளனர்.

நாம் இங்கிலாந்தின் தானியச் சட்டங்களேயும் அவற்றின் நீக்கலேயும் குறிப்பிடுகிரேம். இந்நூற்ருண்டின் இரண்டா வது காற்பகுதியில் ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகள் மட்டுமின்றி ஐரோப்பாவின் பொருளாதாரவாதிகளும் இப் பிரச்சினேயில் ஆழ்ந்த அக்கறை செலுத்தினர்; இது காப்பு வரிக் கொள்கை சம்பந்தப்பட்ட குறிப்பான பிரச்சினே அல்ல வே அல்ல, சுயேச்சையான வாணிபம் பற்றிய, சுயேச்சை யான போட்டி பற்றிய, ''முதலாளித்துவத்தின் தலேவிதி'' பற்றிய பொதுவான பிரச்சினே இது என்று அவர்கள் எல் லோரும் உணர்ந்தனர். சுயேச்சையான போட்டியை முற்ருக இயங்கவிட்டு முதலாளித்துவ அமைப்புக்கு கோபுரம் எழுப் பும் விவகாரம் இது; சென்ற நூற்ருண்டின் இறுதியில் இங்கி லாந்தில் பெருமளவான இயந்திரத் தொழில் தொடங்கி வைத்த ''முறிவை'' முடித்துக் கொடுக்கப் பாதையைச் செப் பனிட்டுத்தரும் விவகாரம் இது; விவசாயத்துறையில் இந்த ''முறிவை'' தடங்கல் செய்கிற தடைகளே அகற்றிவிடும் விவகாரம் இது. நாம் குறிப்பிட்டுப்பேச நினேக்கும் இரண்டு ஐரோப்பியப் பொருளாதாரவாதிகளும் இவ்வழியேதான் இந்தப் பிரச்சினேயைப் பார்த்தனர்.

“Nouveaux Principes” எனும் தமது நூலின் இரண்டாம் பதிப்பில் ஸிஸ்மொந்தீ ஓர் அத்தியாயத்தைச் சேர்த்தார், அது குறிப்பாக ''தானிய வியாபாரத்தில் ஆட்சிபுரியும் சட் டங்கள்'' எனும் விஷயத்தைக் கவனித்தது (I. III. அத். X).

முதலாவதாக, பிரச்சினேயின் அவசரத்தன்மையை அவர் வலியுறுத்துகிருர்: ''ஆங்கிலேய மக்களில் பாதிப் பேர் தா னியச் சட்டங்களே நீக்குமாறு கோருகின்றனர், அவற்றை ஆதரிப்பவர்கள்பால் கடுங்கடுப்பு வெளியிட்டு கோருகின்ற னர்; ஆனுல், பாக்கி பாதிப்பேர் அவை நீடிக்க வேண்டும்

என்று கோருகின்றனர், அவற்றை நீக்கக் கோருகிறவர்களை எதிர்த்துச் சீற்றத்துடன் கூக்குரலிடுகின்றனர்'' (I, 251).

பிரச்சினையைப் பரிசீலிக்கையில், ஆங்கிலேயச் சாகுபடியாளர்களின் நலன்களுக்குத் தானியக் காப்பு வரிகள் வேண்டியிருந்தன, அவர்களுக்கு remunerating price (இலாபகரமான, நஷ்டமற்ற விலை) உறுதிப்படுத்துவதற்கு வேண்டியிருந்தன, என்று ஸிஸ்மொந்தீ சுட்டிக்காட்டுகிறார். ஆனால், முதலாளிகளுடைய நலன்களுக்குத் தானியச் சட்டங்களை நீக்கிவிடுவது தேவையாயிருந்தது, ஏனெனில் வெளிநாட்டுச் சந்தைகள் இல்லாமல் தொழிற்சாலைகள் இருக்கமுடியவில்லை, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் ஆங்கிலேய ஏற்றுமதிகள் மேலும் வளர்வதைத் தடுத்துத் தாமதப்படுத்தி வந்தன: ''சந்தையில் மிகை வரத்து இருப்பது இதே தானியச் சட்டங்களால் ஏற்பட்ட விளைவுதான் என்று முதலாளிகள் மேலும் சொல்கிறார்கள்; அவர்களின் சரக்குகளை ஐரோப்பாவிலுள்ள பணக்காரர்கள் வாங்கமுடியவில்லை, காரணம்: தங்களுடைய தானியத்துக்கு அவர்களுக்கு (ஐரோப்பியப் பணக்காரர்களுக்கு) சந்தை பிடிக்க முடியவில்லை, என்றும் சொல்கிறார்கள்'' (I, 254).*

''வெளிநாட்டுத் தானியத்துக்குச் சந்தையைத் திறந்துவிடுவது ஆங்கிலேயச் சாகுபடியாளர்களைப் பெரும்பாலும்

---

* ஆங்கிலேய முதலாளிகள் தரும் இந்த விளக்கம் ஒரு தலைப்பட்சமானதாக இருக்கக்கூடும், அவர்கள் நெருக்கடிகளின் மேலும் ஆழமான காரணங்களையும் சந்தையின் விரிவாக்கம் அற்பமாயிருக்கும்போது நெருக்கடிகள் தவிர்க்கவியலாத்தன்மை பெறுவதையும் புறக்கணிக்கிறார்கள்; என்றபோதிலும், இந்த விளக்கத்தில் ஒரு முற்றும் சரியான கருத்து அடங்கியுள்ளதில் ஐயமில்லை; அதாவது, வெளிநாட்டில் விற்பனை செய்வதின் வழியாக உற்பத்திப் பொருளைப் பணமாக மீட்டுக் கொள்வதற்கு, மொத்தத்திலே பார்த்தால், வெளிநாட்டிலிருந்து அதற்குப் பொருத்தமாக இறக்குமதி செய்வது தேவைப்படுகிறது.—''அவை வெளிநாட்டில் விற்றுப் போகும்'' என்கிற ஆழ்ந்த குறிப்புரை வழங்கிவிட்டு முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்திப் பொருளைப் பணமாக மீட்டுக்கொள்வது பற்றிய பிரச்சினையை ஒதுக்கித் தள்ளிவிடும் பொருளாதாரவாதிகளின் கவனத்துக்கு ஆங்கிலேய முதலாளிகளின் இவ்விளக்கத்தைக் கொண்டு வருகிறோம்.

அழித்துவிடும், எல்லா வாடகைகளையும் மிகமிகக் குறைந்த விலைக்கு இறக்கிவிடும். இது ஒரு பெரும் விபத்து என்பதில் ஐயமில்லை, என்றாலும் அநீதி ஆகாது'' (I, 254). மேலும், ஸிஸ்மொந்தீ மிகவும் வெகுளித்தனமான முறையில் விவாதிக்கத் தொடங்குகிறார், நிலச்சுவான்தார்களின் வருவாய்கள் அவர்கள் ''சமுதாயத்துக்கு'' (முதலாளித்துவமுறையிலுள்ளதற்கா?) செய்கிற சேவைக்கு (உண்மையே!!) அளவாக இருந்தாகவேண்டும் என்றவாறு. ''சாகுபடியாளர்கள் தமது மூலதனத்தை, குறைந்தபட்சம் பகுதியாகவாவது, விவசாயத்திலிருந்து விலக்கிக் கொள்வார்கள்'' என்று ஸிஸ்மொந்தீ தொடர்கிறார்.

ஸிஸ்மொந்தீயின் இந்த வாதம் (அதைச் சொல்வதோடு திருப்தியும் அடைகிறார் அவர்) தன்னுணர்ச்சிவாதத்தின் மிக முக்கியமான வழுவை வெளிப்படுத்துகிறது, அதாவது: அது யதார்த்தத்தில் நிகழ்ந்துவரும் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் போதிய கவனம் செலுத்துகிறதில்லை. இங்கிலாந்திலே முதலாளித்துவச் சாகுபடி முறை படிப்படியாக வளர்ந்தோங்கி வருவதை ஸிஸ்மொந்தீயே சுட்டிக் காட்டுகிறதைக் கண்டோம். எனினும் அவர் இந்த நிகழ்ச்சிப் போக்கைக் கண்டிக்க விரைகிறார், அதன் காரணங்களை ஆய்வதற்குப் பதிலாக. இந்த அவசரம்தான், தமது அப்பாவித்தனமான விருப்பங்களை வரலாற்றின்மீது சுமத்தப் பார்க்கும் இந்த விருப்பந்தான், விவசாயத்தில் உள்ள முதலாளித்துவ வளர்ச்சியின் பொதுப் போக்கையும் தானியச் சட்டங்களின் நீக்கத்தையொட்டி தவிர்க்கமுடியாதபடி இந்த நிகழ்ச்சிப் போக்கு துரிதப்படுவதையும்—அதாவது, விவசாயத்தில் முதலாளித்துவம் நலியும் என்று ஸிஸ்மொந்தீ முன்கூட்டிக் கூறுகிறாரே, அப்படி நலிவதற்குப் பதிலாக முன்னேறுவதை —ஸிஸ்மொந்தீ பார்க்கத் தவறுகிற விஷயத்தை விளக்க முடியும்.

எனினும் ஸிஸ்மொந்தீ தம்மளவில் உண்மையாகவே இருக்கிறார். இந்த முதலாளித்துவ நிகழ்ச்சிப் போக்கில் உள்ளார்ந்திருக்கும் முரண்பாட்டை அணுகியவுடன், ''ஆங்கிலேயத் தந்தையர்நாடு'' பின்பற்றிவரும் பாதை தவறானது என்று எப்படியாவது நிரூபிக்கிற முயற்சியில் அதை வெகுளித்தனமாக ''மறுப்பதில்'' இறங்கி விட்டார்.

''நாட்கூலியாள் என்ன செய்வான்?... வேலை நின்று விடும், வயல்கள் மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படும்... வேலையற்றுப்போகிற 540,000 குடும்பங்கள் என்னவாகும்?* அவர்கள் ஏதாவது ஒரு வகையான தொழில்துறை வேலைக்கு லாயக்குள்ளவர்களாக அனுமானித்துக் கொண்டாலும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் திறமுள்ள தொழில் ஒன்று தற்சமயம் உண்டா?... தான் ஆண்டுவரும் நாட்டில் பாதிப் பேரை இப்படிப்பட்ட நெருக்கடியில் தன்னிச்சையாகத் தள்ளக்கூடிய அரசாங்கத்தைக் காணமுடியுமா?... யாருக்கு இப்படி சாகுபடியாளர்கள் பலியிடப்படுகிறார்களோ அவர்களுக்காவது இதனால் எந்த அளவுக்காவது நன்மை கிடைக்குமா? சொல்லப் போனால், இந்தச் சாகுபடியாளர்கள்தாம் ஆங்கிலேயத் தொழிற் பொருட்களுக்கு மிக நெருங்கிய, மிக நம்பகமான வாடிக்கைக்காரர்கள். அவர்களின் நுகர்வு நின்றுபோனால் தொழிலுக்குக் கிடைக்கிற அடி மிகப்பெரிய சந்தைகளில் ஒன்று மூடப்பட்டுப் போவதைவிடக் கொடிதாக இருக்கும்'' (255-256). கெட்டபெயர் வாங்கிக் கொண்டுள்ள ''உள்நாட்டுச் சந்தையின் சுருக்கம்'' இப்போது மேடையில் தோன்றுகிறது. ''நாட்டில் பாதிப் பேராக இருக்கும் ஆங்கிலேயச் சாகுபடியாளர்களின் வர்க்கம் முழுவதின் நுகர்வு நின்றுபோவதால் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் நஷ்டம் எவ்வளவு? விவசாய வருவாய்கள் அழிக்கப்பட்டுப் போகிறவர்களாக இருக்கக்கூடிய பணக்காரர்களின் நுகர்வு நின்றுபோவதால் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் நஷ்டம் எவ்வளவு?'' (267). முதலாளிகளின் தொழில்,

---

* முதலாளித்துவத்தின் நலமின்மையை ''நிரூபிப்பதற்காக'' உடனே ஸிஸ்மொந்தீ ஒரு சராசரி கணக்கு போடுகிறார் (எடுத்துக்காட்டாக, நமது ருஷ்யத் தன்னுணர்ச்சிவாதியாகிய திரு. வி. வி. செய்ய எவ்வளவோ விரும்புவதுபோல). ஆறு லட்சம் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளன என்கிறார். வயல்கள் மேய்ச்சல்நிலங்களாக மாற்றப்படுகிறபோது இந்தத் தொகையில் பத்து சதவிதத்தினரே ''தேவைப்படுபவர்களாக'' இருப்பார்கள்.... இந்த நுட்பச் சிக்கலான நிகழ்ச்சிபோக்கைப் பற்றி இந்த ஆசிரியர் காட்டும் அறிவு குறையக் குறைய, அவர் குழந்தைத்தனமான ''வாய்பாடு''க் கணக்குகளில் மேன்மேலும் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்.

செல்வம் ஆகியவற்றின் வளர்ச்சியில் உள்ளார்ந்திருக்கிற முரண்பாடுகள் வெறுமே அவர்களின் தவற்றை, அவர்களின் பார்வைக்கேட்டை, வெளிப்படுத்துகிறதாக அந்த முதலாளிகளுக்குத் தன்னுணர்ச்சிவாதி நிரூபித்துக்காட்ட அசுரமுயற்சி செய்கிறுன். முதலாளித்துவத்தின் ''அபாயம்'' குறித்து முதலாளிகளை ''உறுதியாக நம்பச் செய்வதற்காக'' போலந்து தானியமும் ருஷ்யத் தானியமும் போட்டிக்கு வரப் பயமுறுத்துவது பற்றி ஸிஸ்மொந்தீ விரிக்கிருர் (பக்கங்கள் 257-61). சாத்தியமான வாதங்கள் அனைத்தையும் கைக்கொள்கிருர்; ஆங்கிலேயர்களின் தற்பெருமையுணர்ச்சியையும் கூட தொட விரும்புகிருர். ''ருஷ்ய மாமன்னர் விரும்பிய போதெல்லாம், பால்டிக் துறைமுகங்களை மூடிவிடுவதின் வழியாக, இங்கிலாந்திடமிருந்து ஏதாவதொரு சலுகையைப் பெறவோ பட்டினி போடவோ முடிகிற நிலையில் இருந்தால் இங்கிலாந்தின் மானம் என்னவாகும்?'' (268). விற்கும் போது ஏமாற்றுவது மிகச் சுலபம் என்று வாதித்து ''பண பலத்துக்குப் பரிந்துபேசுகிறவர்கள்'' தவறுசெய்கிறதாக ஸிஸ்மொந்தீ நிரூபிக்க முயன்றதை வாசகர் நினைவூட்டிக்கொள்ளட்டும்.... வறுமையிலுழலும் விவசாயிகளின் போட்டியைப் பணக்கார சாகுபடியாளர்கள் எதிர்த்துநிற்க முடியாது என்று (மேற்கோள் மேலே பார்க்க) வாதித்து முதலாளித்துவச் சாகுபடிமுறையின் தத்துவார்த்த வியாக்கியானகர்த்தாக்களை ''மறுத்திட'' விரும்புகிருர் ஸிஸ்மொந்தீ. கடைசியிலே, ''ஆங்கிலேயர்களின் தந்தையர்நாடு'' பின்பற்றிவரும் பாதை ''தவருனது'' என்று நிரூபித்துவிட்டதாக உறுதியாக நம்பிக்கொண்டு அவருக்கு மிகப் பிடித்தமான முடிவுக்கு வந்துசேருகிருர். ''இங்கிலாந்தின் எடுத்துக்காட்டு புலப்படுத்துகிறதாவது, இந்த நடைமுறையில்'' (அதாவது, பணப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில்; இதற்கு வேறுபாடான நிலையில் "l'habitude de se fournir soi-même"—''தனக்கு வேண்டியதை தானே செய்து கொள்கிற பழக்கத்தை'' ஸிஸ்மொந்தீ வைக்கிருர்) ''அதற்குரிய அபாயங்கள் இல்லாமலில்லை'' (263). ''பொருளாதார அமைப்புமுறையே'' (அதாவது, முதலாளித்துவச் சாகுபடிமுறை)''மோசமானது, அது ஆபத்தான அடிப்படையில் நிற்கிறது, இதைத்தான் மாற்ற முயலவேண்டும்'' (266).

ஒரு திட்டவட்டமான பொருளாதார அமைப்புமுறையில் திட்டவட்டமான நலன்களிடையே உள்ள சச்சரவு எழுப்பும் ஸ்தூலமான பிரச்சினை இவ்வாறு அப்பாவித்தனமான நல் விருப்பங்களின் வெள்ளப்பெருக்கில் மூழ்கடிக்கப்படுகிறது! எனினும், சம்பந்தப்பட்ட தரப்பினர் பிரச்சினையை மிகக் கூராக எழுப்பியதினுல் இப்படிப்பட்ட ''தீர்வுடன்'' ஒருவன் நின்றுவிடுவது (மற்றெல்லாப் பிரச்சினைகளில் தன்னுணர்ச்சி வாதம் நின்றுவிடுவதுபோல) அறவே சாத்தியமில்லாது போயிற்று.

''ஆனுல் என்ன செய்வது?'' என்று நம்பிக்கை முறிவுடன் கேட்கிருர் ஸிஸ்மொந்தீ. ''இங்கிலாந்தின் துறைமுகங்களைத் திறக்கவா, மூடவா? பட்டினிக்கும் சாவுக்கும் தண்டிக்கப்படுவது தொழிற்சாலைத் தொழிலாளிகளா, கிராமத் தொழிலாளிகளா? உண்மையிலே இது ஒரு பயங்கரமான பிரச்சினை; இங்கிலாந்தின் அமைச்சரவையின் நிலைமை அரசியலறிஞர்கள் எதிர்கொள்ளக்கூடிய மிக நாசூக்கான நிலைமைகளில் ஒன்ருகும்'' (260). மற்றும், முதலாளித்துவச் சாகுபடிமுறை ''ஆபத்தானது'', ''விவசாயம் முழுவதையும் ஊகபேர அமைப்புமுறையின் கீழ் வைப்பது ஆபத்தானது'' என்கிற ''பொதுவான முடிவுக்கு'' மீண்டும் மீண்டும் திரும்பிவருகிருர் ஸிஸ்மொந்தீ. ஆனுல் ''இங்கிலாந்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சரிபாதிப் பேர் பசிப்பிணியால் அவதிப்படும்போது, அவர்கள் கோரும் நடவடிக்கைகளால் நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மற்ற பாதிப் பேர் பட்டினியில் கிடக்கத் தண்டிக்கிறதாயிருக்கிறபோது, சிறு பண்ணைகளின் முக்கியத்துவத்தை உயர்த்தக்கூடியவகையில் (remettraient en honneur) அமைந்த நடவடிக்கைகளை—பயனுறுதியுள்ளதும் அதே நேரத்தில் படிப்படியாயும் உள்ள நடவடிக்கைகளை—எடுப்பது எப்படிச் சாத்தியமோ—எனக்குத் தெரியாது. தானியச் சட்டங்கள் கணிசமாகத் திருத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்; ஆனுல், அவற்றை முற்ருக நீக்கக் கோருகிறவர்களுக்கு பின்வரும் பிரச்சினைகளைக் கவனமாக ஆய்ந்திட வேண்டும் என்று அறிவுரை கூறுகிறேன்'' (267) — இதைத் தொடர்ந்து விவசாயத்தின் நலிவு, உள்நாட்டுச் சந்தை சுருங்குதல், முதலியவை பற்றிய பழைய முறையீடுகளும் அச்சங்களும் வருகின்றன.

ஆக, யதார்த்தத்தை முதன்முதலாகத் தொட்டவுடனே தன்னுணர்ச்சிவாதம் படுதோல்வி அடைந்தது. தனக்குத் தானே testimonium paupertatis* கொடுத்துக்கொண்டு அது கைக்குக் கிடைத்ததாக அங்கீகரிக்கவும் வேண்டியதாயிற்று. ''தத்துவ'' வழியிலே எவ்வளவு சுளுவாகவும் எளிதாகவும் எல்லாப் பிரச்சினைகளையும் தன்னுணர்ச்சிவாதம் ''தீர்த்தது'' என்று நினைவு படுத்திப்பாருங்கள்! காப்புமுறை விவேகமற்றது, முதலாளித்துவம் ஒரு சாவுக்கேடான பிழை, இங்கிலாந்து பின்பற்றும் பாதை தவறானது, அபாயகரமானது, உற்பத்தியானது நுகர்வுடன் சமநடையிட்டுச் செல்லவேண்டும், தொழிலும் வர்த்தகமும் விவசாயத்துடன் சமநடையிட்டுச் செல்லவேண்டும், கூலியுயர்வுக்கும் வேலைநாள் குறைப்புக்கும் இட்டுச் செல்கிறபோதுதான் இயந்திரங்கள் நற்பயனுள்ளவை, உற்பத்திச் சாதனங்களை உற்பத்தியாளனிடமிருந்து அகற்றக் கூடாது, உற்பத்தியை முந்திக்கொண்டு பரிமாற்றம் ஓடக் கூடாது, பரிமாற்றம் ஊகபேரத்துக்கு இட்டுச்செல்லக் கூடாது, என்றபடி என்றபடி தன்னுணர்ச்சிவாதம் ஒவ்வொரு முரண்பாட்டுக்கும் பதிலாக ஒரு பொருத்தமான சொற்றொடரை வைத்தது, ஒவ்வொரு கேள்விக்கும் விடையாக ஒரு பொருத்தமான அப்பாவி விருப்பத்தை வைத்தது; இன்றைய வாழ்க்கையுண்மைகள் எல்லாவற்றின்மீதும் இந்த லேபிள்கள் ஒட்டுவதைப் பிரச்சினைகளுக்குரிய ''தீர்வு'' என்று அழைத்தது. இத்தீர்வுகள் கவர்ச்சியான எளிமையும் சுளுவும் பெற்றிருப்பதில் வியப்பில்லை: ஒரு சின்ன விஷயத்தை மட்டும்—உண்மையான நலன்கள், அவற்றிடையேயுள்ள சச்சரவு முரண்பாடாக அமைந்திருப்பது எனும் விஷயத்தை —அவை புறக்கணித்தன. இந்த முரண்பாட்டின் வளர்ச்சியானது மிகவும் கடுமையான சச்சரவுகளில் ஒன்றின் எதிரே —இங்கிலாந்தில் தானியச் சட்ட நீக்கத்துக்குமுன் கட்சிகளிடையே நடந்த போராட்டம்இப்படிப்பட்டதே—தன்னுணர்ச்சிவாதியைக் கொணர்ந்து நேருக்குநேர் நிறுத்தியவுடன் நமது தன்னுணர்ச்சிவாதியின் மூளை குழம்பிப்போய்விட்டது. கனவுகள், நல்விருப்பங்கள் எனும் மூடுபனியில் அவர் இதமாக ஓய்ந்திருக்கமுடிந்தது; பொதுப்படையாகச் ''சமுதா

---

* வறுமைச்சான்றிதழ்.—(பதிப்பாசிரியர்.)

யத்தோடு'' பொருத்திச் செயல்படுத்தக் கூடிய (ஆனால், வரலாற்றுவழியிலே நிர்ணயிக்கப்பட்டதாயுள்ள எந்தச் சமுதாயத்தோடும் பொருத்திச் செயல்படுத்த முடியாத) முதுமொழிகளை எவ்வளவோ திறமையுடன் புனைந்துவந்தார்; ஆனால் தமது கற்பனையுலகத்திலிருந்து இறங்கி உண்மையான வாழ்க்கை நலன்களின் சச்சரவு எனும் சுழலில் விழுந்தவுடன் ஸ்தூலமான பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதற்கான தேர்வுகோல்கூட அவரிடம் இல்லாது போயிற்று. சூக்கும மான கருத்துரைகளை வைக்கிற, சூக்குமமான தீர்வுகளுக்கு வருகிற பழக்கமானது, மக்களில் எந்தப் பகுதியை—விவசாயப் பகுதியையா தொழிற்சாலைப்பகுதியையா—அழிப்பது என்கிற மொட்டையான சூத்திரத்துக்குப் பிரச்சினையைத் தாழ்த்திவிட்டது. உண்மைதான், எந்தப் பகுதியையுமே அழிக்கக்கூடாது, ''பாதையிலிருந்து திரும்பிவிட வேண்டியது'' அவசியம் என்கிற முடிவுக்குத் தன்னுணர்ச்சிவாதி வராமலிருக்கமுடியவில்லை.... ஆனால் யதார்த்தமான முரண்பாடுகள் அவரை மிகவும் இறுக்கிச் சூழ்ந்துகொண்டதால் மீண்டும் நல்விருப்பங்களின் மூடுபனிக்குள் ஏறிவிடமுடியவில்லை: பதில் கொடுக்க வேண்டிய கட்டாயம் தன்னுணர்ச்சிவாதிக்கு ஏற்பட்டது. ஸிஸ்மொந்தீ இரண்டு பதில் கூடக் கொடுத்தார்: ஒன்று—''எனக்குத் தெரியாது''; இரண்டாவது—''ஒருபுறத்தில், அதை அங்கீகரிக்காமல் இருக்கமுடியாது; மறுபுறத்தில், அதை ஒப்புக்கொண்டுதீரவேண்டும்.''*

1848 ஜனவரி 9-ல் புரூஸெல்ஸில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் ''சுயேச்சையான வாணிபம் பற்றிய சொற்பொழிவு''** நிகழ்த்தினார். ''அரசியல் பொருளாதாரம் கணக்கீடு பற்றிய விஞ்ஞானமல்ல, அது ஒழுக்க நெறி பற்றிய ஒரு விஞ்ஞானம்'' என்று பிரகடனப்படுத்திய

---

* நிந்தை நிறைந்த இச்சொற்கள் ''பீட்டர்ஸ்பர்க்கில் வாழ்ந்து வரும் ஒரு சிற்றூர்வாசியின் நாட்குறிப்பேடு'' என்ற ஸால்திகோவ்-ஷெட்ரின் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.—(பதிப்பாசிரியர்.)

** "Discours sur le libre échange." நாம் "Rede über die Frage des Freihandels" எனும் ஜெர்மன் மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துகிறோம்.

தன்னுணர்ச்சிவாதிகள்போல் அல்லாமல் அவர் தமது விளக்க வுரைக்குத் தொடக்கப் புள்ளியாகப் பட்டவர்த்தனமான முறையிலே, நிதானமான முறையிலே நலன்கள் பற்றிய கணக்கீட்டையே எடுத்துக்கொண்டார். தானியச் சட்டங்கள் பற்றிய பிரச்சினையை நாடு தேர்ந்துகொண்ட ஓர் ''அமைப்பு முறையோடு'' சம்பந்தப்பட்டதாகவோ சட்டமியற்றுவதோடு சம்பந்தப்பட்டதாகவோ (ஸிஸ்மொந்தீ பார்த்தது போல்) கருதாமல் அந்தப் பேச்சாளர் அது முதலாளிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இடையேயுள்ள நலன்கள் பாற்பட்ட சச்சரவு என்று முன்வைப்பதோடு தொடங்கி, எப்படி ஆங்கிலேய முதலாளிகள் அந்தப் பிரச்சினையை நாடுமுழுவதின் விவகாரமாக எழுப்ப முயன்றனர், நாட்டு நன்மைக்காகவே தாங்கள் பணியாற்றுவதாகத் தொழிலாளிகளுக்கு உறுதிகூற முயன்றனர் என்று காட்டினர். ஒரு சட்டமன்றத்தினன் சீர்திருத்தத்தை நிறைவேற்றுகையில் மனத்தில் வைத்துக்கொண்டு தீரவேண்டிய ஆராய்வுகளின் வடிவத்தில் பிரச்சினையை முன்வைத்த தன்னுணர்ச்சிவாதிகளைப் போலல்லாமல், அந்தப் பேச்சாளர் ஆங்கிலேயச் சமுதாயத்தின் வெவ்வேறுன வர்க்கங்களின் வெவ்வேறுன நலன்கள் இடையே இருக்கிற சச்சரவாகப் பிரச்சினையை வடித்தளித்தார். முதலாளிகளுக்குக் கச்சா பொருட்கள் மலிவாகக் கிடைக்கச் செய்யவேண்டிய அவசியத்திலிருந்தே முழுப் பிரச்சினையும் தோன்றியுள்ளது என்று காட்டினர். ''பௌரிங், பிரைட், அவர்களின் சகபாடிகள் ஆகிய தியாகபுத்தியுள்ள சீமான்களைத் தங்களுடைய கொடிய எதிரிகளாக''க் கருதிய ஆங்கிலேயத் தொழிலாளிகளின் அவநம்பிக்கையை அவர் வர்ணித்தார்.

''முதலாளிகள் பெருஞ் செலவில் மாபெரும் மாளிகைகள் கட்டுகின்றனர், அவற்றில் Anti-Corn-Law League (தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்)* ஒரு வகை அதிகாரபூர்வ

---

* ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்'' 1838ல் மாஞ்செஸ்டர் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களான கோப்டன், பிரைட் ஆகிய சுயேச்சையான வாணிப இயக்கத்தின் இரு தலைவர்களால் நிறுவப்பட்டிருந்தது. அதன் நோக்கம் தானியச் சட்டங்களை நீக்குவதற்காகப் போராடுவது.—(பதிப்பாசிரியர்.)

மானதான ஜாகை ஏற்படுத்திக்கொள்கிறது; சுயேச்சையான வாணிபம் பற்றிய சுவிசேஷத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு இங்கிலாந்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பிரச்சாரப்படை அனுப்பி வைக்கிறார்கள்; தனது சொந்த நலன்களைப்பற்றித் தொழிலாளிக்குத் தெளிவுபடுத்துவதற்காகப் பல்லாயிரக் கணக்கிலே துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு இலவசமாக வினியோகிக்கிறார்கள்; தங்களுடைய இலட்சியத்தைப் பத்திரிகைகள் ஆதரிக்கும்படிச் செய்வதற்கு மாபெரும் தொகைகள் செலவிடுகின்றனர்; சுயேச்சையான வாணிபம் பற்றிய இயக்கத்தை நடத்துவதற்குப் பெரிய நிர்வாக அமைப்புமுறையை அமைக்கிறார்கள், பொதுக்கூட்டங்களில் தமது நாவன்மையைக் காட்டுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு கூட்டத்திலேதான் ஒரு தொழிலாளி கத்தினான்: 'எங்கள் எலும்புகளை நிலப்பிரபுக்கள் விற்பதாக ஏற்படுமேயானால் முதலாளிகளாகிய நீங்கள்தாம் முதலில் அவற்றை வாங்கி நீராவி மில்லில் போட்டு மாவாக்குவீர்கள்' என்று. நிலப்பிரபுக்களுக்கும் தொழில் முதலாளிகளுக்கும் நடக்கும் போராட்டத்தின் குறிபொருளை ஆங்கிலேயத் தொழிலாளிகள் மிக நன்றாகப் புரிந்துகொண்டுள்ளனர். கூலியைக் குறைப்பதற்காகவே ரொட்டியின் விலை குறைக்கப்பட இருக்கிறதென்றும், வாடகை விழுகிற அளவுக்குத் தொழில்துறை இலாபம் உயருமென்றும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.''*

ஆக, பிரச்சினை முன்வைப்பு முறையே ஸிஸ்மொந்தீயினுடையதிலிருந்து முற்றும் வேறுபட்டிருக்கிறது. அந்தப் பேச்சாளர் எடுத்துக்கொண்ட குறிக்கோள்: முதலாவதாக, பிரச்சினையின்பால் இங்கிலாந்தின் வெவ்வேறான வர்க்கங்களுக்கு இருந்த கண்ணோட்டத்தை அவற்றின் நலன்களின் கோணத்திலிருந்து விளக்குவது; இரண்டாவதாக, ஆங்கிலேயச் சமுதாயப் பொருளாதாரத்தின் பொதுவான பரிணாம வளர்ச்சியிலே அந்தச் சீர்திருத்தத்துக்குள்ள குறிபொருளைத் தெளிவாக்குவது, என்று.

இந்தக் கடைசி அம்சத்தில் அந்தப் பேச்சாளரின் கருத்துக்கள் ஸிஸ்மொந்தீயின் கருத்துக்களோடு பொருந்துகின்

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''சுயேச்சையான வாணிபத்தைப் பற்றிய சொற்பொழிவு''.—(பதிப்பாசிரியர்.)

றன; ஸிஸ்மொந்தீயும் இதில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பார்க்கிறதில்லை, பொதுவாக முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றிய, அமைப்புமுறை என்கிற முறையிலே ''சுயேச்சையான வாணிபம்'' பற்றிய, ஒரு பொதுவான பிரச்சினையாகவே பார்க்கிருர். ''இங்கிலாந்தில் தானியச் சட்டங்களை நீக்கியது பத்தொன்பதாம் நூற்ருண்டில் சுயேச்சை வாணிபத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.'' ''...தானியச் சட்டங்களின் நீக்கத்தால், வரம்பற்ற போட்டி, இன்றையச் சமுதாயப் பொருளாதாரம் அதன் கோடிக்குக் கொண்டு போகப்படுகிறது.''* எனவே, மேற்கொண்டு முதலாளித்துவம் வளர்வது விரும்பத்தக்கதா அல்லது தடுத்துத் தாமதப்படுத்தப்படவேண்டுமா, ''வேறு பாதைகளை''த் தேடிச்செல்லவேண்டுமா என்கிற கேள்வியாகஇந்தப் பிரச்சினை இந்த ஆசிரியர்களின் முன்னே வந்துநிற்கிறது. இந்தக் கேள்விக்கு அவர்கள் அளித்த சாதகமான பதில் ''முதலாளித்துவத்தின் தலைவிதி'' பற்றிய பொதுவான அடிப்படையான பிரச்சினைக்குரிய தீர்வாகும், இங்கிலாந்தின் தானியச் சட்டங்கள் பற்றிய குறிப்பான பிரச்சினைக்குரிய தீர்வல்ல என்பதை நாமறிவோம்; ஏனெனில், இங்கே நிலைநிறுத்தப்

---

* "Die Lage der arbeitenden Klasse in England" *(1845)*. அதே பார்வைநிலையில் நின்றுதான் இந்நூல் தானிய சட்டங்கள் நீக்கப்படுவதற்கு முன் *(1846)* எழுதப்பட்டது; ஆனல் நமது நூல் வாசகத்தில் எடுத்துக் கவனிக்கப்படும் சொற்பொழிவு அந்தச் சட்டங்கள் நீக்கப்பட்ட பின் நிகழ்த்தப்பட்டது. எனினும் கால வேற்றுமை நமக்கு முக்கியமல்ல: 1827-ல் ஸிஸ்மொந்தீ முன்வைத்த, மேலே மேற்கோள் காட்டப்பட்ட வாதங்களை இந்த 1848-ன் சொற்பொழிவுடன் ஒப்புநோக்கினுல் போதும், பிரச்சினையின் அம்சங்களில் இரு ஆசிரியர்களின் கருத்துக்களும் முற்ருருமை பெற்று நிற்பதைப் பார்க்கலாம். ஸிஸ்மொந்தியை அவருக்குப் பின் வந்த ஒரு ஜெர்மன் பொருளாதாரவாதியோடு ஒப்புநோக்கும் எண்ணத்தை நாம் "Handwörterbuch der Staatswissenschaften," B. V, Art. "Sismondi" von Lippert, Seite 679-லிருந்து இரவல் வாங்கினேம். திரு. லிப்பெர்ட் காட்டியது சலிப்பூட்டும் சுவை கொண்டிருந்ததால் அவரது விளக்கவுரையின் மரக்கட்டைத்தன்மை.... அதாவது ''புறநிலைத் தன்மை'' முற்ருக மறைந்துபோய் சுவையும், களியார்வமும், உணர்ச்சிவெப்பமும் கொண்டதாயிற்று.

துக்கு வியக்கத்தக்கவிசை கொடுத்தது.... விவசாயத்துறை மக்கள் தொகையில் நேர்படியான குறைவுடன் கூடவே சாகுபடியிலுள்ள நிலப்பரப்பு அதிகப்பட்டது, தீவிரச் சாகுபடி அதிகப்பட்டது, கேள்விப்படாத மூலதனச் சேர்க்கை நிலத்தில் ஈடுபடுத்தப்பட்டது, அந்த நிலத்தைப் பயன்படுத்துவதில் இறங்கி ஆங்கிலேய விவசாய வரலாற்றில் இணையேயில்லாத அளவில் விவசாய விளைபொருட்கள் அதிகரித்தன, நிலச்சுவான்தார்களின் வாடகைப் பட்டியல்கள் நிறைந்து வழிந்தன, முதலாளித்துவச் சாகுபடியாளர்களின் செல்வம் பெருகியது.... ஏகரா வாரியாக மேலும் அதிகரித்த முதலீடும், அதன் பின்விளைவாக மேலும் துரிதமாகப் பண்ணைகள் கலந்து குவிக்கப்படுவதும் புதிய வழிமுறைக்குரிய அத்தியாவசியமான நிபந்தனைகளாகும்.*

---

* இது 1867-ல் எழுதப்பட்டது. வாடகையின் உயர்வை விளக்குவதற்கு மீதநிலை வாடகை பற்றிய நவீன பகுப்பாய்வு நிலைநாட்டிய விதியை—அதாவது, வாடகை உயர்வும் தானியவிலைக் குறைப்பும் ஒரே காலத்தில் சாத்தியம் என்கிற விதியை — நினைவில் நிறுத்தவேண்டும். ''ஆங்கிலேய தானியக் காப்பு வரிகள் 1846-ல் நீக்கப்பட்டபொழுது, அதன் வழியே தாங்கள் நிலம் படைத்த பிரபுகுலத்தை ஓட்டாண்டிகளாக்கி விட்டதாக ஆங்கிலேய முதலாளிகள் நம்பினார்கள். மாறாக, அவர்கள் முன்னைவிடச் செல்வந்தராயினர். இது எப்படி நிகழ்ந்தது? வெகு எளிதாக. முதலில், வருடாவருடம் ஏகராவுக்கு 8 பவுன் என்றிருந்ததற்குப் பதிலாக இப்போது 12 பவுன் முதலீடு செய்யவேண்டும் என்று கான்ட்ராக்ட் பிரகாரம் சாகுபடியாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இரண்டாவதாக, நாடாளுமன்றத்தின் காமன்ஸ் சபையிலும் மிக வலுவான பிரதிநிதித்துவம் பெற்றிருந்த காரணத்தால், நிலச்சுவான்தார்கள் வடிகால் திட்டங்களுக்கும் பிற நிரந்தரமான நில மேம்பாடுகளுக்கும் பெரும் அரசாங்க மானியங்களை தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொண்டார்கள். அடித்தர வளமுள்ள நிலம் விவசாயத்திலிருந்து அகற்றப்படுவது முற்றாக நடக்கவில்லை; மாறாக, மிக மோசமான வழக்கிலே, அது வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது—மிகப்பெருமபாலும் தாற்காலிகமாக. எனவே, அதிகரித்த முதலீட்டுக்குத் தகவுப் பொருத்தமாக வாடகைகள் உயர்ந்தன, அதன் விளைவாக நிலம்படைத்த பிரபுகுலம் முன்னைவிட மேலுக்கு வந்துவிட்டனர்'' ("Das Kapital", III,2, 259) (மூலதனம், III, 2, 259).—(பதிப்பாசிரியர்.)

எனினும், கிரெக்கின் வாதங்கள் மிகச்சரி என்று அங்கீகரிப்பதோடு பேச்சாளர் நின்றுவிடவில்லை என்பது உண்மை. கிரெக் வாய்மொழியாக வந்ததிலே, அது பொதுவாக ஆங்கிலேய விவசாயத்தைப்பற்றி விவாதிக்கிற ஒரு சுயேச்சை வாணிபவாதியின் பகுத்தறிவாராய்ச்சியாகும்; அவர் தானியச் சட்ட நீக்கம் நாடு முழுமைக்கும் நன்மையளிக்கும் என்று நிரூபிக்க முயன்றுவந்தார். நாம் மேலே கூறியதைப் பார்த்த பின், இவை பேச்சாளரின் கருத்துக்கள் அல்ல என்பது வெள்ளிடைமலை.

சுயேச்சை வாணிபவாதிகள் ஏற்றிப்போற்றிக் கொள்கிற தானியவிலைக்குறைப்பு என்பதற்கு அர்த்தம் தவிர்க்கவொண்ணுத கூலிக்குறைப்பே, ''உழைப்பு'' (மேலும் சரிநுட்பமாகச் சொல்வதானுல்: உழைப்புச் சக்தி) எனும் பண்டம் மலிவாக்கப்படுவதே என்று அவர் விளக்கினுர்; தானியவிலையின் வீழ்ச்சி தொழிலாளிக்குக் கூலி வீழ்ச்சியை என்றைக்கும் ஈடுசெய்ய முடியாது—காரணம், முதலாவதாக: தானிய விலை வீழ்ச்சியையொட்டி தொழிலாளி மற்ற சாமான்கள் வாங்கும் நோக்குடன் ரொட்டி சாப்பிடுவதில் மிச்சம் பிடித்துவந்தது மேலும் கஷ்டமாகிவிடும், இரண்டாவதாக: தொழிலின் முன்னேற்றம் நுகர்ப் பொருட்களை மலிவாக்குகிறது, இலாகிரிப் பொருட்களுக்குப் பதிலாக பீர் பானம், ரொட்டிக்குப் பதிலாக உருளைக்கிழங்கு, கம்பளி, லினனுக்குப் பதிலாகப் பருத்தி, என்றபடி வைக்கப்படுகின்றன, இவையெல்லாவற்றின் வழியே தொழிலாளிகளிகளின் தேவைகளின் தரமும் வாழ்க்கைத் தரமும் குறைக்கப்படுகிறது என்றும் அவர் விளக்கினுர்.

ஆக, வெளித்தோற்றத்திலே ஸிஸ்மொந்தீ போலவே இந்தப் பேச்சாளரும் பிரச்சினையின் அம்சங்களை நிலைநிறுத்துகிருர் என்று காண்கிருேம்: சிறு விவசாயிகளின் சீரழிவும் தொழிலிலும் விவசாயத்திலும் உள்ள தொழிலாளிகளின் வறுமையாக்கலும் சுயேச்சையான வாணிபத்தின் தவிர்க்கவொண்ணுத பின்விளைவுகளாக இருக்கும் என்று அவரும் கூட ஒப்புக்கொள்கிருர். ''மேற்கோள் காட்டுவதில்'' இணையற்ற திறமை காட்டுவதில் சிறந்து விளங்கும் நமது நரோத்னிக்குகள் இங்கேதான் ''வாசகப்பகுதிகளை'' மேற்கோள் காட்டுவதை வழக்கமாக நிறுத்திவிட்டு முழுத்திருப்தி

யோடு தாங்கள் முற்றுக ''உடன்படுவதாக''ப் பிரகடனப்படுத்துகிறுர்கள். ஆனுல் இந்த வழிமுறைகள் வெறுமே காட்டுவது இவைதான்: முதலாவதாக, பிரச்சினையின் முன்வைப்பில் உள்ள மாபெரும் வேற்றுமையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, இந்த வேற்றுமையை நாம் மேலே குறிப்பிட்டோம்; இரண்டாவதாக, இங்கேதான் நவீன தத்துவத்துக்கும் தன்னுணர்ச்சிவாதத்துக்கும் உள்ள தீவிரமான வேற்றுமை தொடங்குகிறது எனும் விஷயத்தை அவர்கள் பார்க்கத் தவறுகிறுர்கள்: அசல் வளர்ச்சியின் ஸ்தூலமான பிரச்சினைகளை விட்டுவிட்டுத் தன்னுணர்ச்சிவாதி கனவுகளுக்குப் போகிறுன், ஆனுல் யதார்த்தவாதி ஸ்தூலமான பிரச்சினையைத் தீர்ப்பதிலே நிலைபேறுள்ள விஷய உண்மைகளைத் தனது தேர்வுகோலாகக் கொள்கிறுன்.

தொழிலாளிகளின் நிலைமைகளில் மேற்கொண்டு வரக்கூடிய மேம்பாட்டைச் சுட்டிக்காட்டிவிட்டு பேச்சாளர் சொன்னதாவது:

''அதற்குமேல் பொருளாதாரவாதிகள் எங்களிடம் சொல்வார்கள்:

'' 'சரி, தொழிலாளர் இடையேயுள்ள போட்டி சுயேச்சையான வாணிபத்தின்கீழ் நிச்சயமாகக் குறையாது, அந்தப் போட்டி வெகு விரைவிலே கூலியைப் பண்டங்களின் குறைவான விலைக்கு இசைவாகக் கொண்டுவந்துவிடும் என்று ஒப்புக்கொள்கிறேும். ஆனுல், மறுபுறத்தில், பண்டங்களின் தாழ்வான விலைகள் நுகர்வை அதிகப்படுத்தும், மேலும் பெரிதான நுகர்வுக்கு மேலும் அதிகரித்த உற்பத்தி அவசியமாகும், அதைத்தொடர்ந்து மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளிகள் தேவைப்படுவார்கள், இந்த அதிகரித்த தொழிலாளர் கிருக்கியைத் தொடர்ந்து கூலி உயரும்.'

''வாதத்தின் போக்கு முழுதும் இதுதான்: சுயேச்சையான வாணிபம் உற்பத்திச் சக்திகளை அதிகப்படுத்துகிறது. தொழில் வளர்ந்துகொண்டேபோனுல், செல்வமும், உற்பத்தி ஆற்றல், சுருங்கச் சொன்னுல் உற்பத்திக்குரிய மூலதனம் உழைப்பின் கிருக்கியை அதிகப்படுத்தினுல் உழைப்பின் விலையும், அதன் விளைவாகக் கூலி விகிதமும் அதிகரிக்கும்.

மூலதனத்தின் வளர்ச்சியே தொழிலாளிக்கு மிகவும் சாதகமான நிலைமையாகும். இதை ஒப்புக் கொண்டு தீரவேண்டும்.* மூல தனம் அதே நிலையில் நின்றுவிட்டால் தொழில் அதே நிலையில் நிற்பதுமட்டுமல்ல நலிந்தும் போகும், அப்படியாகி விட்டால் தொழிலாளிதான் அதற்கு முதற் பலி ஆவான். முதலாளிக்குமுன் தொழிலாளி வீழ்கிறான். மூலதனம் வளர்ந்து கொண்டேயிருக்கும் வழக்கில், தொழிலாளிக்கு மிகவும் சாதகமானது என்று நாம் சொன்ன நிலைமைகளில், தொழிலாளிகளின் கதி என்ன? அதேபோல் வீழ்வான்...''** மேலும், ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகள் கொடுத்துள்ள விஷயாதாரங்களை மேற்கோள் காட்டி அந்தப் பேச்சாளர் விரிவாக விளக்குவதில் இறங்கிவிட்டார்—எப்படி மூலதனக் குவிப்பு உழைப்புப் பிரிவினையை அதிகப்படுத்துகிறது, திறனுள்ள உழைப்புக்குப்பதிலாகத் திறனற்ற உழைப்பை வைப்பதின் வழியே அது உழைப்புச் சக்தியை மலிவாக்குகிறது; எப்படி இயந்திரங்கள் தொழிலாளிகளை அகற்றிவிடுகின்றன; எப்படி பெரிய மூலதனம் சிறிய முதலாளிகளையும் சிறிய வாடகை ஜீவிகளையும் நாசமாக்கி, நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தி அது வேலையில்லாதோரின் தொகையை அதிகப்படுத்திவிடுகிறது, என்று. அவர் தமது பகுப்பாய்விலிருந்து எடுத்த முடிவு, முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்குரிய சுதந்திரம் தவிர வேறெதையும் சுயேச்சையான வாணிபம் குறிக்கவில்லை என்று.

ஆக, சுயேச்சையான வாணிபமாகட்டும், வாணிபத்தின் கட்டுப்பாடு ஆகட்டும் இரண்டும் தொழிலாளிகளின் சீரழிவுக்குக் கொண்டுபோய் விடுகின்றன என்கிற உருப்படாத இருதலைக்கொள்ளி நிலைக்கு (இது ஸிஸ்மொந்தியை அப்படியே நிற்கச்செய்து விட்டது) கொண்டுபோவதாக முதற் பார்வையிலே தோற்றமளித்த பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு தேர்வுகோலை பேச்சாளர் தேடிக்கொள்ள முடிந்தது. அந்தத் தேர்வுகோல், உற்பத்திச்சக்திகளின் வளர்ச்சி என்பதேயாகும். வரலாற்றின் கோணத்திலிருந்து பிரச்சினை ஆய்

---

* கொட்டையெழுத்தில் போட்டது நாம்.

** பார்க்க: கா. மார்க்ஸ், ''சுயேச்சையான வாணிபத்தைப் பற்றிய சொற்பொழிவு''.—(பதிப்பாசிரியர்.)

வுக்குட்படுத்தப்படுகிறது என்று உடனே தெளிவாகிவிட்டது: இன்னவகையில் இருக்கவேண்டும் என்கிற ஏதோவொரு சூக்குமமான சமுதாயத்துடன் (அதாவது, அடிப்படையிலே ஒரு கற்பனை உலகத்திட்டத்துடன்) முதலாளித்துவத்தை ஒப்பு நோக்குவதற்குப் பதிலாக, ஆசிரியர் (பேச்சாளர்) சமுதாயப் பொருளாதாரத்தின் முந்தையக்கட்டங்களுடன் அதை ஒப்புநோக்கினார், வெற்றிகரமாக ஒன்றை நீக்கி மற்றொன்றாக வந்த முதலாளித்துவத்தின் வெவ்வேறு கட்டங்களை ஒப்பு நோக்கினார், முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரணமாகச் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் வளர்கின்றன என்கிற விஷயத்தை நிலைநிறுத்தினார். சுயேச்சை வாணிபவாதிகளின் வாதங்கள்பால் விஞ்ஞான வழிப்பட்ட விமர்சனத்தைச் செயல்படுத்தி அவர் தன்னுணர்ச்சிவாதிகள் வழக்கமாகச் செய்கிற தவற்றைத் தவிர்க்க முடிந்தது. தன்னுணர்ச்சி வாதிகள் அந்த வாதங்களுக்கு ஒரு முக்கியத்துவமும் இல்லை என்று மறுத்து ''குளியல்நீரோடு சேர்த்துக் குழந்தையையும் எறிந்துவிடுகிறார்கள்''. அவற்றின் உருப்படியான உட்பருப்பை—அதாவது, மகத்தான தொழில்நுட்பவியல் முன்னேற்றம் என்கிற விஷயத்தை—அவர் எடுத்துக் கொள்ள முடிந்தது. நமது நரோத்னிக்குகள் தங்களுக்கே உரித்தான அறிவுத்திறத்துடன் முடிவுகட்டி இருப்பார்கள் — சிறு உற்பத்தியாளனுக்கு எதிராகப் பெரும் மூலதனத்தின் பக்கம் இவ்வளவு பகிரங்கமாகச் சேர்ந்துகொண்ட இந்த ஆசிரியர் ''பணபலத்துக்குப் பரிந்து பேசுபவர்'' என்று; இவர் ஐரோப்பாக் கண்டத்தை நோக்கிப் பேசினார், ஆங்கிலேய வாழ்க்கையிலிருந்து தாம் எடுத்த முடிவுகளைத் தமது சொந்த நாட்டுக்குச் செயல்படுத்தினார் என்பதால் அவர் விஷயம் மேலும் மோசமாகிவிடுகிறது; அவர் சொந்த நாட்டில் அக்காலத்தில் பெருமளவான இயந்திரத்தொழில் முதன்முதலாகத் தயக்கத்தோடு அடி எடுத்துவைத்து வந்தது. என்றபோதிலும், இதே எடுத்துக்காட்டுதான் (மேற்கு ஐரோப்பிய வரலாற்றிலிருந்து எடுத்த இதேபோன்ற பல எடுத்துக்காட்டுகள் தாம்) தங்களால் புரிந்துகொள்ள முடியாமல் (அதற்கு விருப்பமில்லையோ என்னவோ?) இருக்கிற விஷயத்தைப் பயில்வதற்கு உதவ முடியும்—அதாவது, சிறு உற்பத்தியோடு ஒப்பு நோக்கும்போது பெரும் மூலதனம் முற்போக்கானது

என்று ஒப்புக் கொள்வது ''பரிந்து பேசல்'' ஆகவே ஆகாது, என்று.

மேலே மேற்கோள் காட்டிய ஸிஸ்மொந்தீயின் அத்தியாயத்தையும் இந்தச் சொற்பொழிவையும் நினைவுபடுத்திக் கொண்டால் போதும், தத்துவம் பற்றிய நிலையிலிருந்தும் சரி, எல்லா வகைப்பட்ட ''பரிந்துபேசல்''பால் பகைமையுள்ள நிலையிலிருந்தும் சரி, பிந்தையது மேல் என்று தெளிவுறலாம். பெரும் மூலதனத்தின் வளர்ச்சியையொட்டி வருகிற முரண்பாடுகளைத் தன்னுணர்ச்சிவாதிகள் என்றைக்கும் செய்ததைவிட எவ்வளவோ சரிநுட்பத்துடனும், முழுமையுடனும், நேர்மையாகவும், வெளிப்படையாகவும் அந்தப் பேச்சாளர் வர்ணித்தார். ஆனால் இந்த வளர்ச்சி பற்றிப் புலம்பியபடி உணர்ச்சிவகைப்பட்ட ஒரு சொற்றொடரையேனும் சொல்லும் நிலைக்கு என்றைக்கும் தாழ்ந்துவிடவில்லை. ''பாதையிலிருந்து விலகுவதற்கான'' சாத்தியப்பாடு பற்றி எங்கும் என்றைக்கும் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை அவர். இப்படிப்பட்ட சொற்றொடர்களைக் கொண்டு சிலர் தாங்களே யதார்த்தநிலை எதிரே நிறுத்தும் பிரச்சினையிலிருந்து—அதாவது, ஒரு குறிப்பிட்ட பொருளாதார யதார்த்தம், ஒரு குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி, இந்த வளர்ச்சியிலிருந்து உதிக்கிற குறிப்பிட்ட நலன்கள் எனப்பட்டவை எதிரே நிறுத்தும் பிரச்சினையிலிருந்து—''விலகி'' வரும் விஷயத்தை மறைக்கிறார்கள் என்று அவர் புரிந்துகொண்டார்.

அவர் முரணற்ற யதார்த்தவாதியாக இருந்தபடியே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்சொன்ன முற்றிலும் விஞ்ஞான வழிப்பட்ட திறவுகோல் உதவியது.

பேச்சாளர் பேசியதாவது: ''பெருமக்களே, வாணிப சுயேச்சையை விமர்சிக்கையில் காப்பு முறையைத் தாங்கிப் பிடிக்கும் நோக்கம் எங்களுக்குச் சிறிதேனும் இருப்பதாக நினைக்காதீர்கள்,''* என்று. அவர் மேலே பேசுகையில் தற்கால சமுதாயப் பொருளாதார அமைப்பு முறையின்கீழ் சுயேச்சையான வாணிபமும் சரி, காப்புமுறையும் சரி, ஒரே அடிப்படையில் உள்ளன என்று சுட்டிக்காட்டினார், மேற்கு

---

* பார்க்க: கா. மார்க்ஸ், ''சுயேச்சையான வாணிபத்தைப் பற்றிய சொற்பொழிவு.''—(பதிப்பாசிரியர்.)

ஐரோப்பிய நாடுகளில் உள்ள பழைய பொருளாதார வாழ்க்கையையும் பழைய அரைத்தந்தையாதிக்க முறையிலான உறவுமுறைகளையும் உடைத்துவரும் ''முறிவு''ப் போக்கைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்; இந்த முறிவுப்போக்கை முதலாளித்துவம் இங்கிலாந்திலும் ஐரோப்பா கண்டத்திலும் நிறைவேற்றி வந்தது. சில குறிப்பிட்ட நிலைமைகளில் சுயேச்சையான வாணிபம் இந்த ''முறிவை''த் துரிதப்படுத்துகிறது என்கிற சமுதாய விஷயத்தையும் அவர் குறிப்பிட்டார்.* மற்றும், இச்சொற்களுடன் அவர் சொற்பொழிவை முடித்தார்: ''பெருமக்களே, இந்த ஒரே பொருளிலேதான் நான் சுயேச்சையான வாணிபத்துக்குச் சாதகமாக வாக்களிக்கிறேன்''** என்று.

---

* தானியச் சட்டங்களின் நீக்கம் பெற்றுள்ள முற்போக்கான குறிபொருளை "Die Lage..." எனும் நூலின் ஆசிரியரும் அந்த நீக்கம் ஏற்படுவதற்கு முன்பே (மேலே சொன்ன நூல், பக்கம் 179) தெளிவாகக் குறிப்பிட்டார். அது உற்பத்தியாளர்களின் உணர்வின் மீது செலுத்தப் போகிற செல்வாக்கையும் அவர் குறிப்பாக வலியுறுத்தினர்.

** பார்க்க: கா. மார்க்ஸ், ''சுயேச்சையான வாணிபத்தைப் பற்றிய சொற்பொழிவு.''—(பதிப்பாசிரியர்.)

பெயர் பட்டியல்

ஆட்கின்ஸன், வில்லியம்—*1830-50 ஆண்டுகளில் ஆங்கிலேயப் பொருளாதாரவாதி. காப்புமுறைவாதி. பூர்ஷ்வாப் பொருளாதாரவாதத்தின் மூலச்சிறப்புள்ள பிரிவினரை எதிர்த்தார்.—138.*

இங்கிராம், ஜான்-கெல்ஸ் *(1823-1907)—ஆங்கிலேயப் பொருளாதாரவாதி. அவருடைய தத்துவார்த்தப் பார்வைநிலை அரசியல் பொருளாதாரவாதத்தின் வரலாற்று வழிப்பட்ட பிரிவினரின் பார்வைநிலையோடு நெருங்கியிருந்தது.—118.*

எங்கெல்ஸ், பிரீட்ரிஹ் *(1820-1895)—65-67, 80.*

எஃப்ரூசி, பி. ஓ. *(1865-1897)—கட்டுரையாளர், பொருளாதாரவாதி; அவருடைய மிக முக்கியமான நூல்கள் பின்வருவன: ''ஸிமொந்த் தெ ஸிஸ்மொந்தீயின் சமுதாய-பொருளாதாரவாதக் கட்டுரைகள்'' (1896), ''மூலதனத்திலிருந்து பெறும் வருவாயைப் பற்றிய வெவ்வேறான தத்துவங்கள்'' (1897) முதலியன. ஸிஸ்மொந்தீயின் ''அரசியல் பொருளாதாரத்தின் புதிய கோட்பாடுகள்'' (1897) எனும் நூலிலிருந்து மிக முக்கியமான அத்தியாயங்களை ருஷ்ய மொழியில் பெயர்த்துள்ளார்.—6, 7, 19, 64-67, 70, 71, 76, 78, 83, 88-91, 101, 104, 114-117, 150, 165, 171, 180-183, 185, 190-194.*

ஓவன், ராபர்ட் *(1771-1858)—மாபெரும் ஆங்கிலேயக் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—133, 183, 186.*

கரலேன்கோ, எள். ஏ.—*ருஷ்யப் பொருளாதாரவாதி, புள்ளி இயலாளர்.—164.*

கிரிவேன்கோ, செர்கேய் நிக்கொலாயெவிச் *(1847-1906)—ருஷ்யக் கட்டுரையாளர், மிதவாத நரோதியத்தின் பிரதிநிதி.—6.*

கிரெக், வில்லியம் ரட்போன் *(1809-1881) — ஆங்கிலேயத் தொழில்முதலாளியும் கட்டுரையாளரும்; 1842ல் அவர் ''விவசாயமும் தானியச் சட்டங்களும்'' என்ற தமது நூலுக்காகத் ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்''தின் பரிசுபெற்ருர். அதில் அவர் தானியச் சட்டங்களை நீக்கி விடுவது பெரிய நிலவுடைமைக்காரர்களுக்கு நன்மை பயக்கத்தக்கதென்று நிரூபிக்க முயற்சித்தார்.—210, 211.*

கொர்ஸாக், ஆ. கா. *(1832-1874)—ருஷ்யப் பொருளாதார வாதி, கட்டுரையாளர்.—94.*

சேய், ஜான் படிஸ்ட் *(1767-1832)—பிரெஞ்சுப் பொருளா தாரவாதி, விஞ்ஞானக்கேடான அரசியல் பொருளாதார வாதத்தின் பிரதிநிதி.—44.*

டானியெல்ஸோன், நிக்கொலாய் பிரான்ட்ஸெவிச் *(நி.—ன், நிக்கொலாய்—ன்)(1844-1918)—ருஷ்யப்பொருளாதார வாதி; 1880-90 ஆண்டுகளின் மிதவாத நரோதியத்தின் பிரச்சாரகர்களில் ஒருவர். ''மூலதனத்''தை ருஷ்ய மொழியில் முதன் முதலில் பெயர்த்திருக்கிருர் அவர்.— 5, 10, 29, 38, 44, 45, 50, 51, 54, 62, 63, 80, 83, 93, 95-100, 110, 111, 121, 129-131, 134, 137, 140-142, 145, 159, 162, 166, 167, 170, 173, 175, 189, 191, 194.*

டூரிங், ஓய்கேன் *(1833-1921)—ஜெர்மன் தத்துவவியல் வாதி; கதம்பக்கொள்கையினர்; விஞ்ஞானக்கேடான பொருளாதாரவாதி.—161.*

தாம்ப்ஸன், வில்லியம் *(சுமார் 1785-1833)—அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பொருளாதாரவாதி. சோஷலிஸ்ட் முடிவுகளைப் பெறுவதற்கு ரிக்கார்டோவின் கொள்கை யைப் பயன்படுத்திஞர்.—133, 183.*

துகான்-பரனேவ்ஸ்கி, மிகயீல் இவானவிச் *(1865-1919)— —ருஷ்யப் பொருளாதாரவாதி; 1890-ஆண்டுகளில் ''சட்டபூர்வமான மார்க்ஸியம்'' எனப்படும் போக்கைச் சேர்ந்தவர்.—62, 66, 112.*

நி.—ன், நிக்கொலாய்—ன்—*பார்க்க: டானியெல்ஸோன், நி. பி.*

பாஸரோவ், விளாதிமிர் அலெக்ஸாந்திரவிச் *(1874-1939)* —ருஷ்ய சமூகஜனநாயகவாதி, தத்துவவியலாளர், பொருளாதாரவாதி, கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ் ஆகியோரின் நூல்களையும் கட்டுரைகளையும் மொழி பெயர்த்தார்.—*150.*

பிரைட், ஜான் *(1811-1889)* — ஆங்கிலேயத் தொழிற் சாலைச் சொந்தக்காரர்; சுயேச்சையான வாணிபத்தைக் கோரும் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர்; ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்''தின் ஸ்தாபகர்.—*109, 206.*

பிளெஹானவ், கியோர்கிய் வலென்தீனவிச் (பெல்டாவ் நி., வோல்கின் ஆ.) *(1856-1918)* — ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர்இயக்கத்திற்குத் தலைசிறந்த பங்காற்றியவர் களில் ஒருவர்; ருஷ்யாவில் மார்க்ஸியத்தை முதலில் பரப்பியவர். மிக முக்கியமான தத்துவார்த்த நூல் கள்: ''பொருள்முதல் வாதத்தின் வரலாறு பற்றிய கருத் துரைகள்'' (1896), ''திரு. வரன்ட்ஸோவ் நூல்களில் நரோதியத்தின் ஆதாரங்கள் பற்றிய கருத்துரைகள்'' (1896), ''வரலாறு சம்பந்தமான பொருள்முதல்வாதக் கண்ணோட்டம்'' (1897) முதலியவை.—*98, 125, 145, 162, 176.*

பீபிகவ், பா. ஆ. *(1832-1875)*—மொழிபெயர்ப்பாளரும் பத்திரிகையாளரும்; ஆ. ஸ்மித், தா. மால்துஸ், அ. பிளான்கி ஆகியவர்களின் நூல்களை மொழிபெயர்த் தார்.—*19, 88.*

புருதோன், பியேர்-ஜோஸெப் *(1809-1865)*—பிரெஞ்சுக் கட்டுரையாளர், விஞ்ஞானக்கேடான பொருளாதார வாதி, சமுதாய இயல்வாதி; சிறு பூர்ஷ்வா வர்க்கத்தின் சித்தாந்தி; அராஜகவாதத்தை முன்வைத்தவர்களில் ஒருவர்.—*26, 32, 88, 140, 141.*

புவாகில்பேர், பியேர் *(1646-1714)* —பிரெஞ்சுப் பொருளா தாரவாதி; பிஸியாக்ராட்டுகளுக்கு (மதிப்பை உண்டாக் கும் உழைப்பாக விவசாயிகளின் உழைப்பு இருக்கிறது என்ற பொருளாதாரவாதத் தத்துவத்தின் ஆதரவாளர் களுக்கு) முன்னோடியாக இருந்தவர்.—*113, 137.*

பெர்னஷ்டைன், எடுவார்டு *(1850-1932)*—ஜெர்மன் சமூக ஜனநாயகவாதி, திருத்தல்வாதத்தின் (revisionism)

சித்தாந்தப் பிரச்சாரகர், எங்கெல்ஸ் மறைந்துவிட்ட சிறிது காலத்திற்குப் பின்பு மார்க்ஸியத்தின் தத்துவ வியல்வகைப்பட்ட, பொருளாதாரவாத, அரசியல் அடிப்படைகளைத் ''திருத்த'' முயன்றார்.—68.

பெரேரா, இசாக் *(1806-1880)—மூன்றாவது நெபோலியன் சகாப்தத்தைச் சேர்ந்த பெரிய நிதிநிபுணர்; கடன்பற்றிய பிரச்சினைகள்மீது பல நூல்கள் எழுதியவர். இளமை யில் ஸான்-ஸிமோனைப் பின்பற்றிவந்தார்.—143-145.*

பெல்டாவ், நி. — *பார்க்க: பிளெஹானவ் கி. வா.*

பௌரிங், ஜான் *(1792-1872)—ஆங்கிலேய அரசியல்வாதி; ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்''தின் தலைவர்களில் ஒருவர்.—206.*

மாக்-குல்லாக், ஜான் ராம்சி *(1789-1864) — ஆங்கிலேயப் பொருளாதாரவாதி, ரிக்கார்டோவின் தத்துவத்தைப் புரட்டித் திரிப்பதோடுகூடவே அதற்கு விஞ்ஞானக் கேடான தன்மையை அளிக்கப் பார்த்தவர். அவருடைய மிக முக்கியமான நூல்: ''அரசியல் பொருளாதாரத்தின் மூலக்கூறுகள்'' (1825).—32.*

மார்க்ஸ், கார்ல் *(1818-1883)—27, 29, 30, 36, 68, 81, 91, 100, 119, 126, 135, 144, 149, 186, 189, 199, 205, 209.*

மால்துஸ், தாமஸ் ராபர்ட் *(1766-1834) — ஆங்கிலேய விஞ்ஞானக்கேடான பொருளாதாரவாதி; முதலாளித்துவத்தின் ஆர்வமிக்க ஆதரவாளர்; மக்கள்தொகை பற்றிய, மனிதனை வெறுக்கும் தத்துவத்தின் ஆசிரியர்.—76, 78, 86, 88, 114, 126.*

மில், ஜான் ஸ்டுவார்ட் *(1806-1873)—ஆங்கிலேயப் பொருளாதாரவாதி, புலக் கொள்கையினர் (*positivist*). — 26.*

மிஹாய்லோவ்ஸ்கி, நிக்கொலாய் கான்ஸ்டன்டினவிச் *(1842-1904)—ருஷ்யச் சமுதாயவியல்வாதி, கட்டுரையாளர், விமர்சகர், மிதவாத நரோதியத்தின் பிரச்சாரகர்களில் முன்னுக்கு வந்தவர்களில் ஒருவர்.—163.*

முய்ரோன், ஜூஸ்ட் *(1787-1881)—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்ட், ஃபூரியேயின் சீடர்.—133, 183.*

மேயெர், ராபர்ட் *(1855-1914)* — ஆஸ்திரியப் பொருளாதாரவாதி. அவருடைய நூல்களில் ''வருவாயின் சாராம்சம்'' என்ற நூல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.—*119.*

மோர்ஸ், ஆர்தர் — ஆங்கிலேயச் சுயேச்சை வாணிபவாதி, *1842*ல் ''விவசாயமும் தானியச் சட்டங்களும்'' என்ற நூலை எழுதித் ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்''தின் பரிசு பெற்றார். இதில் அவர் தானியச் சட்ட நீக்கத்தின் விளைவாகச் சாகுபடியாளர், தொழிலாளி ஆகியவர்களுக்குச் சாதகமான முறையில், தானியத்துக்கான விலையேற்றம் உண்டாகும் என்று ருசுப்படுத்த முயன்று கொண்டிருந்தார்.—*210.*

ரிக்கார்டோ, டேவிட் *(1772-1823)*—ஆங்கிலேயப் பொருளாதாரவாதி; மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரவாதத்தின் புகழ் பெற்ற பிரதிநிதிகளில் ஒருவர்.—*10, 26, 32, 41, 42, 44, 49, 56 73, 75, 81 114, 120, 122, 123, 124, 126, 127.*

ரொட்பெர்டஸ்-யாகெட்ஸாவ், யோஹான் கார்ல் *(1805-1875)*—ஜெர்மன் விஞ்ஞானக் கேடான பொருளாதாரவாதி, அரசியல் பிரமுகர்; பிரஷ்ய-ஜங்கர் வகைப்பட்ட ''அரசாங்க சோஷலிஸத்''தின் பிரதிநிதி.—*26, 34, 59, 67, 68, 70, 72, 73, 118.*

லிப்பெர்ட், யூலியஸ் *(1839-1909)*—ஆஸ்திரியச் சரித்திராசிரியர்; மானிடவியலாளர்.—*6, 7, 208.*

வரன்ட்ஸோவ், வாசிலிய் பாவ்லவிச் (வி. வி.) *(1847-1918)*—ருஷ்யப் பொருளாதாரவாதி, *1880-90* ஆண்டுகளுக்குரிய மிதவாத நரோதியத்தின் சித்தாந்தி.—*6, 10, 29, 38, 44, 62, 80, 98, 121, 151, 162, 176, 201.*

வாக்னர், அடோல்ஃப் *(1835-1917)*—ஜெர்மன் பொருளாதாரவாதி.—*193.*

வி. வி.—பார்க்க: வரன்ட்ஸோவ் வா. பா.

வோல்கின், ஆ.—பார்க்க: பிளெஹானவ் கி. வா.

ஸான்-ஸிமோன், அன்ரி க்ளாட் *(1760-1825)*—மாபெரும்

பிரெஞ்சுக் கற்பனுவாத சோஷலிஸ்ட்.—143, 144.

ஸிஸ்மொந்தி, மூான்-ஷார்ல்—லெவொனர் ஸிமொந்த் தெ *(1773-1842)—சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த பொருளாதாரவாதி; முதலாளித்துவத்தைச் சிறு பூர்ஷ்வாப் பார்வைநிலையைப் பின்பற்றி விமர்சித்துக்கொண்டிருந்தார்; பொருளாதாரவாதத் தன்னுணர்ச்சிவாதத்தின் முக்கியமான பிரதிநிதி.—1,5-217.*

ஸீபர், நிக்கொலாய் இவானவிச் *(1844-1888) — ருஷ்யப் பொருளாதாரவாதி, ருஷ்யாவில் மார்க்ஸின் பொருளாதாரவாதத் தத்துவத்தை முதன்முதலாகப் பரப்பியவர்களில் ஒருவர்.—56, 75, 91-95.*

ஸ்துரூவே, பியோத்தர் பெர்ங்கார்தவிச் *(1870-1944)——ருஷ்யப் பொருளாதாரவாதியும் பத்திரிகையாளரும். 1890—ஆண்டுகளுக்குரிய ''சட்டசம்மதமான மார்க்ஸியம்'' எனப்படுவதைச் சார்ந்தவர்; தமது பல நூல்களில் நரோதியத்தை விமர்சித்ததோடுகூடவே கா. மார்க்ஸின் தத்துவத்தை பூர்ஷ்வா மிதவாதக் கருத்து நிலையிலிருந்தும் விஞ்ஞானக்கேடான அரசியல் பொருளாதாரத்தின் கருத்துநிலையிலிருந்தும் ''திருத்தினர்.''—112, 119, 132, 162.*

ஸ்தெபானவ் (ஸ்க்வார்த்ஸோவ்-ஸ்தெபானவ்), இவான் இவானவிச் *(1870-1928)—சோவியத் அரசியலறிஞர்; பல பொருளாதாரவாத, வரலாற்று நூல்களின் ஆசிரியர்; ''மூலதனத்''தின் மூன்று தொகுதிகளை மொழிபெயர்ப்பதிலும் மொழிபெயர்ப்புகளைச் சரிப்பார்ப்பதிலும் பங்கு கொண்டவர்.—150.*

ஸ்மித், ஆதாம் *(1723-1790)—ஆங்கிலேயப் பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரவாதத்தின் மிகப் பெரிய பிரதிநிதிகளில் ஒருவர்.—10, 18, 19, 22, 26-28, 30, 34-36, 38, 39, 41, 42, 48, 52, 59, 60, 63, 71, 72, 116, 118-120, 170.*

ஹோப், ஜார்ஜ் *(1811-1876)—ஆங்கிலேயச் சாகுபடியாளர்; 1842-ல் ''விவசாயமும் தானியச் சட்டங்களும்'' என்ற தமது நூலுக்காகத் ''தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்''தின் பரிசு பெற்றார்; இந்த நூலில் அவர் நிதர்சனப்படுத்துவதாவது: தானிய விலை இறக்கம் ஏற்பட்டால் தானியச் சட்டங்களை ரத்து செய்வதின் காரணமாக சாகுபடி*

யாளனே விவசாயித் தொழிலாளியோ துன்பப்பட மாட்டான்; நிலச் சொந்தக்காரன் மட்டுமே துன்பப்படு வான்; ஏனெனில் இங்கிலாந்தில் இருந்ததைப்போல் இப்படி உயர்தரமான, விலைகுறைந்த தானியத்தை உல கிலேயே எந்த நாடும் விளைக்க முடியாது, என்று.— *210.*

ஃபூரியே, **ஷார்ல்** *(1772-1837)*—மாபெரும் பிரெஞ்சுக் கற் பனாவாத சோஷலிஸ்ட்.—*133, 183.*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1

87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1

சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

பஸ் நிலையம், தஞ்சாவூர்